
# மலைத்தேன்


## தமிழ் மொழித்தின விழா மலர்



70.344
தமிழ்
LIPR

கு- கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம்

திருக்கோணமலை



## வடக்கு - கிழக்கு மாகாணக்
## கல்வித் திணைக்களம்

## வவுனியாவில் நடாத்தும்

# தமிழ்மொழித் தினம்

# 1996


இதழாசிரியர்

**ச. அருளானந்தம்**

(பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளர்)


"செந்தமிழின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனம் என்று ஆரோ தடவினார்"

-நந்திக்கலம்பகம்-


# தமிழ்த் தாய் வணக்கம்



நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குக்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே.

"மனோன்மணீயம்"



இம்மலரில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களின்
கருத்துகளுக்கும் வெளிப்பாடுகளுக்கும்
ஆக்கியோரே பொறுப்பாவர்.
கதைகளில் வரும் பாத்திரங்கள் கற்பனையே

-இதழாசிரியர்

## வடக்கு கிழக்கு மாகாண மேதகு ஆளுநர்

## கலாநிதி. காமினி பொன்சேகா அவர்களின்

# ஆசிச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் மாகாண கல்வித் திணைக்களம் நடாத்தும் தமிழ்மொழித் தினத்தை முன்னிட்டு வழமைபோல் இவ்வாண்டும் வெளிவரும் சிறப்பு மலருக்கு எனது ஆசிச் செய்தியினை அளிப்பதில் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

ஒரு மனிதனுக்குத் தன் உணர்வுகளை வெளிப்படுத்த மொழி சிறந்த ஊடகமாகிறது. மொழிமூலம் தொடர்பாடல் நடைபெறுகிறது. உலகில் இன்று பல மொழிகள் உண்டு. ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு மாணவரும் அவரது மொழியில் ஆற்றல் உள்ளவராக இருத்தல் அவசியம். மாணவரின் மொழி வளர்ச்சியை இலக்காகக் கொண்டே அனைத்துப் பாடசாலைகளிலும் மொழித்தினம் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்மொழி தொன்மை வாயந்த மொழி. இலக்கிய, இலக்கண வளம் கொண்டது. தமிழ்மொழியில் மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெற வேண்டும். ஆற்றலைப் பெற வேண்டும். உள்ளார்ந்த திறன்களை விருத்தி செய்ய ஆளுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அலுவலர்கள் வழிகாட்டிகளாகச் செயற்பட வேண்டும். தமிழ்மொழித்தினத்தில் பல மட்டங்களில் போட்டிகள் நடைபெறுவதையும், தேசிய நிலைப் போட்டியில் நமது மாகாணம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதையும் நன்கு அறிவேன். ஈடுபட்டுழைக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாரட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்குக் கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினம் இவ்வாண்டு வவுனியா நகரில் கொண்டாடப் படுவதையிட்டும், "மலைத்தேன்" சிறப்பு மலரில் மாணவரது ஆக்கங்கள் பெருமளவாக இடம் பெறுவதனையிட்டும் மகிழ்ந்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடரட்டும் தங்களது பணி.

ஆளுநர் செயலகம்,
திருக்கோணமலை.

**கலாநிதி காமினி பொன்சேகா**
வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர்.

## வடக்கு கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின்

# ஆசிச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மாகாண கல்வித் திணைக்களம் ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழித் தினப் போட்டிகளையும், நிறைவு விழாவினையும் இவ்வாண்டு வவுனியா நகரில் நடாத்துகின்றது. நிறைவு விழாவினையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தியினை நல்குவதில் உவகை கொள்கின்றேன்.

தமிழ்மொழித்தினம் என்றதும், குறிப்பிட்ட காலத்துள் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்ட பிள்ளைகளை மட்டும் கொண்டு ஆயத்தம் செய்து பங்குபற்ற வைப்பதைக் காண முடிகின்றது. இந்நிலை மாற வேண்டும். பாடசாலைகளில் அன்றாடம் தமிழ் மொழியின் செழுமையையும் அதன் ஆற்றலையும் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். மாணவர்கள் தமிழ்மொழியை நன்கு அறிந்து பேசவும், வாசிக்கவும், எழுதவும் பயிற்சிகள் கொடுக்க வேண்டும். மாணவர்களை உறுப்பமைய எழுதப் பழக்க வேண்டும். அவர்களது உணர்வுகளுக்கு வடிகாலமைத்து, உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்ந்து ஆளுமையை உருவாக்க வேண்டும்.

நம் மாணவர்கள் சீரிய சிந்தனையுடையவர்கள். துருவித்துருவி ஆராயும் நுண் மாண் நுழைபுலம் கொண்டவர்கள். அவர்களது எண்ணங்களை மொழியூடாக பிரதி பலிக்கச் செய்ய வேண்டும். இன்று தமிழ்மொழியைச் சரியாக, இலக்கண வழு நீக்கி, உறுப்பமைய எழுதுவதைக் காணலரிது. ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விமான்கள் இதனையிட்டுக் கரிசனை கொள்ள வேண்டும்.

மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றுதல் மிக முக்கியமானது. நமது பிள்ளைகள் போட்டிகளைச் சவாலாக ஏற்றுப் பங்குபற்றி வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்கும் மனப்பாங்கினை உருவாக்க வேண்டும். வெற்றியைக் கண்டு வீறாப்புக் கொள்ளாமலும் தோல்வியைக் கண்டு துவண்டு விடாமலும் மன உறுதியை வளர்க்க அவர்களுக்கு வலுவூட்ட வேண்டும். இந்த ஆண்டும் எமது மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில்கள் பல பெறுவதற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மலைத்தேன்" என்ற இச்சிறப்பு மலர் முற்றுமுழுதாக மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளி வருவது கண்டு பெருமகிழ்ச்சயடைகின்றேன். எதிர்காலத்தில் பெருவிருட்சமாகக் கிளை பரப்பப் போகும் எழுத்தாளர் சமூகத்தின் உருவாக்கத்திற்கு இம் மலர் சிறு வித்தாக அமைய வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

உற்பத்தி விளைதிறன் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வாண்டிலே எமது மாகாண கல்வி, கலாசார, பொருளாதார, நிருவாகச் செயற்பாடுகளனைத்தும் உன்னத நிலை பெற்றுயர்வதற்கு எனது நல்லாசிகள்.

ஜி. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டுவிளையாட்டுதுறை
அமைச்சின் செயலாளர்

## திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களின்

# ஆசியுரை

கல்வி நிர்வாகம் அதன் எஜமான்களான மாணவர்களுக்கானது. அவர்களுக்குச் சேவை செய்வதே கல்விப்பணி. ஆசிரியர் தொட்டு கல்வி அமைச்சர் வரை கல்விப் பணியில் ஈடுபடுபவர்களே.கல்விப்பணியின் ஊடகம் மொழி. மொழியே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் ஊடகமாக வுள்ளதால், மொழியின்றிக் கல்வி இல்லை.

தமிழ் மொழி நம் தாய்மொழி. உணர்வில் உயிராகவுள்ளது. நாவில் அமிர்தமாக நர்த்தனமாடுகிறது. தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து கொண்டால் மட்டும் போதாது. நல்ல தமிழில் பேசவும் எழுதவும் வேண்டும்.

தமிழ் மொழியின் தனித்துவமான பண்புகளையும், பெருமைகளையும் அறியவும் தமிழர் தம் பண்பாட்டின் பாங்கினை மீள நோக்கி அதன்வழி நிற்றலும்,மனிதப் பண்பாடு மொழி வளர்ச்சியின் அங்கம் என உணர்த்தலும். சீரிய சிந்தனை,ஆற்றல்களை மொழியூடாக வெளியிடும் திறனை வளர்த்தலும், மறந்தும் மறைந்தும் கிடக்கும் மொழித் திறன்களை வெளிக் கொணருதலும் அவர்களைப் புதிய வேகத்துடன் வளர்த்துக் கொள்வதில் போட்டிகளும், என பல இலக்குகளை நோக்கமாகத் தமிழ்மொழித் தினம் கொண்டு விளங்குகின்றது.

பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் பாடசாலை, கோட்டம், மாவட்டம், மாகாணம், தேசியம் எனப் பல மட்டங்களில் போட்டிகள் நடைபெறுவதால் சகல மாணவர்களும் தமிழ் மொழித் தினத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

கடந்த பல ஆண்டுகளாக வடக்குக் கிழக்கு மாகாணம் தமிழ்மொழித் தினப்போட்டிகளில் தொடர்ந்து தேசிய நிலையில் வெற்றிகண்டு முன்னணியில் நிற்பது, நம் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் கல்வி அலுவலர்களினதும் விடா முயற்சியை எடுத்தியம்புகிறது. தொடர்ந்தும் வெற்றி பெற எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஒரு பரீட்சை போன்றதே போட்டியும். போட்டிகளில் பங்குபற்றுதல்தான் முக்கியமானது என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். போட்டிகளில் பங்குபற்றுதலே சிறந்த வெற்றியாகும்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவு தினத்தில், தேசிய நிலை தமிழ்மொழித்தின நிறைவு விழா கொண்டாடப்படுவது மிகப் பாராட்டுக்குரியது. நமது வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் மாகாண மட்டத்தில் போட்டிகளை நடாத்தி நிறைவுநாள் விழாவின்போது சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டு வருவது போற்றற்குரியதாகும். சுவைத்தேன், பார்த்தேன், என கடந்த ஆண்டுகளில் வெளிவந்தன. இவ்வாண்டு மாணவச் செல்வங்களின் ஆக்கங்களைப் பெருமளவு தாங்கி "மலைத்தேன்"என மலர்கிறது. தமிழ் மொழித்தின் விழா மலருக்கு என் நல் ஆசியுரையை நல்குவதில் மகிழ்வடைகிறேன். விழா இனிது நிறைவேற எனது வாழ்த்துக்கள்.

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்

## வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர்
## செல்வி. தி. பெரியதம்பி அவர்களின்

# ஆசிச்செய்தி

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் மாகாண மட்டத் தமிழ் மொழித் தினப் போட்டிகளையும், அதனையொட்டிய நிறைவு விழாக்களையும் தொடர்ந்து மேற் கொண்டு வருகிறது. கடந்த இரு ஆண்டுகளாக நிறைவு விழாவினையொட்டி சிறப்பு மலர்களையும் வெளியிட்டு வருகிறது. இவ்வாண்டும், மாகாண தமிழ்மொழித்தின நிறைவு நாளைச் சிறப்பிக்க வெளிவரும் "மலைத்தேன்" மலருக்கு ஆசிச்செய்தியினை நல்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்மொழித் தினத்தைப் பல மட்டங்களில் கொண்டாடுவதன் நோக்கம் தமிழ் மொழியின் செழுமையினை அறியவும், அதில் மாணவர்கள் பாண்டித்தியமுடையோராய்த் திகழவும் பெருந்தொகை மாணவர்களைப் பங்குபெறச் செய்து அவர்களது உயர்ந்த திறன்களை வெளிக்கொணர்ந்து ஆளுமையை வளர்த்தலுமாகும்.

ஆனால் நடைமுறையில் 10% மாணவர்கள்தாம் பங்குகொள்வதைக் காண்கின் றோம். பாடசாலை மட்டத்தில் சகல மாணவர்களையும் பங்குபெறச் செய்ய வேண்டும். அவர்களது மொழி ஆற்றலையும், கலைத்திறன்களையும் வளர்த்தெடுப்பதற்கு ஆசிரி யர்களும், அதிபர்களும் முயற்சி எடுக்க வேண்டும்.

இவ்வாண்டு மாகாண மட்டப் போட்டிகள் வவுனியா மாவட்டத்தில் முதன் முறை யாக நடைபெறுவதற்கு இணங்கி ஒழுங்குகளை மேற்கொண்ட மாவட்டக் கல்வித் திணைக்களத் தினருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வைபவ முயற்சிகளுக்கு உந்துகோல்களாயிருந்து, மிகுந்த ஆர்வத் துடன் ஒத்துழைப்பு நல்குவதற்கு முன்வந்தமைக்காகக் கௌரவ பாராளுமன்ற உறுப் பினர்கள் யாவர்க்கும் எனது நன்றிகள்.

தொடர்ந்து "சுவைத்தேன்" "பார்த்தேன்" என வெளிவந்த மலர்கள் நல்ல படைப்பு களை தம்மகத்தே தாங்கி வெளிவந்தன. இம்முறை மாணவர்களது ஆக்கங்களைப் பெருமளவு கொண்டு "மலைத்தேன்" ஆக வெளிவருவது சிறப்பான அம்சமாகும். மாண வர்களை நம் மொழியில் ஆற்றல் உள்ளவர்களாக்க நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். விழா இனிதாக நிறைவேற என் இதய வாழ்த்துக்களைத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

மாகாண கல்வித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.

**செல்வி. தி. பெரியதம்பி**
மாகாண கல்விப் பணிப்பாளர்

# இதழாசிரியர் இதயத்திலிருந்து...

வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மாகாண கல்வித் திணைக்களம், மாகாண தமிழ் மொழித்தினத்தினையொட்டிய போட்டிகளையும், நிறைவு விழாக்களையும் சிறப்பாக ஒழுங்கு செய்து வருகின்றது. நிறைவு விழாவின்போது ஆண்டுதோறும் தமிழ்மொழித் தின விழா மலரினையும் வெளியிட்டு வருவது அதன் சிறப்பம்சமாகும்.

மொழி மனிதனை வளப்படுத்துகிறது. மொழியினூடாகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மாணவர்கள் மொழியில் நன்கு தேர்ச்சிபெற வேண்டும். அவர்களது ஆக்கத்திறன்கள் மிளிர வேண்டும். அதனூடாக நாடு நலம் பெறும் நல்லதொரு சமுதாயம் உருவாக வேண்டும். இந்நோக்கத்தைக் கருவாகக் கொண்டு தமிழ்மொழித்தினம் நாடெங்குமுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் கொண்டாடுவதற்கு அரசு நடவடிக்கையெடுத்துள்ளது.

நல்லதொரு நோக்கத்தைக் கொண்டு செயற்படுத்தப்படும் தமிழ்மொழித்தினத்தினை மிகச் சிறப்பாகக் கொண்டாட வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் பாடசாலைகள் தோறும் முத்தமிழின் ஊடாக மாணவரிடை ஆக்கத்திறன்களை அபிவிருத்தி செய்து வருகிறது. இன்று இம்மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும், கையெழுத்துப் பத்திரிகைகள் தொடங்குவதற்கு வழிகோலப்பட்டுள்ளது. பலபாடசாலைகளில் வகுப்புக்கள் ரீதியாகவும், கையெழுத்துப் பிரதிகள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர்களது வழிநடத்தலில், அதிபரின் நெறிப்படுத்தலில் இவை நடை பெறுகின்றன. கடந்த ஆண்டு கையெழுத்துப்பத்திரிகைகளுக்கான போட்டியில் பல பாடசாலைகள் கலந்து கொண்டு பரிசில்களைத் தட்டிக் கொண்டன.

மாணவர்களது ஆக்கங்களை, இவ்வகை கையெழுத்துப் பிரதிகளில் கண்ணுற்றபோதும், அவர்களது உள, உணர்ச்சி வெளிப்பாடுகளைப் பார்த்தபோதும், தமிழ்மொழித்தினம் எமது மாகாணப் பாடசாலைகளில் தினமும் நடைபெற்று வருவதனைக் காட்டுகிறது. அதனை நிறைவு செய்யவே போட்டிகள் நடாத்தப்பட்டு, நிறைவு விழாவும், சிறப்பு மலரும் வெளியிடப் படுகின்றது.

"வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினச் சிறப்புமலர்களைச் சிறந்த ஆவணங்களாக நூலகங்களிலே பாதுகாக்கப்பட வேண்டும். அவைகள் சிறந்த, தேடுதற்கரிய ஆக்கங்களைக் கொண்டுள்ளன" என பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். வீரகேசரி தினகரன் Island "அய்லன்ட்" பத்திரிகைகளும் பாராட்டி எழுதி ஊக்கமூட்டின. சரிநிகர் விமர்சனக் கண்ணோட்டத்தோடு எழுதி வலுவூட்டியது.

வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு பரந்துபட்ட கடமைகளைக் கொண்டது. மாகாணக் கல்வித்திணைக்களத்தினை உருவாக்கிப் பல கடமைகளைக் கையளித்தது. தமிழ் மொழித்தினம் தொடர்பான கடமைகளையும் கையளித்தது தமிழ்மொழித் தினப் போட்டிகள், நிறைவு விழாக்கள், சிறப்பு மலர்கள் காத்திரமாயின.

தமிழ்மொழி தேன்போல் தித்திப்பது, உயிர்த்துடிப்புள்ளது, தொன்மையானது, பிறரைத் திட்டும் போதும் மறைமுகமாக வாழ்த்தும் வண்ணம் மரபுகளையுடையது. மனதால், விழியால், உணர்வால் அனுபவித்து சுவைத்தறியக்கூடியது. அத் தேன் தமிழில் நமது மாணவர்கள் பாண்டித்தியம் உடையவர்களாக வேண்டும். ஆக்கவேண்டும். அதற்குத் தமிழ் மொழித்தினம் அடித்தளமாகிறது. தொடரமைச்சின் சுற்று நிருபத்திற்கேற்பவே போட்டிகள் நடாத்தப் பட்டு வருகின்றன.

போட்டிகளில் பாங்குடன் பயின்று, பங்குபற்றுதலே பெருவெற்றி எனக் கொள்ள வேண்டும். வெற்றியும் தோல்வியும் வீரனுக்குரியது. விழுவது எழுவதற்காக என்பதை மாணவர் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்கக்கூடிய மனவுறுதியை மாணவரிடை வளர்க்கவேண்டும். தோல்வியைக் கண்டு துவண்டு விடாமலும் வெற்றியைக் கண்டு வீறாப்புக் கொள்ளாமலும் இருக்கும் மனவலுவை மாணவருள்ளத்தில் வளர்க்க வேண்டும்.

மாகாணத் தமிழ் மொழித்தினத்தினையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்குத் தேன் தமிழினில் பலபொருள்கொள்ளும் வகையில் பெயரிட்டுவருகிறோம். "சுவைத்தேன்" மலரைச் சுவைத்தவர்கள் "பார்த்தேன்" படித்து "மலைத்தேன்" என்றார்கள். இம்மலர்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், கவிஞர்கள், எனப் பலரது ஆக்கங்களைத் தாங்கி வந்தன. இவ்வாண்டு தமிழ்மொழித் தினவிழா சிறப்புமலரில் மாணவரது ஆக்கங்களே பெருமளவு இடம் பெறவேண்டும், எனும் கருத்து முன்வைக்கப்பட்டது. மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி அவர்கள், இக்கருத்தினை வலியுறுத்தினார். அதன் அடிப்படையில் கோட்டங்களுக்கூடாக பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டது. பலர் பழையபடியே இருக்கச் சிலர் சுறு சுறுப்பாகினர். ஆக்கங்களைப் பெற்று அனுப்பி வைத்தனர்.

மாணவர்களது ஆக்கங்களைப் படித்தபோது; அவர்களின் அடிமனதில் ஆழ்ந்துள்ள உணர்வுகளை உணர்ச்சிக் குமுறல்களை, ஆற்றல்களை எடைபோடமுடியாது மலைத்தேன். மலராய், மலர்க்கொத்துக்களாய், காயாய், கனியாய், நல்வித்துக்களாய், கவிதை வீச்சுக்களாய்... எவ்வளவு ஆற்றல்கள், மாணவ வித்துக்களுக்குள் இருக்கும் விருட்சங்களைக் கண்டு மலைத்தேன்.

மலையிடுக்குகளிலும், குகைகளிலும், உள்ள தேன் பழமையாகி சுவையுடையதாகி இன்பம் சேர்ப்பது. மலைத்தேன் மிகச் சுவையுடைய மாமருந்து. தேன்தமிழும் பிணிதீர்க்கும் மாமருந்து. மாணவர்களது ஆக்கங்கள் அம் மலைத்தேன் போல் அமையும் எனும் நோக்கோடு வாசிப்போர். மாணவரது தரத்திற்கு இறங்கி வாசிக்கும்படியும் தயவாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் தலைநகர் திருகோணமலை, மாகாண கல்வி அமைச்சும், மாகாண கல்வித் திணைக்களமும் அமைந்த இடம் திருகோணமலை. வடக்கு கிழக்கு மாணவர்களது ஆக்கங்களை மலைத்தேன் ஆக்கி உங்கள் முன் தந்துள்ளோம்.

இம்மலர் விரிய எருவிட்டு நீர்ப்பாய்ச்சிப் பார்த்திருந்தோர் பலர். சரியாகவும், அழகாகவும் மலர் வெளியிடவேண்டும் என்ற நெறிப்படுத்தும் மாகாணக் கல்விப் பணிப்பாளர். சீரான வழிநின்று துணிந்து செய்வதற்குப் பக்கபலமாயிருந்து அறிவூட்டும், கல்விச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள், ஆசியுரை கேட்டபோது அன்புடன் தந்த ஆளுநர், பிரதம செயலாளர் அவர்களுக்கும்; ஆக்கங்கள் தந்துதவிய மாணவர் ஆசிரியர், கல்விமான்கள், அனைவருக்கும் நன்றிகள். தட்டச்சு செய்துதந்த செல்விகள் ஜே. சித்திரா, வ. யோ. நிர்மலா ஆகியோருக்கும், அச்சுப்பிழை நீக்கும் பணியில் ஈடுபட்ட திரு. சி. குருநாதன், உதவிக்கல்விப் பணிப்பாளர்களான திரு. க. திலகரத்தினம், முத்துக்குமாரசாமி அட்டைப்படத்தை வடிவமைத்து ஆக்கித்தந்த அருள்பாஸ்கரன் ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகளையும் நிறைவு விழாக்களையும் வவுனியாவில் நடாத்தித் தந்த வவுனியா கல்விப்பணிப்பாளர் திரு. துரை. தியாகராஜா அவர்களுக்கும் அவர்தம் அனைத்து அலுவலர்களுக்கும் மனங்கனிந்த நன்றிகள்.

அழகாக அச்சிட்டு உதவிய கணேச அச்சக உரிமையாளர் திரு. மு. சுந்தரலிங்கத் தேசிகர் அவர்தம் அலுவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

தொடர்ந்து வரப்போகும் காலங்களிலும் இவ்வகைத் தமிழ்மொழித் தின விழாமலர்கள் மாகாண கல்வித் திணைக்களம் வெளியிட, மாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சு ஆக்கமும் ஊக்கமும் நல்கி, பொறுப்புணர்ச்சியுடன் செயற்படக் கூடிய அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டுமென்னும் எனது ஆதங்கத்தையும் தெரிவித்து, சுவைத்தேன், பார்த்தேன், மலர்களின் தொடர்ச்சியாக மலைத்தேன் மலரை உங்களிடம் தந்து விடைபெறுகிறேன்.

நன்றி

மாகாணக் கல்வித் திணைக்களம்,
திருக்கோணமலை.

ச. அருளானந்தம்
இதழ் ஆசிரியர்

# படையல்

**அனுதினமும் அல்லலுற்று**
**ஆற்றாமையால் வேதனையுற்று**
**விடியலுக்குக் காத்திருக்கும்**
**வெந்திருக்கும் மக்களுக்கு**
**இப்படையல் சமர்ப்பணம்**

-ஆசிரியர்-

# மாகாண தமிழ்மொழித்தின விழாக்குழு ~ 1996

**காப்பாளர்கள் :** **திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வகிமா

**திருமதி. ரஞ்சனி நடேசபிள்ளை அவர்கள்**
உதவிச் செயலாளர்
கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வகிமா.

**தலைவர் :** **செல்வி. தி. பெரியதம்பி**
மகாணக் கல்விப்பணிப்பாளர்

**பொருளாளர்கள் :** **திரு. எஸ் கணபதிப்பிள்ளை**
**திரு. ஆர், சுகுணதீரன்**
பிரதம கணக்காளர்கள்

**செயலாளர் :** **திரு. ச. அருளானந்தம் அவர்கள்**
பிரதி மாகாண கல்விப்பணிப்பாளர்
(தமிழ் மொழித்தின மாகாண இணைப்பாளர்)

## உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | **திரு. எஸ். நவரத்தினராசா** | - | மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர். |
| 02. | **திரு. எஸ். மகாலிங்கம்** | - | " " " |
| 03. | **ஜனாப். எம். எச். யாக்கூப்** | - | " " " |
| 04. | **திரு. ரி. சந்திரதாச** | - | பிராந்திய கல்விப்பணிப்பாளர், திருமலை |
| 05. | **திரு. துரை தியாகராஜா** | - | " " வவுனியா |
| 06. | **திரு. எஸ். எஸ். மனோகரன்** | - | " " மட்டக்களப்பு |
| 07. | **ஜனாப். ஐ. எம். இஸ்ஸடீன்** | - | வலயக் கல்விப்பணிப்பாளர், கல்முனை |
| 08. | **திரு. சி. புலேந்திரன்** | - | பிராந்தியக் கல்விப்பணிப்பாளர், முல்லைத்தீவு |
| 09. | **திரு. ரி. துரைசிங்கம்** | - | " " கிளிநொச்சி |
| 10. | **ஜனாப். ஏ. சீ. அப்துல்ஹக்** | - | " " மன்னார் |
| 11. | **திரு. கே. கந்தசாமி** | - | " " யாழ் 1 |
| 12. | **திரு. இ. சிவானந்தம்** | - | " யாழ் - 11 |
| 13. | **திரு. கு. திலகரத்தினம்** | - | உதவிக் கல்விப்பணிப்பாளர் |
| 14. | **திருமதி. ரி. இராமச்சந்திரன்** | - | திட்டமிடற் பணிப்பாளர் |
| 15. | **திரு. த. முத்துக்குமாரசாமி** | - | அதிபர் |
| 16. | **திரு. வ. தங்கவேல்** | - | அதிபர் |
| 17. | **திரு. ஆர். எம். ஜே. தங்கராஜா** | - | கல்விப்பணிப்பாளர் |

## மாவட்ட இணைப்பாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | **திரு. க. தங்கராஜா** | - | திருகோணமலை |
| 02. | **திருமதி. எஸ். சக்கரவர்த்தி** | - | மட்டக்களப்பு |
| 03. | **ஆ. பொன்னையா** | - | வவுனியா |
| 04. | **திருமதி. கலா குமாரவேலு** | - | மன்னார் |
| 05. | **ஜனாப். எம். ஐ. அகமட்லெவ்வை** | - | கல்முனை |

# தேன்வதை உள்ளே

அடக்கம் | பக்கம்


| அடக்கம் | பக்கம் |
|---|---|
| 01. ஆசிரியர் எமது வழிகாட்டி | 01 |
| 02. வாணி அருள் | 02 |
| 03. சுவாமி விவேகானந்தர் | 03 |
| 04. மீண்டும் ஒரு சுதந்திரம் | 05 |
| 05. இன்றைய பெண்களின் நிலை | 06 |
| 06. தாய்க்குல கண்ணீர் | 09 |
| 07. எனது சீருடை | 10 |
| 08. புதுமை காண்போம் நாம் | 11 |
| 09. மீரா | 12 |
| 10. போரின் கெடுதியும் சமாதானத்தின் தேவையும் | 14 |
| 11. ஏர் பிடிப்போம் | 16 |
| 12. சாம்பல்தீவில் தைமாதம் | 17 |
| 13. ஒருநாள் வருவோம் உனைத்தேடி | 18 |
| 14. திருக்குறளின் மகிமை | 19 |
| 15. நாங்கள் அகதிகள் | 21 |
| 16. எனது அம்மா | 22 |
| 17. பாரதியை மிஞ்சியவர் | 23 |
| 18. இவளா.....? | 24 |
| 19. அம்மா என்றொரு தெய்வம் | 26 |
| 20. ஓ... ஆலமரமே! | 27 |
| 21. தனிநாயகம் அடிகளும் இலக்கியப் பணியும் | 28 |
| 22. உள்ளக் கமலம் | 31 |
| 23. பாடசாலையும் சமூகமும் | 32 |
| 24. சொல்லு தேசமே | 35 |
| 25. கங்குவேலியின் வளம் | 36 |
| 26. அவலம் தீருமோ......? | 37 |
| 27. தவிக்கின்ற உள்ளங்கள் | 38 |
| 28. கல்லூரி வாசலிலே | 41 |
| 29. நல்லுபதேசம் | 42 |
| 30. தலைமைத்துவம் | 43 |
| 31. போதையூட்டும் போதை | 44 |
| 32. எங்கள் நிலை | 46 |
| 33. ஓடி விளையாடு | 47 |
| 34. மனித மனமென்றுமாறும் | 50 |
| 35. சுவாமி விபுலானந்த அடிகள் | 51 |
| 36. வெல்வேன் | 53 |
| 37. அப்பா... | 54 |
| 38. அமைதியே ஓடிவா | 55 |
| 39. அறிஞர் சித்திலெவ்வை | 56 |
| 40. வாடுகின்றார் | 59 |
| 41. இன்றைய சமுதாயமும் கணனியும் | 60 |
| 42. கல்வித்துறை | 63 |

| அடக்கம் | பக்கம் |
| --- | --- |
| 43. யுத்தமென்ற பேயரக்கன் கூத்து | 66 |
| 44. மாணவர் நலன் ஓம்பல் | 68 |
| 45. நாட்டின் நடப்பு | 69 |
| 46. யாரது........? | 71 |
| 47. அமைதி நம் கையில் | 74 |
| 48. பாடசாலைச் செயற்பாட்டுடன் இணைந்த கணனி பற்றிய அறிமுகம் | 75 |
| 49. நானென்ற ஆணவம் மாற்று | 78 |
| 50. பாடசாலை அலுவலக முகாமைத்துவம் | 79 |
| 51. காந்தி | 81 |
| 52. காடே மகிழ்ந்தது | 82 |
| 53. பங்குபற்றல் முகாமைத்துவம் | 84 |
| 54. அமைதி வரமாட்டாதோ...! | 86 |
| 55. மனித மூளைக்குப் போட்டி | 87 |
| 56. விக்ரர் | 89 |
| 57. வருவதெப்போதோ.........? | 91 |
| 58. ஓசோன் படலமும், பிரச்சனைகளும் | 92 |
| 59. சூழலே விழித்தெழு! | 95 |
| 60. உலகை உலுக்கும் துடுப்பாட்டம் | 96 |
| 61. ஒன்றுபடுவோம்..... | 97 |
| 62. புவி நடுக்கத்தால் இலங்கைக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படுமா? | 98 |
| 63. காட்டுச் சேவல் | 101 |
| 64. மனித நண்பர் டால்பின் | 103 |
| 65. தித்திக்கும் தீந்தமிழ | 104 |
| 66. குடியேறி வாழ்ந்திடனும் | 107 |
| 67. சிறுவர் உரிமைக்குப் பெற்றோரின் பங்கு | 108 |
| 68. கனவாகிப் போய் விடுமோ.....? | 110 |
| 69. இளங்கோவின் கண்ணகி | 111 |
| 70. மனங்கவர்ந்த கிராமம் | 112 |
| 71. பெண்களின் நிலமையும் இன்றைய சமூகமும் | 114 |
| 72. இன்றைய உலகில் விஞ்ஞானம் | 116 |
| 73. இன ஒற்றுமையும் சமத்துவமும் | 118 |
| 74. தகவல் தொடர்பான நவீன போக்கு | 120 |
| 75. சுவாமி விபுலானந்தரின் கல்விக் கொள்கை | 122 |
| 76. சமாதானமே உயர்வானது | 125 |
| 77. சிறியன சிந்தியாதான் | 127 |
| 78. நாவல் இலக்கியமும் சமூகப்பண்பாட்டு விழுமியங்களும் | 132 |
| 79. கவிதை காட்டும் மக்கட் பண்பு | 135 |

# ஆசிரியர் எமது வழிகாட்டி

**சுதர்சினி சுப்பிரமணியம்**
12ம் ஆண்டு

தி/புனித மரியாள் கல்லூரி

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"

ஆம், ஆழியால் சூழப்பட்ட இவ் அகிலமதில் வாழும் அனைத்து மக்களுக்கும் அழிவற்ற சிறந்த செல்வமாக விளங்குவது கல்விச் செல்வம் ஆகும். இவ்வழியாத கல்விக் கருவூலத்தை எமக்கு வழங்கும் பெருமக்கள் ஆசிரியர்கள் அன்றோ. எமது அறியாமை இருளைப் போக்கும் ஆசிரியர்களை "ஞான விளக்குகள்" என்றார் சோக்கிரட்டீஸ் "நற்சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் தூண் போன்றவர்கள்" என்றார் மகாத்மா காந்தி ஆம், ஆசிரியர் ஒருவர் சமுதாயத்தின் தலைவனாகவும், ஏணியாகவும் இருந்து வழிகாட்டுகின்றார்.

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் 6ம் திகதி உலகளாவிய ரீதியில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற கூற்றிற்கு இணங்க எமக்கு நல்லறிவு புகட்டி எம்மை வழிநடத்திச் செல்லும் இக் கண்கண்ட தெய்வங்களை நாம் போற்றிப் பணிந்து நடத்தல் வேண்டும்.

சங்க காலத்தில் அரசர்களை விட அரசர்களுக்கு கல்வி புகட்டிய ஆசான்களுக்கே பெரும் மதிப்புக் காணப்பட்டது. ஆசிரியர் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது எனில், ஆசு என்பது குற்றம், இரியர் என்பது அகற்றுபவர். குற்றங்களை நீக்கி அறிவைப் புகட்டுபவர் என்ற பொருளில் ஆசிரியர் என்ற பெயர் ஏற்பட்டது. இன்றைய சமுதாயத்தில் ஆசிரியர் பாட அறிவைக் கொடுப்பவராக மட்டுமன்றி மாணவரின் பாதுகாவலராகவும், சமூக மாற்றங்களைக் கொண்டுவருபவராகவும் இருக்கின்றார். அன்று "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற நிலை இருந்தது. இன்று ஆசிரியர் எவ்வழி மாணவர் அவ்வழி என்ற நிலையைக் காண்கிறோம்.

உலகெங்கும் ஏறத்தாழ 4 கோடி ஆசிரியர்கள் உள்ளனர். இலங்கையில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரம் ஆசிரியர்கள் உள்ளனர். ஆசிரியர்கள் மாணவர்களைப் பற்றிப் பொறுப்புடையவர்களாக, முடிவு செய்ய வேண்டிய அதிகாரியாக, அன்பு செலுத்தும் தாயாக, கட்டுப்பாட்டை வளர்க்கும் தந்தையாக செயற்படுகின்றனர். மாணவர்கள் பெற்றோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடப்பதை விட ஆசிரியர்களின் அறிவுரைகளுக்கே கூடிய மதிப்பு அளிக்கின்றனர். பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் ஆசிரியர்கள் மீதுபெரும் மதிப்பையும், பக்தியையும் கொண்டுள்ளனர். இது எல்லா விதமான அன்புகளிலும், பாராட்டுக்களிலும் உயர்ந்ததாகும். சமூகம் ஆசிரியர்களை சாதாரண மனிதரில் இருந்து பிரித்து விசேட அறிவு உடையவராக எதிர்பார்க்கின்றது. இதனை நிறைவு செய்வது ஆசிரியப் பெருமக்களின் கடமையாகும்.

இன்றைய விஞ்ஞான உலகில் எத்தகைய நவீன கற்பித்தற் சாதனங்கள் வந்தாலும் அவற்றால் ஆசிரியர் வழங்கும் அன்பை பரிவை, அரவணைப்பைத் தரமுடியுமா? ஆசிரியர்கள் எமது வாழ்வின் திறவுகோலாகவும் மக்கள் ஆட்சியை மாண்புறச் செய்யும் வழிகாட்டிகளாகவும் அன்பினையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் திறனையும் அனைவரிடமும் பரப்புவர்களாகவும் விளங்குகின்றனர்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை"

வள்ளுவப் பெருந்தகையின் இவ்வாக்கிற்கிணங்க ஆசிரியர்களைப் போற்றி கௌரவித்து நடப்போமாக.

# வாணி அருள்

செல்வி இ. ஹீர்த்திகா,
ஆண்டு - 11.

யா/விக்கினேஸ்வராக் கல்லூரி.
கரவெட்டி.

வாணி கலைவாணி வந்தே வரந்தாநீ
நாணி மனம்வாடி நாடுகின்றேன் – பேணிக்
கடலான கல்விக் கரைதன்னைக் காட்டி
மடமானே மாட்சி அருள்.

சங்கத்துச் சான்றோரின் கற்பனையில் பூத்தமலர்
சங்கம் அரங்கேறி ஏடானாள் – பங்கமிலான்
பாரதியின் பண்ணிலே துள்ளி விளையாடி
வாரியே தந்தாள் வரம்.

மருட்டும் விழியாலே மாயவித்தை காட்டும்
திருவின் திருவான தீபம் – இரவிலே
ஆராரோ பாடி அரவணைத்து அன்பாய்
தருகிறாள் இன்பத்தமிழ்

நெஞ்சக் கலசம் நிறையன்பு பாலூற்றி
கொஞ்சும் தமிழாலே பாடிடுவேன் – வஞ்சியே
பூவினிலே பூத்திருக்கும் பூமகளே பூவாக
நாவினிலே நீ மலர்ந்து நில்.

பாரதியே பைங்கிளியே பாவலனின் பாமகளே
சேரடி நீ நாவினிலே செந்திருவே – பாரிலுள்ளோர்
கேட்டுக் கிறுகிறுத்து என்பாட்டில் மெய்சிலிர்ப்பர்
கேட்டுக்கோ அன்னை அருள்.

பார்மகளை வானவளை பாவலனின் நாமகளை
பார்போற்றும் பச்சைப் பசுங்கிளியை – பார்த்து மனம்
சொக்கிப் பரவசமாய் நான்பாட வந்துநின்று
கோகிலமே என்னோடு பாடு.

# சுவாமி விவேகானந்தர்

இ. லோகநாயகி
ஆண்டு 8

வ/வெளிக்குளம் க. உ. வித்தியாலயம்
வவுனியா.

உலகில் மக்கள் சமுதாயம் உய்யும் நெறியைக் காட்டியருளிய பெரியார்கள் பலர். இந்து சமய பாரம்பரியத்தில் சமய வாழ்விற்குத் தொண்டாற்றியவர் பலர். அவர்களில் ஒருவரான இராமகிருஷ்ண பரமஹம்சர் உலக மக்களுக்கு மெய்ஞான ஒளி காட்டுவதற்கென ஏற்றி வைத்த ஞான விளக்கே சுவாமி விவோகானந்தர் ஆவார். பாரத பூமி ஆங்கில மோகத்தில் திளைத்து ஆன்மீக உணர்வு குன்றி இருந்த காலத்தில் இந்துக்களது உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தோன்றிய உத்தமர்.

இவர் வங்காளத்திலே உள்ள கல்கத்தா நகரிலே விசுவநாத தத்தருக்கும் புவனேஸ்வரி தேவியாருக்கும் 1863ம் ஆண்டு ஆண்டு தை மாதம் 12ம் திகதி பிறந்தார். இவரது இளமைப்பெயர் நரேந்திரன். இவர் இளமைப் பருவத்திலே வங்காளி, ஆங்கிலம் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைத் துறை போகக்கற்றார். இலக்கியங்கள் வரலாற்று நூல்கள், பைபிள் குர்ஆன் போன்ற நூல்களையும் நுண்ணிய அறிவு கொண்டு ஆராய்ந்தார். கேட்போரைக் கவரும் சொல்லாற்றல் இடர்களுக்கு அஞ்சாத மனஉறுதி உரமேறிய உடற்கட்டு ஆகியன நரேந்திரனுக்கு தனி வசீகரத்தைத் தந்தன. இவர் கடவுள் பற்று மிக்கவர். பூஜை அறையில் உலகை மறந்து தியானத்தில் மூழ்கிவிடுவார். அவனுடன் கடவுள் பற்றும் வளர்ந்தது. பதினெட்டு வயதுநிரம்பிய வாலிபனது உள்ளத்தில் கடவுளைக் காணவேண்டுமென ஆசை கொழுந்து விட்டிருந்தது. இன்னிலையில் தான் இராமகிருஷ்ண பரமகம்சரைச் சந்தித்தான். ஐயா! தாங்கள் கடவுளைக் கண்டிருக்கின்றீர்களா? "என்று இராமகிருஷ்ணரிடம் நரேந்திரன் கேட்டான்." கண்டிருக்கிறேன் இதோ உன்னை கண்முன் காண்கிறேனல்லவா. அது போல கடவுளையும் கண்டிருக்கிறேன். என்றார். நரேந்திரனின் உள்ளம் பூரித்தது. பரமகம்சர் தொடர்பால் கடவுளைப் பற்றிய ஐயங்கள் நீங்கின. அவரையே குருவாக ஏற்று இறை அனுபவங்கள் பல பெற்றான், நரேந்திரன்.

கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரை அனுபவத்தால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்ற கருத்தை குருநாதரிடமிருந்து நரேந்திரன் பெற்றுக்கொண்டான். நூலறிவு பெற்றிருந்த நரேந்திரனுக்கு அனுபவ ஞானமும் கைகூடிற்று. உலகினர்க்கு உய்யும் நெறிகாட்டும் தகுதியினையும் அவன் பெற்று விட்டான். தம் சக்தியனைத்தையும் நரேந்திரனுக்கு ஈந்து 1886ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி இராமகிருஷ்ணர் இறைவனடி சேர்ந்தார். அவர் ஏற்றிய ஞான தீபம் சுடர் விட்டு எரிய ஆரம்பித்தது. குருநாதரின் கருத்துப்படி சமூகத்திற்குச் சேவை செய்வதே கடமையெனக் கொண்டு துறவு வாழ்க்கையை விரும்பி ஏற்றான். அத்துறவியின் பெயரே சுவாமி விவேகானந்தர்.

1892ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி உலகின் வரலாற்றிலே ஒரு சர்வமத மாநாடு கூட்டப்பட்டது. அதில் இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்தார். பேச்சாளராகக் கலந்து கொண்ட தலைவர்கள் யாவரும் தம்மதத்தின் அருமை பெருமைகளை விதந்துரைத்தனர். ஆனால் சுவாமி விவேகானந்தரோ அமெரிக்க நாட்டுச்சகோதர சகோதரிகளே என விளித்துத் தமது பேச்சை ஆரம்பித்தார். யாவரையும் ஒரு குடும்பமாக தமது சகோதரராகக் காணும் ஞானியார் எனச் சபையோர் சுவாமிகளது ஆரம்ப உரையினாலேயே வசப்பட்டு நின்றனர் பல்வேறு நதிகளும் வெவ்வேறு இடங்களில்

உற்பத்தியானாலும் ஒரே கடலில் சென்று கலக்கவில்லையா? அவ்வாறே சமயங்கள் யாவும் ஒரே கடலையே சென்றடைகின்றன. எனவே மதத்தின் பெயரால் சண்டையிடு வதை ஒழித்து மக்கள் சகோதர மனப்பான் மையுடன் வாழவேண்டும் என்று வற்புறுத்தி னார். வேதமும் உபநிடதமும் புகட்டும் கருத் துரைகளை ஆணித்தரமாக எடுத்துக் கூறி இந்துமதத்தின் பெருமையை உலகறியச் செய்தார்.

அவரது வார்த்தைகள் யாவும் மேனாட்டு மக்களது ஆன்மீக உணர்ச்சியைத் தூண்டி விட்டன. இந்துமதக் கருத்துக்கள் பல ஐரோப்பிய நாடுகளில் பரவும் வகையில் சொற்பொழிவாற்றினார். குருதேவரின் அருளி னால் குன்றிலிட்ட தீபமானார். அமெரிக்காவில் இந்துமத அறிவைப் புகட்டுவதற்கென சன் பிரான்சிஸ்கோ நகரில் சங்கம் ஒன்றையும் சாந்தி ஆச்சிரமம் என்ற ஒரு நிலையத்தை யும் ஏற்படுத்தினார். 1897ம் ஆண்டு அவர் தாய்நாடு திரும்பினார். மூன்று வருட காலம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்துமதப் பணியாற்றிய புகழுடன் திரும்பிய மகான் கொழும்பு நகரிலிருந்து கண்டி, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து சொற் பொழிவாற்றினார். சுவாமிகளது ஞாபகார்த்த மாக நிறுவப்பட்டதே கொழும்பு விவேகானந்த சபை. சுவாமிகள் தாய்நாடான இந்தியாவுக்குத் திரும்பி சமயப் பணியும் சமூகப்பணியும் புரியத் தொடங்கினார். கங்கைநதிக்கரையில் தக்கினேஸ்வரத்தில் அமைந்துள்ள இராம கிருஷ்ண மடம் முதன்முதலாக தாபிக்கப் பட்டது.

**ஏழைகளுக்காக எவனது இதயம் குருதி கசிகிறதோ அவனே மகாத்மா, என்கின்றார் சுவாமிகள்.**

பாரத தேசத்திற்கும் உலகிற்கும் ஒளியேற்ற வந்த அறிவுத்தீபமாக ஞான வீர ராக இவ்வுலகில் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்த விவேகானந்தர் 1903ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## *விவேகானந்தர் பொன்மொழிகள்*

பேசுவதைக் கூடியவரை குறைத்துக் கொள்ளுங்கள். அதனால் நன்மையுண்டு.

குற்றம் காண்பது மிகமிக எளிது. ஆனால், குணத்தைக் காண்பது தான் சான்றோர் கடைப்பிடிக்கும் அறநெறி ஆகிறது.

விட்டுக் கொடுத்து, எவன் பிறருடைய கருத்துகளை ஏற்க ஆயத்தமாக இருக்கிறானோ, இறுதியில் அவனுடைய கருத்து கள் வெற்றியடைகின்றன.

உலகியலிலே சிக்குண்டு ஒரு புழுவைப்போல் மடிவதைக் காட் டிலும் கடமை என்னும் களத்தில் சத்தியத்தைப் பிரசாரம் செய் தவாறு உயிர்துறப்பது மேன்மையானது.

தைரியமான சொற்கள், அதிக தைரியம் நிறைந்த செயல்கள், இவையே இப்போது வேண்டுவன.

# மீண்டும் ஒரு சுதந்திரம்

**செல்வன். என். எம். அனஸ்**
ஆண்டு - 11.

ஒட்டமாவடி மத்திய கல்லூரி

சுதந்திரம் கிடைக்கவில்லை - நமக்கு
சுதந்திரம் கிடைக்கவில்லை
சூரியன் உதிக்க வில்லை - நாம்
சூரியோதயமும் காணவில்லை.

வெள்ளையனே வெளியேறு
வென்று, மட்டும் தான்
சொன்னோமே தவிர
ஒரு துளி இரத்தம்
உடலை விட்டு ஓடிய
வீர வரலாறு படைக்க வில்லை
படைக்கத்தான் நினைக்கவில்லை.

வார்த்தைகளால் மட்டுமே
வாதம் செய்த நாம்
வாளால் போர் புரியவில்லை
சமாதானம்
அதிகாரர்களுடன் மட்டுமே
சமரசம் செய்வதை அறிந்திருந்தும்
அதற்கு எம்மால்
சாட்டைஅடி கொடுக்க முடியவில்லை.

இதனால்தான் எம்மால்
இன்றுவரை
சுதந்திரத்தை முழுமையாக
சுவைக்க முடியவில்லை
சுவிகரிக்கவும் முடியவில்லை.

என்றுமே நாம்
சுதந்திரத்தை
சுவைக்க முடியாது
ஏனெனில்.
எப்போது அரசியல் மேடை போனதோ
அப்போதே சுதந்திரமும் தூக்குக்குப்
போனது.

ஆயிரம் ஆண்டுகள்
அடிமையாய் வாழ்வதை விட
விடுதலை வீரனாய்
ஒரு விநாடி
வாழ்வதே மேலானது
இதனை நாம்
இன்று வரையும்
புரியவே இல்லை.

தாய் நாட்டிற்குள்ளே
தலைமறைவாகி - பின்னர்
தலையே மறைவாகும் வாழ்க்கை
இதுதான் எமது சுதந்திர வாழ்க்கை
இதனால் தான் - எம்
வாலிபம் விரக்தியானது
வாழ்க்கையோ புரட்ட முடியாத
வரலாறானது.

அன்று வெள்ளையனின் வெகுளித்தனம்
அதனால் இல்லை சுதந்திரம்
இன்று எம்மவனின் அடாவடித்தனம்
இதனால் இல்லை சுதந்திரம்.

சரித்திரம் படைக்க சதிகாரக்கும்பல்
குருதி இழக்க அப்பாவி குடிமக்கள்
இந்நிலை இறக்கவேண்டும் (எனில்)
வேண்டும் “மீண்டும் ஒரு சுதந்திரம்”

# இன்றைய பெண்களின் நிலை

செல்வி. அ. அருட்செல்வி
ஆண்டு 13 கலை

யா / வடமாராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கரவெட்டி.

இன்று உலகம் அனைத்திலும் பரவலாகப் பேசப்பட்டு தொடர்பு சாதனங்களி னூடாக விமர்சிக்கப்படும் ஒரு விடயமாக உலகப் பெண்களின் நிலை காணப்படுகின்றது இவ்விடயம் பெண் விடுதலை, பெண்ணுரிமை, பெண் சுதந்திரம் எனப் பலதரப்பட்ட தலைப்புகள் இடப்பட்டு விமர்சனத்திற்குள்ளாக்கப்படுகின்றன. எது எவ்வாறிருப்பினும் பெண்கள் தொடர்பான இவ்விடயங்கள் அனைத்தும் அடிப்படையில் ஒரு கருத்தினையே உணர்த்துகின்றன. பெண்கள் இன்று கீழ்த்தரமான முறையில் நடத்தப்படுகின்றனர் அவர்களின் உயர்விற்கான உத்திகள், வழி முறைகள், கடமைகள் போன்றனவே அந்த அடிப்படைக் கருவாகும்.

இன்று உலகளாவியரீதியில் பெண்கள் சனத் தொகையில் கூடுதலான இடத் தினைப் பெற்றுள்ள அளவிற்கு அவர்கள் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் அவ்வாறு பெற்றிருப்பின் இன்று பெண்ணுரிமை இயக்கம் ஆரம்பித்திருக்க வேண்டிய அவசியமும் உலகப் பெண்கள் மாநாடு நடத்தப்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்க மாட்டாது. எம்மில் பலர் மேலை நாடுகளில் பெண்கள் சுதந்திரத்துடன் வாழ்கின்றனர் என குருட்டு அபிப்பிராயம் கொண்டிருக்கின்றோம். அவர்கள் ஆண்களுடன் சுமுகமாகப் பழகுவதால் சுதந்திரம் பெற்றவர்கள் என கூறிவிட முடியாது.

பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறைந்து உரிய அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்க வேண்டும் என்று போராடுவதற்குப் பதிலாக ஆண்கள் அனுபவிக்கும் சுதந்திரம், இதர கேளிக்கைகள் போன்றவற்றை அடைவதுதான் பெண் விடுதலைக்கு அர்த்தம் கொடுக்கும் என்கின்ற தவறான கருத்தை வலியுறுத்துவனவாக இன்றைய பெண்களின் குறிப்பாக மேலைத்தேயப் பெண்களின் நிலை காணப் படுகின்றது.

அறுபதுகளில் சிறு ஓடையாகத் தொடங்கி, பின் காட்டாறாகப் பிரவாகித்து எழுபதுகளில் உலகளவில் பெரும் விழிப்புணர்வைத் தோற்றுவித்தபின் சில தவறான நோக்கங்கள், நடவடிக்கைகள் காரணமாய் எண்பதுகளில் தேக்க நிலையடைந்து பிசுபிசுத்தும் காணப்படும் பெண்ணுரிமை இயக்கத்திற்கு புத்துணர்ச்சியூட்டும் வரப் பிரசாதமாக வந்திருப்பதுதான் ""பழமை எண்ணங்களில் நம்பிக்கை கொண்ட பெண்ணுரிமை"" என்ற உரத்த சிந்தனை.

பெண்ணுரிமை இயக்கம் ஜனித்தபின் சர்வதேச அளவில் பெண்களின் நிலை கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்க்கைத் தரம் என்று பல விதங்களிலும் வளர்ச்சியடைந்து அவர்களின் குறைகள் பெருமளவிற்கு தீர்க்கப்பட்டு வருகின்றன. எனினும் தொலை நோக்குடன் நடவடிக்கைகளை திட்டமிடாமல் போனதால் சில எதிர்மறை விளைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறான எதிர்மறை விளைவு களில் ஒன்று தான் மேற் குறிப்பிடப்பட்ட பெண்கள் தமக்குரிய உரிமைகளைக் கோராமல் ஆண்களது சுதந்திரம் மற்றும் கேளிக்கைகளை அடைவதுதான் விடுதலை! என்ற கருத்தாகும்

ஆக மொத்தத்தில், பாற்கடலைக்கடைய அமிர்தமும் நஞ்சும் தோன்றிய. கதையாக பெண்ணுரிமை இயக்கத்தால் நன்மையான விளைவுகளும் கேடான விளைவுகளும் கிட்டியிருப்பது இன்றைய பிரத்தியட்ச நிலை. "விளைவுகள் இப்படி இருக்கும் என்பதை நாங்களே எதிர்பார்க்கவில்லை." என இயக்கத்தின் தலைவர்கள் முன்னோடிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள, நிதானம் தவறாமல் சிந்தனைகள் இருப்பது அவசியம். என்ற தீர்மானத்திற்கு இயக்கத்தைச் சார்ந்த பெரும்பாலோர் வந்திருப்பது பாராட்டிற்குரிய திருப்பம். இதன் பலன் தான் "பழமை எண்ணங்களில் நம்பிக்கை கொண்ட பெண்ணுரிமை" என்ற புதிய உரத்த சிந்தனை.

"மனித இனத்தி ஆணென்ன. பெண்ணென்ன? இருவருமே ஒன்றுதான். ஆண் செய்யும் எக்காரியத்தைச் செய்வதும் சமுதாயத்தில் அவன் வகிக்கும் ஸ்தானத்தை ஆக்கிரமிப்பதும் பெண்ணிற்கு சாத்தியமே" என்று கண்ணைக்கட்டிவிட்ட குதிரையாய் கங்கணங்கட்டிக் கொண்டு ஆவேசத்தோடு பல சந்தர்ப்பங்களில் ஆணை எதிர்த்து முன்னேற நினைப்பதைத் தவிர்த்து, "இயற்கையின் படைப்பின்படி ஆணும் பெண்ணும் வெவ்வேறு இயல்புடையவர்களே: இதை ஏற்று எனக்கென்று குடும்பத்திலும், சமுதாயத்திலும் உள்ள பொறுப்புக்களை உதறித் தள்ளாமல் அதே சமயம் "நான் நானாக" இருக்க அவசியமான தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொண்டு எனக்குரிய இடம் அந்தஸ்து, மரியாதையைப் பெறுவேன்! என்பதே "பழமை எண்ணங்களில் நம்பிக்கை கொண்ட பெண்ணுரிமையின் சித்தாந்தம்.

மேலை நாடுகளின் நிலை இவ்வாறெனின் , இந்தியாவின் நகரங்களில் நவீன விஞ்ஞானக் கருவிகளின் துணை கொண்டு கருவிலே வளர்வது ஆணா பெண்ணா என பரிசோதிக்கப்பட்டு, பெண்ணாயின் அக்கரு முளையிலேயே கிள்ளியெறியப் படுகின்றது. நகர மக்களே இவ்வாறென்றால் கிராமப் புறத்தின் நிலையைக் கூற வேண்டுமா? இவர்கள் பெண்குழந்தை பிறந்தவுடனேயே கள்ளிப்பால் கொடுத்து அல்லது நெல்லுக்கூரைக் கொடுத்துக் கொலை செய்து விடுகின்றனர்.

பெண்குழந்தைகளைப் பெற்று உணவு, உடை மட்டும் கொடுத்தால் போதுமா? அவர்களுக்கு வரதட்சிணை கொடுத்து திருமணம் செய்ய பணத்திற்கு என்ன செய்வோம்? என்று இக் "கொலையாளிகள்" கூறுகின்றனர். ஆக பெண் என்பவள் பிரச்சனைக்குரிய ஒரு இடைஞ்சலாகவே, சமுகத்தில் கணிக்கப்படுகின்றாள் எனவே கீழைத் தேய நாடுகளில் பெண்ணானவள் பொருளாதார ரீதியிலும் தனது உரிமையை இழந்து தவிக்கிறாள்.

இலங்கையில் பெண் சிசுக் கொலைகள் நிகழ்வதாகக் கொள்ளப்படாத பொழுதிலும் சீதனக்கொடுமை, இரண்டாந்தர நிலை என்பன காணப்படுகின்றன. ஆண் குழந்தைகளை விட பெண்குழந்தைகள் இரண்டாந்தர நிலையில் வைக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் பெற்றோர், தாம் ஆண்குழந்தைகளிடம் இருந்து பெறும் எதிர்கால நம்பிக்கையாகும். பெண் இன்னொருவர் வீட்டில் சென்று வாழப்போகின்றவள். ஆண்தான் தமது பிற்காலதில் உதவுவான் என்று பெற்றோர் கள் எண்ணுகின்றனர்.

அண்மையில் சீனாவில் நடைபெற்ற "பீஜிங்" உலகப் பெண்கள் மாநாடு போன்ற பல மாநாடுகளும், பல மாதர்சங்கங்களும் செயற்படுகின்றன. இவை அனைத்தும் பெயர் அளவிலேயே உள்ளன. பெண் சுதந்திரம் என்பது உள்ளத்தில் இருந்து வரவேண்டியது, உணர்ச்சிபூர்வமாக வழங்கப்படவேண்டியது. மலேசிய நாட்டு சமூகசேவகி இந்திராணி, "பெண்களுக்கு எதிரிகள் பெண்களேதான். மாமியார் மருமகள் பிரச்சனையாலேயே கூடுதலாகக் கீழைத்தேயங்களில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். வரதட்சிணை பிரச்சனைக்கு ஆணிவேரே பெண்கள் (மாமியார்கள்) தான்" என்று கூறுகின்றார்.

எனவே ஆண்கள் எமக்கு எதிரிகளல்ல. அவர்களைத் தாக்குவதோ, அவர்கள் ஸ்தானங்களைப் பறிப்பதோ எமது நோக்கமாக இருக்கக்கூடாது. சனத் தொகையில் சரிபாதியாக உள்ள நாம் நமக்குரிய அந்தஸ்தை, மரியாதையைப் பெறவேண்டும் என்ற இலக்கில் இருந்து வக்கிரப்படாது எமக்குரிய அந்தஸ்தை அடைய வேண்டும். அத்துடன் பெண்களே பெண்களை மதித்து ஒன்றிணைந்து உண்மையான பெண் விடுதலையைப் பெற வேண்டும்.

## தெளிந்த நல்லறிவு வேண்டும்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லதே எண்ணல் வேண்டும்

திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்

பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பனியே போல

நண்ணிய நின் முன்இங்கு
நசிந்திட வேண்டும் அன்னாய்

மகாகவி பாரதியார்.

# "தாய்க்குல கண்ணீர்"

செல்வி சி. கமலவாணி

மன்/புனித சவேரியார் மகளிர் ம. ம. வித்தியாலயம்
மன்னார்.

கொட்டும் ம்ழையினில் வெட்ட வெளியினில்
குடும்பம் நடத்தும் தாய்க்குலமே நீ
நடந்த பாதையில் சிந்திய கண்ணீர்
ஒரு காவியம் ஆகாதோ பெரும் காவியம் ஆகாதோ

பத்து மாதம் வயிற்றில் சுமந்து
உயிரைப் பகிர்ந்து ஈன்றெடுத்தாய்
தங்க மழலைகள் தவித்திடும் போது
தாலாட்ட சக்தி எங்கு பெற்றாய்.

பிறந்த மண்ணில் பெருமையாய் வாழ்ந்தோம்
இன்று கூடு துறந்த பறவைகளானோம்
சீரும் சிறப்புமாய் வாழ்ந்த வாழ்க்கை இன்று
கானல் நீராய் கனவாய் போனதுவே.

துள்ளித்திரியும் பிள்ளைகள் இன்று
துவண்டு கிடப்பதுவோ
பள்ளிசெல்லும் பாலகர் இன்று
பதுங்கிக் கிடப்பதுவோ
ஆடித்திரியும் பிள்ளைகள் இன்று
அடங்கிக் கிடப்பதுவோ
தரணி யாண்ட தமிழினம் இன்று
தவியாய் தவிப்பதுவோ.

விடிகின்ற பொழுதே நீ விளக்கேற்றிவைப்பாயா
நாளையப் பொழுதே நீ நலம் கூட்டிவருவாயா
கழிந்த பொழுதுகள் கனவாகப் போகட்டும்
மலரும் பொழுதுகள் மணம் வீசி மலரட்டும்
தாய்க்குலம் வடிக்கும் கண்ணீர்த் துளிகள்
தரணியில் எங்கும் பன்னீர் ஆகட்டும்.

# எனது சீருடை

**செல்வி. விஜயசாந்தி முருகையா**
ஆண்டு 4

வ/ கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்
வவுனியா

எனக்குப் படிப்பதில் மிகவும் விருப்பம். பாடசாலைக்கும் ஒழுங்காகச் செல்வேன். என்னிடம் இருந்த ஒரேயொரு சட்டையும் கந்தலாகிவிட்டது. புதுச்சட்டை வாங்குவதற்கு எங்கள் வீட்டில் வசதி இல்லை ஏழைப்பெற்றோர் என்ன செய்வார்கள்?

பாடசாலைக்கு ஒரு கிழமையாகச் செல்லவில்லை. அன்று எனது வகுப்பாசிரியர் என்னைத்தேடி என் வீட்டுக்கே வந்து என் நிலையைப் புரிந்து கொண்டார். பின் தனது மகளின் சட்டைகளில் ஒன்றை எனக்கு அனுப்பிப் பாடசாலைக்கு வரும்படி கூறியிருந்தார்.

அந்தச் சட்டையைப் பெற்றதும் என்மனம் ஆசிரியருக்கு நன்றி கூறி ஆடியது. சட்டையை முத்தமிட்டு அணிந்து பாடசாலைக்குச் சென்றேன். வகுப்புப் பிள்ளைகள் பார்த்ததும் கொல்லென்று சிரிதார்கள். வெட்கமாக இருந்தது. சட்டை பெரிதாக இருந்தது. நான் மெலிவாக இருந்தேன்.

ஒருநாள் வகுப்புக்குள் வந்த ஆசிரியர் உங்களுக்கு நாளை சீருடைத்துணி வழங்கப்படும். பெற்றாரில் ஒருவரைக் கூட்டி வரவேண்டும் எனக் கூறினார். அம்மாவோடு சீருடை பெறப்போனேன். சீருடை என் கைகளில் கிடைத்ததும் அத்துணியில் இருந்து வீசிய வாசனையை மணந்து மகிழ்ந்தேன். எனது செய்கையைப் பார்த்துப் பிள்ளைகள் சிலர் சிரித்தார்கள். வெட்கத்தில் அம்மாவின் முந்தானையில் மறைந்து கொண்டேன்.

அம்மா எனது பழைய கிழிந்த வெள்ளைச் சட்டையைப் பிரித்து அதன் அளவுக்குப் புதிய துணியை வெட்டி கையினால் தைக்க எண்ணியிருந்தார். ஆனால் எனது வகுப்பு ஆசிரியர் வீட்டுக்கு வந்து துணியை எடுத்துச் சென்று அளவாகத் தைத்துத் தந்தார். ஆசிரியர் என்மேல் கொண்ட அன்பும், அம்மா என் மீது காட்டும் பாசமும் என்னை உயர்த்தும் ஏணிகள். சட்டையைப் போட்டுக் கொண்டு பாடசாலை சென்று படிக்கிறேன்.

## வாழ்வு வளமடைய

***அறிவு நூல்கள் அனைத்தையும் கரைத்துக் குடித்திருந்தாலும் ஆன்ம ஞானம் இல்லாவிடில் அனைத்தும் வீண்.***

***வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.***

- தத்துவஞானி டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன்-

# புதுமை காண்போம் நாம்

ஆக்கம்:- **தங்கராஜா ஜீவராஜ்**
ஆண்டு 12 விஞ்ஞானம்

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருக்கோணமலை.

*புதிய பாடம் படிக்க வேண்டும்*
*மாணவரே நாம்*
*புதுக்கலைகள் தமிழ் மொழியில்*
*புகுத்திடுவோம் நாம்*
*அரிது இந்தப் பிறவி நமக்கு*
*அறிந்திடுவோம் நாம்*
*ஆற்றல் மிகுந்த மனிதராக*
*ஆகிடுவோம் நாம்.*

*வான்வெளியைப் படித்துலகில்*
*வளர்த்திடுவோம் நாம்*
*வளரும் புதிய கலைகள் பயின்று*
*வாழ்ந்திடுவோம் நாம்*
*'நான்' என்ற செருக்கினையே*
*நறுக்கிடுவோம் நாம்*
*நல்லவராய் நாடு போற்ற*
*வாழ்ந்திடுவோம் நாம்*

*கணனி கற்று கவிதை பாடிக்*
*களித்திடுவோம் நாம்*
*கற்பனையில் மூழ்கி நல்ல*
*கதைகள் புனைவோம் நாம்*
*மனைவி மக்களோடு சேர்ந்து*
*மகிழ்ந்து வாழ்வோம் நாம்*
*மண்ணுலகில் புதுமைதேடி*
*மகிழ்ந்திடுவோம் நாம்.*

*அறிவியலை வளர்த்துலகில்*
*ஆற்றல் பெறுவோம்*
*அறிஞராக, சான்றோராக*
*ஆகிடுவோம் நாம்*
*பொறிமுறைகள் பலபயின்று*
*போற்றிடுவோம் நாம்*
*பூவுலகம் புகழ்ந்து ஏற்ற*
*புதுமை காண்போம் நாம்*

# மீரா

ஆக்கம் : சி. செந்தூரன்
12ம் ஆண்டு கலைப்பிரிவு,
மன்/புனித சவேரியார் ஆண்கள் ம. ம. வி. மன்னார்.

அன்று திங்கட்கிழமை. அக்கல்லூரி விழாக்கோலம் பூண்டு இருந்தது. மாண வர் மனதில் என்றும் இல்லாத பூரிப்பு. தமது மாணவ சமூகத்துக்குப் பெருமை தேடித் தந்த மாணவி மீராவுக்கு அவளது வீரச்செயலைப் பாராட்டி விருது வழங்கி கௌர விக்கும் நாள்.

"அம்மா நீங்கள் இன்னும் விழாவிற்குத் தயாராகவில்லையா?" என மீரா தனது தாயை கூவி அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள். தாயோ கட்டிலில் அமர்ந்து கொண்டு கண்ணீர் வடிப்பதைப் பார்த்ததும் "ஏனம்மா அழுகிறீர்கள்?" பயத்துடன் விசாரித்தாள் மீரா.

"மகள் நான் அழவில்லை. நீ பெண் சமூகத்திற்கு தேடித்தந்த பெருமையையும், உனது வீரத்தையும் எண்ணிப் பார்த்தபோது ஆனந்தக் கண்ணீர் வருகுதம்மா" என தனது மகளைப் கட்டித்தழுவினாள். மீராவுக்கோ தான் செய்த அந்த வீரச்செயல் மனத்திரையில் ஓடியது...........

மீரா அக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறாள். ஒருநாள் பாடசாலை முடிந்ததும் தனது நண்பிகளுடன் கதைத்துச் சிரித்துக்கொண்டு தனது வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். இடைவழியில் நண்பிகள் தத்தமது வீட்டுக்குச் சென்றுவிட இன்னும் சற்றுத் தூரத்திலிருந்த தனது வீட்டை நோக்கி மீரா தனியாக சென்றுகொண்டிருந்தாள். ஆட்டோ ஒன்று கிரீச்சிட்டு அவள் முன்னே நின்றது. "தங்கச்சி உங்க அம்மா ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருக்கிறா. உங்களை உடனடியாக பார்க்க வேணுமாம். ஏறுங்கள் கொண்டு விடுகிறேன்," என அவன் கூறவும் அவள் மனதில் படபடப்பு. பேசவும் வார்த்தைகள் வராமல் செய்வதறியாது மீரா ஆட்டோவில் ஏறினாள். அம்மாவுக்கு என்ன நடந்திருக் கும்? கடவுளே அம்மாவின் உயிருக்கு ஆபத்து வரக்கூடாது என அந்த கணப்பொழு தில் கடவுளை மன்றாடினாள். திடீரென ஆட்டோ வைததியசாலைக்குச் செல்லாமல் வேறு வீதியால் திசைமாறிச் செல்வதை அவதானித்த மீரா, "அண்ணே ஆட்டோ எங்கே போகுது? என்னை இறக்கி விடு," என கெஞ்சினாள். இருள் கவ்விக்கொண்டி ருந்தது, சன நடமாட்டம் இல்லாத வீதியால் ஆட்டோ தொடர்ந்து ஓடிக்கொண்டிருந் தது. "என்னைக் காப்பாற்றுங்கள்" என அவள் கத்தியும் அச்சத்தம் பலனற்றுப்போனது திடீரென ஆட்டோ ஒரு பாழடைந்த வீட்டின் முன்னே நின்றது. ஆட்டோவிலிருந்து இறங்கிய அவனோ பெரிய வில்லன் போல் சிரித்துவிட்டு, "பெண்களை கடத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் கூட்டத்தைச் சேர்ந்த கங்கா நான்தான்" என்றான். சிகரட்டையும் புகைத்துக்கொண்டு, "உன்னையும் அங்கேதான் கடத்தப் போகிறேன்," எனக் கூறிக்கொண்டு மீராவை அவன் நெருங்கியதும் அவள் இதயத்திலிருந்து இரத்தம் உறைவது போலிருந்தது. உடல் உதறல் எடுத்தது. தப்பி ஓடுவதற்கு திட்டமிட்டாள்.

“அண்ணே என்னை ஒன்றும் செய்யாதே! எனக்கு சரியான தாகமாக உள்ளது. இந்தத் தென்னை மரத்திலுள்ள இளநீரைப் பறித்து தருவாயா? என கெஞ்சினாள் மீரா. கங்காவும் யோசித்தான். பின் அவளை மரத்துடன் சேர்த்து கட்டி வைத்துவிட்டு மரத்தில் ஏறினான். இளநீரைப்பறித்துக் கீழே இறங்குவதற்கிடையில் ஒருவாறு தனது கட்டுக்களை மெல்லத் தளர்த்தியிருந்தாள் மீரா. கீழே இறங்கிய அவன் இளநீரை வெட்டுவதற்காகக் கத்தியை எடுத்தபோது நொடிப்பொழுதில் பாய்ந்து அந்த கத்தியைப் பறித்து அவனது மார்பில் குத்தினாள் மீரா. அவன் அலறித்துடித்துக் கொண்டு கீழே வீழ்ந்தான். சற்றும் தாமதியாமல் பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடினாள். நடந்த சம்பவம் யாவற்றையும் ஒன்றும்விடாமல் பொலிசாரிடம் கூறினாள். பொலிசார் விரைந்து சென்று குற்றுயிராக் கிடந்தவனை அவதானித்தார்கள். பொலிசாரால் பல நாட்களாக தேடப்பட்டு வரும் பயங்கர கும்பல்காரர்களின் ஒருவனான கங்கா என்பதை இனங் கண்டார்கள். உடனே அவனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கே அவனது வாக்குமூலத்தால் அவனோடு செயல்பட்ட நாசகாரக் கூட்டத்தைப்பற்றி தெரிந்து கொண்டனர். அக்கூட்டத்தின் தலைவன் உட்பட மற்றைய அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டில் இவர்களால் கடத்திச்செல்லப்பட்டு அடிமைகளாக வைக்கப் பட்டிருந்த பெண்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு, சுதந்திரமாக வெளியேறினர்.

மீரா அந்தக் கடத்தல்காரனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டதுமல் லாமல் அந்நாசகாரக் கூட்டத்தை வேரோடு ஒழிக்கவும் உதவிசெய்தது பற்றி அரசு பாராட்டியது. மீராவின் வீரதீரச் செயலை பத்திரிகைகளும், வானொலியும், தொலைக் காட்சியும் வெகுவாகப் புகழ்ந்தன.....

மீரா தனது சிந்தனையிலிருந்து விடுபட்டு தன்னை சுதாகரித்துக் கொண்டு தாயோடு விழாவிற்குச் செல்ல ஆயத்தமானாள்.

---

## வாழ்க்கை

*எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பதல்ல வாழ்க்கை;*
*எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் உண்மை வாழ்க்கையாகும்.*

*- ஆபிரகாம் லிங்கன்*

## அமைதி

*“அன்பு செய்தால் அல்லல் தீரும்*
*அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும்*
*அமைதி பெருகினால் அதுவே சொர்க்கம்*

*- பெ. தூரன்*

## ரகசியம்

*தியானத்தில் இருக்கும் கடலின் ரகசியம்*
*பனித்துளியில் இருப்பதைக் கண்டேன்.*

*- கலீல் கிப்ரான்*

# போரின் கெடுதியும் சமாதானத்தின் தேவையும்

**சரவணமுத்து நவேந்திரன்**
ஆண்டு 11

மட்/ வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயம்

நாம் வாழும் உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. இந்த உலகம் அண்டவெளியில் சூரியனுடைய கவர்ச்சியினால் தன்னைத் தான் சுற்றிக்கொண்டு சூரியனையும் வலம் வந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பூமி சூரியனை வலம் வருவது ஒரு நீள் வட்டப் பாதை. அப்பாதையில் வேறுபல கிரகங்களும் வீதிவலம் வந்துகொண்டிருக்கின்றன. காலாதிகாலமாக இவ் வீதிவல ஒழுங்கில் ஒழுங்கு பேணப்பட்டிருக்கின்றது. இதனை இயற்கையின் விதியும், நியதியும் என்றார்கள். இந்த ஒழுங்கு நியதியில் புவியில் உயிர்கள் தோற்றம் பெற்று வாழ்ந்து வருகின்றன. பூமியில் வாழும் உயிரினங்களில் ஆறறிவு கொண்ட இனம் மனித இனமே.

புவியில் மனித வரலாறு தொன்மையானது. மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். அத்தோடு மதிநுட்பமும் கொண்டவன். தன்னிலும் வலிய மிருக இனங்களை அடக்கி ஆண்ட சரித்திரம் நாம் அறிந்ததே. புராணங்களில் அசுரவர்க்கம் தேவர்களை அடிமைப் படுத்திக் கொடுமைப்படுத்திய வரலாறுகளை நாம் அறிந்திருக்கின்றோம். மனிதனின் திறனிற்கு எல்லையே இல்லை எனலாம். மனிதனின் திறனைத் திசை திருப்புவதிலேயே அதன் நன்மையும், தீமையும் அடங்கியிருக்கின்றது. செம்பு இருக்கின்றது; விளக்கியவுடன் சுத்தமாக இருக்கின்றது. மறுநாள் செளும்பு படர்ந்து விடுகின்றது. இதே போன்றுதான் மனிதனது. உள்ளமும் இருக்கின்றது. இறைவனின் சிந்தனையில் தூய்மைப் படுத்தினாலும் ஆணவம் அடுத்திருந்து மனிதனைக் கெடுக்கவே செய்கின்றது. இதனால் மனிதனுக்கு இடையில் போட்டியும், பொறாமையும், பூசல்களும் ஏற்படுகின்றன. இக்கட்டத்தில் நடுநிலைத்தீர்வு போர்புரிதலாகும். உலக அரங்கில் முதன்முதலில் தோன்றிய நூல் வேதமாகும். இது போரினை அங்கீகரித்துப் போர்த்தருமத்தையும் விளக்கியுள்ளது. அதற்குப் பின் திருக்குறள், பகவத் கீதை, மகாபாரதம், கம்பராமாயணம், கந்த புராணம், போன்ற ஒப்பற்ற நூல்கள் போரினை அங்கீகரித்துப் போர்த்தருமத்தையும் அறத்தையும் சுட்டிக்காட்டியுள்ளன. இடித்து இடித்து உரைக்கின்றன. மேற்காட்டிய பெருநூல்கள் கூறும் போர் முறைகள் அறப்போர்முறைகள். இப்போர்முறைகளால் மனிதகுலம் நன்மை அடைந்துள்ளது. குற்றம் செய்தவன் தன் குற்றத்தை உணர்வதற்கும் மற்றையவன் அதனைப்பார்த்துத் தான் குற்றம் செய்யாமல் இருப்பதற்கும் தண்டனை வழங்குவதற்கும் போர் அங்கீகரிக்கப்பட்டது. இது தமிழன் கண்ட அறப்போர் முறையாகும்.

மூவேந்தர் முடிசாய்ந்து அரசற்றுப் போகத் தமிழ்நாடு அந்நியருக்கு அடிமைப் பட்டது. அத்தோடு தமிழன் கண்ட அறப்போர் முறைகளும் அற்றுப்போனது.இன்று உலகில் வல்லரசுகளில் சிற்றரசுகள் சிக்கித்தவிக்கின்றன. சிறு மீன்களெல்லாம் பெரு மீன்களுக்கு இரை என்பதும் உண்மை. இன்றைய போர் முறைகளில் போர்க்களமுமில்லை முன்னறிவித்தலும் இல்லை. காலநேரமும் இல்லை குண்டு வீச்சு நினைத்த இடமெல்லாம் நினைத்த போதெல்லாம் இடம்பெறுகின்றது. காடுகள், கிராமங்கள், நகரங்கள், தலை நகரம், சமுத்திரங்கள், குடாக்கள், முனைகள் போன்ற பல்வேறு இடங்கலெல்லாம் யுத்தம் நடைபெறுகின்றது. யுத்தத்தின் கெடுதியால் இவ்விடங்களிளெல்லாம் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்படுகின்றது. அறப்போர் அற்று இன்று மறப்போர் புரியும் உலகு பாவக்காடாகக் காட்சி அளிக்கின்றது.

இன்றைய போர் முறைகளினால் ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தைகள், நோயாளிகள் கர்ப்பிணிகள், வாய்பேசாத உயிரினங்கள் மாண்டு மடிகின்றன. கட்டிடங் கள் இடிக்கப்படுகின்றன. உடமைகள் அழிக் கப்படுகின்றன. வறுமை ஏற்படுகின்றது. நாட்டின் அபிவிருத்திக்குத் தடையை உண்டு பண்ணுகின்றது. மனித சக்தி விரையமாக் கப்படுகின்றது. பணம் விரையமாக்கப்படுகின் றது. சூழல்மாசுபடுகின்றது. ஓசோன்படையும் பாதிப்புக்கு உள்ளாகிறது. இரண்டாம் உலகப் போரிலே அணுக்குண்டு தாக்கு தலுக்கு உள்ளாகிய ஜப்பானின் ஹீரோசிமா, நாகஸாகி பட்டினங்களும் புல்பூண்டுகள் முளைப்பதற்குத் தகுதியற்ற தரிசு நிலமாக மாறியுள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத் தில் ஹிட்லரின் ஜேர்மனி சாம்பல் மேடானதை உலகு கண்டிருக்கின்றது. அழி வுப்பாதைக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டிய திறமையான விஞ்ஞானி களின் மனித சக்தி வீண் விரையமாகிறது. போர்களால் ஏற்படும் அழிவு மனிதனுடைய ஆணவத்தினால் ஏற்படுகிறது. இதனைத் தடுத்து நிறுத்த மனிதனால் முடியும்.

போருக்காகக் செலவிடும் கோடானு கோடிப் பொருட்களையும், பணத்தையும், சக்திகளையும் ஒன்றுதிரட்டி மனித ஆக்கப் பாட்டிற்குச் செலவிடுவோமானால் எத்தனை யெத்தனையோ கல்விக் கூடங்கள், தொழிற் சாலைகள், கலாச்சாரப்பண்பாட்டு நிலையங் கள், வீடுகள், கோவில் குளங்களையெல் லாம் அமைக்கலாம். அழிவுப் பாதையை அகற்றி உலகை ஆக்கப் பாதையில் செலுத்தலாம் அல்லவா? போரினால் உல கைப் பாவக்காடாக்காமல் பொன் கொழிக் கும் பூமியாக்கலாம் அல்லவா? சூழல் மாசுறு தலைத் தவிர்த்து வளமான வாழ்விற்கு வழி கோலலாம் அல்லவா? சுற்றாடலில் ஓர் சம நிலையை உண்டுபண்ணலாம் அல்லவா? இதனை யார் தான் உணருவார்.?

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது உலகில் உயிரினங்கள் வாழ்வதற்குச் சமா தானம் இன்றியமையாததே. சமாதானம் நிலவ வேண்டுமாயின் தன்னுயிர் போல் மன்னுயிரை யும் பேண வேண்டும்.

போர் இல்லையெனில் சமாதானம் நிலவும். அன்பும், அறமும் மேலோங்கி இன் பம் விளையும்.

☆★☆

## அஞ்சாது போராடுங்கள்

இன்னல், இடுக்கண்களைக் கண்டு அஞ்சாமல் நாம் எதிர்த்தால், குரங்குக் கூட்டம் போல் அவை ஓடிவிடும். எப்பொழுதும் சுதந்திரத்துடன் வாழ்வதற்கும் இயற்கையை வெல்வதிலும் கவனம் செலுத்த வேண்டுமே ஒழிய, அஞ்சி ஓடலாகாது. கோழைகள் ஒருபோதும் வெற்றியடைய முடியாது இன்னல், அறியாமை, அச்சம் முதலியன நம்மை வீட்டு ஓடவேண்டுமாயின் அவற்றை எதிர்த்து நாம் போராட வேண்டும்.

– சுவாமி விவேகானந்தர்-

# ஏர் பிடிப்போம்

செல்வி. இ. தவரஞ்சிதம்,
ஆண்டு – 11

வ/கணேஸ்வரா மகா வித்தியாலயம்,
வாரிக்குட்டியூர்.

தலைவன் தோளில் ஏர்தொங்க
தலைவி கலயந்தனைச் சுமக்க
தமையன் கையில் காளையுடன்
தம்பி தொடர வயல் சேர்வார்.

ஏரில் பூட்டிய காளையுடன்
ஏறிப் பலகை மிதித்திடவே
ஏனோ எம்மவர் தயங்குகின்றார்
ஏங்கி அன்னத்திற்கு அலைகின்றார்

சோம்பல் வயலில் களையாகும்
சோலையாகும் களைந்திட்டால்
சோபை இழக்க வேண்டாமே
சோற்றை சேற்றில் பெறலாமே

பாரும் உழவர் பாடிதனை
பாரில் பெருமை படைத்தவனை
பாட்டும் மெட்டும் போதாது
பாடிக் காட்ட முடியாது.

அண்ணன் தம்பி யாரடா?
அடிமை வாழ்வு ஏதடா?
அனைத்துச் சிறப்பும் அதுக்கடா
அகிலமே உழவில் தானடா.

# சாம்பல்தீவில் தைமாதம்

த. விஜித்தா
ஆண்டு 9

தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்
திருகோணமலை.

கிழக்கு மாகாணத்திலே திருகோண மலை நகருக்கு வடக்கே ஐந்துமைல் தொலைவில் அமைந்திருக்கும் குக்கிராமம் தான் சாம்பல்தீவு. தேன்வரிக்கன் பலாக்கனி கள் தேனைச் சிந்த சிறந்த செம்பாட்டான், அம்பலவி, கிளிச்சொண்டான் மாங்கனிகள் மரமெல்லாம் பழுத்துத்தொங்க கற்பகதரு காலமெல்லாம் பயனைத்தர, கடல்வளமும், வயல்வளமும் கருணையோடு உற்று நோக்க இத்தனைக்கும் மத்தியிலே பெருமையோடு உயர்ந்து நிற்கிறது. இக்கிராமம்.

விவசாயத்தை கிரமமாக மேற்கொள் ளும் உழவர்கள் வாழ்கின்ற இக்கிராமம் வருடத்திலே முதல் மாதமாகிய தைமாதத் தில் புதுப்பொலிவு பெறுகின்றது. தை பிறந் தால் வழிபிறக்கும் என்பார்கள். உலகத்தை உய்ய வைக்கும் கதிரவன் சாம்பல்தீவு உழவர்களையும் தைமாதத்தில் உற்றுப் பார்க்க தவறுவதில்லை. கதிரவனின் கருணை யாலும் நெற்றி வியர்வை மணிமணியாய் நிலத்தில் சிந்தியதன் பலனாகவும் விளைந்த நெல்மணியைத் தமது மனைக்குக் கொணர்ந்து

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்பதற்கேற்ப கதிரவன் செய்த உபகாரத் திற்கு நன்றிக் கடனாக அவனுக்குப் பொங்கல் செய்து மகிழும் மாதம் தைமாதமே. தை பிறந்து விட்டால் தைப்பொங்கலைப் பற்றிய சதா சிந்தனையே சாம்பல் தீவு மக்களுக்கு.

அதுமட்டுமல்ல, குளக்கோட்டன் காலத்தில் கோணேசப் பெருமானுக்கு அபிஷேகம் செய்ய இக்கிராமத்தில் இருந்து தான் பாலும், இளநீரும் கொண்டு சென்றதாக வரலாறு கூறுகின்றது. பாலைப் பொழிந்து தரும் பசுக்களுக்கும் மாட்டுப் பொங்கல் வைத்து மனமகிழ்கிறார்கள். இக்கிராம மக்கள் தைப்பொங்கலுக்கு மறுதினம் மாட் டுப் பொங்கல். அன்றைய தினம் பசுக்களின் கொம்புகளுக்கு மைதீட்டி, கழுத்திலே வட மாலை கட்டி, பிரமாண்டமான பொங்கல் செய்து கோமாதாவுக்கு நன்றிக்கடன் செய் கிறார்கள். தைமாதம் எப்போது பிறக்கும் என்று ஆவலோடுகாத்திருக்கும் சிறார்களுக்கு தைபிறந்து விட்டால் சாம்பல்தீவில் கொண் டாட்டம் தான் அப்படியென்ன கொண்டாட் டமோ? அதுதான் வானந் தொடுமளவிற்கு பட்டம் விடுவது. .

தைமாத மேற்காற்று சாம்பல்தீவுச் சிறுவர்களுக்குக் களிப்பை ஏற்படுத்துகிறது. படலைப்பட்டம் முதல் கொக்குப் பட்டம் வரை அவர்கள் தத்தமக்கு ஏற்றவாறு கட்டி அவற்றிற்கு விண்பூட்டி வானிலே சில்வண்டு சதா இரைந்து கொண்டு இருப்பது போல் காதைப் பிளந்து கொண்டிருக்கும். இங்கு சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் மைதானத்தில் பட்டம் விடும் பொழுது போக்கில் ஈடுபட்டு மனம் மகிழ்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் மார் கழிப் பீடை கழிவதற்காக மார்கழிமாதம் முழுவதும் வைகறையில் கிராமம் முழுவதும் சங்கொலியை முழங்கிக் கொண்டு சேமக் கலத்தை ஒலித்துக் கொண்டு, திருப்பள்ளி எழுச்சியைப் பாடிக்கொண்டு மக்களை விழித்தெழச் செய்த தொண்டர் கூட்டம் தைமாதம் முதல் நாளே சாம்பல்தீவில் தாம் செய்த தொண்டுக்குக் காணிக்கையாக ஏதாவது பெற்றுக்கொள்வதற்கு வீடுவீடாக விஜயம் செய்யும் காட்சி மிகவும் இனிமை யானது.

மேலும் ஐப்பசி மாதத்தில் பாத்தியில் இட்ட பனம் விதைகள் முளைத்து உருண்டு திரண்டு நற்கிழங்காக மிளிருகின்றது. மைதா ளத்திலேயே இக்கிழங்கை அவித்துச் சுவை த்தும் விலைக்கு விற்றுப் பணம் பெற்றும் மகிழ்கின்றார்கள் இக் கிராம மக்கள் இம் மாதத்தில் தான். தைமாதம் சாம்பல்தீவில் புதுப்பொலிவுடன் திகழ்கின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

# ஒரு நாள் வருவோம் உனைத்தேடி

செல்வன் . ம. பிரவீணன்
ஆண்டு 11.
யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,

எங்கள்யாழ் மண்ணே தாயே
என்றுனைக் காண்பதம்மா
இங்கிருந் தேங்கு கின்றோம்
என்செய முடியுமம்மா
எங்களின் கல்வி வாழ்வு
இன்னல்கள் சூழ்ந்த தேனோ?
பொங்குது மனதே யம்மா!
போக்கிட மேது மில்லை

வெள்ளலைக் கைகள் வீசி
வீசிடுந் தென்ற லாடிக்
கள்ளமில் மழலை போலச்
சிரித்திடுங் கடலுந் தங்கள்
உள்ளமும் உடலும் மாறா
உறுதிகொண் டுழைப்போர்க் கெல்லாம்
அள்ளியே வழங்கும் வள்ளல்
அனையபல் பயனும் பூக்கள்

செல்வமாய்த் தலையைச் சாய்த்துச்
சிரிக்கின்ற காலம் நல்ல
இல்லமும் வளமுங் கொண்டு
இனியதோர் கல்வி கற்றோர்
செல்வமுங் கல்வி கீர்த்தி
சேர்ந்துநா மிருந்த போதில்
பொல்லாத யுத்தப் பேய்தான்
புகுந்ததே போச்சு தெல்லாம்

கருமே கங்க ளெம்வாழ் வைக்
களங்க மின்றி மூடியுள
உருகு கின்ற உடலுயிர்கள்
ஒன்றும் செய்ய வழியில்லை
கருக வில்லை நம்பிக்கை
கடுகி வருவோ முனைத்தேடி
உறுதி யோடு உரைக்கின் றோம்
ஒருநாள் வருவோ முனைத்தேடி.

# திருக்குறளின் மகிமை

**S. ஜெகன்**
ஆண்டு - 11C

மன்/புனிதசவேரியார் ஆண்கள் மத்திய
மகா வித்தியாலயம், மன்னார்.

இறவாத புகழுடைய பெருநூல்களை ஆக்கித் தந்து அதன் மூலம் மக்கள் மனதில் என்றென்றும் அழியாத " சிரஞ்சீவி " த்தன்மையைப் பெற்ற புலவர் பெருமக் கள் மிகச்சிலரே. தான் பிறந்ததால் தமிழகம் வான்புகழ் பெறக் காரணமாயிருந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் அவர்களில் ஒருவர் மட்டுமல்ல மூத்தவரும் முதன்மை யானவரும் ஆகும்.

தமிழ் கூறும் நல்லுலகிற்கு அவர் அளித்த திருக்குறள். இன்று உலகிலே பேசப் படுகின்ற வளமும் வனப்பும் மிக்க மொழிகள் அனைத்திலுமே மொழிபெயர்க்கப்பட்ட பெருமைக்குரியதாகும். சிலம்பு, மேகலை, குண்டலகேசி, சிந்தாமணி, வளையாபதி போன்ற ஐம்பெரும்காப்பிய அணிகலன்களுக்கு மேலாக அன்னைத் தமிழ்மொழியை அழகு படுத்தி, அதன் மணிமுடியாக விளங்குவது திருக்குறள் ஆகும்.

திருக்குறளை வெறுமனே ஒரு இலக்கிய நூலாக மட்டும் கருதிவிட முடியாது. மாறாக வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் " வள்ளுவம் " எனும் வாழ்க் கைநெறியினை இதன்மூலம் வள்ளுவர் எனும் ஞானி வகுத்து அளித்துள்ளார் என்றே கருத முடிகிறது.

ஏழே ஏழு சொற்கள் அடங்கிய ஒன்றேமுக்கால் வரிகளினூடே ஒவ்வொரு குறட் பாக்களிலும் எப்படி இத்தகைய ஒரு வாழ்க்கை நெறியினை வகுத்தளிக்க அவரால் முடிந்தது என்பது ஆச்சரியத்துக்குரியதே. அதனால் தான், "அணுவைத்துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நான்கும் கலந்து, துங்கக் கரிமுகத்துத் தூமணியாம் கணபதிக்கு அளித்து, பதிலாக தனக்கு சங்கத்தமிழ் மூன்றையும் கேட்டுப்பெற்ற மூதாட்டி ஔவையாரால் பாராட்ட முடிந்தது. பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? - பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ? " என பெருந்தொகையும் இதனைப் பாராட்டி நிற்கின்றது.

"திருக்குறளிலே இல்லாத கருத்துக்களே இல்லை " எனும் அளவுக்கு அது வற்றாத அமுத ஊற்றாய் வளங்குன்றாக் கருத்துப் பெட்டகமாய் விளங்குகின்ற காரணத்தினால் தான் "தெய்வத்திருமறை" எனப் போற்றப்படுகின்றது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளை உள்ளடக்கி, பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழ்இயல் என்பவற்றை அறத்துப்பாலிலும் ; அரசியல் , அங்கவியல் , ஒழியியல் என்பவற்றை பொருட்பாலி லும் ; களவியல், கற்பியல் என்பவற்றைக் காமத்துப் பாலிலும் வள்ளுவர் எடுத்தாண் டுள்ளார். இம்முப்பால்களினூடும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கின் திறந்தெரிந்து உரைத்திட்ட பாங்கினை நாம் பார்க்க முடிகிறது.

அறம் என்பது விதித்தன செய்தலும் விலக்கின ஒழிதலும் எனப்படும். இவை ஒழுக்கம், வழக்கு, தண்டம் என வகைப்படுத்தப் பட்டுள்ளது. ஒழுக்கம் என்பது தத்தமக்கு விதிக்கப்பட்ட நிலையினின்றும் வழுவாது ஒழுகுதலாகும். வழக்கு என்பது நடைமுறையிலுள்ள நெறிகளைக் குறிப்பது. தண்டம் என்பது

ஒறுத்தல் அதாவது மேற்கூறிய ஒழுக்கநெறி, வழக்குநெறி நின்று வழுவுவோரைத் தண்டித்தல் எனப்பொருள் கூறப்பட்டுள்ளது. தண்டம், வழக்கு தவிர்த்து சிறப்புடைய ஒழுக்கமே அறம் என வள்ளுவர் இனங்காட்டியுள்ளார்.

சங்க கால நூல்கள் அனைத்தும் பெரும்பாலும் அரசனைப் பாட்டுடைத் தலைவனாக்கி அவனது வீரதீரச் செயல்களை விதந்துரைப்பனவாக அமைந்தன. ஆனால் வள்ளுவரோ இந்த நடைமுறைக்கு முற்றிலும் மாறாக கதைகளின்றி கருத்துக்களை விதைக்கும் புதிய உத்தியை அறிமுகப்படுத்தினார்.

அரசனை, அமைச்சரை, தூதனை, குருவை, குடிமக்களை, கணவனை, மனைவியை, தந்தையை, தாயை, மைந்தனை எனப் பலதரப்பாருக்குமான நெறியினை வலியுறுத்தி, இல்லறத்தை, துறவறத்தை, களவியலை, கற்பியலை, வாய்மையை, தூய்மையை, ஊழை, உழவை, கல்வியை, கயமையை, நட்பை, நடுநிலையை, நாட்டை, நன்றியை, தானத்தை, தவத்தை, மானத்தை, வானத்தை, பெருமையை, பேதமையை, அடிமையை, குடிமையை என் தொடாத துறையே இல்லையெனும் அளவுக்குத் தொட்டுச் சென்ற காரணத்தால் தான் திருக்குறள் இன்று " உலகப் பொதுமறை " யாக உயர்ந்து நிற்கின்றது - எந்தவொரு படைப்புக்கும் இல்லாத மகிமையும், மதிப்பும் பெற்று அது நிமிர்ந்து நிற்கின்றது எனலாம்.

## மனபரிபாகம் பெற....

*உயர்நூல்களைப் படியுங்கள். படித்தவற்றைப் பழக்கத்தில் கொண்டு வரப்பாருங்கள் அப்பொழுது தான் நீங்கள் மனபரிபாகத்தை அடைவீர்கள்.*

*- சுவாமி சிவானந்தர்*

## உண்மை பேசுக!

*நெஞ்சில் உள்ளதையே சொல். உனது சொல்லுக்கும், நினைவிற்கும் அத்தியந்த ஒற்றுமை இருக்கட்டும். அப்படி ஒற்றுமை ஏற்படாவிட்டால் உனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது.*

*- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்*

# எனது அம்மா

செல்வன். த. தவபுத்திரன்
ஆண்டு 5

வ/இராசேந்திரன் குளம்
வவுனியா

நான் வணங்கும் கண்கண்ட தெய்வம் எனது அம்மாதான். அம்மா இல்லாவிட்டால் நான் உலகில் பிறந்திருக்கவே முடியாது. அம்மா எனக்கு உயிர் தந்தவர், உணவோடு உணர்வு தந்தவர், கடவுள் எனக்குத் தந்த விலைமதிப்பற்ற பரிசு என் அம்மாவே

எனது அம்மாவுக்கு ஈடான எந்தவொரு பொருளும் உலகில் இல்லை. எதை இழந்தாலும் என் அம்மாவை இழக்க விரும்பவே மாட்டேன். அம்மா என்றால் அன்பு என்று பொருள் அம்மாவை மதிப்பவன் அனைத்தையும் மதிப்பவனாகின்றான். அம்மாவை இழப்பவன் இந்த உலகில் வாழத் தகுதியற்றவன். நேராக நரகத்திற்குத் தள்ளப்படுவான்.

அம்மாவில் அன்பு வைத்தால் ஆனந்தம் உண்டாகும். அன்புள்ளம் கொண்டவனுக்கு அனைத்துமே அம்மாவாகத் தெரியும். அம்மாவின் முகம் என் மனதைவிட்டு நீங்காது நின்று என்னை வழிப்படுத்துகிறது. ஆதலால் நான் சான்றோனாக வாழ்ந்து என் அம்மாவை மகிழ்விப்பேன்.

# நாங்கள் அகதிகள்

**செல்வி. ஜே. ஜலீலா வீவீ**
ஆண்டு 11,

அல் - அக்ஸா ம. வித்தியாலயம்
காங்கேயனோடை.

உயிரினங்களிடும் ஒலியின் நிஷப்தம்
ஆலயத்தில் அகதி முகாம்
அந்தகர் கூட்டமாய் நம்மவர்
ஏழை பணக்காரர் பேதமற்ற வாழ்க்கை!
முகாமில் மங்கலாய்த் தெரியும் மண்ணெய்
தீர்ந்த விளக்கில் பரீட்சைக்காய்
பரிதவிக்கும் மாணாக்கர்
திடீரென வானூர்தி வானில் பறக்கும்!

வேட்டோசை கேட்கும் பின்
தொடர்ந்து வரும் ஒப்பாரி
உள்ளத்திலும் சுமை எங்கள் உடல்களிலும் சுமை
வையத்திலும் சுமை எங்கள் வாழ்க்கையே சுமை
நிம்மதி என்பது இல்லாத சொத்து
பாரினில் எங்கள் பரிதாப வாழ்வு.

ஒரு நொடியில் பிடி தவறி
உருவானது எங்கள் அகதி வாழ்க்கை!
நாங்கள் ஒரு புதிய சாதி
இன மத நிற பேதங்களில்லா
அகதி என்னும் ஜாதி
போர்த் தேசமே எங்கள் தாயகம்!

முகாம்களே எமது புகலிடம்
பசியும் நோயும் எமக்கு சாகாவரம்
வேதனையும் சோதனையும் எங்கள்
தேசிய சொத்து அகதி வாழ்க்கை
சுடாதே சுடாதே நாங்கள் அகதிகள்
நாங்கள் விரும்புவது சமாதானம்
எங்களுக்குத் தேவை எமது சொந்த வீடு
என்று வரும் எமது வாழ்வில் விடிவு.

# பாரதியை மிஞ்சியவர்

**அ. பொ. செல்லையா**

சாவகச்சேரி

கத்துங் கடல் அடக்கிக் கவின் பெறுந் தமிழ் வளர்த்த முக்கூடல் மாமதுரை யின் முச்சங்கங்களின் வரலாற்றிலோ அல் லது அதற்குப்பின் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் கால கட்டத்திலோ சமுதாய மறுமலர்ச்சிக்காக, சமூக வளர்ச்சிக்காகப் புரட்சிக்கனலை ஏற்படுத்திய ஈடுயிணையற்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என்றால் அது மிகையாகாது.

மறுமலர்ச்சிகள் பலவற்றிற்கு வித் திட்ட பாரதியாரின் தாசனாக இருந்தாலும் தமிழர் வாழ்வில் புரையோடிக் கிடக்கும் ஆரிய அடிமைத் தனத்தை - அறியாமை இருளை அகற்ற அரும்பாடு பட்டவர் பாரதி தாசன்.

தனது விருப்பு வெறுப்புக்களைக் காட்டுபவரும் விரும்பும் வண்ணம் தமது பெயருக்கேற்ற மிடுக்கோடும் நிமிர்ந்த நேரிய நடையோடும் கம்பீரத்தோடும் கருத்துக் களைப் பாடல்களில் பெய்திடுவதில், சொல் வதில் யாருக்கும் அஞ்சாத வணங்காமுடி யாகத் திகழ்ந்தார்.

பல்லாயிரக் கணக்கான மைல்களுக் கப் பாலிருந்து வந்த பறங்கியனுக்குப் பார தம் அடிமையாக வாழக் கூடாது என்ற சுதந் திரக் கனலோடு தனித்தன்மை வாய்ந்த தமிழகம் இந்திக்கு எடுபிடியாக இருக்கக் கூடாது என்ற புயலையும் எழுப்பி இந்திய தேசியத்தில் தமிழுக்குத் தனித்தன்மையை யும் பேணி உரிமைப் போர் எழுப்பியவர் பாரதிதாசன்.

கொடுக்கக் கொடுக்க ஊறும் - பெரு கும் பொருள் கல்வியாகும், அறிவியலை வளர்த்து - அறியாமையை அகற்றி - வறு மையை நீக்கிட - அன்பைப் பெருக்கிப் பண்பை வளர்த்திட உலகத்தோடு ஒட்ட ஒழுகவைக்கும் பகுத்தறிவைக் கொடுப்பது கல்வியாகும், தமிழரின் கல்வி நிலையை உணர்ந்து தமிழருக்கான கல்வியைக் கொடுப் பதற்கு ஆசிரியராகப் பணிபுரிந்து பெருந் தொண்டாற்றினார், "யாருக்குங் கல்வி ஈந்தி டல் வேண்டும்" என ஆசிரியரின் கடமையை உரிமையோடு கூறுகிறார். மற்றும் - "கல்லா ரைக் காணுங்கால் கல்வி நல்காக் சுடர்க் குத் தூக்கு மரம் அங்கே உண்டாம்" என்று எச்சரித்தார்.

சாதிச் சழக்குகளை - சாத்திரச் சடங் குகளை மிகுந்த மிடுக்கோடும் ஆத்திரத்தோ டும் சாடிய ஆண்மையாளர். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழாகக் கொண் டவர். உலகம் உண்ண - உண்ண வேண்டும், எல்லார்க்கும் உடைமை என்ற நியதியில் பொதுவுடைமைத் தத்துவத்தின் காவலனாக விளங்கியவர் பாவேந்தர் அவர்கள்.

சமயப் பற்றில்லாத கவிஞர்கள் பல ரும் இயற்கையழகைக் கண்டு மயங்கியுள் ளனர். பாரதிதாசன் அவர்களும் அதற்கு விலக்கல்ல "இயற்கை எழிலை எல்லாம் சிற்றூரில் காண ஏலும்" என அழகின் சிறப்பை எல்லாம் சிற்றூரில் காண விழைகிறார்.

பாவேந்தரின் தமிழுணர்வுக்கு ஈடாக எதையும் சொல்லிட முடியாது.

"மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்
மாத்தமிழுக் கீடில்லை என்றுரைப்போம்"

**"அமுதென்று சொல்லடா செந்தமிழ்ப் பணியினை**
**அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியினை"**

"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என்றெல்லாம் வற்புறுத்தித் தமிழுக்குத் தொண்டு செய்வோர் இறவாத புகழை அடைவர் எனவும் அழுத்திக் கூறி, தமிழ் மொழிக்குத் தீங்கு என்றால் தம் உயி ரையும் தர வேண்டும்; தமிழன் தம்மானத்து டன் தலை நிமிர்ந்து தாரணியில் தனித் தன்மை பேணி வாழவேண்டுமெனத் தமிழ னைத் தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞர்.

இவர் பாரதியின் தாசனாக இருந்தா லும் தமிழின் தனித்தன்மையை வெளிக் கொணர்வதில் பாரதியைவிடப் பன்மடங்கு வேகமும் தம்மானமும் மிக்கவர். இவரின் தமிழியக்கப்பணி இன்றைய தமிழர்களுக்கு அணியும் மணியுமான கலங்கரை விளக்க மாகும்.

# இவளா....?

அ. அச்சுதன்.
ஆண்டு 12 உயிரியல் பிரிவு.
வவுனியா. தமிழ் மகா வித்தியாலயம்

பஸ்சுக்குக் காத்திருந்து ஐந்து நிமிடங்கள் கரைந்தன " மச்சான் சிங்களவர இனத்தால வெறுத்தாலும், அழக வெறுத்து ஒதுக்க முடியாடா ஏன்ரா? பக்கத்தில் நின்ற ராமிடம் கேட்டேன். " இதில் நிக்கிற பெண்ணைப் பார்த்தியாடா? உள்ளத்த அள்ளுது" அவன் காட்டிய திசையை பார்த்தேன். அங்கு பக்கத்து வீட்டுப் பெண் நின்று கொண்டிருந்தாள். சாலையில் போவோரை மீண்டும் ஒரு முறை பார்க்கச்சொல்லும் அழகு - பிரமன் சிந்தித்து படைத்த அற்புதப்படைப்பு. எனக்குள் நான் நினைத்துக்கொண்டேன்.

உயர்தர பரீட்சையில் முதல் முறை கோட்டை விட்டுவிட்டு, இரண்டாம் தடவையும் முயற்சித்துப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் கொழும்புக்கு வந்திருந்தேன். ஊரில் காணி வாங்கிற விலைக்கு ஒரு மாதவாடகை கொடுத்து ஓர் அறையைச் சிரமப்பட்டு வெள்ளவத்தையில் ஈடன் ரோட்டில் எடுத்துத் தனியார் கல்வி நிறுவனங்களில் படித்துக்கொண்டிருக்கின்றேன். துணைக்கு இன்னொருத்தன் கிடைத்தான். பெயர் ராம். அவனும் என்னைப் போன்றே முதல் தடவையில் குண்டடித்தவன். அவனுடன் சேர்த்து காலத்தை ஓட்டிவந்தேன்.

அப்பொழுது தான் எங்கள் கண்களுக்கு அவள் அகப்பட்டாள். பக்கத்து வீட்டில் குடிகொண்டிருக்கும் அவள் தினமும் பஸ் பிடித்து பாடசாலைக்கு செல்கின்றாள் என்பதை அவளது வெள்ளைச்சீருடை பறைசாற்றியது. சிங்களமானாலும் குறை கூற முடியாத அவள் அழகு, எமது பருவக்கோளாறுக்கு கிடைத்த ஊக்குவிப்பானது.

- " டேய் பஸ் வந்திட்டடா! நண்பனின் அழைப்பு கற்பனைக்கு விடை கொடுத்தது.

" கிளினர் பஸ்சுக்குள் உடல்களை திணித்துக் கொண்டிருந்தான். அவளும் அச் சிறிய பஸ்சில் ஒருவாறு ஏறிக்கொண்டாள். சனநெருக்கம் எமது சேட்டைகளுக்கு மேலும் ஊக்குவிப்பளித்தது. பிரேக் அடிக்கும் போது உரசல்கள். பதில் முறைப்புக்கள். எமக்குள் சிரிப்புக்கள். இவ்வாறாகத் தினமும் எமது இனிய பயணங்கள் தொடர்ந்தன.

ஒரு நாள் காலைப்பொழுதில்,
" டெய் எழும்படா,கிளாசுக்குலேட்டாய்ப் போச்சு " குரல் கொடுத்தேன். அவன் எழும்புவதாகத் தெரியவில்லை. போர்வையை இழுத்து மூடிக் கொண்டு படுத்தான்.

" பஸ் பிடிச்சுப் போக லேட்டாயிடும் எழும்படா கெதியெண்டு, வாத்தி கொக்கரிக்கப்போகுது. "

" நான் இண்டைக்கு வர இல்ல நீ போட்டு வா"

எனக்கு அதற்கு மேல் தாமதிக்க நேரமில்லை. சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு புறப்படடுவிட்டேன்.

ஒருவாறு பஸ்சில் தெரிந்த சிங்களத்தை அவிட்டு விட்டு " ரிக்கற் வாங்கி ரியூட்டரியை அடைந்தேன். ஆனால் அங்கு சக மாணவர்களைக் காணவில்லை. உட்சென்று விசாரித்ததில் கிளாஸ் இன்று இல்லை என்பது அறியப்பட்டது. ஏமாற்றத்துடன் மீள பஸ் ஏறினேன். சிறிது தூரம் சென்றிருக்கும் பெரியதொரு சத்தம் கேட்டது. செவிப்பறை வெடிக்குமளவு பலத்த ஓசை. நிச்சயம் குண்டுவெடிப்புச் சத்தம் தான். பஸ்சில் ஒரே குழப்பம். வீதிகளில் பரபரப்பு. மக்களது பயமும், திகிலும் முகத்தில் வெளிச்சம் போட்டு காட்டப்பட்டது.

பஸ் நிறுத்தப்பட்டது. எங்கும் பொலீஸ், இராணுவ சீருடைகள். பஸ்சிலிருந்து அனைவரும் இறங்குமாறு பணிக்

அடையாள அட்டைகள் பரீட்சிக்கப்பட்டன. தமிழர் வேறாக்கப் பட்டு லொறியில் ஏற்றப்பட்டனர். நானும்அவர்களில் ஒருவனாக ஏற்றப்பட்டேன்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை புரியாத மொழி, அறிமுக மற்ற முகங்கள். பயம் உயிரை உண்ணப் பார்த்தது. சிறைநோக்கிப் பயணம் தொடர்ந் தது. அனைவரும் கூண்டில் அடைக்கப்பட் டோம். எதற்காக வந்தேன்? எங்கிருக்கிறேன் எனக்கே புரியவில்லை.

அப்பொழுது ஒரு பொலீஸ் வந்தார் அவர் மீசை தமிழன் என்று கூறியது. எனது கணிப்பு சரிதான் "இதுக்க வெள்ளவத்தை யில் ஈடன்ரோட்டில் நூறாம் நம்பர் வீட்டில் இருக்கிற யாராவது இருக்கிறியளா?"

எனக்குள் பிரமிப்பு - அதிர்ச்சி
சேர் நான் அங்கதான் இருக்கிறன்.

"வெளியில் வாரும்"

தனியே அழைத்து வரப்பட்டேன். எனக்குள் பயம் இருந்ததா, சந்தோஷம் இருந்ததா என்று தெரியவில்லை.

"நீர் பக்கத்து வீட்டில்தான் இருக்கிறதாயும் படிக்கிறதுக்கு வந்ததாயும் கூறி ஒருவர் வந் துள்ளார். வெளியில இருக்கின்றார். நீர் போ கலாம். அதுக்கு முதல் பெயரையும் ஐ. சி. நம்பரையும் பதிஞ்சிட்டு போம் என்றார்.

எனக்கு யார் என்றே தெரியவில்லை கொழும்பில் உறவினர் இருப்பதாக பிறந்தது முதல் தெரியாது. அப்படி இருக்க என்ன விடு விக்க அதுவும் பக்கத்து வீட்டில இருந்து.... என்னால் விடைகாண முடியவில்லை.

சகல விபரங்களையும் கொடுத்து விட்டு வெளியே வந்தேன் எ....ன்னா....ல் ந... நம்பமுடியவில்லை இவள்..... இவள்..... பக் கத்து... வீடு ஆம், எம்மால் பரிகசிக்கப்பட்ட பக்கத்து வீட்டு ரோஜா.அவள்தன் மொழியில் ஏதோ முறுவலோடு சொன்னாள் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை உணர்வ லைகளோடு தெரிந்த சிங்களத்தில் நன்றி கூறினேன்.

---

செல்வன். அ. தூயவன்
ஆண்டு 12 கணிதம் (97)

## தங்கப் பொட்டு

தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா
இந்துக் கல்லூரி திருக்கோணமலை.

வானமெனும் பெண்மணிக்குத் தங்கநிறப் பொட்டு
வாஞ்சையுடன் வைத்ததுயார் சொல்லிடுவாய் சிட்டு
எம்மரும் எட்டிடாத நீலவானைத் தொட்டு
எம்மனிதர் இட்டனரோ அழகான பொட்டு

பொட்டுதனை மெருகூட்ட நட்சத்திரச் சொட்டு
நட்டுவைத்த கோமானை எனக்குமட்டும் காட்டு
பட்டுவன்ன பொட்டுமீது விண்மீனை ஓட்ட
படியாமல் விலகுதுபார் மெதுவாக மாட்டு

நீளமான நெற்றியிலே திருநீறை ஓத்து
பொட்டின்கீழ் மேகமதை அழகாச் சூட்டு
நீறுதனை கைகளிலே சிந்தாது கொட்டி
நேராக நுதலினிலே சீராகத்தீட்டு

பொட்டுதனை நீறுதனை அலங்காரச் சொட்டுதனை
இட்டுவைத்த தேவமகன் யாரென்று கேட்டு
யாரிடமும் சொல்லாது எனக்கு நீ காட்டு
முடியாமல் போய்விடின் பாடலிலே மீட்டு

# அம்மா என்றொரு தெய்வம்

செல்வி. நர்மதா சந்திரகாந்தன்
ஆண்டு 7

தி/ புனிதமரியாள் கல்லூரி
திருக்கோணமலை.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பது ஒரு சாதாரண கவியின் வாக்கு மட்டுமல்ல ஒவ்வொரு மனித இதயத்தினதும் அடி நாதம் சிந்திக்கும் மனிதனின் சிறந்த பெருமூச்சு. அனுபவத்தில் கிடைத்த ஆதார உண்மை பெற்ற தாயிடம் கண்ட அன்பை, ஆதரவை அணைப்பை மனிதன் வேறு எங்குமே கண்ட தில்லை, காணப்போவதும் இல்லை.

பத்து மாதம் எம்மைச் சுமக்கிறாள். தனது இரத்தத்தையும் தசையையும் எமக்குத் தந்து "எனது குழந்தை என்ற பேருணர்வி னால் உந்தப்பட்டு கிடைக்க முடியாத மாபெரும் செல்வம் எனக்கருதி எம்மைத் தனது உந்தியிலே சுமக்கிறாள். அந்தவேளை அவள் பட்ட கஷ்டங்கள் உடல் உபாதைகள் எம்மால் எண்ணிப் பார்க்க முடியாதவை ஆனால், அவளோ இன்பமாக அதை ஏற்று எம்மை உலகிற்கு கொண்டு வருகிறாள் அவள் எம்மை உருவாக்கிய தெய்வம்.

உலகில் பிறந்தும் நாம் பார்த்த தெய்வமவள். இதனால் தான் ஔவையும் அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்றாள். உண்ணத்தெரியாத எமக்கு உதிர த்தை பாலாக்கி உரமாக ஊட்டுகின்றாள். அந்த உரமே வாழ்நாள் முழுவதும் எமக்கு உடல் வலுவாகின்றது. எம்மை உலகிற்கு ஈர்ந்து தனது உதிரத்தால் உடலும் தந்த தெய்வமவள்.

சிறு வயதில் அறியாமையில் நாம் செய்த குறும்புகள் ஏராளம். தாயின் திரு மேனியில் கால்களால் உதைத்திருக்கின் றோம். அடித்திருக்கின்றோம், கடித்திருக்கின் றோம். ஆனால் அவளோ எம்மை அணைத்து முத்தமிட ஒரு போதும் தவறியதில்லை இதனை மன்னிப்பு என்பதா, பாசம் என்பதா, கருணை என்பதா, அல்லது அளவு கடந்த அன்பு என்பதா. கருணைக்கு தெய்வத்தைக் கூறுவார்கள் ஆம். நாம் கண்ட தெய்வம் அம்மா!

துன்பத்தில் அம்மா, இன்பத்தில் அம்மா, எதிலும் அம்மா எப்பொழுதும் அம்மா எங்கும் அம்மா எல்லோர்க்கும் அம்மா எனவே தான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் "உலகமாதா" எனது தாயானால் உலகப் பெண்மை அனைத்தும் எனக்கு தாயாக வேண்டும் என வாழ்ந்தார்.

தாய்க்கு நிகர் தரணியிலே யாருமில் -லை. இதனால் தான் நாயனார் கூட தாயினும் சிறந்த தலைவன் என்றடியார் தம்மை போற்றி சைப்பார்கள் என்றும் பாடி ஒப்பிடக் கூடிய மிக உயர்ந்த அன்பு தாயன்புதான் என்பதை அவர் வலியுறுத்துகின்றார்.

பாரதிதாசன் கூட பல வகையான உள்ளங்களை ஒப்பிட்டு விட்டு இறுதியில் சிறந்த உள்ளம் தாயுள்ளம் தான் என்பதை"தொல்லுலக மாந்தரெல்லாம் ஒன்று என்று எண்ணும் தாயுள்ளம் தனில் அன்றோ இன்பம் என்று உணர்வு மிக்க கவிதை அடி மூலம் வெளிப்படுத்துகின்றார்.

"வாழ்க தாய்மை"

## முயற்சி வேண்டும்

**இதய வரட்சியும் முயற்சி இல்லாமையுமே துயர்கள் அனைத்துக்கும் காரணம் ஆகின்றன. இந்த இரண்டையும் உதறித் தள்ளுவது அவசியம்.**

**-சுவாமி விவேகானந்தர்-**

# ஓ! ஆலமரமே!

செல்வி .ம. கவியரசி
ஆண்டு -08

வ/சமளங்குளம் அ. த. க. பா.
வவுனியா.

ஓ! விரிந்தாடும் ஆலமரமே
உன் விழிகளைக் காணவில்லையே!
உன் எழில் காண கோடி கண்கள்
உனை நாடுகின்றனவே!
உன் கூந்தல் சடைகள்
கூடியாடும் எழில் கண்டேன் - அவை
ஏன் இன்று குலைந்ததுவோ
காரணம் சொல்வதெனில்
காலாண்டு சென்றிடுமே
ஆகா! உன் உயரத்தை
பார்த்து பார்த்து - மனிதர் நாமும்
உள்ளத்தால் உயர்ந்து விட்டோம்.
மனிதர் களைப்பை நீ போக்கிவிட்டாய்
உன் கபட மனம்தான் அங்கில்லை
காவிரிகள் நன்றி சொல்ல,
கானகம் முழுவதையும்
கண் விழித்து காத்து நின்றாய்
உன் காலடி வந்தவர்கள்
குறையேதும் சொல்வதுண்டோ!
குறையேதும் இனியுமுண்டோ!
இது போலே எந்நாளும்
சேவை செய்வாய் நீ நாளும்
உன் பெருமை என் சொல்வேன்
உயர்ந்து நிற்கும் ஆலமரமே!

# தனிநாயகம் அடிகளும் இலக்கியப் பணியும்

மாதுமை சிவசுப்பிரமணியம்
13ம் ஆண்டு கலைப்பிரிவு.

புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை

**தோன்றிற் புகழொடு தோன்றுக. அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று**

என்ற பொய்யா மொழியாரின் வாக்குக்கிணங்க தனிநாயகம் அடிகளார் அவர்கள் தோன்றிப் புகழுடன் வாழ்ந்து காட்டினார்கள்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும்
காணோம் " என்று

பாட்டுக்கொரு புலவன் பாரதி கூறிய பைந்தமிழ்க் கருத்துக்களை மனதில் கொண்டு தமிழ் மொழியின் சிறப்பை அதன் பெருமையை உலகளாவப் போற்றும்படி செய்தவர் தனிநாயகம் அடிகளார் அவர்கள்.

"பெற்றதாயும் பிறந்த நற் பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே"

என்ற பாரதியின் சொல்லுக்கு அமைய தான் பிறந்த நாட்டின் பெருமையை உலகளாவப் பறைசாற்றிய பெருந்தகை. தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் போற்று கின்ற உத்தமர். உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு பல கண்டவர். தமிழுக்காகவும் தமிழ் இலக்கியத்துக்காகவும் அயராது பாடுபட்டார். யாழ்ப்பாண தீபகற்பத்தின் கரம்பன் என்ற ஊரிலே பிறந்த அடிகளார் கத்தோலிக்க மதத்தினராய் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கல்வி பயின்ற தனிநாயகம் அவர்கள் அயர்லாந்தைச் சேர்ந்த "லோங்" அடிகளாரின் அபிமான மாணவனாகக் கல்விபயின்று ஆங்கில மொழிப் பயிற்சியோடும் ஆங்கில இலக்கியங்களையும் கற்றார்.

மதப்பற்றுக் காரணமாகத் தானும் ஒரு மதகுருவாக வரவேண்டும் என்று நோக்கம் கொண்டு தனது 19 ஆவது வயதில் திருமுறைக் கல்வியைப் பயில்வதற்காக இத்தாலி நாட்டுக்குச் சென்றார். தனது 25 ஆவது வயதிலே திருமறைத் துறையிலே கலாநிதி பட்டம் பெற்றார். இத்தாலி நாட்டில் இருக்கும் போதே தன்னாட்டுக் கலைகளையும் இலக்கியங்களையும் வளர்க்க வேண்டும் என்ற ஆவல் துடிப்புடன் தாயகம் திரும்பிய அடிகளார் அத்துறையில் ஈடுபட்டு உழைக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். தமிழ்மேல் கொண்டுள்ள பற்றுக் காரணமாக தென் இந்தியா சென்று குருசாமி என்பவரிடம் தமிழைப் பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஆராய்ச்சியில் 1949ம் ஆண்டு பட்டங்களைப் பெற்றார். அன்றிலிருந்து தமிழ் இலக்கியத்துறையில் பெரும் ஈடுபாடு கொண்டு தமிழ் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு பல நாடுகளுக்கும் தமிழ்த் தூது சென்றார்.

தமிழ் இலக்கியத் துறையில் அவருக்கு உள்ள ஈடுபாடு காரணமாக "தமிழர் பண்பாடு" என்னும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி முத்திங்கள் சஞ்சிகையை 1952ல் தோற்றிவித்தார். 15 ஆண்டுகளுக்கு மேலாக அச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகப்

பணியேற்று தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சிக்காகப் பெரும் சேவை ஆற்றினார். 1952ம் ஆண்டு தொடக்கம் 1961ம் ஆண்டு வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றினார் அக்காலப்பகுதியில் ஐரோப்பிய நாடு களிலும் கிழக்காசிய நாடுகளிலும் கல்விச் சுற்றுலாக்களையும், தமிழ்த்தூதையும் மேற் கொண்டார். லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் 2 ஆவது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொணடார்.

1961ம் ஆண்டு மலேசியப் பல்கலைக் கழகத்தில் துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றார். அக்காலத்தில் அவர் தமிழ் ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டு உழைத்தார். 1966ம் 1967ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக கலைப்பீட அதிபதியாக வும் பணியேற்று அத்துறையின் வளர்ச்சிக்காக பெரும் பணியாற்றினார். உலகெங்கும் உள்ள தமிழர்கள் வாழும் இடங்கள் தோறும் சென்று தமிழினத்தைப் பற்றிய ஆராய்ச் சியில் ஈடுபடவேண்டும் என்று ஆர்வம் கொண்டார். பூடிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் மொறிசியஸ் போன்ற நாடுகளுக்கும் சென்று தனது ஆராய்ச்சிப் பணியைத் தொடர்ந்தார்.

பேச்சளவில் மட்டும் நின்றுவிடாமல் செயலளவில் பல சாதனைகளை நிலை நாட்டியவர் தனிநாயகமடிகளார். தான் கொண்ட இலட்சியத்தின் பால் உயிர் மூச்சு உள்ளவரை அயராது உழைத்தார். யாரை மறந்தாலும் தமிழ் கூறும் நல்லுலகம் தனிநாயகம் அடிகளாரை மறக்கவே முடியாது. தமிழ்மொழியின் சிறப்பை, அதனுடைய பெருமையை வேற்று மொழி பேசுகின்றவர்களும் ஆராய்ச்சி செய்து அதன் பெருமை களை எடுத்துக்கூறும் அளவிற்கு வழி சமைத்தவர் தனிநாயகம் என்றால் அது மிகையாகாது.

1964ம் ஆண்டு அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி அதன் செயலாளராக அரும் பெரும் பணிபுரிந்தார். உலகமே வியக்கத்தக்க முறையில் தமிழ் மொழியின் உன்னத நிலையை உலகறியச் செய்வதற்கு, தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடாத்தி செயலூக்கத்துடன் செயல்பட்டார். 1வது உலக மகா தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை மலேசிய நாட்டிலே சிறப்பாக நடத்தி முடித்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். பெயருக்காகவும், புகழுக்காகவும் தன்னை உருவாக்கிக் கொள்ளாமல் தன்னுடைய மூச்சாகிய தமிழ் மொழியின் பெருமைக்காக அயராது உழைத்தார்.

உலகமே வியக்கத்தக்க வகையில் பேரறிஞர் அண்ணாவினுடைய காலத்திலே தமிழ் நாட்டில் அவர் நடத்திய அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு இமயம் என வளர்ந்து நின்றது. பத்து நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்ற மகாநாட்டில் கடைசி நாள் தலைமை வகித்து பேசிய பேரறிஞர் அண்ணா கூறிய கூற்றுக்கள் எம்மைப் புல்லரிக்க வைக்கின்றன.

“உள்ளமெல்லாம் தமிழ் நிறைந்திருக்கின்ற வேளை, ஊனும் உயிரும் தமிழோடு கலந்திருக்கின்ற வேளை, இந்த வேளையில் நான் ஆற்றும் பேருரை பேருக்காகத் தான் உரையாக அமையுமே அன்றி பேருரையாக அமையமாட்டாது” என்று கூறுமளவிற்கு இலை மறைகாயாக செயல் பட்டு உழைத்தவர். பெருமையை நாடாத பெருந்தகை தனிநாயகம் அடிகளாராவார். ஐரோப்பிய நாகரீகத்தின் வளர்ச்சி நாடுகளில் ஒன்றாகிய பிரான்ஸ் நாட்டிலே பிரான்ஸ் தலைநகராம் பாரீஸில் உலகத் தமிழா ராய்ச்சி மகா நாட்டை நடத்தியப் பெருமை கண்டார். தான் பிறந்த மண்ணிலே பல

பிரச்சனைகளுக்கும் மத்தியில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையிலே வரலாறு காணாத வகையிலே தமிழாராய்ச்சி மகா நாட்டை நடத்தி முடித்தார். இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா அமெரிக்கா, மலேசியா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற பல நாட்டு ஆராய்ச்சியாளர்கள் தமிழ் மொழி சான்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை நம் மண்ணில் வழங்கி பெருமை தேட வழி வகுத்தவர், தனிநாயகம் அடிகளாவார். 1969ல் மலேசியா பல்கலைக்கழகத்தில் இருந்து ஓய்வு பெற்று தனது இறுதிக்காலப் பகுதியில் மனநிறைவோடும், உளமகிழ்ச்சியோடும் தமிழ்ப் பணியிலே ஈடுபட்டார்.

தமிழ் ஆராய்ச்சி சொற்பொழிவுடன் மட்டுமன்றி பல கட்டுரைகள் பலவற்றை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அவ்வப்போது எழுதி வந்துள்ளார்.

"தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகள்" "தமிழ் ஆராய்ச்சி - அதன் வரலாறும் வருங்காலமும்" என்பவை இவரால் எழுதப்பட்ட நூல்களாகும். அது மட்டுமன்றி "தமிழ் தூது" "ஒன்றே உலகம்" போன்ற நூல்களும் இவரின் படைப்புக்களே. தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்ற செம்மலாக உலகம் போற்றும் உத்தமனாக, பண்பாளனாக வாழ்ந்து காட்டி தமிழ் மொழியின் தனித்துவத்தை உலகறியச் செய்து எவருமே செய்யாத மாபெரும் இலக்கியப் பணியைச் செய்த பெருந்தகை என்ற பெருமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார்.

## இளைஞரின் ஆற்றல்

*இளமைப் பருவமே மனித வாழ்க்கையின் சீரிய பருவமாகும். அழகு வாய்ந்த பருவம்: களங்கமற்ற பருவம். வாழ்க்கை என்னும் நகரிலுள்ள மணமிகு பூஞ்சோலை. அப்பருவத்தினை உடையவரே நாட்டுச் செல்வம்: உயிர்நாடி. எதிர்கால நாகரீகத்தை நிலை பெறச் செய்பவர்.*

*நாட்டுப் பொறுப்புக்கு நாளை இளைஞர்களே பொறுப்பாளியாவர்*

*-டாக்டர். மா. இராசமாணிக்கனார்.*

## கல்வி அழகு

*குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து*
*நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையாற்*
*கல்வி அழகே அழகு*

*- நாலடியார்.*

# உள்ளக் கமலம்

**செல்வி பா. பாலசுதாஜினி,**
ஆண்டு - 13 கலை,

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
கரவெட்டி.

*மணம்மலியும் மலரெடுத்து மனதுவளர் தூண்டலினால்
கணமும் எமதுயிர் மூச்சாம் கன்னித்தமி ழன்னைக்கு
பண்ணி சைக்கும் பாதமலர் சூட்டவெனும் ஆசையினால்
கொண்டு மலர்நாடிச் சோலை புக்கேன் பாவியனே.*

*அன்றலர்ந்த மலர்கொய்து அற்பு தமாய்ச் சிக்க
மன்றல் நாறுமனத் திரையில் பல்லிடங்கள் நாடி
நின்று கொண்டுவந்த சேதி யென்ன நின்றுவிட்ட
தென்மூச்சு மலரனைத்தும் பேய்த்தேராய்ப் போனதுவே.*

*விண்ணுயர்ந்த வாழிடங்கள் மண்ணு யர்ந்த மேடாச்சே
கண்ணிறைந்த சோலையெல்லாம் கருகிச் சுடு காடாச்சே
பண்ணிசைக்கும் விழுமியங்கள் பகலின் கனவாச்சே
எண்ணிறந்த கோயிலெல்லாம் இடிவிழுந்த கதையாச்சே.*

*விண்பாடும் தமிழர்தம் விஞ்சுபுகழ் விழுமியங்கள்
கண்காணக் கலியுகந் தான்தடைக் கல்லாய்ப் போன
வெண்புறா விழையும் விழிவிசர் பிடித்து வீங்கியதேன்
கண்மணி யிழந்த காட்சி கவிதைமழை கானல்நீரே.*

*சுடச்சுடரும் பொன்போல துன்பக் கனல்வெம்மை
சுடச்சுட உளிகாலக் கண்டேன் கண்ணில் தூண்டல்
படப்பட துலங்கவொன்று உள்ளத்தில் தோன்றியதே
படபடென வந்த சக்தி வழியறியேன் அற்புதமே*

*வாடா மலர்நாடி வதங்கிய வென்னெஞ் சுமணம்
வாடா மலர்தொடுக்க வாஞ்சை மிக்கு மகிழ்ந்துவந்து
வாடா மகனே வருவதெல்லாம் நன்மைக்கே
வாடா கமலமலர் தொடுத்திருநீ என்றதுவே.*

# பாடசாலையும் சமூகமும்

**செல்வி. தெ. விஜயகுமாரி**
ஆண்டு - 13 (வர்த்தகம்)
தி/விபுலானந்த மகா வித்தியாலயம்

ஒரு பாடசாலை உருவாகிறதென்றால் அந்த நாட்டின் பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்ற உண்மை புலப்படுகிறது. பாடசாலை ஒரு பாசறையாக விளங்குகின்றது. வருங்கால மாணவர்களின் வாழ்க்கைக்கு அமைக்கப்பட்ட நிறுவனம் தான் பாடசாலை. சமூகத்தினால் நிறுவப்படும் தாபனங்களில் அதி உன்னத நிலையில் விளங்கும் தாபனமாகப் பாடசாலை கொள்ளப்படுகின்றது. கல்விக்கென சமூகத்தினால் நிறுவப்படும் பரிபாலிக்கப்படும் நிறுவனம் என்றும் கூறலாம்.

சமூக அமைப்பாக விளங்கும் பாடசாலை மக்கள் நம்பிக்கைக்கு உரித்துடையதாய் இருப்பதுமட்டுமின்றி வழிமுறையாகத் தலைமுறைகள் பேணிவருகின்ற எமது கலாச்சாரத்தை அடுத்து வரும் தலைமுறைகளுக்குக் கொடுத்துதவுவதுடன் தொடர்ச்சியாக அதனை வளர்த்துக் காத்துவரும் நிறுவனமாக பாடசாலை விளங்குகின்றது.

சமூகம் என்பது ஒரு மக்கள் கூட்டம். இது விருப்புக்கள், நாட்டங்கள் பொதுவான பிரச்சனைகள் நெடுங்காலமாக உறவுகள் என்பவற்றைக் கொண்டிருக்கும். அதாவது ஒருவருடன் ஒருவர் கலந்து இணைந்து எல்லோருக்கும் பொதுவான சில நோக்கங்களை அடைவதற்காக ஒன்று கூடிச் செயற்படும் பல மனிதர்களைக் கொண்ட தொகுப்பே சமுதாயம் என்பதாகும்.

ஒரு குழந்தை பிறந்து. வளர்ந்து பிள்ளையாகித் தனது இனத்தோடு சேர்ந்து வளரும் ஒரு சிறு குழுதான் சமூகமாகும். ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோரை உள்ளடக்கியதால் அவர்கள் தம் இனத்திற்கும் வளர்ச்சிக்கும் கட்டி எழுப்பிய முறையான கட்டுக்கோப்புக்களை உடையதாய் விளங்கும் ஒரு குழுஎன்றும் சமூகத்தைக் குறிப்பிடலாம்.

கல்வி என்பது வாழ்க்கையில் தொடர்ந்து நடைபெறும் ஒரு செயற்பாடாகும். சூழலில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களுக்கும் மாணவரைத் தூண்டுகின்றது. இந்த மாற்றங்களுக்கு விளைவுச் செயல்கள் காட்டுகின்றனர். இந்த தொடர் செயற்பாடு சிறப்பான ஒழுங்கு முறையில் நடத்த உதவுவனவே. திட்டமிட்டு அமைக்கப்பட்ட நிறுவனங்களான பாடசாலைகளாகும்.

கல்வி என்பது தனித்துப் பள்ளிப்படிப்பால் ஏற்படுவதொன்று அன்று. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு குழுவின் தொடர்பாக சிறுவர், சிறுமியர் பெறுகின்ற அறிவுகளாகக் கொள்ளலாம். ஒரு நாட் பொழுதில் ஆறு மணித்தியாலங்களே பாடசாலைக் காலமாகக் கொள்ளப்படுகின்றது. மிகுதிக் காலத்தில் ஓய்வு உறக்கம் என்பவற்றுக்குரிய காலம் கழிய மிகுதி நேரம் முழுவதும் பெற்றாருடனும், குடும்பச் சூழலிலும் இனத்தவருடனும் தன் காலத்தைக் கழிக்கும் பிள்ளை அங்கிருந்து தான் மூலாதாரக் கல்வியை பெறுகின்றது. அன்னையே ஒருவருக்கு முதலாசானாக விளங்குபவள்.

அது மட்டுமன்றி சமூகத்தில் நிறுவப்பட்டிருக்கும் பல்வேறு நிலையங்களும் ஒரு வகையில் கல்வியை நேராகவோ மறைமுகமாகவோ வழங்குகின்றன. மக்கள் தொடர்பு சாதனங்களாகிய வானொலி , தொலைக்காட்சி , பத்திரிகைகள், சஞ்சிகை கள் இவை போன்ற இன்னோரன்ன சாதனங்கள் கல்விப் புகட்டுவதில் ஈடுபடு கின்றன. எது எப்படி ஆயினும் கல்வி புகட்டிய போதிலும் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அவர்களது கல்வி முன்னேற்றங்களை ஒழுங்காக வழங்கும் முக்கிய பொறுப்பை பாடசாலைகள் ஏற்றுள்ளன, என்றே கூறவேண்டும். இப் பாடசாலைகள் யாவும் கல்வியைப் பொறுத்தவரையில் பிறசமூக நிலையங்களின் உதவியுடனே இயங்குகின்றன.

““வையத்துள் வாழ்வாங்கு வாழவைப்பது கல்வி”” குழந்தை பிறந்து மூன்று ஆண்டுகள் இல்லத்தில் வளர்ந்து பள்ளிக்குச் சென்று ஏறத்தாழ 25 ஆண்டுகள் பள்ளியில் ஈடுபாடு கொள்கின்றது. பள்ளிச் சூழ்நிலை பிள்ளைகளுக்கும் பலரை அறிமுகம் செய்து வைக்கின்றது. கூடிவாழும் உயிரினங்களில் மனிதனும் ஒன்றானவன் என்பதை உணர்த்துகின்றது. ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளுதல் அவர்களின் சாதனைகளை உணர்ந்து கொள்ளல் குறிக்கோள்களை அமைத்துக் கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் பள்ளியில் நடைபெறுகின்றன. “நான் என்ற அகங்கார நிலை யில் இருந்து விடுபட்டு” நாம் என்ற பண்பட்ட உணர்வினை முளைவிட்டு வளர்ச்சி பெறச் செய்வது பாடசாலையே. இந்த “நாம்” என்ற உணர்வு பாடசாலையில் உற்பத்தி யாகி அது நாட்டுணர்வாகி உலக உணர்வாக மாறவைப்பதும் இப்பாடசாலைகளே. நாளைய சமுதாயத்திற்கு வேண்டிய கல்வியை அளிக்கும் தலையாய பணியைக் கொண்டது பாடசாலை

எனினும் நாம் முன் கூறியது போல் கல்வியை வழங்கும் முழுப்பொறுப்பையும் பாடசாலை ஏற்றுக்கொள்ள முடியாது. சமூகம் தன் வருங்கால சந்ததியினருக்கு கல்வி வழங்கும் பொறுப்பை பாடசாலைகளுக்கு அளித்த போதும் ஒருவனுக்கு கல்வி அளிப்பதில் பல தாபனங்கள் பங்கு கொள்ள வேண்டும். இந் நிறுவனங்களின் முக்கிய தொழிற்பாடு கல்வியைப் புகட்டுவது அல்ல. பாடசாலைக்குத் தேவையான பணம், பௌதிக வளம் போன்ற உதவிகளை சமூக அமைப்பே வழங்குவதனால் பாடசாலை சமூக விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளது. எனவே தான் சமூதாயத்தை ஒட்டியே பாடசாலை அமைக்கப்பட வேண்டும். அப்போது தான் இது ஒரு சமூக நிறுவனமாக இயங்க முடியும்.

பாடசாலை தனியே பாடங்களைப் போதிக்காது குழந்தையின் ஆளுமையை வளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது. பள்ளியில் படிக்கும் தனித்தன்மையைப் பேணத் தெரிவதுடன் சமூகத்தின் உறுப்பினராவதற்கும் வேண்டிய பயிற்சியையும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. பாடசாலை ஒரு சமூக நிறுவனம். சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகப் பாடசாலை விளங்குகின்றது. பாடசாலையின் கட்டிடங் கள், தளபாடங்கள், ஆசிரியர்கள், சக மாணவர்களுக்கிடையே பல்வேறு உடை விட்டங்கள் ஏற்படுவதனால் மாணவர்கள் நற்பழக்கங்கள், சிக்கனம், தூய்மை, பாது காப்பு, பக்குவம், பணிவு, மரியாதை என்ற பண்புகளைப் பெற்று இயற்கை பிரதியிடும் மேன்மக்களாகமாறுகின்றனர். சமூகம் ஏற்படுத்தும் மாற்றங்களுக்கேற்ப பாடசாலைக் கல்வி இயைவுபடுத்தப்பட வேண்டும். பல்வேறு முரண்பாடுகள் சமூகத்திற்கும் பாடசாலை களுக்குமிடையில் ஏற்பட்ட போதிலும் சிறந்த சீரிய சமுதாயத்தையும் சிறந்த

குடிமக்களையும் உருவாக்க வேண்டிய பாடசாலைகள் சமூகத்துடன் முரண்பட்டு நடக்க முடியாது.

பாடசாலையில் நடைபெறும் கல்விச் செயல்முறைகள் சமூக மரபினைப் பேணிக் காத்து அதனை சமூகத்தில் பரப்பவும் வேண்டும். இன்றைய குழந்தைகளுக்கு நமது முன்னோர் திட்டிவைத்த அரும்பெரும் அறிவுச் சொத்துக்களே சமூக நலன்கள் எனப்படும். அறிவியல் மேதை நியூட்டன் எமது முன்னோரைக் காட்டிலும் என்னால் அதிக தொடர்பு கொள்ளக் காரணம் அவர்கள் தோள்களின் மேலே நின்று பார்த்த லேயாகும் என்ற கூற்று விளக்குகிறது.

பாடசாலை சமூகத்தின் ஒரு தீவாக இருக்கக்கூடாது. அது ஒரு தேசத்தின் பாலமாக இருக்கவேண்டும். பாடசாலையும் சமூகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒன்றில் இருந்து ஒன்றை வேறாக்கமுடியாது. கல்விப் பொருளும் சமூகத்தில் இருந்துதான் உற்பத்தியாகிறது. பாடசாலையானது உணரும் சக்திவாய்ந்த உயிர்த்துடிப்பான சமூகத்தை உருவாக்கும், ஒரு தாபனம். இங்கு வழங்கப்படும் கல்வி நாட்டுக்கு வேண்டிய சிறந்த அறிஞர் கூட்டமொன்றை உருவாக்கிக் கொடுக்கின்றது. "அறிவுதான் அரியாசனத்தில் இருக்கவேண்டும்" என்ற தத்துவஞானி ரூசோ கூறிய கருத்து பள்ளிக்கூடத்தில் இருந்து உருவாகிய ஒரு சக்தியாகும். பாடசாலைகளில் கடைப்பிடிக்கப்படும் கலைத்திட்டத்தின் மூலம் அறிவு விருத்திக்கு அடிகோலுகிறது. பாடசாலையில் இடம் பெறும் விளையாட்டுக்கள் மூலம் உள உடற்பலம் கொண்ட உறுதிமிக்க தேகாரோக்கியம் கொண்ட இளைஞர் யுவதிகளை உருவாக்குகின்றது. அவர்களிடையில் அந்நியோன்னிய பரஸ்பர உறவுகளை கல்வி சுற்றுலாக்கள் செயற்பாடுகள் உருவாக்கின்றன. அறிவியற் கலைகள் மூலம் பாடசாலையானது கல்வித் தன்மை மிக்க சுழற்சி சமன்பாடு மிக்க இளைஞர்களை உருவாக்கித் தருகின்றது. இதனைத் தான் பாடசாலையானது பெரிய சமூகத்தின் அச்சு என்று கூறுவர் சான்றோர்.

அறியாமை என்ற இருளைப்போக்கி அறிவு என்ற ஞானவிளக்கை ஏற்றி சமூகம் போற்றும் அறிவுடையோரை ஆக்குவது பள்ளிக்கூடங்களே. வாழ்வதற்கு கல்வி வாழ்க்கை மூலம் கல்வி, வாழ்வு முழுவதும் கல்வி என்ற மகாத்மா காந்தி அடிகளின் கூற்று கல்விக்கூடங்களில் முழுமை அடைந்ததைக் காணலாம். இற்றைக்கு 2000ஆண்டு களுக்கு முன் இருந்த சமுதாயக் கொள்கைக்கும், இன்றிருக்கும் சமுதாயக் கொள்கைக் கும் உள்ள ஒப்பீட்டை நோக்கினால் பாடசாலை என்ற நிறுவனம் செய்த, செய்கின்ற செய்யப்போகின்ற அறிவுசார் செயற்பாட்டை உணரமுடியும். இன்றைய சமுதாயம் பாடசாலைகளில் வழங்கும் கல்வியை நன்கு உணர்ந்து தேடி, ஓடி, கற்கின்றதே அதற்குக் காரணம்: பாடசாலையும், சமூகமும் கொண்டுள்ள பிரிக்கமுடியாத தன்மையேயாகும்.

## அன்பு வேண்டும்

உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மை என்று தான் அறிதல் வேண்டும்:
வயிரம் உடைய நெஞ்சு வேண்டும் - இது
வாழும் முறைமையடி பாப்பா.

-மகாகவி பாரதியார்.

# சொல்லு தேசமே

செல்வி: ப. மாலதி
ஆண்டு: 13(கலைப்பிரிவு)
பூவரசங்குளம்.

அழுது அழுது ஆனதென்ன
ஏழை ஜாதி - நாம்
தொழுது நின்று பெற்றதென்ன
சொல்லு தேசமே

ஏழை என்றும் கூலி என்றும்
பட்டினியில் சாகிறோம் - நாம்
ஏர் பிடித்து மண் பிரித்து
என்ன தேடுவோம்

காலன் வந்து கதவு தட்டும்
காலம் மட்டிலும் - நாம்
கால் வயிறு உண்டு வாழ்ந்து
என்ன தேடுவோம்

கந்தல் துணி கட்டிடவும்
காசும் இல்லையே - நாம்
கிழிந்ததைத் தான் தைத்திடவும்
நூலும் இல்லையே

ஊழ் வினையைச் சொல்லிச் சொல்லி
ஏய்க்கப் பார்க்கிறார் - எம்
உயிர் துடிக்கும் துடிப்பையெல்லாம்
மறக்கச் சொல்கிறார்

அல்லும் பகலும் உழைத்து உழைத்து
வருந்த வைக்குதே - நாம்
அண்டி அண்டிப் பிழைத்ததுதான்
கண்ட மிச்சமே

சாலையோரமும் வீதியோரமும்
சரிந்து சாகிறோம் - நாம்
சரித்திரத்தை எந்த நாளில்
மாற்றப் போகிறோம்

# கங்குவேலியின் வளம்

செல்வன். ஞா சுதர்சன்.
ஆண்டு - 8

தி/அகத்தியா வித்தியாலயம்,
கங்குவேலி.

நாடு நாடாயிருப்பதற்கு இன்றியமையாதது ஆற்றுவளம். ஆற்றுவளமானது ஊரையும் ஊர் மக்களையும் செழிப்படைய வைக்கின்றது. இப்படிப்பட்ட ஆறுகளில் மேன்மை பொருந்தியதும், பிணிகளைத் தீர்க்க வல்லதுமான மாவலிகங்கை வேலியாக அமைய நீர் வளத்தைக் கொண்டு விளங்குவது எமது ஊர்.

அன்றொரு காலத்தில் அகத்தியர் வந்து ஆதி மூலரின் சிவலிங்கத்தினை அமைத்து பூசித்து வந்ததும் எமது பிரதேசமே. அது மட்டுமல்லாமல் வேல்வந்து தங்கியதால் " தங்குவேல்" என வந்தது. தற்போது கங்குவேலியெனத் திரிபடைந்ததாகவும், கங்கை சூழ்ந்து வந்து வேலியாய் அமைந்ததனால் " கங்கைவேலி " த ோது கங்குவேலி எனத் திரிந்து வந்துள்ளது. என்பதும், இன்னுமொரு காரணமாகவும் விளங்குகின்றது. பல காரண தைக் கொண்டு கதைகள் வழங்கிய போது திருக்கரைசப் புராணம் சிறப்பாண கதையினை எமக்கூட்டுகின்றது.

" சிங்கபூதரன் " என்னும் அரசன் " சலகாமி " என்னும் நீரிற்செல்லும் குதிரையில் ஏறி இலங்கையை அடைந்தான். அந்த நேரம் இலங்கைக் கரையில் காவல் காத்து நின்ற பூதகணங்கள் அரசனின் அடி வணங்கி அரசனுக்குரிய அரசி திருமங்கலாவில் இருக்கின்றாள் எனக் கூறக் கேட்ட சிங்கபூதரன் பிணிகளையும், கிரகதோசங்களையும் போக்கும் மாவலியில் நீராடி திருமங்கலா அரசனிடம் சென்று அரசனின் விருப்பப்படி "திருமங்கை" என்னும் அரசகுமாரத்தியை இல்லத்தரசியாக்கி எமது பிரதேசம் முழுவதையும் நல்லாட்சி செய்ததாகவும், அவர் வருகைக்கு முன்னரும் வளம் பெற்ற பிரதேசமாக இது விளங்கிய தென்பதை கீழ் வரும் பாடலின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

**"காடெலாம் களிநல்யானை கரையெலாம்
பவளக்குப்பை
நாடெலாம் மிரெத்தினராசி நகரெலாம் நல்
நல்லோர் சங்கம்
வீடெலாம் செம் பொற்கூரை வெளியெலாம்
செந்நெற்குன்றம்
காடெலாம் மஞ்ஞையீட்டம் கழையெலாம்
கழுநீர்ப்போது"**

இப்படியாக தொன்மைக் காலத்திலும் எமது பிரதேசம் சிறப்புற்று விளங்கிய தனையும் கல்வெட்டு, திருக்கரைசைப் புராணம் போன்றன மூலம் அறியக் கூடியதாய் உள்ளது. கங்குவேலிச் சிவன், ஆடி அமாவாசைத் தினத்தன்று மாவலிக்குச் சென்று மங்கையுடன் நீராடி அகத்தியரைக் கண்டு திரும்புவதை இன்றும் நாம் கண்டும் மகிழ்கின்றோம்.

ஆதி சிவன் முதல்வராகவும் அகத்திய மாமுனி ஒருபுறமும் பத்தினியம்பாள் ஒருபுறமும் திருமங்கலா மறுபுறமும் சூழ்ந்திருந்து எமது பிரதேசம் வளமுடன் திகழ அருள்பாலிக்கின்றனர். எம் மக்கள் இறையடியினைத் தொழுது உழவுத் தொழிலினை மேம்படவும் சேனைப் பயிரினை அவ் அக்காலத்திலும் செய்து ஆதியில் மன்னர் வாழ்ந்த இடமென்பதன் பெருமைதனை விட்டுக் கொடுக்காமல் வலுப்படுத்துகின்றனர்.

உழவுத்தொழிலுக்கேற்ற மருதநிலம், அதற்கேற்ற " ஆ" நிரைகள் மருதத்துடன் முல்லையும், பின்னிப் பிணைந்து அதற்கு வளமூட்ட மாவலி - இவையாவும் எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்.

அயற் கிராம மக்கள் கோடை காலத்தில் மந்தைகளை எம் மண்ணில் வளர்த்தும், சிலர் அதனை எம்மவரிடம் ஒப்படைத்தும் வருகின்றனர். உறையுளை அமைப்பதற்கேற்ற காட்டு மரங்களையும் விறகுக்காக பட்ட மரங்களையும் எம்மிடத்தில் இருந்து பெற்றுச் செல்கின்றனர். நீர் வன வளம் உள்ளதால் இறைச்சி, மீன், தேன் போன்றவைகளையும் பெறக்கூடிய வாய்ப்பும் எம் மக்களுக்கு மிக அதிகம். இத்தனை வளம் கொண்ட எம் கிராமத்தில் பல இன்னல்கள் வந்த போதும் நாம் நிலைகொண்டிருப்பது அதன் வளத்தினால் என்பதனை எண்ணும் போது உள்ளம் பூரிக்கின்றது.

# அவலம் தீருமோ.....?????

ஆக்கம் : இ. சாந்தினி
ஆண்டு 13 கலைப்பிரிவு

யா/ஞானசாரியார் கல்லூரி
கரவெட்டி

பொன்னேட்டில் பொறித்து வைத்தால்
போதுமோ?
மண் விட்டு வந்த அவலம் தீருமோ?

கருடனைக் கண்ட அரவத்தின் அச்சம்
புயலாய் தொடரும் நோயின் சொச்சம்

வீடு வாசல் சொந்தம் இழந்தோம்
வீதியோரம் கைகளை இழந்தோம்

வற்றிய வயிறு பாசம் மறந்தது
பற்றிய கைகள் பலம் இழந்தது

முக்கால் குழியில் முட் ந்து பேர்களாம்
அக்கம் பக்கம் அசைந்தால் தொல்லை

அகதிகள் என்ற முத்திரை குத்தும்
பட்டறையின் குத்திகள் நாங்களாம்

கயவர்களின் காயக்கட்டு வலிதீர்க்க
நாங்கள் தானே கைமருந்து

தேவையின்றி தேகம் மெலிந்தது
பாவைகளாக பார்வையிட்டனர்

வியர்வை சிந்திய எங்கள் தேகம்
பிறர் தயவை வேண்டி நின்றது.

முகாமுக்குள்ளே பூச்சிகளாய் முடங்கு
கிறோம்
மேனி எங்கும் முத்தான பழம் வாங்கு
கிறோம்.

அகதியென்ற பட்டத்தால் அட்டை வருகுது
அது தாங்கி வரும் புள்ளியில் மட்டம்
தெரியுது

புட்டிப்பால் தேடி ஒரு பிள்ளை அழுகுது
போட்டு விட்ட புள்ளியில் மட்டம் தெரியுது

போசாக்கு எங்களுக்கு வெகுதூரம்
பாசாங்கு செய்பவர்கள் எம்மருகில்

வெள்ளை அரிசி தின்று தினம்
வெளிறிப் போனோம்
வெந்த புண் மாறிடவேறு வழியில்லை

ஆட்டு மந்தை கூட சுதந்திரம் காணும்
அகதியில் எங்களுக்கு ஏது சுதந்திரம்

சகதியில் கிடந்து நாம் மூழ்கிறோம்
சாந்தி கிடைத்திட தினம்
ஏங்குகிறோம்

இரவில் கல்வி கற்க விளக்கிற்கு
எண்ணெய் தடை
இருட்டிலே ஒளி தெரிந்தால் வீட்டுக்கு
பெரு நெருப்பு

காலையில் துயிலெழுந்தால்
தேனீருக்கு சீனி இல்லை

கற்றோரும் தனவானும் கடல்
கடந்து செல்கின்றார்.

சென்றநாள் பெருமை பேசி
செயல் எதுவும் ஆற்றாது

பன்னாட்கள் பாரினிலே
பாவியராய் இருந்து விட்டோம்

வாழ்நாளில் மறக்க முடியாது
காலம் தான் மாறினாலும் - நம்
கோலம்தான் மாறினாலும்
இவைகளின் நினைவுகள் எம்மை
விட்டு மாறாது.

# தவிக்கின்ற உள்ளங்கள்

**செல்வி . ஜஸ்மின் அ. முகைதீன்**
ஆண்டு 13 (கலைப் பிரிவு)

தி/அல் ஹிதாய மகா வித்தியாலயம்
மூதூர், திருக்கோணமலை.

**"பாலும் சோறும் உண்ணத் தந்து படிக்கச் சொல்லும் அம்மா"எங்கே சொல்லுங்கள்-- பிள்ளைகளே என்றவாறு. அன்று தாயைப் பற்றிய பாடலை மெல்ல அடியெடுத்துக் கொடுக்கின்றேன். பிள்ளைகளும் தம்மை மறந்து பாடலை இசைக்கின்றனர்.**

அன்னையின் சிறப்பைக் கூறும் அப்பாடலைப் பாடும் நானும் பிள்ளைகளுடன் சிறு குழந்தையானேன். பாடல் முடிந்ததும் பிள்ளைகளிடம் "யார் யாருக்கு அம்மா இருக்கிறாங்க? எங்கே சொல்லுங்கள்" என்றவாறே ஒவ்வொரு மாணவ மாணவியரை யும் விசாரிக்கின்றேன். ரமாவின் அருகில் வந்த நான் திடுக்கிட்டு நின்றேன்.

அவள் கண்களில் கண்ணீர் - முகம் வெளிறி சோகத்தின் நிழல் தாண்டவ மாடியது "ரமா -" என்றேன் இதமாக "ஹும் - என்றாள் விசும்பலிடையே அச்சிறுமி. ஏன் அழுகிறாய் ரமா- என்றேன் ஆதரவாக அதற்கு பதிலளிக்காத அவள் விம்மி அழலானாள். அழும் அவளை அணைத்தவாறு ரமா - எதற்காக இப்படியழுகிறாய் உனக்கு அம்மா இருக்கிறாங்களா? அவங்க பெயர் என்ன? என்றேன். அவள் "டீச்சர்.....எனக்கு அம்மா இல்லை" என்றவாறு துன்பத்துடன் என் முகம் நோக்கு கிறாள். துன்பத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் அந்தப் பிஞ்சு முகத்தை உயர்த்திக் கண்களிலே வடியும் கண்ணீரைத் துடைக்கிறேன். அவளது அந்தக் கண்களிலே என்னையே நான் காண்கின்றேன்

ஓ..அந்தப் பள்ளிப் பருவம்...துள்ளித் திரியும் அந்த இள வயதிலே எந்தச் செல்வத்தை இழக்கக் கூடாதோ அதையிழந்தேன். அன்புருவான அன்னையை இழந்து தவிக்கும் என் உள்ளத்தின் முன் இன்றும் அவளது முகம் நிழலாடுகிறது. கடந்து விட்ட அந்தக் காட்சிகள்......

"அம்மா...அம்மா" போகாதே அம்மா நீ ஆஸ்பத்திரிக்கு போனா......நான் யாரிடம் இருப்பேன் எனச் சிணுங்கும் என்னை அரவணைத்தபடி "திலகா...நீ நல்ல பிள்ளை இல்ல...நான் ஆஸ்பத்திரிக்குப் போய் உனக்கு ஒரு சின்னத் தம்பிப் பாப்பா கொண்டு வருவேன். என்ன உனக்கு தம்பி வேணாமா?" என்கிறாள். "அம்மா ஹும் வேணும் அம்மா....ஆனா உன்னை விட்டுதனியாக எப்படித் தூங்குவேன்" "என்று கூறும் என்னை உச்சி மோந்து"..சரி..சரி நீ என் செல்லப் பெண்ணல்லவா...அப்பாவிடம் நான் வரும் வரை தூங்கிக்கொள்ளம்மா. நான் இன்னும் இரண்டு நாட்களில் வந்து விடமாட்டேனா? உன்னையும் அக்காவையும் பார்க்க......கண்ணல்ல இப்போ தூங்கம்மா என்று தாலாட்டி நித்திரையாக்கினாள் அம்மா.

அடுத்த சில தினங்களில் அம்மாவிற்கு ஒரே வருத்தம். அப்பா பரபரப்பாக இருந்தார். அடுத்த வீட்டுப் பாட்டியும், லதாம்மாவும் வந்திருந்தனர். அம்மா ஆஸ்பத் திரிக்குப் போக ஆயத்தமானாள். என்னையும், அக்காவையும் அணைத்தபடி அழுதாள். புவனா பத்திரமாகத் திலகாவைப் பார்த்துக் கொள்ளென அக்காவிடம் கூறினாள். திலகா என் கண்ணல்ல அப்பாவிடம் தூங்கம்மா நான் தம்பிப் பாப்பாவுடன் இரண்டு நாட்களில் ஓடி வந்து விடுவேன் என்று என் கன்னத்தில் முத்தமிட்டாள். பாட்டியும், லதாம்மாவும் அம்மாவுக்கு ஏதேதோ கூறினர். ஹூம் - அம்மா போயிரண்டு நாளாகியும் விட்டது. அம்மாவுக்கு இன்னும் தம்பிப் பாப்பா கிடைக்கவில்லையாம்.

அடுத்த வீட்டு லதா, பிரேமா, வசந்தி எல்லோரும் கண்ணாமூச்சி விளையாடு கிறார்கள். ஜன்னலருகேயுள்ள அம்மா படுக்கும் கட்டிலில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அம்மா இருந்தால் நானும் இந்நேரம் ஓடி இருப்பேன். இப்போ, எனக்கு விளையாடுவதற்கு மனமே இல்லை. என்ன செய்வது-- அம்மா வந்தால் தான் எனக்கு நிம்மதி.

மூன்றாம் நாள்- காலை அப்பா ஓடி வந்து என்னைக் கட்டிக் கொண்டு அழு தார். அப்பா ஏன் அழுதார்...ஒன்றுமே விளங்கவில்லை. "அம்மா வரவில்லையா? அப்பா" என்கின்றேன். அழுதபடி தலையையாட்டுகிறார்... அப்பா. சிறிது நேரத்தின் பின் அம்மா வந்தாள். இல்லை அம்மாவைத் தூக்கி வந்தார்கள். அம்மா ஒன்றுமே பேசா மல் நித்திரையாகக் கிடந்தாள். தம்பிப் பாப்பாவையும் காணவில்லை "அம்மா.... அம்மா ஏன் அம்மா பேசாமல் இருக்கிறாய். என்னோடு பேசமாட்டாயா...தம்பிப் பாப்பா எங்கே அம்மா?" என்று கேட்ட எனக்கு அம்மா எதுவுமே கூறவில்லை. அப்பா, அக்கா எவருமே பதில் கூறாது இருக்கிறார்கள். "அம்மா என்னைப் பாரம்மா...என்னோடு பேசம்மா"....என்று அவள் மீது புரண்டு கொண்டு அழுகிறேன். அழும் என்னைத் தன் தோளில் போட்டுக் கொள்கிறார். அப்பா. "அப்பா அம்மாவுக்கு என்ன? ஏன் தூங்குறா." என்றேன்..அப்பா அழுதார் அப்பாவின் அழுகையைக் கண்ட எனக்கும் அழுகை பீரிடு கிறது. அப்பாவிடமிருந்து இறங்கி அக்காவிடம் ஓடுகிறேன்.

"அக்கா...அம்மா ஏன் பேசமாட்டேன். என்கிறா...பேசச் சொல் அக்கா..." என அவளை உலுக்குகிறேன். என்னைத் தூக்கிக் கொண்ட அக்கா.." திலகா பேசாமல் இரம்மா அம்மா இனிப் பேசமாட்டாள். அம்மாவினால் பேசமுடியாது; என்ற அவளிடம் அம்மாவை எழும்பச் சொல் என்று சிணுங்குகின்றேன். "அம்மா என்றுமே இனி எழும்ப மாட்டா..எங்களம்மா...சாமிக்கிட்டப் போயிட்டா...இனி வரவே மாட்டாள்." என்ற அக்கா என்னைக் கட்டியணைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுகிறாள்..."அவளோடு சேர்ந்து நானும் அழுகிறேன்.

அன்று ஏனோ தெரியாது எங்கள் வீட்டிற்கு நிறையப் பேர் வந்திருந்தார்கள். மறுநாள் தூங்கிக் கொண்டிருந்த என் அம்மாவை எல்லோரும் எங்கோ எடுத்துச் சென்றனர். அதன் பின் என்னைப் பார்க்க அம்மா வரவேயில்லை... நாட்கள் வாரங்க ளாகி... மாதங்களாகி...வருடங்களாகின. அப்போதும் அம்மா வரவில்லை.

நானும் வளர்ந்து பெரியவளானேன்....அறிவு வளர வளர அன்னையின் மறைவை உணர்ந்து கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை என் தாயினிழப்பு எனக்குப் பெரும் துன்பத்தையே தருகிறது. அவளது அன்பிற்கீடாக எதனையும் காணாது ஏங்குகின்றது என் உள்ளம்.

**"டீச்சர்...ஏன் நீங்க அழுறீங்க..".என்ற குரல்கேட்டு சுய உணர்வினை அடைகிறேன். ஓ...இவ்வளவு நேரமும் என்னையே மறந்து கடந்த கால நினைவிலா ஆழ்ந்து விட்டேன்?**

"இல்லையே ரமா...நான் அழவில்லையே" என்கிறேன். "பொய் உங்கள் கண்களிலிருந்து கண்ணீர் வருகிறதே" என்ற அந்தச் சிறுமி தன் பிஞ்சுக் கரத்தினால் என் கண்ணீரைத் துடைக்கின்றாள்.

என்னாலேயே அன்னையினிழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாத போது இந்தப் பிஞ்சு உள்ளம் எப்படித் தாங்கும்! "ரமா...இனி அம்மா இல்லையே என்று அழக்கூடாது என்ன? உனக்கு மட்டுமல்ல ரமா...எனக்கும் அம்மா இல்லை. இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் என்றாவதொரு நாள் இறந்து விடுவார்கள். நாமும் ஒரு நாள் இறக்கத்தான் போகிறோம்" என்று ஆறுதல் மொழி கூறித் தாயன்புக்காகத் தவிக்கும் அந்தச் சிறுமியை அணைத்து அவளது கண்களில் வடியும் கண்ணீரைத் துடைக்கின்றேன்.

# வாரியார் பொன்மொழிகள்


- அறிவுரை விளக்கெண்ணெய் போன்றது. பிறருக்குத் தருவது எளிது. நாமே ஏற்றுக் கொள்வது கடினமானது.

- மனத்தில் உள்ள அழகுதான் புறத்திலுள்ள பொருள்களில் அழகைக் காண உதவுகிறது.

- மனிதரில் மூன்று விதமானவர் உண்டு; மனிதரில் விலங்கு, மனிதரில் மனிதன், மனிதரில் தேவன்.

ஆசை உள்ளம் படைத்தவன் விலங்கு. அன்பு உள்ளம் படைத்தவன் மனிதன். அருள் உள்ளம் படைத்தவன் தேவன்.

தனக்கென்று வாழ்பவன் விலங்கு. பாதி தனக்காகவும் பாதி பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன். பிறருக்காகவே வாழ்கிறவன் தேவன்.




**செல்வன். அ. டக்ளஸ் ஜெயசேகரன்**
ஆண்டு - 13 உயிரியல்

வ/வவுனியா தமிழ் மத்திய
கல்லூரி.

எங்கள் இளமைக்கால
கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும்
இலவசக் கர்ப்பப்பைகள் தான்
இந்தக் கல்லூரிகள்..................

இந்த இருவாட்டிகளில் தான்
எங்கள் இலட்சிய விதைகள்
ஊன்றப்படுகின்றன..................

வாழ்க்கைக்கு வெளியே
சஹாராவின் மேல்
சிறகடிக்கின்ற பறவைகளாக
இங்குதான் நாம் வாழ்கிறோம்................

பலதேசத்துப் பறவைகளுக்கும்
சிலமணிநேரச் சந்திப்பிலேயே
புரியாதபல உறவுகள் உருவாவதும்
இங்கு தான்..................

தவறுகளுக்கு தரப்படுகின்ற
தண்டனைகள் ஒவ்வொன்றும்
இங்கு மட்டுமே
பதக்கங்களை விட பெறுமதியானவை.........

வேர்களின் விலாசங்களை
தேடும் அவசரத்தில்
சருகுகளோடு சண்டை பிடிக்கின்ற
இளமைப் பருவத்திலே
வெளிவராத தளிர்களுக்காக
வருத்தப்படுவதும் இங்குதான்.....

பெற்றோரைப் பிரிந்த முதல்நாளில்
கண்களில் வடிந்த நீர் - பின்னர்
கல்லூரியைப் பிரியும் ஒவ்வொருமுறையும்,
உதிரமாக இதயத்தில் வடியும்............

இங்கே......
மைதானப் புற்களும்
மண்டபக் கதிரைகளும்
எப்போதும் எங்கள் பரமவிசிறிகள்.............

இரவுகளில்.........
எங்களைக் காணாத துக்கத்தில்
காலையில் புற்கள் கண்ணீர் வடிக்கும்
புதன் கிழமைகளில்
எம்மைப் பார்க்கா விட்டால்
கதிரைகள் கதவடைத்து ஹர்த்தால் நடத்தும்

விடுமுறை எனச் சொல்லிக் கொண்டு
எங்கள் சந்தோசங்களுக்கு
சமாதி கட்டி விடுவதால்,
பரீட்சைகள் மட்டுமே
எப்போதும் எம் எதிரிகள்....
பதின்மூன்று வருடகாலப்
பஞ்சணைப் படுக்கையும்
இந்த ஒன்றுதான் - பறித்துப்
பாலைவனமாக்கி விடுகிறது.......

ஆனாலும்.........
இனியவர்களே,
வெறும் கோடை நிழலல்ல,
போர்வையில்லாத பிச்சைக்காரனின்
மார்கழிக்கூதல் தான் வாழ்க்கை,
இதில்-
கம்பளிப் போர்வையோடு
கொஞ்சநேரக் குளிர்காய்தல்தான்
கல்லூரி வாழ்வு.

வாலிபத்தை விற்று - இவற்றோடு
தூக்கத்தையும் வாங்கலாம்
இவற்றை அடகு வைத்து
வாழ்க்கையையும் பெற்றுக்கொள்ளலாம்......

ஆனால்
கல்லூரியோ
வரும்போது மட்டுமல்ல
போகும் போதும்
மாலை போட்டு மங்களமாகத்தான்
வழியனுப்பி வைக்கும்.

# நல்லுபதேசம்

***திரு. எஸ். புவனேந்திரன்***
மேலதிக அரசாங்கதிபர்

ஏற்கனவே எம்முன்னோர்களால்கூறப் பட்ட பல உபதேசங்கள் எம்மிடம் இருக்கின்றன. திருக்குறளில் பல உபதேசங்கள் கூறப் பட்டுள்ளன. ஆனால் நாம் அதன்படி நடக்கின்றோமா? எனச்சிந்தித்தால் இல்லை என்றே கூறவேண்டும். எம்மால் அதைப்பின்பற்ற முடியவில்லை. உதாரணமாக, "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என வள்ளுர் கூறியுள்ளார். ஆனால் நம்மில் எத்தனை பேர் புலாலை உண்ணாது இருக்கின்றோம்? இந்து எனச் சொல்லப்படுகின்றவன் புலாலை உண்ணாது இருத்தல் வேண்டும். ஆனால் இந்துக்களில் பலர் புலாலை உண்ணுகின்றனர். எனவே உபதேசங்கள் எப்பொழுதும் சரியானவையா கவே இருக்கின்றன. ஆனால் எம்மால் அதைப் பின்பற்ற முடியவில்லை. மனித சுபாவமே இதற்கானகாரணம் எனக் கூறலாம்.

மனதில் அடிமனம், மனம், உயர் மனம் என மூன்று வகை உண்டு. அடிமனதில் பதிந்து இருப்பவை தான் எம்மை வழி நடாத் துகின்றன. அடிமனத்தைப் பொறுத்துத் தான் ஐம்பொறிகள் இயங்குகின்றன.

ஒரு மாணவன் சரியைச் செய்வதற் கும், பிழையைச் செய்வதற்கும் அடிமனமே காரணமாகும். அடிமனதில் இருப்பதை உண ரலாமா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எங்களை நாங்கள் இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.

நம்மிடம் கோபம், பொறாமை உள் ளவனா? என இனங்கான வேண்டும். ஒருவன் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுதல் கூடாது என்பது எனக்குத் தெரியும் ஆனால் பொறாமைப்படுகின்றேன். இது எனது அடிமனதின் தன்மையே ஆகும். ஒருவன் தன்னுடைய குணாதிசயங்களை அறிந்து கொண்டு நல்ல தன்மைகளை வளர்த்தல் வேண்டும் .என்னில் இருக்கும் பொறாமை யை இனங்கண்டு, அதை நீக்குவதற்கு வழி காணல் வேண்டும் . இனங்கண்டுநெறிப் படுத்தல் வேண்டும். செய்ய வேண்டியதை விரும்ப வேண்டும். செய்ய வேண்டியதை விரும்புவதே வாழ்க்கை ஆகும். விரும்புவதை எல்லாம் செய்வது வாழ்க்கை அல்ல.

**கோபத்தைத் தவிர்ப்பதற்குச்சில வழிகள் கூறப்படுகின்றன.**

1. ***கோபம் ஏற்படும் ஒருவர் உடன் நீர் அருந்தல் வேண்டும்.***
2. ***கட்டிலில் உறக்கத்திற்குச் சென்று விடலாம்.***
3. ***சூழலை விட்டு நீங்கி விடலாம்***
4. ***உண்மையோடு நாம் நம்பும் இறைவனின் பெயரைச் சொல்லலாம்.***
5. ***நாம் நமது நிலையை கண்ணாடியில் ஒரு தடவை பார்க்கலாம்.***

இப்படியான செயல்களைச் செய்யும் போது கோபம் எம்மில் இருந்து அகன்று விடுகின்றது. இதுபோல் அடிமனதை மெல்ல மெல்ல மாற்றினாலே நாம் மாறலாம். அடி மனதை மாற்றுவதற்கு உள்ள சிறந்த முறை பிரார்த்தனை ஆகும். பிரார்த்தனையைத் தினமும் நாம் செய்து கொண்டு வந்தால் அடிமனம் மெல்ல மெல்ல மாறும்.

உபதேசங்களைச் சொல்லிக் கொடுத்தால் போதாது. அதைப் பின்பற்றும் வழிகளையும் சொல்லிக் கொடுத்தல் வேண் டும். நாமும் மற்றவர்கள் பின்பற்றும் வகையில் நடந்து காட்டல் வேண்டும்.

# தலைமைத்துவம்

கு. டக்லஸ் மிஸ்ரன் லோகு,
13ம் ஆண்டு கலைப்பிரிவு,

புனிதசவேரியார் ஆ. ம. ம. வித்தி
மன்னார்.

அண்டத்தை ஆளும் அளவில்லா இறைவன்
அனைத்திற்கும் அவனே அரும்பெரும் தலைவன்.
இயற்கையின் வாழ்வில் இயங்கிடும் மனித
இதயத்தின் தலைவனே! போற்றி!

நேற்றைய சிறுவனாய் நீ!
இன்றைய இளைஞனாய் நீ!
நாளைய தலைவனாய் நீ!
நாட்டை நடத்தி நல்வழி காட்டலே தலைமைத்துவம்.

அன்பிற்கு அடிமை தலைமைத்துவம்.
நற்பண்பிற்கும் அடிமை தலைமைத்துவம்.
பொறுமையின் இருப்பு தலைமைத்துவம்.
நிதானத்தின் இரும்பும் தலைமைத்துவம்

தூரநோக்கு தலைவனுக்கழகு.
துணிவுடன் பணிவும் தலைவனுக்கழகு
வேகத்தில் விவேகம் தலைவனுக்கழகு
சோகத்தில் மலர்வும் தலைவனுக்கழகு .

கடமையில் தலைமை கலங்கரை விளக்கு
கருத்திலே தலைமை கூரிய கத்தி
உறுதியில் தலைமை உயர் பெரு இமயம்
உள்ளத்தில் தலைமை வெண்பனிச்சிகரம்

கொள்கையில் குறியாய் குணத்தினில் உயர்வாய்
முயற்சியில் முதலாய் செயலினில் ஒழுங்காய்
வாழ்வினில் விளக்காய் நீதியின் உருவாய்
நிகழ்வது தானே தலைமைத்துவம்

தோல்வியைக் கண்டு துவண்டிட வேண்டாம்
வெற்றியைக் கண்டு இறுமாந்திட வேண்டாம்
தலைகளைக் கடந்து தலையை நிமிர்த்தி
மலைதனில் ஏறிட வைப்பதே தலைமைத்துவம்.

# போதையூட்டும் போதை

மு. ஜெயகௌரி
ஆண்டு 8B

வ/சி. சி. தமிழ் வித்தியாலயம்
வவுனியா

போதை, போதை, போதை இப் போதையூட்டும் போதைப் பொருட்கள் இன்று மனிதனக்கு வாதையூட்டும் வஸ்துகளாக விளங்குகின்றன. அழிவுக்கு இட்டுச் செல்லும் இழிவுப் பாதைகளாக அவை துலங்குகின்றன. உயர்ந்த மேதைகளையும் இழிந்த பேதைக ளாக்கி வேடிக்கை காட்டுகின்றன. அரிதான மானிடப் பிறவியை சிறிதான விலங்குப் பிற வியாக மாற்றுகின்ற இப் போதைவஸ்து களை ஓர் அரக்கன் என்று கூறுதல் பொருத் தமுடையதே. அந்த அரக்கனுக்குத்தான் எத் தனை வடிவங்கள். எத்தனை பெயர்கள், எத்தனை வகைகள். அத்தனையும் போதை அரக்கனின் கோரப் ப[illegible]ள். உயிருக்கே உலை வைக்கும் பாறாங்கற்கள்.

மனித வரலாற்றின் ஆரம்பத்தில் மது என்ற பெயருடன் அடியெடுத்து வைத் தான். இவ் அரக்கன். கள்ளு, சாராயம் என் னும் கீழைத்தேய வடிவங்களாக மட்டுமின்றி விஸ்கி, விறண்டி, ஜின் போன்ற மேலைத் தேய வடிவங்களையும் எடுத்து வந்தான். போதாக் குறைக்குப் போதையை நிறைக்க கசிப்பு என்னும் பெயருடனும் பசப்புக் காட்டி வாழ்க்கையை கசப்பு ஆக்குகிறான்.

மதுவினால் மதியை மயக்கிய போதை அரக்கன் புகையினால் உடலை பொசுக்கும் புது வடிவம் எடுத்தான். புகை யிலை மூலம் புதுத்தென்பு அடைந்து புதுப் பொலிவுடன் புத்துணர்ச்சி அடைய சிகரெட் என்றும் பீடி, சுருட்டு என்றும் அறி முகப் படுத்தி வைத்தான். மனிதர் தம்மை சிறுமதி அடைய வைத்தான். கஞ்சா என் றும் அபின் என்றும் வஞ்சக வடிவம் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய் பிஞ்சு நெஞ்சங் களைக் கூட அடிமைப் படுத்திக் கொண்டான்.

இத்தனையும் போதவில்லை என்று போதை அரக்கன் நவீன விஞ்ஞான வளர்ச் சிப் போக்குடன் கெரோயின், கொக்கையின் போன்ற பல நவீன உருவங்களையும் இன்று எடுத்துள்ளான்.

இத்தனை போதைப் பொருட்களும் விளைவிக்கின்ற மோசங்கள் தான் எத்தனை. எத்தனை. தனிப்பட்ட மனிதனிலும் புனிதமான குடும்ப வாழ்விலும் நாட்டின் வளர்ச்சியிலும் நாகரிகத்தின் முதிர்ச்சியிலும் ஏற்படுத்தி யுள்ள நாசங்கள் தான் எத்தனை. மக்களைப் பேய்கள் போல, வெறிப்பிடித்த நாய்கள் போல போதைப் பொருட்கள் போட வைக் கும் வேசங்கள் தான் எத்தனை. இதனால் அவற்றுக்கு எதிராக எழுந்துள்ள கோஷங் கள் தான் எத்தனையோ.

ஆறறிவு படைத்த மனிதனை ஐந்த றிவு படைத்த விலங்குகள் போல் ஆக்குவது போதைப் பொருட்கள். ஆரம்பத்தில் சிறி தளவு உட்கொண்டவனை, காலப்போக்கில் முழுமையாக ஆட்கொள்வதும் போதைப் பொருட்கள். இவற்றுக்கு அடிமையானவன் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக் கப்படுகிறான். நரம்பு மண்டலம் தாக்கப்பட்டு வாதையுறுகின்றான். உடல் வலுவிழந்து போகிறது. மூளையும் அதன் வேலையும் செயலிழந்து போகின்றது உடல் நடுக்கத் தோடும், உயர்வு மயக்கத்தோடும் அவனது வாழ்நாள் வாடிப் போகின்றது.

தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமா இந்த நிலை? இல்லை, இல்லை. அவனது குடும்பத்ததிற்கு ஏற்படும் அவலங்களையும், கேவலங்களையும் எண்ணிப் பாருங்கள். மனைவி, மக்கள் பட்டினியால் வாடிடுவர்.

உறக்கம் இன்றி தவித்திடுவர். குடும்பமானம் காற்றோடு பறக்க வேண்டாத அவமானம் வீட்டோடு வந்து சேரும்.

போதைப் பொருட்கள் அதிக விலை யுயர்ந்தவை, இதனால் அதனை வாங்கு வதற்கு பெருமளவு பணம் தேவை, இந்த பணத்தைப் பெற்றுக் கொள்ள மனிதன் நல்ல குணங்களையே விற்று விடுகின்றான். களவு, கொள்ளை முதலிய சமூக விரோதச் செயல் களில் ஈடுபடுகின்றான். திருடனாக மாறி வாழ் வில் வழி தெரியாக் குருடன் போல வாழ் கின்றான்.

வீட்டிற்கு மட்டுமல்ல நாட்டிற்கும் எத்தனை தொல்லைகள் இப் போதைபொருட் களால். போதைவஸ்துப் பாவனையால் பாதை மாறுகின்ற இளைஞர்களைச் சீராக்கி,நேராக்கி மறுவாழ்வு அளிக்க வேண்டிய பெருங்கடமை தேசத்திற்கு பெருஞ்சுமையாகிறது. பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கு சீர்தூக்கும் சீரிய பணி செய்ய வேண்டியிருக்கிறது. தேசத்தின் நாளைய சிற்பிகள் நாசமடைந்து வெறும் சப்பிகளாய் போவதால் தேசத்தின் அபிவி ருத்தி நாசத்தில் முடிவடைகிறது.

இத்தனை மட்டுமா? இன்னும் எத் தனையோ சொல்லிக் கொண்டே போகலாம் அத்தனை கொடுமைகள் சிறுமைகள் போதைப்பொருள் பாவனையால் வலிமை பெற்று வந்துள்ளன; வருகின்றன. ஆகவே போதைக்கு அடிமையாகும் பேதை மனிதா நீ சற்று சிந்தித்துப்பார். போதைக்கு அடிமை யாகும் இளைஞர்களே! பாதை மாறிய உங் கள் பயணம் சரியா என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். பள்ளித் தோழர்களே! துள்ளித் திரியும் பருவத்தில் சொல்லி மாளா இத்துய ரம் உங்களுக்கு தேவைதானா? வேண்டாம். போதை பொருட்களின் பாவனையை எதிர்த்து நாம் போராட வேண்டும். அதனால் வரும் வேதனைகளை நாம் தடுப்போம். போதை யற்ற உலகில் சாதனைகள் பல படைக்க நாம் முயல்வோம்.

&

## பாடும் தமிழே கேளு

**செல்வி. மு. அ. வஜிஹா**
ஆண்டு - 11

மட்/அல் – அக்ஷா ம. வித்தியாலயம்
காங்கேயனோடை
மட்டக்களப்பு.

பிறந்த மண்ணை இழந்து - நான்
பிறரின் இடத்தைச் சேர்ந்து
பிணமாய் நின்று ஏங்கி - தினம்
பாடும் தமிழே கேளு.

உடுமானம் எல்லாம் இழந்து - நல்ல
ஊன் உறக்கம் கெட்டு
படுந்துயரோ கோடி - இதைப்
பார்த்து இருப்பவர் கேடி.

ஒன்றாய் இருந்த மண்ணில் - இன்று
ஓரம் கட்டி விட்டார்
நன்றோ பெரியீர் கேளீர் - இந்த
நலிவைத் தீர்க்க வாரீர்.

மொழியால் ஒன்று பட்டோம் - அகதி
முகாமிலும் ஒன்று பட்டோம்
இழிவு நமக்குள் இல்லை - நாம்
ஒன்றாய் வாழ்ந்து சாவோம்.

# எங்கள் நிலை

ஆக்கம் – **செல்வி. ச. மீனலோஜினி.**
ஆண்டு – 12 கலை

தி/ஆலங்கேணி விநாயகர் ம. வி.

பூந்தென்றல் வீசி வர - புதுப்
புனலருவி ஆடி வரும்
சாந்த மொடு நீர்நிலைகள் - தினம்
தாளமொடு அலை எறியும்

மழை தூறப் பயிர் விளையும் - எம்
வயல் செறிந்த நிலமெல்லாம்
களை பற்றிப் போயினவே - வெறும்
களர் நிலமாய் ஆயினவே

உழவு செய்ய ஆளில்லை - வீட்டில்
உறவு சொல்ல தந்தையில்லை
இழவு காணா வீடில்லை - இங்கு
இளைஞர்களையும் காணவில்லை

வேட்டோசை முடியவில்லை - இன்னும்
விடியலை நாம் காணவில்லை
மோடு பார்க்க வீடில்லை - எங்கள்
வாழ்க்கையெல்லாம் குடிசையிலே


கல்வி கற்க மனமிருக்கு - எமக்கு
கற்பிக்க ஆசான் இல்லை
கல்வி யொன்று தானெமக்கு - இனி
கரை காட்டும் ஒளிவிளக்கு

***வாழும் உயிரினை வாங்கிவிடல் – இந்த***
***மண்ணில் எவர்க்கும் எளிதாகும்***
***வீழும் உடலை எழுப்புதற்கோ – ஒரு***
***வேந்தன் நினைக்கினும் ஆகாதையா.***

– கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.



# ஓடி விளையாடு



**ஆக்கம். ஆ. குகவதனி**
ஆண்டு -13, வர்த்தகப் பிரிவு

வ/பூவரசங் குளம் மகாவித்தியாலயம்
வவுனியா.

"ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் பாப்பாப் பாடலில் விளையாட்டின் பெருமையை மிக அழகாகக் கூறுகிறார். மனிதனை மனிதனாக வாழவைப்பதில் விளையாட்டு பெரும்பங்காற்றுகிறது. அவனது சுயநல எண்ணங்கள் மறைந்து ஒற்றுமையின் கொடிபறக்க விளையாட்டுக்கள் உறுதுணை புரிகின்றன. நமது கல்வித் திட்டத்திலே விளையாட்டுக்கள் தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றன. கல்விச் சாலையிலே மாணவர் மனதை பெரிதும் கவர்வது அதுவேயாம். விளையாட்டிலே நாட்டங்கொள்ளாத குழந்தை களிடம் சில குறைகபாடுகள் உண்டு. என்பது உளவியலாளர்கள் கண்டமுடிவு.

*'ஓடி விளையாடு பாப்பா*
*மாலை முழுவதும் விளையாட்டு'*

என்று விளையாட்டின் சிறப்பினைப் பாரதியார் பாடியுள்ளார். இதனாலேயே பாடசாலைகளிலே விளையாட்டு ஒரு பாடமாக்கப்பட்டுள்ளது. இதை இங்கு உடற் கல்வி எனும் பெயர் கொண்டு அழைக்கின்றனர். இப்பாடவேளையில் மற்றெல்லா நேரங்களையும் விட மகிழ்ச்சியும் சுறு சுறுப்பும் வாய்ந்த ஓர் இனிய பொழுதாக காட்சியளிக்கிறது. மனமகிழ்ச்சியோடு தன்னிச்சை கொண்டு வெகு இலகுவாக செயற்படுவது விளையாட்டென்றும் பரிபூரண விருப்பமின்றி செய்யப்படுவது வேலை என்றும் கூறப்படுகிறது. எந்த வேலையும் மனமகிழ்வோடு சிரமமின்றிச் செய்யப்படுமா னால் அது விளையாட்டாகிறது. விளையாட்டுக்கள் பூரண மன ஒத்துழைப் பின்றி சிரமத்துடன் செய்தால் அது வேலையாகிறது.

விளையாட்டுக்குச் சில தனிப் பண்புகள் உண்டு. அதாவது மன மகிழ்ச்சியோடு இலகுவாகச் செய்வது மாத்திரமன்றி அது உடல் உறுப்புக்களுக்கு உறுதி அளிப்ப தாகவும் அமைந்திருத்தல் வேண்டும். இதனை நிறைவேற்றுவதற்காக தன்னம்பிக்கை தலைமைத்துவம், வெற்றி தோல்வியை ஏற்கும் மனபக்குவம், சகிப்புத் தன்மை, சாதனை களை நிலை நாட்டல் போன்ற மனித விழுமியங்களை வளர்த்தல் ஆகும். குழுமுறை யிலோ தனிமுறையிலோ போட்டி உணர்வு நிலவுதல் வேண்டும். இம்முறையில் அமைந்த விளையாட்டுக்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. கிளித்தட்டு, மறித்தல், கெந்தியடித்தல், கிட்டியடித்தல், சடுகுடு என்பன நம்நாட்டில் பெருமையுடன் விளையாடப்படுகின்றன. துடுப்பாட்டம், உதைப்பந்தாட்டம் வலைப்பந்தாட்டம், கரப் பந்தாட்டம் முதலிய பலவகை பந்தாட்டங்கள் எல்லாம் மேலைத்தேய விளையாட் டுக்கள் எனப்பட்டு மக்கள் மனதை பெரிதும் கவர்ந்துள்ளன. இவ் விளையாட்டுக்கள் யாவும் இருவேறு குழுக்கள் ஒன்றையொன்று எதிர்த்து வெல்ல முயலும் போதே பெரிதும் சிறப்படைகிறன. இம்முயற்சி விளையாட்டுப் போட்டி எனப்படும்.

போட்டி விளையாட்டுக்களில் ஒருகுழு தான் எதிர்ப்பதில் காட்டும் வேகமும் திறமையும் ஈட்டும் வெற்றியும் மாத்திரமன்றி எதிர்க்குழு எதிர்ப்பைத் தாங்கிப் போராடும் பண்பும் காணப்படுகின்றன. போட்டியிடும் போதும் ஒவ்வொரு குழுவுக்கும் வெற்றியே குறிக்கோள். அதை அடைவதற்குத் தப்பு வழிகளைப் பின்பற்றுதலும் மாற்றுக் குழுவினை வெறுத்துப் பொறாமைப்பட்டுக் கோபம் கொள்ளுதலும் தவறாகும். உலக நாடுகளிடையே நடைபெறும் உதைப்பந்தாட்டப் போட்டியும் இங்கிலாந்து அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் பாகிஸ்தான் என்பவற்றிற் கிடையே நடைபெறும் துடுப்பாட்டப் (கிரிக்கட்) போட்டியும் உலகப்பிரசித்தமானவை. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே கிரேக்க நாட்டில் கிரேக்க வீரரிடையே தோன்றி வளர்ந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இன்று உலக நாடுகளால் போற்றப்பட்டு காலத்துக்கு காலம் பல நகரங்களில் நடைபெற்று வருகிறது. இவ் விளையாட்டுப் போட்டிகளிலே உலக நாடுகள் தாபிக்கும் சாதனைகள் அகில உலக சாதனைகளாகி அந்நாடுகளுக்கு அழியாப்புகழைக் கொடுக்கின்றது.

விளையாட்டுப் போட்டிகளிலே பங்கு கொள்ளும் வீரர்கள் ஓடியாடி விளையாடுவதனால் அவர்களின் இரத்தம் தூய்மை பெற்று இரத்தோட்டமும் சுறுசுறுப்படைகிறது. அதனால் செம்மையான சீரணசக்தி உருவாகிறது. உடலெங்கும் தசைநார்கள் தொழிற்பட்டு வலுவடைகின்றன. நிமிர்ந்த முதுகும் அகன்ற மார்பும், திண்ணிய தோள்களும் அளவளவான பிற அங்கங்களும் வாய்க்கப்பெற்று கட்டுறுதியும் வனப்பும் நிறைந்த தேகத்தோடு நோயற்ற வாழ்வு வாழமுடிகிறது. இவையனைத்தும் விளையாட்டின் மூலம் வீரர்களுக்கு கிடைக்கும் உயரிய பரிசுகள்.

இவைமாத்திரமன்றி உளப்பயன்களும் விளையாட்டின் மூலம் கிடைக்கின்றது. தன்திறமை வெளிப்பட வேண்டும். தான் பலரால் புகழப்பட வேண்டும். என்றும் மனிதன் ஒவ்வொருவனும் எண்ணுவது இயல்பு. தன்னலம் மறந்து கருமமாற்றுவது மிக மிக அரிது. தேவையான வேளைகளில் காணப்படும் தன்னல மறுப்பும் தியாக மனப் பான்மையும் வாழ்க்கையிற் பெறக்கூடிய இருபெரும் பேறுகளாம். போட்டியின் போது தான் குழுவின் ஓர் அங்கத்தவன் என்றும் தன் குழுவின் வெற்றியே தன் வெற்றியென்றும் ஒவ்வொருவரும் கருதல் வேண்டும். இவ் உணர்வில் நான் என்ற சுயநல எண்ணம் மறைந்துவிட நமது குழு என்ற பொதுநலமே மேம்பட்டுநிற்கிறது. நமது குழுவின் உயர்வுக்காக ஒவ்வொருவருந் தமது கொள்கைகள் எண்ணப்பாங்குகள் ஆகிய வற்றைக்கூடத் தியாகஞ் செய்ய வேண்டி ஏற்படுகிறது. இவ் உணர்வே வாழ்க்கையில் அவனை நல்லதொரு குடிமகனாக்கி மேன்மையாக்குகின்றது.

வெற்றியே விளையாட்டின் குறிக்கோள் ஆயினும் அது நேர் வழியால் பெறப்பட வேண்டும். கோபம் கொண்டு எதிரியை மதியாமல் வஞ்சனை வழிகளைக் கையாண்டு வெற்றியீட்டல் கூடாது. அப்போது தான் வெற்றி உண்மையான விலைமதிப்பிற்குரிய தாகும். இப்பண்புகளே வாழ்க்கையின் வழிகளாகின்றன. வெற்றியைக் கண்டு மனமிககளிந்து ஆரவாரித்தலும் தோல்வியைக்கண்டு துக்கத்தால் சோம்புவதும் மனத்தின் சமநிலையற்ற தன்மையை காட்டும். இது இரண்டையும் சமமாக மதித்து இரண்டிடத்தும் சிரித்துப் பழகுபவனே உண்மையான வீரன். இவ்விதப் பண்பே வாழ்க்கையிற் சகிப்புத் தன்மையை ஏற்படுத்துகிறது. எனவே நற்பண்பை வளர்க்கும் பணியில் விளையாட்டும் பங்கேற்பது என்பது வெளிப்படையான உண்மை.

வாழ்க்கை மலர் சோலை அன்று மேடு பள்ளம் நிரம்பிய மலை வழி என ஆன்றோர் கூறுவர். வாழ்க்கையில் தினம் தினம் பல போட்டிகளும் துன்பங்களும் ஏற்படும். அவற்றை வீளையாட்டுக்கள் போல் கருதி வெல்ல முயல வேண்டும். விளையாட்டு மனிதப் பண்புகளையும் சமுதாய பண்புகளையும் வளர்ப்பதோடு உறுதி பெற்ற உடலையும் தந்து ஒவ்வொருவரையும் முழுமனிதன் ஆக்குகிறது.

உள்ளமும் உடலும் வலிவு பெற
உதவி அளித்திடும் விளையாட்டு

## உண்மை மனிதன் யார்?

"மனம்" என்றாலே மற்றவர்களுக்கு இரங்குதல் என்பது தான் உண்மையான பொருள். அதனால் தான் மனம் இரங்கி உதவி செய்யுங்கள் என்ற ஓலங்களை அடிக்கடி கேட்கிறோம்.

மனத்தின் உண்மையான தன்மை "இரங்குதல்". அதாவது மற்றவர்களுக்கு இரக்கம் காட்டி அவர்களது துன்பங்களைப் போக்கி உதவி செய்தல்.

இப்படி ஒருவருக்கு ஒருவர் மனம் இரங்கி உதவி செய்தால் அந்த சமூகமே முன்னேற்றமடையும். சமூகம் முன்னேறினால் நாடு முன்னேறும். நாடு முன்னேறினால் உலகம் முன்னேறும். இப்படி உலகத்தையே முன்னேற்றமடையச் செய்யும் "இரக்கம்" மனத்திலிருந்துதான் சுரக்கிறது.

ஆகையால், மனம் இரங்கி மற்றவர்களுக்கு
தன்னலமற்ற 'சேவை' புரிந்து தியாக
உணர்வோடு வாழ முற்பட வேண்டும்
அப்போது தான் அவன் மனம்
படைத்த மனிதன்
ஆகிறான்.

அவனே "உண்மை மனிதன்"

# மனித மனமென்றுமாறும்

செல்வன் **க. அ. அருள்ராஜ்குரூஸ்,**
ஆண்டு - 13 கலை

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி,
மன்னார்.

*மனிதம் உயிர்த்திட வேண்டும் - மனித*
*மாண்புகள் உயர்ந்திட வேண்டும்*
*அமைதி வளர்ந்திட வேண்டும் - அதில்*
*அன்பு தவழ்ந்திட வேண்டும்*

*மாண்புகள் மறைந்து சென்று - மனித*
*உரிமை காற்றில் பறந்து*
*மாண்டது பாச பந்தம் - இந்த*
*மண்ணில் சாவுதான் சொந்தம்.*

*போரினால் குலைந்தது அமைதி - கொலை*
*கொள்ளை நிறைந்து ததும்பி*
*ரெலாம் பொய்மை ஆச்சு - இங்கு*
*எல்லாம் போலியாய் போச்சு.*

*தாயை இழந்திடும் சேயும் - தன்*
*தந்தையை இழந்திடும் மாயும்*
*தோயும் துயரிலே வாடும் - அவலம்*
*தொடர்ந்து நின்றுமே ஆடும்.*

*குண்டு வெடித்துமே சிதறும் - மனித*
*துண்டுகள் கிடந்து துடிக்கும்*
*என்றடா ஈசா தீரும் - இந்த*
*மனிதன் மனமென்று மாறும்.*

## ஏக்கம்

**மரணத்தைக் கண்டு அஞ்சுகிறோம்;**
**ஆயினும் உறங்கவும் அழகிய**
**கனவுகளைக் காணவும் ஏங்குகிறோம்.**

**- கலீல் கிப்ரான்.**

# சுவாமி விபுலானந்த அடிகள்

செல்வன். ப. ஹஸ்புல்லா
ஆண்டு 11A
வ/வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்

இலங்கைத் திருநாட்டின் கிழக்கே மீன்பாடும் தேன் நாடு என்னும் சிறப்புப் பெயர் பெற்ற மட்டக்களப்பின் காரைதீவில் 1892ம் வருடம் பங்குனித் திங்கள் 16ம் நாள் சாமித்தம்பி கண்ணம்மை தம்பதியருக்கு அருந்தவப் புதல்வனாய் சுவாமி விபுலானந்தர் அவதரித்தார்.

மயில்வாகனன் எனப் பெயர் சூட்டப் பட்ட அன்னார் ஈன்றோர்க்கினியமகனாயிருந்து கல்வியைச் சிறப்பாகக் கற்றுத் தம் பத்தாம் வயதிலேயே பலரும் வியக்கும வண்ணம் கணிதத்தில் சிறந்து விளங்கினார்.பதினாறாம் வயதில் கேம்பிறிட்சு உயர் பரீட்சையில் முதற்றரச் சித்தியடைந்தார். இருபதாம் வயதில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரானார் கொழும்பு பொறியியற் கல்லூரியில் விஞ்ஞான உயர்தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதர் பரீட்சை யில் சித்தியடைந்தார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியானார்.

மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சம்பத்திரியார் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, திரு கோணமலை இந்துக்கல்லூரி என்பவற்றில் ஆசிரியப்பணி புரிந்த அன்னார். அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அன்பு, நீதி, அறிவு, நேர்மை, சன்மார்க்கம், சமத்துவம் என்பவற் றில் இமயத்தின் சிகரமாய் உயர்ந்து திகழ்ந்த அப்பெரியார் தம் வாழ்நாள் முழு வதும் செந்தமிழுக்கும், இந்துசமயத்துக்கும் ஆற்றி நின்ற தொண்டு கடலைப்போல விரிந்தது எனல் மிகப்பொருந்தும்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றி லும் மிகுந்த பாண்டித்தியம் பெற்ற அன்னார் பன்மொழிப் புலவராக, பைந்தமிழ் வல்லு நராக, முத்தமிழ் வித்தகராக, மூதறிஞராக மிளிர்ந்தார். தம் தூய உள்ளம் துறவு வாழ்க்கையை நாடவே தமிழ்நாடு சென்று இராமகிருஷ்ண சங்கத்தில் ஞான உபதேசம் பெற்று, 1924ம் வருடம் முழுத்துறவியாக்கப் பட்டு, சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சைப் பெயரை பெற்றார். அன்று முதல் மக்களால் அன்புடனும், மரியாதையுடனும் சுவாமி விபுலானந்த அடிகள் என அழைக்கப்பட லானார்.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்பிய அடிகளார் பல்வேறு இடங்களில் பாடசாலைகள், கல்லூரிகள், ஏழைச்சிறுவர் இல்லங்கள், இராமகிருஷ்ண நிலையங்கள் என்பனவற்றை நிறுவியுதவினார்.மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயம், காரை தீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி என்பன அடிகளாரின் தூய தொண்டுக்கிலக்கணமாய் நினைவூட்டி இன் றும் நிமிர்ந்து நிற்கின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் முதல் தமிழ்ப் பேராசிரியராய் உயர் தொண்டாற்றிய சுவாமிகள் பல அறிஞர்களை உருவாக்கியுள்ளார். இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்னும் உயர் பதவியினை வகித்த அடிகள் மட்டக்களப்பு மண்ணிற்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமே அரும் புகழ் தேடித்தந்தார். பண்டைத் தமிழ் இசை நூல்களை ஆய்ந்து "யாழ்நூல்" என்னும் அரியபடைப்பை நமக் களித்த "மதங்கசூளாமணி" "ஆங்கிலவாணி" என்னும் நூல்களையும், செந்தமிழ்க் கட்டுரை களையும், சீரிய கவிதைகளையும் தமிழுலகு க்கு அள்ளி வழங்கினார். அடிகளின் தொண்டு கள் அளப்பரியவை உயர்ந்தவை.

இவ்வாறாக ஆசிரியராய், அதிபராய், பெரும் புலவராய், பேரறிஞராய், பெருந் துறவியாய் தமிழிலக்கியச் சோலையினுள் புகுந்து, தமிழ்த் தென்றலை நுகர்ந்து, இன்மலர்கள் பல மோந்து இன்பக்களிப்ப டைந்து அப்பயன்கள் யாவையும் நமக்கு அள்ளி வழங்கி தான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்பதற்கிலக்கண மாய்த் திகழ்ந்த அடிகளார். 1947ம் வருடம் ஆடித்திங்கள் 19ம் நாள் இறைவனடி சேர்ந்து பொன்னுடல் நீத்துப் புகழுடல் எய்தினார்

அவர்பாடிவைத்த

**வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் இணையடிக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டு**

என்னும் பாடல் நம் வாழ்க்கையை உய்வடையச் செய்யவல்லது.

# அப்பாவின் ஊர்

**செல்வன். கிருபானந்தன் வாகீசன்**
ஆண்டு 2

உவர்மலை விவேகானந்தா கல்லூரி
திருக்கோணமலை

தம்பலகமம் எனது அப்பாவின் ஊராகும், கந்தளாய் குளத்து நீர் சலசலத்து ஓடி வரும். பச்சை பசேல் என்று நெல் வயல் சூழ்ந்திருக்கும். உயர்ந்து வளர்ந்த தென்னஞ்சோலை காற்றில் அசைந்தாடும். வான் உயர்ந்த கோபுரம் பக்தியை ஊட்டும். ஆதி கோணேஸ்வரப் பெருமான் அருள் பாலிக்கிறார். திரு விழாக் காலம் எங்களுக்குக் கொண்டாட்டம். அப்பாவோடு தம்பலகமம் செல்வோம். தென்னந்தோப்புக்களிலும் சேற்று வயல்களிலும் புரண்டு விளையாடி மகிழ்வோம். நல்ல அழகான ஊர் என் அப்பாவின் ஊர்.

# வெல்வேன்!

செல்வி. இ. தமிழரசி,
ஆண்டு - 11

தி/ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம்

1. நான் தமிழ் அரசி, எந்தன்
நலிந்த ஊர் ஈச்சந்தீவு!
ஏன் பிறந்தேனோ இந்த
இன வெறி பாயும் நாட்டில்
ஊன், உடல் தவிர – எங்கள்
உடைமைகள் எல்லாம்போக
தேன் தமிழ் மட்டும் கொண்டே
திரிந்தலுத்திங்கே வந்தேன்!

2. எழு பிறப்பென்பார் – நானோ
ஏழிடங்கல்வி கற்றேன்!
குழுவினர் பலரோடும் நான்
கூடியே பழகியுள்ளேன்!
விழுந்தெழுந்து மின்னும்
விட்டபாடில்லைத் துன்பம்!
அழுந்தினாலின்று பின்னால்
ஆனந்த மடையலாமோ?

3. பத்தொன்றிலின்றுள்ளேன் யான்!
பதின்மூன்று வரையும் போவேன்!
எத்தனை பாடம் உண்டோ
எழுதி நான் தேர்வில் வெல்வேன்!
முத்தமிழ் மறந்திடாமல்
மொழி பலப்பலவுங் கற்பேன்!
வித்துவச் செருக்கில்லாத
விரிவுரை யாளராவேன்!

4. ஆய்வுகள் தமிழில் செய்தே
அறிவு நூல் பலவும் யாத்தே
ஓய்வுகள் இல்லா தென்றும்
உழைப்பனென் நாட்டிற்காக!
தேய்ந்துபோம் இனத்தைக் காக்கச்
செயற்படும் மறவர்க்காகப்
பாற்ந்து சென்றுதவுவேன் என்
பழந்தமிழ் ஈழம் வாழ்க!

# அப்பா...

செல்வி. அ. மீனலோஜினி
ஆண்டு - 13

யா/ மகளிர் கல்லூரி
சாவக்சேரி.

சூரியன் கிழக்கு வானில் உதித்து சில நாழிகைதான் ஆகி இருந்தது. பாடசாலையில் மாணவர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. விடுதலைக் காலமாக இருந்த போதும் இன்று தான் உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி இருந்தன. பதின் மூன்று வருட கல்வியின் இறுதி முடிவுகளைக் காண மாணவர்கள் அக்கறையுடன் ஆவலாக நிற்கின்றனர். பரீட்சை முடிவுகளைப் பார்த்த மாணவர்கள் பலரின் முகங்களில் ஏமாற்றமும் சிலரின் முகங்களில் கவலையும் அதிர்ச்சியும் ஒருசிலர் முகத்தில் மட்டும் மலர்ச்சியும் காணப்படுகின்றன. அப்போது கயல்விழி ஓட்டமும் நடையுமாக பாடசாலைக்குள் நுழைகின்றாள். அவளைக் கண்டதும் மலர் "எடி கயல் உனக்குத் தான் 2A, 2B' என கூறுகின்றாள். கயல்விழியால் நம்ப முடியவில்லை. தன் கண்களால் பரீட்சை முடிவுகளைக் காண்கின்றாள். சொல்ல முடியாத மகிழ்ச்சி. அதிபர் பேருவகையுடன் கயலின் கைகளைக் குலுக்கி வாழ்த்தைத் தெரிவிக்கின்றார். ஆசிரியர்கள் தாம் பெற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துகின்றனர்.

கயல் விழி பாடசாலையை விட்டு வீதிக்கு வருகின்றாள். மாணவர்கள் சிலரின் கண் பொறாமையோடு நோக்குகின்றது. பல மாணவர் வினாத்தாள் திருத்தம் செய்தஆசிரியரில் குறை கூறுகின்றனர். ஏற்கனவே வகுப்பில் கயல்விழிக்கு அதிக புள்ளிகளை ஆசிரியர் போடுவதாக மாணவர்களிடையே ஒரு விமர்சனம். ஆனால் இன்று உயர்தரப் பரீட்சை முடிவுகள் இவ்வாறு கயல்விழிக்கு வெற்றி அளித்தது பல மாணவருக்கு பொறாமையை ஏற்படுத்தியதோடு அவர்களின் வாயையும் அடைத்து விட்டது.

கயல்விழி ஏழை விவசாயின் அன்பு மகள். ஒன்பது சகோதரருடன் பிறந்தவள். ஐந்தாவதாக அவதரித்தவள். தந்தையின் மனதை மகிழ்விக்க வேண்டும் என்பதே அவளின் ஒரே குறிக்கோளாக இருந்தது. எத்தனை துன்பம்தான் பட்டாலும் தன் மக்கள் கல்வி கற்று முன்னேற வேண்டும் என்ற அவா காரணமாக தந்தை இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்தார். கல்விக்குப் பணம் வேண்டும் போதெல்லாம் கயல்விழி கவலைப் படுவாள். தந்தையிடம் பணம் இல்லை. எப்படிக் கேட்பேன் என ஏங்குவாள். இருந்தும் தந்தையிடம் கேட்பாள் "பிள்ளை இன்றைக்கு இல்லை. நாளைக்கு பாப்பம்" என கூறுவார். அதைக் கூறும்போது மகளின் மனம் நொந்து விடுமே என்ற ஏக்கம் தந்தைக்கு. அப்பாவின் மனம் நொந்து விட்டதே என ஏங்கி அழும் கயலின் மனம். அப்பா நாலு அடி அடித்தால் நல்லமே என எண்ணுவாள். எது இருந்த போதும் தந்தையின் பணத்தை மருந்து போலவே பேணினாள்.

பதின்மூன்று வருடமாக பாடசாலை சென்று கற்றது தொடக்கம் சைக்கிள் வாங்கி விட விருப்பம்தான். இந்நாள் வரை தந்தையின் வறுமை அறிந்து கேட்டதில்லை. பாடசாலை ரியூசன் என எங்குமே நடந்து பழக்கப்பட்டு விட்டன கால்கள். அக் கால்களுக்குத் தான் எப்போது ஓய்வு. அதற்கு இன்னும் அவள் விடை காணவில்லை. பரீட்சையில் சித்தியடைய வைத்த கடவுள் அதற்கும் ஒரு வழி விடுவார் தானே.

கயல்விழி இப்போது ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி ஓடுகின்றாள். தன் பெற்றோரை மகிழ்வித்து விட கால்கள் ஓடுகின்றன "யார் வாழ்த்தி என்ன? என் தந்தையின் வாழ்த்துத் தானே எனக்கு முக்கியம் ஓடுகின்றாள் அப்போது வானத்தில் செல் இரைகின்றது. அது அண்மையில் வீழ்ந்து வெடிக்கின்றது. கயல்வழி ஓட்டம் அதிகரிக்கின்றது "இப்போது போன செல் எங்கே வீழ்ந்ததோ?" என ஏங்கிய வண்ணம் ஓடுகிறாள். வீட்டு வாசலில் மக்கள் கூட்டம் என்ன எல்லோர் முகங்களிலும் கவலை கயல்விழிக்கு எல்லாம் புரிந்து விட்டது. ஷெல் தன் வீட்டில் தான் விழுந்து இருக்கின்றது "ஐயோ" அப்பா அங்கே அவளின் தந்தை இரத்த வெள்ளத்தில் "அப்பா" "அப்பா" ஓவென கதறி அழுகின்றாள், அங்கே தந்தை பரீட்சை முடிவை அறிய முன்னம் தன் வாழ்வின் முடிவை அணைத்து விட்டார். கயலின் மகிழ்ச்சி எல்லாம் கலைந்து விடுகிறது. "அப்பா" என மயங்குகிறாள். அவளுக்கு இனி எல்லாம் சூனியமே.

# அமைதியே ஓடிவா

ஆக்கம்: செல்வி. ரட்ஷகி வில்வரத்தினம்.
ஆண்டு - 11 சீ

தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி.

அமைதி..... அமைதி..... அமைதி
உனைத் தேடி நாங்கள் போவதெங்கே
உரிமை உணர்வு உடைமை
உறிஞ்சி பறித்து அழித்தாய்
கொலைகள் கொள்ளை வேட்டு
கெடுதல் செய்தவர் யார்?
மனிதா நீ தான்.......
மனிதா நீ தான்.......

எங்கும் அவலம் அகதி
முகாம்கள் முனகல் அலறல்
குருதி குதித்து ஓடும்
போர்க்களம் ஆனது நாடு
காற்றில் ஆடி கிழியும்
முள்ளில் தொங்கும் துணியாய்
ஆனது எங்கள் வாழ்க்கை

சிதையுண்டு போனது உறவு
சின்னா பின்னமானது இதயம்
பூக்களில் வாசம் இல்லை
வெடி மருந்தின் நெடியே உண்டு
இன்பம் என்றொரு சொல்லே
இல்லா தொழித்தனை மனிதா

விழித்திடு விழித்திடு மனிதா
வாழத் துடிக்கிறோம் மனிதா
அமைதியே வேண்டும் எமக்கு
அமைதியே ஓடி வாராய்

&

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

-294, திருக்குறள்

# அறிஞர் சித்திலெவ்வை

**செல்வி. எம். பரீலா**
ஆண்டு 10 B.

வ/வவுனியா முஸ்லிம் ம. வி.

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்துகொண்டிருந்த காலத்திலே கண்டியில் ஓர் இளம் முஸ்லிம் வழக்கறிஞர் இருந்தார். கல்வி மிக்கவரான இவ்வழக்கறிஞர், இஸ்லாமிய நெறி முறைகளினின்றும் வழுவாது வாழ்ந்து வந்தார். வழக்கறிஞர் தொழிலிலே இவருக்கு வருவாய் மிகுதியாய்க் கிடைத்தது. உயர்பதவிகள் இவரைத்தேடி வந்தன. சமூகத் தொண்டிற்கே தமது, உடல், பொருள் உழைப்பு மூன்றையும் ஒப்படைத்தல் வேண்டும் என்ற நோக்கத்தாலே, இந்த வழக்கறிஞர் இளம் வயதிலே இந்தத் தியாகத்தைச் செய்தார். இவ்வாறு செய்தவர் வேறு யாருமல்லர். ஈழத்து முஸ்லிம்களின மறுமலர்ச்சித் தந்தையெனப் போற்றப்படும் அறிஞர் சித்திலெப்பையே இப்பெரியார்.

அறிஞர் சித்திலெப்பை 1838 ஆம் ஆண்டில் கண்டியிலே வழக்கறிஞர் எம்.எல் சித்திலெப்பை என்பவருக்கு மூன்றாம் மகனாகப் பிறந்தார். குழந்தைக்குப் பெற்றோர் இட்ட பெயர் முகம்மது காசிம் என்பது. எதையும் துருவியறியும் தன்மையும் கூரிய மதிநுட்பமும் அவருக்கு வாய்த்திருந்தன. அன்றைய சூழலுக்கு ஏற்பக் குர்ஆன் பள்ளிக்கூடத்திலே அவர் குர்ஆன், இஸ்லாமிய சட்ட திட்டங்கள் ஆகியவற்றைக் கற்றார். பின்னர் தந்தையின் விருப்பப்படி ஆங்கிலத்தையும் தமிழ் மொழியையும் முறையாகப் பயின்றார். இளமையிலே சித்தி லெப்பையின் மூத்த சகோதரனான முகம்மது ஆலிம் புலவர், அவரது சமய ஞான வளர்ச்சிக்கு உறு துணையாய் இருந்தார். அருள் வாக்கி அப்துல் காதிறுப் புலவர் இவரது தமிழிலக்கிய ஆர்வத்தை வளர்த்தார். இங்ஙனமாக அவரது இளமை வாழ்க்கை, எதிர்காலத்தில் அவர் ஒரு கல்வி மானாவதற்குரிய அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது.

அக்காலத்திலே கஸாவத்தை ஆலிம் அப்பா என்னும் முகம்மது லெப்பை ஆலிம் பிரசித்திபெற்ற மார்க்க மேதையாய் விளங்கினார். சித்திலெப்பை வழக்கறிஞராகக் கடமையாற்றிய காலத்தே, கஸாவத்தை ஆலிம் அப்பாப் புலவரிடம் அறபு மொழியையும் இஸ்லாமிய நெறிமுறைகளையும் பயின்று தெளிந்தார். இத்துணைப் பிரசித்தி வாய்ந்த மார்க்க மேதையிடம் பெற்ற சமய அறிவு, சித்திலெப்பையின் இயற்கை அறிவைப் பன்மடங்கு பிரகாசிக்கச் செய்தது.

வசதிமிக்க குடும்பத்திலே பிறந்து வறுமை என்பதனையே அறியாது வளர்ந்தவரான சித்திலெவ்வை, அக்காலத்தில் அந்நியராட்சியிற் கைகட்டிச் சேவகம் பண்ணிய வசதிபடைத்தோர் போல் உண்டு, உடுத்து, மகிழ்ந்து தம் காலத்தைக் கழித்திருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்தாரல்லர். அந்நியரான ஆங்கிலேயரின் ஆட்சியில் தமது நாடான ஈழம் சுரண்டப்படுவதையும் ஆதியிற் கல்வியறிவிலே மேம்பட்டு விளங்கிய முஸ்லிம் சமூகம் ஈழத்தில் அத்துறையிலே தாழ்ந்த நிலையில் இருப்பதையும், முஸ்லிம்களின் கலாசாரம் அந்நியர் கலாசாரத்தால் நலிவுறுவதையும் கண்டார். இக்காட்சி அவர் மனத்தை முள்ளாய் உறுத்தியது. இந்நிலை கண்டு சகியாத சித்திலெவ்வை. தம் வாழ்வினைச் சமூக மறுமலர்ச்சிக்கு அர்ப்பணித்தார். இதனாலேயே அவர் முஸ்லிம் மக்களின் இதயத்தில் மட்டுமன்றி, ஈழமக்கள் அனைவரது மனதிலும் இடம் பெற்றுள்ளார்.

ஆங்கிலம், தமிழ், அரபு ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றவரான சித்திலெவ்வைக்கு இம்மும்மொழிகளும் மூவகையில் உதவி புரிந்தன எனலாம். அரபு மொழி அவருக்கு மார்க்கம் பற்றிய தெளிந்த ஞானத்தைக் கொடுத்தது. ஆங்கிலம் உலக விவகாரங்களுடன் உள்ளூர் விவகாரங்களை ஒப்பிடும் ஆற்றலைக் கொடுத்தது. தாமறிந்த உலக விவகாரங்களையும் மார்க்க ஞானத்தையும் முஸ்லிம் பொது மக்களிடையே பரப்பத் தமிழ்மொழி அவருக்குத் துணையாய் நின்றது. இங்ஙனமே அப்பெரியார் தமது மும்மொழிப் புலமையைச் சமூகப் பணிக்கு அர்ப்பணித்தார்.

அந்நியர் ஆட்சியில் மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்த முஸ்லிம் சமூகத்தினர் முன்னேற மிக முக்கியமாக அவர்களுக்குத் தேவையானது கல்வியே என்பதை உணர்ந்த சித்திலெவ்வை, கல்வியின் முக்கியத்துவத்தைத் தமது சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்பினார். தமது கருத்துக்களைச் சமூகத்திற்குப் பிரசாரம் செய்ய ஒரு பத்திரிகை தேவை என்று எண்ணிய சித்திலெவ்வை, தமது நாற்பத்து நான்காவது வயதிலே, ஓர் அச்சியந்திரத்தைச் சொந்தமாக வாங்கினார். அவர் நிறுவிய அச்சகத்திருந்து முஸ்லிம்களின் எழுச்சிக் குரலாக 1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் தேதி " முஸ்லிம் நேசன் " என்னும் பத்திரிகை வெளிவந்தது.

மக்களின் மனவிரிவிற்கும் தெளிவிற்குமான அறிவு நூல்கள் குறைவாயிருந்தமையால், தமிழ்மொழியை மாத்திரம் தெரிந்தவர்கள் பயன்பெறும் பொருட்டுத் தாம் அப்பத்திரிகையை ஆரம்பித்ததாக அவர் தம் முதலாவது இதழிலே குறிப்பிட்டார். அந்நியர் ஆட்சியிலே தூக்கத்திலிருந்த சுதேச முஸ்லிம்களைத் தட்டி எழுப்புவதாக அப்பத்திரிகை அமைந்தது. பொது மக்கள் கைகளிலே அப்பத்திரிகை பயின்றதனால் அது யாவரும் வாசித்தறியக் கூடிய எளிய வசன நடையில் அமைவது அவசியமாயிற்று. இந்நோக்கத்தோடு சித்தி லெப்பை எழுதிய தமிழ் நடைக்கு ஓர் உதாரணம் வருமாறு:

" கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிதல் மட்டுமல்ல, மனவிரிவுக்கும் தெளிவுக்கும் பலவித அறிவு நூல்களையும் நன்கு அறிவது அவசியம். அறபுக் கிதாபுகளிலிருந்து அறிய வேண்டிய அறிவுகளையும் இங்கிலீஸ் முதலிய பாஷைகளிலுள்ள கல்விகளையும் படித்தல் மிக முக்கியம்."

அறிஞர் சித்திலெப்பை யாவருக்கும் விளங்கத்தக்க நடையில் முஸ்லிம் நேசனையும் பின்னர் ஞான தீபத்தினையையும் வெளியிட்டார். முஸ்லிம்களிடத்திலும் ஏனையவர்களிடத்தும் இப்பத்திரிகை மிகவும் செல்வாக்குச் செலுத்தியது. இது மட்டுமன்றி " அஸ்றாருல்" ஆலம்" ஸுறத்துஸ் ஸலாத் " என்னும் தத்துவ நூல்களையும் "அஸன் பேயின்கதை" அபூநவாஸ் கதை" "துருக்கிய கிரேக்க யுத்தம்" போன்ற நூல்களையும் இவர் வெளியிட்டார். அஸன் பேயின் கதையே இலங்கையில் வெளிவந்த முதற்புனை கதையாகும். இவருடைய எழுத்துக்கள் தூங்கிக்கிடந்த சமூகத்தை தட்டி எழுப்பின.

முஸ்லிம் மக்களுக்கு பாடசாலைகள் அமைக்கும் கருத்து சித்திலெப்பையிடம் உருவாகியது. அவர் ஆங்கிலேயர் தமது மதத்தின்படி பாடசாலைகள் நடத்தும் முறையைக்கண்டு தாமும் அவ்வழியிலே இறங்கினார். இதில் அமைத்த கட்டிடம் தான் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி எனப்படுகிறது. இது தற்போது மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இவர் தமது நண்பரான வாப்பிச்சி மரைக்கார் அவர்களின் துணையோடு இதை ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் மாத்திரமன்றி கண்டியில் ஒரு மகளிர் பாடசாலையையும் அட்டன், பதுளை, பொல்காவலை முதலிய இடங்களிலும் பாடசாலைகளை நிறுவினார். அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகளைத் தனியொரு சித்திலெவ்வை செய்து முடித்தார். இவரின் பணம் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களின் வேதனக்கூலியாகவும் பயன்பட்டன. இவர் பாடசாலையை நிறுவியது மட்டுமன்றி அம்மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களையும் தாமே எழுதி உதவினார். இப்படியான நடவடிக்கைகளை தனியார் ஒருவர் செய்தமையினால் அரசு இவரைக் கண்டித்தது. அறிஞர், அரசின் எதிர்ப்பைக் கண்டு மனம்நொந்தார். எனினும் தாம் கொண்ட இலட்சியத்தைக் கைவிட்டாரல்லர், ஆங்கில ஆட்சியிலே அமைந்த சட்ட சபையிலே இந்நாட்டு முஸ்லிம் பிரதிநிதியும் அங்கம் வகிக்க வேண்டும் என்று முஸ்லிம் நேசன் மூலம் குரல் எழுப்பினார். இவரது வேண்டுகோளுக்கு முஸ்லிம்கள் பேராதரவு தந்தனர். ஆட்சியாளர் அசைந்தனர். சித்திலெவ்வைக்கே அப்பதவியைக் கொடுக்க முன வந்தனர். "தலைமைக்கும் புகழுக்கும் நான் போராட்டம் நடத்தவில்லை: எனது சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கவே போராட்டம் நடத்துகிறேன்" என்று தமக்கு வந்த பதவியை உதறித் தள்ளினார். முஸ்லிம் நேசனும் மக்களும் வற்புறுத்தியதன் விளைவாக ஜனாப் எம். வி. அப்துல் ரஹ்மான் சட்ட சபையின் முதல் முஸ்லிம் பிரதிநிதியாகச் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வாறு முஸ்லிம் மக்களின் கல்வியிலும் கலாசார முன்னேற்றத்திலும் அரசியல் உரிமைக்காகவும் தம் வாழ்நாளை அர்ப்பணித்த அறிஞர் சித்திலெப்பை 1898 பெப்ரவரி 5 ஆந் திகதி இறைவனடி சேர்ந்தார். இலங்கை அரசு 1976 ஆம் ஆண்டு அவரது நினைவாக முத்திரையையும் வெளியிட்டது.

❖ ❖ ❖

### உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ

வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது

– சுவாமி விபுலாநந்தர்.

### உண்மையான அறிவு

மனிதன் முன்னேற கல்வி அவசியம். இதைப்பள்ளிக்கூடத்திலிருந்து மட்டும் பெற முடியாது.

இந்தக் கல்வியால் ஏற்படும் கர்வம், பொறாமை, போட்டி மனப்பான்மை ஆகியவற்றை நாம் விலக்கக் கற்றுக்கொண்டால் அதுவே உண்மையான அறிவு ஆகும்.

– பகவான் சத்தியபாபா

# வாடுகின்றார்


**செல்வன் ந. ஜெயகாந்தன்,**
ஆண்டு - 13 ஏ

நெல்லியடி மத்திய ம. வித்தியாலயம்
கரவெட்டி.

பாரினிலே பலவுண்டு சச்சரவு
படுந்துயரோ கொஞ்சமாமோ மக்களுக்கு
ஊரான யாழதிலும் சச்சரவு
உயிர்பிடுங்க உதைவாங்கும் உத்தரவு
சீராக வாழ்ந்திருந்தோம் வீடுகளில்
சீர்கெட்டு ஓடுகிறோம் தலைகெட்டு
யாரிடமோ சொல்லியழ: ஏங்குகிறோம்
ஆண்டவன்தான் எமைவந்து காக்கவேண்டும்

செல்லடியில் தப்பியொரு வழியால் போக
தும்பியென ஹெலியெழுந்து வேட்டுவிடும்
அல்லலதைத் தாண்டியொரு பக்கமேக
அங்கு வந்து புக்கார முட்டை போடும்
அல்லோல கல்லோல அவலம் சூழும்
அழுகுரலும் அழும்பிணமும் அணுங்கி மோதும்
சொல்லொண்ணா துயரினிலே எமது மக்கள்
தோய்கின்றார் சாகாது வாடுகின்றார்.

வீடில்லை வாசலில்லை சேர்த்தசொத்து
வீணாகிப் போனதுவே மக்கள் எல்லாம்
காடுகளில் மரத்தடியில் பாதையோரம்
கல்முள்ளில் கால்பதித்து வருந்துகின்றார்
சூடில்லை குளிரில்லை மழை வெயிலும்
சுகம்காண மருந்தில்லை வேலையில்லை
கூடியொன்றாய் ஆகியதால் குலபேதங்கள்
குழிமூட அகதி என ஒன்றாயானோம்.



# இன்றைய சமுதாயமும் கணனியும்

பா. மைதிலி
ஆண்டு 12 (விஞ்ஞானம்)

வ/இறம்பைக்குளம் மகளிர் மகா
வித்தியாலயம்.

மிக வேகமாக முன்னேறிவரும் இன்றைய உலகிலே அவ் வேகத்திற்கு அடிக்கல்லாய் அமைந்து விஞ்ஞான உலகின் அரும்பெரும் கண்டுபிடிப்பாகத் திகழ்வது கணனியாகும். நூறுமனிதர் சேர்ந்து நூறாண்டு காலத்தில் செய்யும் கணக்கை, ஓரிருமணி நேரத்தில் இக் கணனிகள் துல்லியமாகச் செய்து முடிக்கின்றன. சாதாரண மனிதனின் கற்பனைக்கு எட்டாத அளப்பரிய வேகமும், துல்லியமும் கணனியின் இருபெரும் சிறப்பியல்பாகும். இக் காலப்பகுதியை கணனி யுகம் என அழைக்கும் அளவிற்கு கணனியின் பங்களிப்பு இன்றைய சமுதாயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எந்தத் துறையாயிருந்தாலும் எத்தகைய கணிப்பாயிருப்பினும், அக்கணிப்பு முறையை அல்லது இயக்கமுறையை சூத்திர வடிவில் வடிக்க முடிந்தால் அந்தத் துறையில் அந்தக் கணிப்பை கணனியால் செய்ய முடிகின்றது. விவசாயத்துறை, பொறியியல், தொழிற்துறைகள், விமானமும் விமானப் போக்குவரத்து, வானியல் முன்னறிவிப்பு, மருத்துவம், உற்பத்தி நிறுவனம், வாணிபம், விண்வெளி ஆய்வு, கல்வி, பாதுகாப்பு என பல்வேறுபட்ட துறைகளிலும் இதன் பங்களிப்பு மகத்தானது.

விவசாயத் துறையை எடுத்து நோக்கின் விவசாய ஆராய்ச்சியில் ஆரம்பித்து, பொருட்களின் உற்பத்தி, பதனிடல், வினியோகம் போன்ற எல்லாக் கட்டங்களிலும் கணனி பயன்படுத்தப்படுகின்றது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கேற்ப விவசாய உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டிய விதிதம் குறைந்து செலவில் கூடிய விளைவைப் பெற மனிதனுக்கு வேண்டிய கணிப்புகளை கணனியில் பெற முடிகின்றது. விலங்கு வேளாண்மை போன்ற துறைகளில் விலங்கின் உடல் ரீதியான கட்டமைப்பு, தொழிற்பாட்டு ஒழுங்கு கணனியின் செய்திக் கொத்தில் கொடுக்கப்பட்டிருப்பின் அவ்விலங்கின் உடல் ரீதியில் ஏற்படும் நோய்களைக் கூட கணனி மூலம் அறிய முடிகின்றது.

பொறியியல் துறையில் கணனி இல்லை எனில் பொறியியலே இல்லை என்னும் அளவிற்கு கணனி முக்கிய பங்கு வகிக்கின்றது. பல்வேறுபட்ட சிக்கல் நிறைந்த கணிப்புகளை தீர்வு காண்பதற்கும் கணனிகள் பயன் படுத்தப்படும். இங்கு கணிப்பு வேகம் மிகுந்த, பெரிய நினைவகத்தையும் கொண்ட கணனிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தொழிற்துறையைப் பொறுத்தவரையில் பெரிய தொழிற்சாலைகள் உற்பத்தி முறைக் கண்காணிப்புப் பணியை கணனிகள் திறம்பட செய்து வருகின்றன. அத்தோடு தொழிற்துறை வடிவமைப்பும் கணனியின் ஓர் முக்கிய பணியாகும். ஓர் இயந்திரத்தை அல்லது ஒரு தொழிற் கூடத்தை கணனியின் உதவிகொண்டு வடிவமைக்கும் போது செலவாகும் காலம் 98% குறைவானது. அத்தோடு தொழிற்சாலையின் வரவு, செலவு அதற்குரிய அறிக்கைகள் போன்றவற்றையும் கணனிகளே செய்து வருகின்றன.

விமானமும் விமானப் போக்குவரத்தும் தொடர்பாக கணனிகள் மிகப் பாரிய பங்கை வகிக்கின்றன. உலகிலே மிக வேகமான போக்குவரத்து சாதனமாகவும் கூடிய அளவில் பணப்புழக்கமுள்ள ஓர் துறையாகவும் இது விளங்குகின்றது. இங்கு கணனிகள் பயணிகளது கடவுச் சீட்டு ரிசர்வேஷன்கள், இரு வேறு விமானப் போக்குவரத்து கம்பனிகளிடையே செய்திப் போக்குவரத்துகளை மேற்கொள்ளல், சம்பளப்பட்டியல் தயாரிப்பு, கணக்கு வைப்பு, கையிருப்பு சாமான்களை

கண்காணித்து உடனுக்குடன் அறிவித்தல் போன்ற பல வேறுபட்ட அம்சங்களைக் கணனியே கண்காணிக்கின்றது.

மருத்துவத் துறையை எடுத்து நோக்கில் ஆயிரக்கணக்கான நோயாளிகளின் நோய் வரலாற்றை ஆய்ந்து மருந்துகளின் உடன் விளைவுகளைக் கண்டு பிடித்தல் நோய்க் கண்டுபிடிப்பு அத்தோடு அறுவைச் சிகிச்சைகளின் போது நோயாளியைப் பரிசோதித்தல், போன்றவற்றிலும் கணனியின் உதவி இன்றியமையாததாகும். ஓர் உதாரணமாக பல்வேறு பட்ட நோய்களையும் அதற்குரிய அறிகுறிகளையும் கணனிகள் நினைவகத்தில் கொண்டிருக்கும் ஒரு மருத்துவர் நோயாளியைப் பரிசோதித்து நோய் அறிகுறிகளை கணனிக்கு கொடுப்பின் அதைக் கொண்டு கணனி அந்நோய் அறிகுறிகளுக்குரிய நோயைக் கண்டு பிடித்து விடும். ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் பொறுப்பு கணனிக்கு வழங்கப்படுகின்றது. அவர் உடல் நிலைகளைச் சீராக அறிந்து அந்நிலையில் சிறுமாறல் ஏற்படும் போது அதை உடனே அறியத் தருகின்றது. இதனால் வைத்தியர்கள் உடன் சிகிச்சை வழங்க முடிகின்றது. மேலும் மனித உடற்கூறுகள் பற்றிய ஆராய்ச்சிகளிலும் கணனியின் பங்களிப்பு பெருமளவில் காணப்படுகின்றது. இப்போது மனித மூளையின் இயக்கங்களை ஒட்டிய கணனிகள் வடிவமைக்கப்பட்டு அவை ரோபோக்கள் என்னும் வடிவில் புது உருவெடுத்து வந்துள்ளன.

வாணிபத் துறையில் செலவைக் குறைத்து லாபத்தைப் பெருக்கி, தரம் குறையாமல் உற்பத்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இன்று சாதாரண பல சரக்குக் கடைகளிலும் கொள்முதல் சீட்டு விற்பனைச் சீட்டுகள் தயாரித்தல் போன்ற வேலைகளை சிறு கணனி செய்து வருவதை நாம் காண முடிகின்றது. அத்தோடு வாணிப நிறுவனத்தின் அன்றாட விற்பனைகள், இலாபம் போன்றவற்றை திருத்தமாகவும் விரைவாகவும் கணிக்க முடிகின்றது.

இன்று பெருமளவு கணனிப் புழக்கம் உள்ள துறையாக விண்வெளி ஆய்வுத் துறையைக் குறிப்பிடலாம். விண்வெளி ஆய்வுகளின் ஒவ்வொரு கூறுகளும் கணனியுடன் சம்பந்தப்பட்டு கணனி இல்லையேல் விண்வெளி ஆய்வுகளே இல்லை என்னும் அளவிற்குக் கணனியின் முக்கியத்துவம் அங்கு காணப்படுகின்றது. வடிவமைப்பு, கட்டுமானம் பரிசோதனைகள், முற்காப்புகள், விண்வெளிக் கலச் செலுத்துகை, அதன் பாதை கண்காணிக்கப்பட்டு அதை சரியான பாதையில் நிலைப்படுத்தி ஒவ்வோர் செக்கனிலும் விண்வெளிக்கலத்தின் இயக்கம் அவதானிக்கப்பட்டு சிறு பிழைகள் ஏற்படின் அதனை உடனுக்குடன் கணித்து விண்வெளித் தகவல் பதிவு செய்தல், ஆராய்தல் போன்ற அனைத்து அம்சங்களிலும் கணனியே முக்கிய பங்கு வகிக்கிறது. அத்தோடு விண்வெளிக் கலங்களில் பொருத்தப்பட்டிருக்கும் கணனிகள் மூலம் விண்வெளிப் பயணக் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றன. விண் ஆய்வுக் கோள் நிலையம் கம்பியூட்டரைப் பயன்படுத்தி இயங்கும் ஓர் ஆளற்ற விண்கலம் ஆகும். விண்கலத்திலிருக்கும் கணனியும் பூமியில் இருக்கும் கணனியும் தொடர்பு கொண்டதாக இருக்கும். மற்றய ஏனைய செயற்பாடுகளும் கணனிகளால் மட்டும் நிறைவேற்றப்படுகின்றன.

கல்வித் துறையில் கணனியின் பங்களிப்பை எடுத்து நோக்கின் பெருகி வரும் சனத்தொகையில் அனைத்து மக்களுக்கும் கல்வி புகட்டும் முறையில் சனத்தொகை அதிகரிப்பு வேகத்துடன் ஈடுகொடுக்கக் கூடிய வகையில் கற்பிக்கும் பொறிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பொறிகள் ஓர் அடிப்படை நோக்கத்தைக் கொண்டு அதாவது சாதாரணத்திலும் குறைந்த தரத்திலுள்ள மாணவனிற்குச் சிறு சிறு துண்டுச் செய்திகளைக் கற்பித்து அதை அவன் புரிந்து கொண்டானா என அறிவதற்கு வினாக்களை அவனுக்கு அளித்து அதற்கு அவன் விடை கூறுதலைக் கொண்டு அவன் விளங்கிக் கொண்டதை அறியும், கற்பிக்கும் பொறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக் கற்பிக்கும் கருவியில் அமைந்த கணனிகள் மாணாக்கன் ஓர் துண்டுச்

செய்தியைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத வரை அடுத்த செய்திக்குப் போகாது. இக் கல்வி முறை "புரோகிராமித்த கல்வி முறை" எனப்படுகின்றது.

அத்தோடு மாணவர்களின் பரீட்சை தேர்வுத் தாள்கள் தயாரித்தல், பரீட்சை முடிவுகளை ஒழுங்குபடுத்தல் அவற்றை பிரதியெடுத்தல் போன்ற பலவேறு முறைகளில் கல்வித் துறையில் கணனிகள் பங்களிப்புச் செய்கின்றன.


பாதுகாப்புத் துறையில் கணனியின் பயன்பாடு அதிகரிக்கும் அளவிற்கு ஏற்ப அப் பாதுகாப்பு நிலையங்களின் செயற்பாட்டு வேகமும் தகவல் சேகரிக்கும் திறமையும் அதிகரிக்கின்றது. ஓர் நாட்டின் பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கைகள், அவர்கள் நிலைப்படுத்தப்பட்டிருக்கும் இடங்கள் மற்று இரு வேறு நிலையங்களுக்கிடையே செய்திப்பரிமாற்றம் என்பனவும் கணனிகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பாதுகாப்புத் துறையில் பயன்படுத்தப் படும் இரகசியத் தகவல்கள் ஓர் பாதுகாப்புத் துறையின் அனைத்து இரகசிய செயற்பாடுகளிலும் கணனிகள் பயன்படுத்தப்படுவதன் மூலம் பாதுகாப்புத்துறை இரகசியங்கள் பேணப்படுகின்றது. அத்தோடு கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் கணனிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. ரேடார் நிலையங்களுடன் தொடர்பு கொண்ட கணனி நிலையங்கள் நாட்டினுள் நுழையும் எதிரிகளின் விமானங்கள் போன்றவற்றை அறியவும் உதவுகின்றன.

இவ்வாறாக மக்களின் அன்றாட கருமங்களில் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பங்கு கொண்டு கணனியின்றி ஓர் சமுதாயமில்லை என்னும் அளவிற்கு இன்றைய சமுதாயம் முன்னேறியுள்ளது.

## செய்வன திருந்தச் செய்

**நாம் செய்யும் எக்கருமத்தையும் செவ்வனே - பிழைகள் இன்றித் துப்பரவாகஒழுங்காகச் செய்ய வேண்டும்.**

**மாணவர்கள் தம் பள்ளி வாழ்விலிருந்து தமது வேலைகளை ஒழுங்காவும் அழகாகவும் துப்பரவாகவும் திருப்தியாகவும் செய்யப் பழக வேண்டும். அப்படியானால் மாணவர்கள் தமது வாழ்வில் உயர்நிலை அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.**




**திருமதி. எஸ். கே. ஆனந்தராஜா**
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்

காரைதீவு.

"கல்வி கரையில; கற்பவர் நாள் சில;
கற்க கசடற; நிற்க அதற்குத்தக.
கற்றோர்க்கு மூன்றுவிழி"

இவையுரைத்து மறைந்தோரின் நிழல் ஈதோ காண்கின்றோம்.
கரையில்லாக் கல்விக்கு கல் மண்டபம்;
சுற்றுமதில், பூந்தோட்டம், ஆடுதிடல், கலையரங்கம்
ஆயிரமாயிரம் பாலர்; அவர் முதுகை அழுத்தும்பை;
நூற்றுக்கு மூன்று குரு; நூலடுக்கு, கைப்பிரம்பு;
ஆற்றுப்படுத்த அதிபர், உப அதிபர், ஆசிரியர்
ஆறேழு கோட்டம், கல்வி மாவட்டம், மாகாண
அலுவலகம், அதிகாரி, மேலதிகாரி
இத்தனையும் கூட்டி மொத்தம் கல்வித்துறை,
அத்தனையும் கொண்டும் அறுவடையிற் சற்றிறக்கம்,
இருக்கத்தான் செய்யும்; இயற்கையிது; என்றாலும்
ஏன் என்று பார்த்து ஈடு செய்வ தெமது கடன்.

## சமூகத்திருப்பணி

கற்பித்தல் ஒரு தொழிலாய் ஆகவில்லை இன்னும் - அது
சொற்சொரியலாய், சுமையாய்த் தெரிகிறது
தொழில் எதற்கும் திட்டவட்ட விதியுண்டு
தூய நீர் தயாரிக்க "கிளார்க்கின்" விதியுண்டு
குளோரினைத் தயாரிக்க "தீர்க்கனின்" முறையுண்டு
ஓசோனைத் தயாரிக்க "சீமனின்" முறையுமுண்டு
வாயுவின் நிலையறிய "போயிலின்" விதி
ஆவியின் பரவலுக்கு கிரகத்தின் விதி
பொயிசனின் பரம்பலில் மாறற்றிறன் காண
மாறாத விதியொன்று முண்டு
இரும்பை ரதமாக்க ஏற்ற விதியுண்டு
தங்கத்தை நகையாக்க தக்க விதியுண்டு
வான் வெளியில் கோட்டை கட்டி பூவுலகைக் குடியமர்த்த
ஆழச் சமுத்திரத்தில் அகம் சமைத்து வாழவென
விஞ்ஞானி முன்னேறும் காலமிது மெய்யாகும்

ஆனால் என் பிள்ளைக்கு (அ) ஆனாவைக் கற்பிக்க
திட்டவட்டமான விதிமுறையைக் கண்டதில்லை
ஒரு பொழுது கண்டபலன் மறு பொழுது மாறி நிற்கும்
பெற்ற பயிற்சி நெறி எவ்விடத்தும் பொருந்தவில்லை.

ஒவ்வொருவர் உள்ளத்தின் உள்ளடக்கம் கண்டறிந்து,
ஒவ்வொன்றாய்க் கலை புகட்ட உளநூலைக் கற்றவர் யார்?

ஆனாலும் இத் தொழிலுக் கென்றே பிறந்த சிலர்
எழுத்தறிவித்த இறைவன் எனப்படுவோர்.
அன்றிருந்து இன்றுவரை அகக்கண் திறந்தவர்கள்.
ஆற்றும் திருப்பணிதான் ஈது; அன்றிக் கூலி பெறும்
வாத்தித் தொழிலல்ல - இது சமூகத் திருப்பணியே.

## பெற்றோர் – ஆசிரியன்

கருவறையில் கல்வி உதிப்பதென்றார் எம் முன்னோர்.
உண்மை அது; ஆனாலும் ஓர் திருத்தம்.
அக் கருவதனை ஆக்கி அதற்குயிர் கொடுத்தோர்
கல்விக்கு முன்னுரிமை கோரத் தகவுடையோர்.
ஆதலினால் பெற்றோரே கல்விக்கு வித்திட்டோர்.
இரண்டாம் படியினரே ஆசிரியர்: என்றாலும்
ஒன்று வந்து குறுக்கிட்டு மீண்டும் பழுவதனை
ஆசிரியர்க்கேற்றிப் பெற்றோர் சுமைகுறைத்த
சம்பவம் ஒன்றுண்டு; சற்றுப் பொறுத்திருங்கள்!
பெற்றோர், அவர் சூழல், பிள்ளையுள்ளம் தாக்காவோ?
தாக்கும். தம்பாலரது சூழலினைச் சீரமைத்து
சுற்றம் தழுவிச் சுகம் பேணிப் பள்ளியுடன்
நித்தம் தொடர்பு கொள்ளல் பெற்றோர் கடன்.

'Child is a Father of a Child" என்றான் ஆங்கிலத்தில்.
பிள்ளையும் ஒருபிள்ளைக்குத் தந்தையே ஆகின்றான்.
ஆதலினால் ஆசிரியன் பெற்றோர்க்கும் ஆசானாய்
ஆன கதையுண்மை - ஆனாலும் சுமைதாங்கி நல்லாசான்.
தன் கடனைச் செம்மை பெறச் செய்து முடிப்பதென்றால்
நாட்கணக்குப் போதாது; கடிகாரம் நாளுக்கு
மூன்று சுற்றேனும் முள் சுழற்ற வேண்டாமோ? சுற்றாதே!

## அதிபர் – அதிகாரி – உயர் அதிகாரி

தந்தையாய்க் காவலனாய் தண்ணளி சேர் நண்பனாய்
எந்தவிடத்தெந்த முகம் வேண்டுமெனச் சிந்தித்து
அந்த விடத்தந்த வகை ஆளுமையோடு ஆடிவரும்
சொந்தத் தலையுடைய சூரியனே நல்லதிபன்.

கட்டிடம், பள்ளிக்காணி, கதிரைகள் மேசை, வாங்கு,
புத்தகம் முதலாய் யாவும், தன்னிலே தாங்கிக் கொண்டு
எத்தனை உதவியாள் கடமையில் உளரோ, பாலர்
எத்தனை உளரோ, யாவுந் தாங்குவோன் அதிபனாவான்.

கல்வி, அதைப் பெறும் மாணவர், ஆசான், அதிபரோடு
கல்வித்தலம், அவற்றின் நிருவாக பீட மெல்லாம்
இயங்கும் வகை இயக்கி, மேலிடத்தும், கீழிடத்தும்
ஏறி இறங்கும் அதிகாரம் பெற்றவர் அதிகாரி.

அதி - காரம் மிளகாய்க்கு, அவர் இனிய செங்கரும்பாய்,
ஆலையிலே அரைபட்டு, அதி - சாரச் சர்க்கரையாய்,
மீண்டும் கொதிநீரில் ஆடிக் கரையுண்ட
ஆரமுதம். ஆனாலும் அருங்கடுகே உயரதிகாரி.

நோயின்றேல் வைத்தியரின் தேவை இல்லை.
குற்றமின்றேல் நீதிபதித் தேவையுண்டோ?
தவறின்றேல் தனக்குத்தான் அதிகாரி!
தவறு உண்டு. தலை ஒன்று வேண்டும். நன்றே.

---

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை.
திறமான புலமை எனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

- பாரதி-

---

# யுத்தமென்ற பேயரக்கன் கூத்து

செல்வி, ஆ. தர்சினி
ஆண்டு – 8
தி/சேனையூர் மத்திய கல்லூரி.

இரத்தம் சிந்திப் பூமிதனில்
யுத்தம் கோலம் போடுது
சுத்தமான வானில் நாளும்
சத்த வெடிகள் கூடுது
நித்தம் நித்தம் குடிமனைகள்
நிலத்தில் வீழ்ந்து சரியுது
யுத்தம் என்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது.

"தக்கதிமி தக்கிட்ட தகதிமி தகிட
தகதிமி தகிட தகதிமி தாம்.

புத்தகத்தைத் திறக்கும்போது
யுத்த முழக்கம் தடுக்குது
சொத்து சுகங்கள் யாவும் அழிந்து
சித்தம் வாடிக்கலங்குது
கத்துகின்ற குழந்தைகூட
வாயை மூடிப் படுக்குது
யுத்தமென்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது.

"தக்கதிமி தக்கிட்ட தகதிமி தகிட
தகதிமி தகிட தகதிமி தாம்"

வீட்டைச் சூழ சுற்றம் வந்து
ஆட்டம் காண விரும்புது
நாட்டு நிலமை அதைத் தடுத்து
ஓடு ஓட விரட்டுது
காட்டு வாழ்க்கை இடையிடையே
வந்து தலை காட்டுது
யுத்தம் என்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது.

"தக்கதிமி தக்கிட்ட தகதிமி தகிட
தகதிமி தகிட தகதிமி தாம்"

மக்களெல்லாம் அங்குமிங்கும்
அகதிகளாய் அலைகிறார்
வெட்கமின்றி இரந்து வாழ்ந்து
வேதனையில் பழகினார்
மானமுள்ள மக்கள் கூட்டம்
மரத்து மனம் தாழ்கிறார்
"யுத்தமென்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது"

"தக்கதிமி தக்கிட்ட தகதிமி தகிட
தகதிமி தகிட தகதிமி"

பட்ட மரம் போல வாழ்வு
ஆகினார்கள் பல பேர்
விட்டுப்போன உறவு கண்டு
பதறினார்கள் பல பேர்
சுட்டு மனம் பேதலிக்கும்
சோகமுள்ளோர் பல பேர்
யுத்தமென்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது.

"தக்கதிமி தக்கிட்ட தகதிமி தகிட
தகதிமி தகிட தகதிமி தாம்"

ஒற்றைக் காலில் தவமிருக்கும்
கொக்கைப்போல ஆகினோம்
இற்றை வரை சமாதானம்
கானல் நீராய் காண்கின்றோம்
குற்றம் என்ன செய்தோமென்று
கூற யாரும் வரவில்லை
யுத்தமென்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது.
"தக்கதிமி தக்கிட்ட தக்கதிமி தகிட
தகதிமி தகிட தகதிமி"
கோயில் குளம் சென்ற நாங்கள்
கூடிக்களிக்க வழியில்லை
தூய தமிழ் விழாக்கள் என்று
ஒன்றுகூட வகையில்லை
பயணம் என்று நினைத்த நேரம்
வெளியில் செல்ல வழியில்லை
"யுத்தம் என்ற பேயரக்கன்
கூத்து தினமும் நடக்குது"

# மாணவர் நலன் ஓம்பல்

**செல்வி. கு. சதாசிவம்**
உ. க. ப. (விஞ்ஞானம்) வளநிலையம்,
பிராந்திய கல்வித் திணைக்களம்,
திருக்கோணமலை.

"வரப்புயர...........கோன் உயர்வான்" ஆம், ஒரு நாட்டின் மாணவச் செல்வங்களின் அடைவு மட்டம் உயரும் பொழுது அந்நாடு அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்வதைக் காணலாம். இவ்வடைவு மட்டம் உயர வேண்டுமெனின் மாணவர் நலன் ஓம்புதல் பேணப்படுதல் வேண்டும்.

ஒரு மாணவன் சிறுவனாகப் பாடசாலைக்குள் நுழையும் பொழுது அவன் தாய், தந்தை, மற்றையோரில் ஒட்டுண்ணியாகவே இருக்கிறான். ஆனால் கல்வியைப் பெற்று வெளியேறும் பொழுது அவன் சுதந்திரமான முழு மனிதனாக வெளியேற வேண்டும். கல்வி மேம்பாடு, சமூகப் பொருத்தப்பாடு, பிறர்நலம் நாடல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தலைமைத்துவத்திறன், சமநிலைப்பண்பு, சனநாயகச் சிந்தனை ஒட்டுமொத்தமாக சிறந்த உயரிய ஆளுமை கொண்டவனாக உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட வேண்டுமெனின் கல்வியியலாளர்களாகிய எமது கடப்பாடு யாது? சிந்திக்கற்பாலது.

மாணவர் கல்வியை வேண்டி நிற்கின்றனர். அதனை அவர்கள் நலம் பெற நல்க வேண்டிய பொறுப்பு அதிபர், ஆசிரியரைச் சார்ந்ததாகும். இக்கல்வியூட்டும் பணி புனிதமானது. காரணம் எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். எனவே இங்கு தன்நலமற்ற சேவை எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு அதிபர் தனது பாடசாலை மாணவர் தமது கல்வியைப் பெற எல்லா வசதிகளையும் செய்து கொடுக் வேண்டும். மனித வளம் பௌதீக வளம் கொண்ட சூழலை அமைத்து வகுப்பறைக் கற்பித்தல் நடவடிக்கைக்குத் துணை போதல் வேண்டும் பாடசாலையின் சிறந்த பொது நிர்வாக ஒழுங்கு, வகுப்பறைக் கற்பித்தலில் தனது செல்வாக்கைச் செலுத்த வேண்டும்.

மாணவர் நலன் ஓம்பலில் ஆசிரியர்களின் பணியே மேலானது. அவர்களே மாணவர்களை வடிவமைப்பதில் முக்கிய பங்கினை மேற்கொள்கின்றனர். குரு, நண்பன், தாய், தந்தை, ஆலோசகன், வழிகாட்டி, நீதிபதி போன்ற இன்னோரன்ன பாத்திரங்களாக மாற வேண்டும். கடமை உணர்வே ஆசிரியர் சேவையின் கண்ணாகும். இந்நிலையில் ஓர் ஆசிரியர் வகுப்பறைக் கற்பித்தலுக்கான பூரண ஆயத்தம் கொண்டிருத்தல் அவசியம். பாடவிதானம், பாடத்திட்டம், பாடக் குறிப்பு, பாடப்பதிப்பு, கற்பித்தல் உபகரணம் என்பவற்றுடன் சிறந்த மனப்பாங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் தாம் செய்வது தொழிலல்ல, ஒரு சேவை என்பதை உணர்தல் வேண்டும். கடமை உணர்வே கண்ணாகக் கருதும் ஆசிரியர்கள் இந்நாட்டிற்குத் தேவை என்பதனாலேயே புனிதமான ஆசிரியத் தொழில் தற்போது ஆசிரிய சேவை என தரம் உயர்ந்து, தலை நிமிர்ந்து நிற்கிறது.

ஏனோ தானோ என்றிருத்தல், அடிக்கடி லீவு எடுத்தல், பிந்தி வருதல், ஆசிரியர் அறையில் அவப்பொழுது கழித்தல் போன்றவை மாணவர் நலனைப் பாதிப்பதுடன் ஒழுங்கீனங்களுக்கும் வழிவகுக்கும். இதற்கு மாறாகப் பாடசாலையில் மேலதிக வகுப்புக்கள், பரிகாரக் கற்பித்தல், பரீட்சை வைத்தல் என்பன மாணவர் கல்வியை மேம்படுத்துவதுடன் நம்பிக்கையையும் ஊட்டுவதாக அமையும்.

மாணவர், ஆசிரியர் தொடர்பு இங்கு முக்கிய இடம்பெறும் கருத்துப் பரிமாற்றம், புரிந்துணர்வு என்பன அடைவு மட்டத்தை உயர்த்தும்.

ஆசிரியரின் நடையுடை பாவனை போற்றுதற்குரிய முறையில் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாணவர் வீரவணக்கம் செலுத்தும் நிலை உருவாகும். இதனால் மாணவர் ஒரு நல்ல ஆசிரியனைப் பின்பற்றி நலம் பெறுவர்.

மாணவர் நலம் கல்வியைக் கொடுப்பதுடன் பூரணமாவதில்லை. அவர்களது உடல், உள வளர்ச்சி, சமூகப் பொருத்தப்பாடு, பொருளாதாரநிலை, கலை கலாசாரம், சமயம் என்பனவும் அவர்களின் நல்வாழ்வுக்குத் துணை போகின்றன.

நலமான உடலில் நலமான உள்ளம் கல்வி கற்க ஏற்புடையதாக அமைதல் வேண்டும். இவ்வுடல்நலம் பேணல் தொடர்பான அறிவை மாணவர்களுக்குப் புகட்டுவதுடன் வேண்டிய ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்கல் இன்றியமையாதது. மேலும் பாடசாலை நிர்வாகம், மருத்துவ அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் என்போருடன் இணைந்து பார்வை, கேட்டல், பல் போன்ற சிகிச்சைகளுக்குக் காலத்துக்குக் காலம் ஒழுங்குகள் செய்தல் வேண்டும். ஒத்துழைப்பு நல்காத பெற்றோருக்கும் ஆலோசனை வழிகாட்டல் மேற்கொள்ளல் சிறப்புடையது.

மாணவர்களது உளச்சமநிலை கல்வி பெறுவதற்கு மிக அவசியமான ஒன்றாகும். ஒரு மாணவனுக்கு அன்பு, கணிப்பு, காப்புத் தேவைகள் பூர்த்தியாக்கப்படுமிடத்து உளச் சமநிலை கிடைக்கின்றது. எவ்வகைச் சூழலில் இருந்து வந்தாலும், எங்கு என்ன குறைபாடுகள் இருந்தாலும் மாணவர் நலம் கருதி அவ்விடைவெளிகளை நிரப்ப வேண்டியது பாடசாலையே. அவர்களின் உளநலம் கல்வியில் உயர்வைக் கொடுக்கும்.

ஒருவன் என்று இம்மண்ணில் பிறக்கின்றானோ அன்று அவன் சமூகத்தின் கட்டாய ஆயுள் அங்கத்தவனாகின்றான். பாடசாலையும் அச்சமூகத்தினுள் உள்ள ஒரு சமூகமாகும் என்ற வகையில், அவனுடைய சில எதிர்பார்ப்புகளை அது நிறைவேற்ற வேண்டியுள்ளது. குறிப்பாக சமூகத்தின் அங்கத்தவனாக அவனைத் தயார்ப்படுத்தும் கருமத்தின் போது கல்விக்கே முதலிடம் கிடைக்கிறது. இதனை உற்றுநோக்கின் ஒரு நல்ல மாணவனை உருவாக்கும் பணியில் நாம் ஈடுபடும் பொழுது, ஒரு நல்ல சமூக அங்கத்தவனை உருவாக்கும் பணி பூரணத்துவம் பெறுகின்றது. நல்லவன் நலன் பெறுகின்றான். இங்கு மாணவர் நலன் பேணல், சமுதாய நலம் பேணலாக மிளிர்கின்றது.

ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர் வேறுபட்ட பொருளாதார அந்தஸ்தை உடையவராவர். இவ்வந்தஸ்தைச் சீருடை மறைத்து விடுகின்றது, என்று கொள்ளப்பட்டாலும் ஏற்றத் தாழ்வுகள் பரகசியமானவையே. மாணவர் நலம் விரும்பும் எந்த ஓர் அதிபரோ, ஆசிரியரோ பேதமற்ற நோக்குடையவராக இருத்தல் வேண்டும். இதனால் உளவியல் அடிப்படையில் அன்பு, கணிப்பு, காப்பு ஆகிய தேவைகள் பூர்த்தியாக்கப்படும். இதன் பயனாகச் சிறந்த அடைவு மட்டம் சாத்தியமாகிறது.

பல்வேறு சமூகப் பின்னணியைக் கொண்ட மாணவர்கள் தம் கலை, கலாசாரங்களையும் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப உணர்ந்து நடப்பவர் அல்லர். இந்நிலையில் மாணவர் நலனைக் கருத்தில் கொண்டு இப்பண்பாட்டுக் கோலங்கள், விழுமியங்கள் என்பவற்றை விழாக்கள், நாடகங்கள், பேச்சுக்கள், சித்திரங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலம் உணர்த்துதல் வேண்டும்.

ஒரு சமூகத்தின் கலை, கலாசாரங் களை எவ்வாறு பாடசாலை பிரதிபலிக்கின் றதோ அதேபோல ஆன்மீக ஈடுபாட்டையும் பாடசாலை பிரதிபலிக்கிறது. எனினும் இன் றைய மாணவர் உலகம் பூரணமாக இதில் ஈடுபடுவதில் நாட்டம் கொள்வது குறைவே யாகும். மனிதன் மனிதனாக வாழ, இறை பயம் வேண்டும். இவற்றை உணர்த்தி மாண வர் திசைமாறாது வாழ வழி வகுப்பது அதி பர், ஆசிரியரின் கடப்பாடாகும். அன்பைப் பிரதிபலிப்பதும் அன்புவழி காட்டுவதும் சமய வழியாகும். மாணவர் நலன் பேண சமய அறிவு அவசியம் என்பதால் சமய பாடம் எமது பாட விதானத்தில் சேர்க்கப்பட்டிருப் பதை நாம் உணரலாம்.

மாணவர் நலன் ஓம்பல் என்பது வெறும் ஏட்டுக்கல்வியைக் கொடுப்பதோடு பூரணத்துவம் பெறுவதில்லை என்பதைக் கல்வியியலாளர்களாகிய எல்லோரும் உணர் தல் வேண்டும். தன்னலமற்ற சேவை மனப் பாங்குடைய அதிபர், ஆசிரியர்களையே இன் றைய மாணவர் உலகம் மிக வேண்டி நிற்கின்றது.

# கூடவு குயிலே

**செல்வன். நா. சிவானந்தராஜா**
ஆண்டு - 10

தி/திருவள்ளுவர் வித்தியாலயம்
பூநகர்.

வாராய் கருங் குயிலே
வானவனாம் நம் தேவனிடம்
போர்க் காலக் கொடுகைகளை
போய்க் கூவு இசைக் குயிலே

இன மென்றும் மொழி யென்றும்
இழிவாகப் பல பேசி
கனதுயரை; விதைத்து மல்லோவிட்டார்
கண்களிலே மண்ணை அள்ளிப் போட்டார்.

காலையிலே எழுந்து கொண்டு
கடமைதனை முடிக்க வெண்ணி
வேலையிலே நாமிருக்கும் போது
வேதனைதான் மனதை வந்துமூடும்

மாலையிலே மகிழ்ந் திருந்து
மனம் நிறைந்து கண்ணுறங்கும்
வேளையிலே வேட்டோசை கேட்கும்
வேதனையில் உடலாடி வேர்க்கும்

வான மெங்கும் மேகம் இல்லை
பொம்மர் வரா வேளை இல்லை
கானகமும் எரிந்து சாம்பலாகும்
காலமெலாம் வேதனைதான் சூழும்.

வயல் வெளியில் பயிர் விளைத்து
வரம்பு வாய்க்கால் குதித்தோடும்
செயல் மறந்து பலகாலமாச்சு
சீரழிந்து வாழ்வு மெல்லப் போச்சு

# நாட்டின் நடப்பு

**செல்வி. சுதர்சினி வைகுந்தநாதன்**
ஆண்டு - 12 கலைப்பிரிவு

வ/வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா
வித்தியாலயம்

வாழ்க்கையைப் போலவே - இன்று
தேசமும் தெருவில் நிற்கிறது
மானிட யாதகத்தில் மதிப்பிற்குரிய சொற்கள்
மறைந்து போகின்றது
சுதந்திரம் என்ற சொற்பதம்
சொற்களாக மட்டுமே சுடர்விட்டெரிகிறது.

கலியுக காலத்தில் புதுயுகம் படைத்தாலும்
சுதந்திரம் மட்டும் காணாமல் போகிறது
அடிமை விலங்கைத் தகர்த்தெறிய
ஆர்ப்பாட்டம் செய்த மனிதகுலம்
சுதந்திர தாகம் தணியாமல்
உயிரை மாய்த்தது அக்கிரமம்.

மொழியின மதத்திற்கு சுகந்திரம் இல்லை
உயிருக்கும் உணர்வுக்கும் சுதந்திரம் இல்லை
கன்னிப் பெண்ணுக்கோ காலங்கள் எல்லை
தனித்துவாழ்ந்தாலே உடைமைகள் கொள்ளை
சுதேச நாட்டிலும் சுதந்திரம் இல்லை
சுற்றிப் பார்த்தால் கொடுமையின் எல்லை.

நீதி மன்றங்கள் நிர்வாணமானது
தர்மஸ் தூபிகள் தள்ளாடுகின்றது
அதர்மம் மட்டும் ஆட்சி அமைத்து - தன்
எண்ணப் போக்கில் அரசாள்கிறது
தட்டிக் கேட்க தலைகள் எழுந்தால்
பிணங்கள் தானே கீழே சாயுது.



# யாரது?

**மாதுமை சிவசுப்ரமணியம்**
ஆண்டு 13

தி/ புனித மரியாள் கல்லூரி
திருக்கோணமலை.

மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது.

"அம்மா பாடசாலைக்கு நேரம் போயிட்டுது கெதியா டிபன் பொக்ஸை தாங்கோ என்றாள்" ஷைலொளி

"இந்தாங்கோ மகள்" என்றபடி வந்த ஷைலுவின் தாய்-

"கவனமாகப் பொயிட்டு வாங்கோ"என வாசல் வரை வந்து வழி அனுப்பி விட்டார்.

முதுகில் சுமந்த புத்தகப் பையும் அந்தச் சிரித்த குறுகுறுத்த அழகிய முகமும் அவ்வீதியில் நடந்து செல்லும் ஏனைய மாணவிகளில் இருந்து அவளை வேறு படுத்துவன. ஷைலொளி பிரபல பெண் பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த மாணவி. பாட சாலை வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் அப்பாலே உள்ளதால் வீட்டில் இருந்து இரண்டு நிமிட நடையிலே பஸ் ஸ்டான்ட் அடைந்து, அங்கிருந்து பஸ்ஸிலே செல்வது அவளது வாடிக்கையான நிகழ்ச்சி

அன்றும் பாடசாலைக்கு அருகாமை யில் உள்ள பஸ் ஸ்டான்டில் இருந்து கும் பலோடு கும்பலாக இறங்கிப் பாடசாலையை நோக்கி நடந்தாள். அந்தச் சிறு வீதியிலே இரண்டு மூன்று வீடுகளே உள்ளன.

இன்று வித்தியாசமாக ஒரு வீட்டின் வாசலில் கோலம் ஒன்று இருந்தது. கன நாட்கள் பூட்டியிருந்த வீட்டிற்கு யாரோ புதி யவர்கள் வந்து விட்டார்கள் என்று எண்ணிய படியே பாடசாலையை அடைந்தாள் ஷைலு. தினம் தினம் காணும் புதுப் புதுக் கோலங் கள் அவளிற்கு அந்த வீட்டின் மேல் மதிப் பினை உண்டாக்கியது.

காலங்கள் ஓடிக் கொண்டிருக்க....... அன்றும் வழமைபோல அவ் வீட்டின் வழியே அக்கோலத்தினை தரிசனை செய்து விட்டு நிமிர்ந்தவள் அவ்வாசலிலே ஒரு இளைஞன் நிற்பதைக் கண்டாள். சிவந்த நிறமும் கறுத்த பிரேம் போட்ட கண்ணாடியும் அவனை மேலும் உயர்த்திக் காட்ட ஒரு கணம் பார்வையை நேரே சந்தித்துக் கொண்டாள்.

ஒரு கணம் தான். ஆனாலும் உயிர் வரைப் பாய்ந்ததாக இருந்தது ஷைலுவுக்கு. அன்று முதல் பாடசாலையில் ஒரே பதட்டம். எதையுமே கவனத்துடன் செய்ய முடிய வில்லை. பதட்டமும் ஒரு சில நாட்களில் நிற்காத ஓர் தொடர்ந்த தலை வலியாய்ப் போனது, ஷைலுவுக்கு. ஆனாலும் அது சுகமான பதட்டங்கள். ஒரு சில நாட்களாக இதே நாடகம். அவ்விளைஞனின் கண்கள் மட்டுமே ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டி ருக்க வாய்ப்பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை பஸ் ஸ்ரான்டில் இறங்கிய பொழுது அவளுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி.காரணம் அந்த இளைஞன் பஸ் ஸ்ரான்டின் சுவர் ஓரமாகச் சாய்ந்த படி நின்றிருந்தான். நீல நிற டெனீம் ஜுன்சும் வெள்ளை ரீ சேட்டும் அவனை ஒரு படி மேலுயர்த்தி நின்றன. சாய்ந்தபடி அவன் பார்த்த பார்வை ஷைலுவை ஏதோ செய்தது.

இவளும் நடக்க அவனும் பின் தொடர்வதை உணர்ந்து கொண்டாள் இவள்-

"மன்னிக்க வேண்டும் உங்களின் பெயரைச் சொல்வீர்களா"? என்று கேட்க

எங்கிருந்தோ அந்த "லெவல்" வந்து அவளு டன் ஒட்டிக் கொண்டது. விளங்காத மாதிரியே போய் விட்டாள்.

அன்றும் அவளைக் கடந்து கொண்டு செல்லும் போது "ஷைலு" என்ற ஆழமான குரல் கேட்டு திடுக்கிட்டு சுற்றும், முற்றும் பார்த்தவள் கண்ணாடிக்குள் கண்கள் சிரிக்க, வரிசையான வெண்பற்களைக் காட்டியபடி நின்றிருந்த அவனைக் காண அவளால் நம்ப முடியவில்லை.

இவ்வளவு அழகாக அவளது பெயரை இதுவரை யாருமே உச்சரிக்கவில்லை. அவ ளுக்கு அதற்கு மேல் ஒன்றுமே ஓடவில்லை.

நிச்சயமாக இந்த நாடகங்கள் அவ ளது படிப்பினை இரவில் குழப்பியது மட்டும் உண்மை.

படிப்பு ஒரு புறமிருக்க, அவனும் ஷைலுவைத் தொடர்வது நிற்கவில்லை.

தினமும் ஷைலுவிடம் கேட்பான் தனது மனத்தில் உள்ளவற்றை சொல்ல வேண்டும் என்பான். ஆனாலும் அவளின் அசட்டையான பார்வை அவளின் நெஞ்சின் ஓரத்தில் ஏற்பட்ட கசிவினை மூடி மறைத்து விட்டது.

வழமையான அவனது தொந்தரவுகள் இப்பொழுதெல்லாம் அவளின் இதயத்தில் ஆழமாய்ப் பதிந்து விட்டன.

அன்று பாடசாலை முடியவும் வந்த அவன், "ஷைலு நான் பெரதெனியா யூனிவ ஸிட்டி இஞ்ஞினியரிங் ஸ்டுடன்ட் என்ர பெயர்.."

என்று தன்னைப் பற்றி என்றுமில்லாத வாறு சொல்லத் தொடங்க, அவள் வீதியைக் கடந்து பஸ்ஸினுள் ஏறிவிட்டிருந்தாள்.

ஏதோ நெஞ்சத்தைப் பிசைந்தாலும் அவளால்தன் கௌரவத்தை இழக்க முடிய வில்லை. இந்த இரண்டு கிழமை நாடகத்தில் படிப்பு நாசமானதென்பதே உண்மையாக நடந்தது.

சனி, ஞாயிறு இடைவெளியின் பின்பு திங்கட் கிழமை மீண்டும் பாடசாலைக்கு வந்தவளுக்கு பஸ் நிலையத்தில் பெரிய அதிர்ச்சி. அப் பெயர் தெரியா இளைஞனை இன்றும் காண வில்லை. அடி மனதில் கவலை படர்ந்தாலும் காட்டிக் கொள்ள முடியவில்லை. கண்களை அக்கம் பக்கம் சுழல விட்டவளுக்கு மீண்டும் ஏமாற்றம். அவனைக் காணவில்லை.

மெல்ல பாடசாலையை நோக்கி நடந்தவளுக்கு சிறிது இன்ப அதிர்ச்சி. அவன் எதிரே பயணப் பொதியுடன் நடந்து வந்து கொண்டிருந்தான்..........

அவளைக் கடக்கும் போது அவள் அறியாமலே நின்று விட்டாள்.

மெல்லச் சிரித்தபடி.......

"ஷைலு......நான் உங்களிடம் நிறைய கதைக்க வேண்டியிருக்கின்றது. ஆனால்..... நீங்கள் பார்க்கவே மாட்டன் என்கிறீர்கள் பரவாயில்லை"

நான் பெரதெனியா சென்று கட்டா யம் கடிதம் போடுவன்" உங்களுக்கு என்னை புரிந்து கொள்ள முடிந்தால் நாங்கள் மீண்டும் சந்திக்கலாம்......."என்று கூறி நிமிர்ந்தவனுக்கு தூரத்தில் கண்டி என்ற பலகையுடன் வந்த, இன்ரசிற்றி பஸ்ஸைக் கண்டதும் அவசர மாக வீதியைக் கடந்து சென்று பஸ்ஸினுள் ஏறினான்.

கண்ணாடி வழியே......

மீண்டும் அப்பெயர் தெரியா இளை ஞனுடையதும் ஷைலுவின் பார்வையும் மீண் டும் கலந்தன.

ஆம்! அதே முதல் பார்வைகள் போல இவையும் மனத்தின் அடி வரைப் பாய்ந்த போதும் மௌனம் ஒன்றே சாட்சியானது.

பஸ், கண்ணில் இருந்து மறையும் வரை நின்று பார்த்தவளுக்கு நெஞ்சுக் கூட்டுக் குள் எதுவோ செய்தது.

காலம் யாரை விட்டு வைத்தது.

பெயரை அறிந்த அவன் நிச்சயம் கடிதம் போடுவான் என்ற எதிர்பார்ப்பில் ஷைலு இருந்தாள்.

தான் முகம் முறித்த சந்தர்ப்பங்களை நினைத்த அவளுக்கு கவலையே பரிசானது.

என்ன செய்தாலும் அவனது அழகிய முகமும், பேச்சுக்களுமே ஒலித்தன. அவளது உணர்வுகளை அவை மெல்ல மெல்ல அரித்துக் கொண்டிருந்தன. காதல் என்பது இது தான் என இதய பூர்வமாக உணர்ந்து கொண்டாள். பெயர் கூடத் தெரியாத அவனது நினைவுகளைத் தவிர ஆறுதலடைய வேறொன்றும் இருக்கவில்லை.

அதிகாலையில் விழித்துக் கொண்டால் இப்பொழுதெல்லாம் தபாற்காரனை எதிர்ப்பார்ப்பதே வேலையாகிப் போனது........

ஒரு கிழமை.......இரண்டு கிழமை........ ஒரு மாதம்.............அவனுடைய பக்கத்தில் இருந்து எந்தவித சலனமும் இல்லை.

அன்று சனிக்கிழமை இரவு மேசையில் கொப்பியை முன்னே விரித்துக் கொண்டு இருந்தவளுக்கு ஒன்றுமே ஏறவில்லை.

மெல்ல.........ரேடியோவைத் திருப்பினாள்
"யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போனது"

என்ற பாடல் காற்றோடு காற்றாய் கலந்து வர சூடான இரு கண்ணீர்த் துளிகள் புத்தகத்தில் பட்டுத் தெறித்தன.

ஆகஸ்டின் பரீட்சைக்கு வீணே ஒரு மாதத்தை வீணடித்த நிலை அவளுள் முள்ளாய் குத்தியது.

மெல்ல புத்தகத்தை ஆவலோடு பார்த்தாள்.......

கண நேர காதலுக்குத் தான் அடிமை ஆகிப் போனது தெரிய காலம் பதில் கூறும் என்ற துணிவுடன் அடிமனதில் அவனது நினைவுகளுடன் சமாதியாகி.......

ஆகஸ்ட் பரீட்சைக்கு தன்னை தயார் படுத்த ஆரம்பித்தாள் ஷைலொளி.

(யாவும் கற்பனை)

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே.**

**-பாரதி-**

# அமைதி நம்கையில்

**க. நளினி**
திருகோணமலை.

பூமியெனும் கோளினிலே
நிலமுண்டு நீருண்டு
வானுண்டு நெருப்புண்டு
வாயுவகை பலவுண்டு

உயிர்வாழத் தேவையான
உகந்தநல்ல காலநிலை
இறைவன்தந்த வரம்போல
இயற்கையிலே அமைந்திருக்கு

பறவைகளும் விலங்குகளும்
நீர்வாழும் உயிரினமும்
பகுத்தறியும் திறன்கொண்ட
மானிடரும் இங்குண்டு

கானகத்து விலங்கினொடு
கலந்திருந்த மானிடர்கள்
ஆரம்ப நாட்களிலே
அலைந்தார்கள் இலக்கின்றி

அடுத்த பொழுதுபற்றி
சிறிதேனும் கவலையின்றி
பசித்தநேரம் புசித்து விட்டு
களிப்புடனே இருந்தார்கள்

அலைந்து திரிந்தவர்கள்
குழுக்களாய் சேர்ந்து பின்
ஆற்றங்கரை ஓரத்திலே
குடிலமைத்து வாழ்ந்தார்கள்

போட்டியின்றி பொறாமையின்றி
உயர்வுதாழ்வு பேதமின்றி
சமவுரிமை நிலைகொண்டு
சமத்துவமாய் வாழ்ந்தார்கள்

இவர்வாழ்வை இந்நாளில்
மனக்கண்ணால் பார்க்கையிலே
அதுபோன்ற நல்வாழ்வை
எண்ணிமனம் ஏங்கிறதே

மனிதஇனம் என்னும்
ஓரினமாய் இருந்தவர்கள்
இனமதம் மொழிபேசி
பல்லினமாய் பிரிந்ததென்ன

மண்ணென்றும் பொன்னென்றும்
பேதலிக்கும் நிலையென்ன
அடிமைகளை வளர்த்தெடுக்கும்
அதிகார வாழ்வென்ன

ஆறறிவின் காரணமா
அடக்கியாளும் நிலையிங்கே
சிந்திக்கும் திறன்தானா
பேதங்களை விதைக்குதிங்கே

இனமென்ன மொழியென்ன
எல்லோரும் ஓரினமே
மன்னரென்ன மக்களென்ன
அனைவருமே மானிடரே

அரசனென்ன ஆண்டியென்ன
பணம்தந்த பட்டம்தானே
அறிஞனென்ன மூடனென்ன
கல்விதந்த தரம்தானே

பிறந்தவர் யாவருமே
இறப்பதும் உறுதிதானே
இருக்கும்வரை மகிழ்வின்றி
இறுதிவரை துயரெதற்கு

மண்மீது வந்தபோது
செவிகேட்ட போர்முழக்கம்
கண்மூடிப் போகும்வரை
தொடர்ந்திடுமா இப்பூமியிலே

யுத்தத்தின் காரணத்தை
கண்டறிந்து நிறுத்தாமல்
வெற்றிதோல்வி பார்த்து
தொடர்கிறதே வெறியாட்டம்

யாவருக்கும் சமநீதி
அனைவருக்கும் சமவுரிமை
கிடைத்திடுமே சமாதானம்
தோன்றிடுமே அமைதிநிலை

நம்கையில் இருப்பதனை
தேடித்தேடி அலைவதென்ன
நம்மனங்கள் ஒன்றானால்
நமக்குண்டு நல்வாழ்வு.

# பாடசாலைச் செயற்பாட்டுடன் இணைந்து கணனி பற்றிய அறிமுகம்

திரு. ஜே. ஏ. மரியதாஸ்
கணனிப் பிரிவு
வ. கி. மா - கல்வி அமைச்சு.

எமது வாழ்க்கைக்கும் நேரத்திற்கும் இடையே காணப்படும் நெருங்கிய தொடர்பு காரணமாக இன்றைய கண்டு பிடிப்புகள் யாவும் நேரத்தை மீதப்படுத்துவதையே முதன்மையாகக் கொண்டு திகழ்கின்றன. இக் கண்டு பிடிப்புக்களில் வாழ்க்கை முறை களைப் பெரிதும் மாற்றக் கூடியதாக கம்பியூட் டர் திகழ்வதனால் இந்த யுகமானது கம்பி யூட்டர் யுகம் என அழைக்கப்படுகின்ளது.

கம்பியூட்டர் இயலை கருவியம் (Hard ware), கணமம் (Softwarw) என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இதில் கருவியம் நமது நாட்டில் முன்னேறுவதற்குத் தேவையான விலையுயர்ந்த கருவிகளைப் பெற முடியாததன் காரணமாக கணிமத்துறை யிலேயே முன்னேற வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதை உணர்ந்து நமது அரசு பாடசாலைகளுக்கும் கம்பியூட்டரை அளித் துள்ளது. அதே வேளை சகல பாடசாலை களுக்கும் வழிகாட்டியாக பின்வரும் நோக் கங்களின் அடிப்படையில் பாடத்திட்டத்தை யும் வழங்கியுள்ளது.

## நோக்கங்கள்

1. மேலதிக கல்வியான கணனி விஞ்ஞானம் அல்லது கணனியின் பிரயோகங்களுக்குத் தேவையான அடிப்படையைப் பெறுதல்.
2. நாளாந்த வாழ்க்கைக்குச் சாத்தியமான தும் பொருத்தமானதுமான கணனியின் உபயோகத்தைப் பரிசோதித்தல்.
3. தனிநபர்களும், ஸ்தாபனங்களும் கணனி யின் தாக்கத்தை உயர்த்தல்.
4. கணனியினை உபயோகிக்கும் செயல் முறைத் திறனை அபிவிருத்தி செய்தல்.

மாணவரை மையமாகக் கொண்டு இந்நோக்கங்களின் அடிப்படையில் உருவாக் கப்பட்ட இப் பாடத்திட்டத்தைக் கற்பித்து முடித்ததும் மாணவர்கள் பின்வரும் அறி வைப் பொற்றிருப்பார்கள் என அரசு எதிர் பார்க்கின்றது.

1. கணனி ஒருங்கின் கூறுகளை அறிந்திருப் பதுடன் செய்து காட்டும் அறிவைப் பெற்றி ருத்தல். (உ-ம் கருவியம் கணிமம் போன் றவை)
2. நிறுவனங்களில் கணனியினை உபயோ கித்து செய்திக் கூறுகளை ஆய்வினை செய்வதன் தீமைகளை அறிந்திருத்தல்.
3. கணனியினை உபயோகித்து செய்து காட்டுவதால் விருப்பமும் சந்தோசமும் அடைதல்.
4. கணனி பிரயோகத்தின் நோக்கத்தையும் எல்லைகளையும் அறிந்திருப்பதுடன் செய்து காட்டும் அறிவைப் பெற்றிருத்தல்.
5. தமக்கு புரிந்த வழியில் செயற்திட்டத்திற் குரிய இலகுவான குறிப்பை எழுதக் கூடிய தாக இருத்தல்.
6. தனிநபர்கள் நிறுவனம் சமூகம் ஆகியன தொடர்பான சமூம, கணக்கியல், பொருளா தாரம், சம்பந்தப்பட்ட கணனி மயமாக்கல் பற்றி அறிந்து இருத்தலும், செய்து காட்ட லும்.
7. இலகுவான கணனி வழிமுறைத் திட் டத்தை (Programme) அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருத்தல்.

இப்பாடத்திட்டம் கணனியின் உப யோகத்தைப் பற்றிய பொதுவான அறிவை மாணவருக்கு வழங்குமுகமாக தயாரிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் இத்துறையில் விருப்பமும் திறமையும் உள்ள மாணவரை முன்னேற்ற முடியும் என எதிர்பார்க்கப் படு கின்றது.

இக்கணனியின் உபயோகத்தை இரண்டு வகையாகக் கூறலாம்.

1. மேலே கூறப்பட்ட அரசின் நோக்கங்களி னூடாக மாணவரை உயர்த்தல்.
2. பாடசாலைச் செயற்பாடுகளில் இதன் உபயோகத்தை பயன்படுத்தல்

இரண்டாவது உபயோகத்தை எடுத்து நோக்கின் இக்கணனியை உபயோகித்து அதிபர்கள் தமக்குத் தேவையான சகல விபரங்களையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியம். உதாரணமாக தமது பாடசாலை ஆசிரியரின் பெயர் விலாசம், கல்வித் தகைமை, வயது சேவை, விஷேட தகைமைகள் ஆற்றல்கள் போன்ற பல்வேறு விபரங்களைச் சேமித்து வைப்பதன் மூலம் வேண்டிய நேரத்தில் தேவையான படிவங் களில் எடுத்துக் கொள்ளலாம். பாடசாலை மாணவரின் கல்வி நில்லையை பல வழிகளில் (உ-ம் வரைபுகள் போன்றவை) பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்த படியாக இவற்றைச் செய்வ தற்குத் தேவையானது கணனியைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தலாகும். எனவே கணனி பற்றிய அறிமுகத்தை இனி பார்ப்போம்.

கணனி என்பது கூட்டல், கழித்தல் பெருக்கல், வகுத்தல் முதலிய செயன்முறை களைச் செய்யும் திறன் படைத்த கணக்கி டும் இயந்திரம் மட்டுமல்ல ஏராளமான செய் திக் கூறுகளைச் சேமித்து வைத்து, தக்க செயல் திட்டங்களுக்குகேற்ப ஏறக்குறைய மனித மூளையைப் போன்றே ஆக்கபூர்வமாக முடிவுகளைத் தரவல்லது.

தற்போது உள்ள கணனிகளை அவை பயன்படுத்தும் செய்திக் கூறுகளின் அடிப்படையில் எண்ணிலக்க கணனி (Digital) ஒப்புமைக் கணனி (Analog) என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒப்பு மைக் கணனி தொடர்ச்சியான இயற்பியல் அளவுகளாக (Continuous variable) அழுத்தம், வெப்பம் முதலியவற்றை அளக் கப் பயன்படுகின்றது. எண்ணிலக்கக் கணனி எண்களைக் கொண்டு கணக்கிடும் வகையில் செயலாற்றுகின்றது. இது எண்களை இரு நிலை எண்களாக (Binary Number) வைத்து இயங்குகிறது. இக் கணனி ஒப் புமைக் கணனிகளைப் போல் அல்லாமல் மிகச் சரியான முடிவைத் தருவதனால் வாணியம், அறிவியல், பொறியியல் மற்றும் பல்வேறு துறைகளிலும் வெகுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.


கலப்பினக் கணனி என்றழைக்கப் படும் மூன்றாம் வகை கணனியும் உண்டு இது ஒப்புமை, எண்ணிலக்கக் கணனிகளின் தன்மைகளைக் கொண்ட கட்டமைப்பாகும். இவை சில சிறப்புப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

எண்ணிலக்க கணனியினை தனி நோக்குக் கணனி, பொது நோக்குக் கணனி என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தனிப்பட்ட புதிர்களைத் தீர்க்க தனிநோக்குக் கணனி பயன்படுத்தப்படுகின்றது. உ-ம் கப்பல் விமானம் முதலியவற்றில் ஏற்படும் வழிப் பயண சிக்கல்களை நிவர்த்தி செய்தல்.

பொது நோக்குக் கணனி பல வகை யான செயல்முறைகளைச் செய்யும் திறன் படைத்தது. தற்போது நாம் பயன்படுத்துவது இக் கணனியேயாகும்.

இனி கணனியின் அங்கங்களின் அமைப்புப் பற்றிப் பார்ப்போம்.

## மைய செயல் தொகுதி



மேலே காட்டப்பட்ட படத்தில் கம்பியூட்டரின் இயக்க அமைப்பு முறை விளக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள அம்புக்குறிகள் மின்சாரத் துடிப்புகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் செல்வதைக் குறிக்கின்றது. செய்திக்கூறுகள் அல்லது வழிமுறைகள் இடுவிரல்(**Input Unit**)மூலம் கணனிக்குக் கொடுக்கப்பட்டு அவை பின் தகுந்த மின்சார தொகுதிகளாக மாற்றப்படுகின்றன. இந்த மின்சாரத் துடிப்புகள் கணனியின் செய்கையைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டு தொகுதிக்கு (**Control Unit**) செல்கின்றன. கட்டுப்பாட்டுத் தொகுதியே நினைவுத் தொகுதி. மற்றும் கணக்கியல் தொகுதி இவற்றைப் பயன்படுத்தி, வழிமுறையில் உள்ள விபரப்படி வழிமுறையைச் செயற்படுத்துகின்றது. நினைவுத் தொகுதி, வழிமுறைகளையும், செய்திக் கூறுகளையும் தேவைப்படும் வரை சேமித்து வைத்துக் கொள்ளவும் கணக்கியல் தொகுதி, கணக்கியல் செயலையும் (Logical Comparisions) இயக்கத்தை நடத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. வழிமுறை செயற்படுத்தப்பட்ட பின் அதன் முடிவுகளும், இதர செய்திகளும் விடுவிரல் தொகுதிக்கு அனுப்பப்பட்டு, பின் அவற்றின் மூலம் கணனி அறிந்து கொள்ளும் நிலையிலிருந்து, மனிதர்கள் அறிந்து கொள்ளும் நிலைக்கு மாற்றப்பட்டுகின்றது. நினைவுத் தொகுதி, கட்டுப்பாட்டுத் தொகுதி, கணக்கியல் தொகுதி, ஆகியவை இணைந்து மைய செயல் தொகுதியென குறிக்கப்படுகின்றது. (**Central Processing**)

இச் செயற்பாட்டை பின்வரும் உதாரணம் மூலம் பார்ப்போம்.

1. **AB** ஐ வாசிக்கவும்
2. **A**ஜயும் **B**ஜயும் கூட்டவும்
3. விடையை கணனித் திரையில் தரவும்.

மேற்காட்டப்பட்ட வழிமுறைகளை இடுவிரலகத்தினூடாக கணனிக்குகொடுக்கப்பட்டதும். அவை நினைவகத்தில் சேமித்து வைக்கப்படும். பின் ஒவ்வொரு வழிமுறைகளும் ஒழுங்கு முறைப்படி கட்டுப்பாட்டுத் தொகுதிக்கு அனுப்பப்படும். முதல் வழிமுறையைப் பார்த்ததும், இடுவிரலகத்திற்கு ABயின் பெறுமானத்தைப் பெறும் படி செய்தியை அனுப்பி அதனைப் பெற்று நினைவகத்தில் சேமிக்கும் இரண்டாவது வழிமுறையில் கணக்கிடும்படி கூறியிருப்பதினால் நினைவகத்திலுள்ள பெறுமானங்களை கணிதத் தொகுதிக்கு அனுப்பி விடையைப் பெற்று நினைவகத்தில் சேமித்து வைத்திருக்கும் இறுதி வழிமுறையைக் கண்டதன் பின்னே விடையை விடுவிரலகத்திற்கு அதாவது கணனி, திரைக்கு அனுப்பி வைக்கும். இவ் வழிமுறையையே (Computer Programme) எனக் கூறுவர். இதுவே கணனியில் நடைபெறும் செயற்பாடாகும் இதனை எளிய முறையில் பின்வருமாறு கூறலாம்.

இடுவிரல் Input → விபர ஆய்வனை Date Processing → விடுவிரல் Output

இனி இயக்க வழியமைப்பு ஒழுங்கு (**Operating System**) பற்றி பார்ப்போம்.

இயக்க வழியமைப்பு ஒழுங்கு என்பது கணனிக்கும் இயக்குனருக்கும் இடையில் மொழிமாற்றியாகத் தொழிற்படும் வழிமுறைகளின் தொகுதியாகும். உதாரணமாக, மின் அழுத்தியை (**Iron**) உபயோகப்படுத்துவதற்கு மின்சாரம் முக்கியமானதுபோல் கணனிக்கு இவ் ஒழுங்கு மிக முக்கியமானதாகும்.

கணனியினை நாம் உபயோகப்படுத்தும் நிலைக்கு கொண்டு வர உதவுவது இவ் இயக்க வழியமைப்பு ஒருங்கேயாகும். மேற்கொண்டு இலகுவில் கற்கவும், நாளாந்த வேலைகளை இலகுவாக்கவும் உதவும்.

(**Word Processing**) என்பது எவ்வகையான விடயங்களையும் தட்டெழுத்து செய்யவும் தேவையான போது தேவையான இடங்களை மாற்றவும் உதவுவதாகும்.

உதாரணம்:- கடிதங்கள், புத்தகங்கள், அறிக்கைகள், வியாசங்கள் போன்றவை.

இதில் உபயோகப்படுத்தும் தட்டச்சுப் பலகை சாதாரண தட்டெழுத்து இயந்திரங்களில் உள்ளதைப் போன்றே உள்ளது. ஆனால் விசேட கட்டுப்பாட்டு விசைகளை இது கொண்டுள்ளது. இக்கணனியுடன் இணைக்கப்பட்ட காட்சிப்பொறி (**Display Unit**) தட்டெழுத்துச் செய்வதை காண்பிக்கும். இதனைப் பார்த்து விசேட விசைகளைப் பயன்படுத்தி மாற்றங்களைச் செய்யவோ தேவையான விதத்தில் ஒழுங்கமைக்கவோ முடியும்.

# நானென்ற ஆணவம் மாற்று!

அஸ்ரபாநூர்தீன்

எழிலுறு கலைநிறை நாடு – இங்கு
எதிரிகள் நிறைவதைப் பிழையெனப் பாடு!
நலிவுறும் ஐக்கியம் பேணு! – புவி
நலம்பெற மனத்திலே உறுதியைப் பூணு!
கலியுகம் இதுவெனக் காட்டும், – பலர்
கருத்தினை மாற்றிடும் உணர்வினை யூட்டு!

❀

ஆணென்றும் பெண்ணென்றும் சாதி – இதில்
ஆயிரம் பிளவுகள் இலையெனச் சாதி!
வீணிலே சாவதேன் நீதி? – இங்கே
வீணர்கள் வாழ்வதால் வெல்வதா நீதி!
நானென்ற ஆணவம் மாற்று – இங்கே
நாமெல்லாம் ஒன்றென நீபறை சாற்று!

❀

எங்ஙனும் போர்மேகம் சூழும்! – இருள்
எம்மவர் வாழ்வினைத் தினம்வந்து மூடும்!
தங்கிடும் துன்பத்தை வெல்லு(ம்) – நல்ல
தாரக மந்திரம் அன்பென்று சொல்லு!
இங்கினி சமாதானம் வேண்டும் – மனம்
ஏங்கிடும் ஒற்றுமை பிறந்திட வேண்டும்!

❀

உலகெங்கும் எழுகின்ற யுத்தம் – பல
உயிர்களின் அழிவுக்கு வழிகோலும் நித்தம்!
கலகங்கள் எண்திசை மூட்டும்! – இந்தக்
காசினிக் கெப்போது நிம்மதி கிட்டும்?
விலகட்டும் துன்பங்கள் இங்கு! – நல்ல
விடிவொன்று வருதற்கு எழுந்திடு இன்று!.

❀

# பாடசாலை அலுவலக முகாமைத்துவம்

**திருமதி. ரஞ்சனி நடராஜபிள்ளை**
உதவிச் செயலாளர்,
கல்வி அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.
திருகோணமலை.

பாடசாலை என்னும் நிறுவனம் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி பயிற்றுவதையும், அவர்களது பாடத்திட்டத் திற்குப் புறம்பான ஆற்றல்களை வளர்ப்பதை யும், அவர்களது ஒழுக்கம், பண்பாடு என்ப வற்றை நெறிப்படுத்தி சமுதாயத்தில் உன்னத மானவர்களாக உருவாக்குவதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பாடசாலை என்னும் நிறுவனத்தில் மாணவர்கள், அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர், கல்வி சாராத உத்தியோகத்தர், ஊழியர் என மனித வளங்களும், நிலம், கட்டிடம், தளபாடம், நூலகம், ஆய்வுகூடம், விளையாட்டரங்கு போன்ற பௌதீக வளங்களும், நிதிவளங் களும் வழமையாக இருக்கும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட வளங் களைக் கொண்டு கல்வி மேம்பாட்டுடன் இணைப் பாடத்திட்டச் செயற்பாடுகளான கலை, விளையாட்டு போன்ற துறைகளிற் பயிற்சி, பொதுவான மனித ஆற்றல் மேம் பாடு ஆகிய குறிக்கோள்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்வது பாட சாலை என்னும் நிறுவனத்தின் பிரதான பணியாகும். இந்நடவடிக்கையில்,

★ மாணவர், ★ பெற்றோர், ★ ஆசிரியர்
★ அரச நிறுவன அதிகாரிகள்
★ பொதுவான சமுதாயம்

எனப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் தகவல்கள், வேண்டுகோள்கள் எனப் பல விதமாக பாடசாலை அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெறும்.

★ நேர்முக உரையாடல் ★ பதிவு செய்தல்
★ தொலைபேசி, தொலைச் செய்தி, தந்தி தகவல் ★ சாதாரண அஞ்சல்கள்
★ பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலமான தகவல்கள்

எனப் பல்வேறு ஊடகங்களூடாகப் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புபட்ட தகவல்கள் யாவும் கிடைக்கப்பெறும். இவை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு நடவடிக்கையை (ACTION) எதிர்பார்த்து நிற்பவையாகும். அவையாவன, வேண்டுகோள்களை நிறை வேற்றுதல் அல்லது நிறைவேற்ற இயலா மைக்குக் காரணத்தைத் தெரிவித்தல், கேட் கப்பட்ட தரவுகளை அனுப்பி வைத்தல், அல்லது விடுக்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளு தல் போன்றவையாகும். இவை யாவற்றுக் கும் ஒரு அலுவலகத்தில் பதிவேடுகள் (REGISTERS) கோவைகள் (FILES) என் பன பேணப்படும்.

உள்வந்த தபால், ஆவணங்கள், பதி வேடு, பெறுமதி வாய்ந்த பொருட் பதிவேடு, வெளியே அனுப்பப்படும் ஆவணப் பதிவேடு போன்றவை பிரதானமானவையாகும். காசோ லைகள், பதிவுத் தபால்கள், பெயர்வழிக் கோவைகள் முதலியன ஒரு அலுவலகத் தால் மிகவும் அக்கறையுடன் கையாளப்பட வேண்டியவையாகும்.

கோவைகள் என்பன ஒரு அலுவல கத்தைப் பொறுத்தவரை பிரிக்க முடியாத அங்கமாகும். பாடசாலை அலுவலகத்தில் மாணவர் பிரவேசம், தளபாடத் தேவைகள், பரீட்சைகள், ஆசிரியர் இடமாற்றம், விடுதிச்

சாலை நிர்வாகம், கணக்காய்வாளர் திணைக்கள ஐய வினாக்கள், ஆசிரியர், அலுவலக ஊழியர் பெயர் வழிக்கோவைகள், அமைச்சு திணைக்களக் கட்டளைகள் என ஏராளமான விடயங்கள் குறித்துக் கோவைகள் பேணப் பட வேண்டியிருக்கும்.

கோவைகள் பேணப்படும் போது ஒவ்வொரு பொதுவான விடயத்துக்கும், விசேட கவனம் செலுத்த வேண்டிய தனியான விடயங்களுக்கும் தனித்தனியான கோவைகள் பேணப்பட வேண்டும். இவற்றை இலகுவாக அடையாளம் காண்பதற்கும், கடிதத் தொடர்புகளைப் பேணுவதற்கும் தனித்தனியாக அதே நேரத்தில் ஒரு ஒழுங்குமுறையைப் பின்பற்றுவதாயமைந்த இலக்கங்கள் இடப்பட வேண்டும். கோவையின் முன் அட்டையில் சம்பந்தப்பட்ட விடயத்தலைப்பு துலக்கமாக எழுதப் பட வேண்டும். கோவைகள் கையாளப்படுவதற்கு இலகுவான வகையில் காலத்துக்குக் காலம் ஒரே கோவை இலக்கத்தின் கீழேயே தொகுதி I, தொகுதி II, என புதிய கோவைகள் ஆரம்பிக்கப்படலாம்.

கோவையிலுள்ள ஆவணங்கள் யாவும் கோவை அட்டையின் உட்புற முன் பக்கம் அல்லது அட்டையின் பின் உட்புறத்திலிருந்து கால ஒழுங்கின்படி கோவையிடப் பட வேண்டும். ஒவ்வொரு இதழும் வரிசை முறைப்படி இலக்கமிடப்பட வேண்டும். கோவைகள் யாவற்றினதும் விடயத்தலைப்புப் பெயர், இலக்கம் என்பன கோவைகள் பதிவேட்டிற் குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்தின் பின் மேல் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படாத கோவைகள் மூடப்பட்டுச் சுவடிக்காப்பறைக்கு அனுப்பப்பட வேண்டும். பெறுமதியற்ற முற்றிலும் தற்காலிகமான விடயங்களடங்கிய கோவைகள் மூடப்பட்டுச் சில காலத்தின் பின் பட்டியற்படுத்தப்பட்ட பின் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிநிலை அலுவலர் முன்னிலையில் அழித்தொழிக்கப்படலாம்.

அலுவலக மேற்பார்வையும், பரிசோதனையும் உரிய முறையிற் செய்யப்பட வேண்டும். அதிபர் நேரடி மேற்பார்வையில் அலுவலகம் இயங்காத இடங்களில் அதிபர் காலத்துக்குக் காலம் அலுவலகத்தைப் பரிசோதனை செய்து குறைகளிருப்பின் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அலுவலகங்களில் திரும்பத் திரும்ப கையாளப்படக் கூடிய விடயங்களில் காலத்தையும், காகிதாதிகளையும், மனித உழைப்பையும் சேமிக்கக்கூடிய விதத்தில் புதிய வழிமுறைகளைக் கையாள்வது பற்றிச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கலாம். பொருத்தமான அலுவலக உபகரணங்களை ஏற்பாடு செய்வதன் மூலமும், அலுவலகத் தளக்கோல அமைப்பை (Office Layout) காற்றோட்டம், வெளிச்ச வசதி, பொருத்தமான தளபாடம் என்பவற்றின் மூலமும் மேம்படுத்தலாம்.

அலுவலகத்தை இயக்குபவர்கள் பொருத்தமான பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பு வழங்குதல், கலந்துரையாடல் மூலம் புதிய முறைகளைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்துதல் என்பனவும் சிறந்ததாகும்.

நிறுவனத்தின் இருதயம் போன்றது அலுவலகம். நிறுவனத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் பொறுப்புக் கூறவேண்டியவர் பாடசாலையின் தலைவராகிய அதிபரேயாவார். எனவே பாடசாலை அலுவலக முகாமைத்துவம் என்பது முக்கியமானதொரு பணியென்பதையும், அது தொடர்பான முகாமைத்துவ ஆற்றலை வளர்த்துப் பயனுறுதி வாய்ந்த முகாமைத்துவ முறைமை (EFFICIENT MANAGEMENT SYSTEM) மிக மிக அத்தியாவசியமானது என்பதும் எவரும் உணர்ந்து கொள்ள வேண்டியதொன்றாகும்.

✡✡✡

## கல்வி

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறம் கடை நல்இசையும் நாட்டும் உறுக்கவல் ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லைச்
சிற்றுயிர்க்கு உற்ற துணை

-குமரகுருபரர்-

# காந்தி

**கே. எம். நௌசாத்**

மட்/அலியார் மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.

அகிம்சை வழியின் தாயென்றால்,
இந்திய மண்ணே - என்
மனக்கண் முன்னே
மத்தாப்பு விடுகின்றது
காந்தி அடிகளாரின்
கனிவான தோற்றம்.
கண்கள் இரண்டிலும்
ஊஞ்சலாடுகின்றது;

காந்தி அடிகளாரும்,
ஏகாதிபத்தியத்திற்கு
எதிராக அன்று,
ஏர் பிடித்த பாட்டாளியையும்,
ஏழையான கூட்டாளியையும்,
சேர்த்துக் கற்றுத் தந்த
கதாயுதமல்லவா அது

ஓ காந்தியே!
அன்று வெள்ளையன்
ஆட்சியின் போது,
ஆயுதக் குழுக்களின்
அணிகள் உன்மீது
பாறாங் கற்களாய்
சுமைகளை ஏற்றியபோதும்,
கலங்காதிருந்தவன் நீ.

கூனிய உடலோடு
குனிந்து நின்றாலும்,
அகிம்சை என்னும்
கோல் கொண்டு
நிமிர்ந்து நின்றாய்

அதனால் தானோ என்னவோ,
அகிம்சை என்னும்
பணமில்லாத ஆயுதத்தை,
மனவுறுதியோடு ஏந்தி
மக்களின் மனங்களை
மயிலிறகால் வருடிவிட்டாய்

அகிம்சைக்கு அத்திவாரம் நீ
பிரித்தானிய அத்திவாரத்தை
ஆட்டங்காண வைத்த
சத்திய வானும் நீயே;
ஆடை வேண்டாமென்று
நெய்து உடுத்திக் கொண்டு
ஒருடையோடு அலைந்து
ஓர் நாட்டைப் பெற்றாய்,

நீ இறந்து விட்டாய்
உன்னை மறந்துவிட்டனர்
சுதந்திர தினம் வந்தால்தான்
உன்மீது சுதி பாடுகிறார்கள்
மற்ற வேளையெல்லாம்
மறந்து விடுகிறார்கள்.

★

*நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.*

**-திருக்குறள்-**

# காடே மகிழ்ந்தது

முத்துக்குமாரசாமி லக்ஷயன்
ஆண்டு 7 C
தி/ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி

ஓங்கி வளர்ந்த மரங்கள் அடர்ந்த காடு அது. மரங்களின் நடுவே கிளைபரப்பி விழுதுகள் ஆட அந்த ஆலமரம் வளர்ந்திருந்தது. இளங்காற்று வீசிக்கொண்டிருந்தது இலைகள் சலசலத்து ஒலி எழுப்பின. காட்டு விலங்குகள் ஒன்றாய்க் கூடி இருந்தன. பறவைகள் யாவும் மரக்கொப்புகளிலும், மிருகங்களின் முதுகுகள் மேலும் குவிந்திருந்தன. குரங்குக் குட்டிகள் ஆல விழுதுகளில் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தன.

கரடியார் தன் கூட்டத்தோடு வரிசையாக வந்தமர்ந்தார். பறவைகளும் விலங்குகளும் முகத்தை முகத்தைப் பார்த்த வண்ணம் காத்திருந்தன.

பெண் குரங்கு ஒன்று தன் தலைவனின் தலையில் கைவைத்துப் பேன் பார்த்துக் கொண்டிருந்தது. தலையை இதமாகத்தடவி விட்டு "இன்றைக்கு என்ன விஷேசம்" எனக் கேட்டது. "இந்த மனிசங்க எங்களைக் கேவலப் படுத்தி நக்கலடிக்கிறாங்களாம்" பக்கத்திலிருந்த பெண் குரங்கு கூறியது.

"எப்படி" பேன் பார்த்த குரங்கு கேட்டது. பூனையை ஏமாற்றி அப்பத்தைப் பறித்துத் திண்டானாம் நம்மடவன்" பெண் குரங்கு கூறியது. "இது என்ன கதை இந்த மனிசங்க என்ன நினைத்து இப்படி நடக்கிறாங்க" பேனை வாயில் போட்டு கடித்த படி கேட்டது.

பொறுமையாக இருந்த ஆண் குரங்கு "இந்த மனிசங்களைப் பற்றி உனக்குத் தெரியாது. கொடூரமானதுகள்" என்று சொல்லி முடிக்கும் போது காடே அதிரும் வண்ணம் பிளிறிக் கேட்டது. முயலார் முன்னால் ஓடிக் கொண்டு வந்தார்.

பின்னால் ஒட்டகச் சிவிங்கியார் - "பெருந்தலைவர் வருகிறார் வருகிறார்" எனக் கட்டியங் கூறியது. எல்லோர் கண்களும் சத்தம் வந்த பக்கம் திரும்பின. கரடியார் மெல்ல எழுந்து நின்றார். மான் கூட்டம் மருண்டு கொண்டு நின்றது. சிறுத்தைகளும் பன்றிகளும் நின்றிருந்தன.

பெரிய ஆரவாரம் கேட்டது. காட்டெருமைகள் அணிவகுத்துப் பின்னால் வந்தன. கழுதைகள் இராகம் பாடி வந்தன. குயில் கூவ மயில் ஆடிவர, மரங்கொத்தியார் மேளந்தட்ட ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. குதிரைகள் மிடுக்கோடுவந்தன. குதிரைகளின் மேல் காகங்கள் கும்மாளமடித்தபடி வந்தன. ஒட்டகத்தின் முதுகின் மேல் கொக்கு மாமி சவாரி செய்து கொண்டு வந்தார். "அவரது பக்கத்தில் இருப்பது யார்"கிளிகள் கீச்சிட்டன எல்லோரது கண்களும் ஒட்டகத்தின் முதுகில் நிலைகுத்தின. நரியார் தான் என புரிந்து கொண்டன.

கரடிக்குட்டி தன் தாயிடம் கேட்டது "அம்மா அந்த நரிமாமா தொண்டையில் மீன் முள்ளுப் பொறுத்து கொக்கு மாமி எடுத்து விடும் போது கொக்கு மாமியை சாப்பிட்டுப் போட்டாராமே" "சத்தம் போடாம கொஞ்சம் இரு" தாய்க்கரடி குட்டியை அடக்கி வைத்தது நரியார் கொக்கு மாமியின் பக்கம் சற்று சாய்ந்து கொண்டு படு குஷியாக இருந்தார். "அம்மா நரிமாமா தந்திரம் உள்ளவராம். எல்லாரையும் ஏமாற்றி விடுவாராம் உண்மையா? கரடிக்குட்டி விடாப்பிடியாகக் கேட்டது. தாய்க் கரடிக்குப் பதில் சொல்லத் தெரியாது நச்சரித்தது. கரடிக்குட்டி துருவித் துருவி தாய்க் கரடியைக் கேட்ட படியே இருந்தது.

# பங்குபற்றல் முகாமைத்துவம்

சி. தண்டாயுதபாணி
அதிபர்

தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

வரையறுக்கப்பட்ட வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற்று உரிய குறிக்கோளை அடைவதற்கான ஒரு செய்முறையே முகாமைத்துவம் ஆகும். இம்முகாமைத்துவத்தில் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், நெறிப்படுத்தல், தொடர்பு கொள்ளல், தீர்மானம் எடுத்தல், மதிப்பீடு செய்தல் முதலான அம்சங்கள் உள்ளன.

ஒரு பாடசாலை அதிபரின் பொறுப்புக்களை பின்வருமாறு பாகுபடுத்திக் காட்டலாம்.

1) பாடசாலையின் அன்றாட நடவடிக்கைகளை நடாத்திச் செல்லல். (பராமரிப்பு நிர்வாகம்).

2) பாடசாலையின் கற்றல் - கற்பித்தல் கருமத் தொடரில் பண்பு ரீதியான அபிவிருத்தி ஏற்படக் கூடியவாறான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல். (அபிவிருத்தி நிர்வாகம்).

இதில் முதலாவது விடயம் பொதுவான நிர்வாகத்தைச் சேர்க்கின்றது.பாடசாலைகளில் அதிபர்களால் கவனிக்கப்படுகின்ற விடயமாக இது அமைகின்றது. ஆனால் இரண்டாவது விடயம் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டது. இது பெரும்பாலும் கவனிக்காமல் விடப்படுகின்ற ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இந்த விடயத்தைச் சிறப்பாகக் கவனிப்பதற்கு முகாமைத்துவத் திறன்கள் அவசியமாகின்றன.

மரபு ரீதியான கல்வி நிருவாகம் இன்றைய கல்விப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் வலுவற்றது. கல்விக்கான பெருந்தொகையான கேள்வி, சிக்கலான பாடவிதானங்கள். விரைவான வளர்ச்சி தேவைப்படுதல் ஆகிய வற்றின் அடிப்படையில் நோக்கும் போது மரபு ரீதியான நிர்வாகம் பலவீனப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆகவேதான் இன்றைய அதிபர்களுக்கு அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கல்வி முகாமைத்துவம் பற்றிய திறன்கள் அவசியமாகின்றன.

இம்முகாமைத்துவம் பற்றிய கோட்பாடுகளில் அண்மைக் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்டதாக "பங்குபற்றல் முகாமைத்துவம்" என்னும் கோட்பாடு அமைகின்றது.

மத்தியிலிருந்து பிரிவுகள் அல்லது துறைகள் நோக்கிய திட்டமிடல் முறைகளில் அல்லது முகாமைத்துவ முறைகளில் சில குறைபாடுகள் உணரப்பட்டன. மத்தியிலிருந்து கீழ் நோக்கி வருகின்ற முகாமைத்துவ முறைகளில் இலக்குகள் பாரியதாகக் காணப்பட்டன. (உ-ம் எத்தனை சதவீதத்தால் பொருளாதார வளர்ச்சி எய்தப்பட வேண்டும்?) வளங்கள் இத்தகைய இலக்குகளை நோக்கி ஒதுக்கீடு செய்யப்பட்டன.இவ்வாறான மேலிருந்து கீழ் நோக்கிய முகாமைத்துவத்தில் துறைகளின் முக்கியத்துவம் கவனிக்கப்படாமல் விடப்பட்டது. தனிப்பட்டவர்களதும், தனிப்பட்ட நிறுவனங்களதும் சிறிய அலகுகளதும் தேவைகள் புறக்கணிக்கப்படக் கூடிய நிலமை ஏற்பட்டது. இவ்வாறான ஒரு நிலமையில்தான் கீழிருந்து மேல் நோக்கிய அதாவது பிரிவுகள் அல்லது துறைகளிலிருந்து மத்தியை நோக்கிய திட்டமிடல்/முகாமைத்துவ முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனைத் தான் வேறு வார்த்தையில் பங்குபற்றல் முகாமைத்துவம் என்கின்றோம்.

காகங்களைக் கண்டதும் நரிமாமாவைப் பற்றி சந்தேகங்களைப் புட்டு வைத்தது.

"அம்மா காக்கையாரை ஏமாற்றி வடையைப் பறித்துத்திண்டாராமே நரிமாமா, உண்மையாம்மா? குட்டியின் சந்தேகத்திற்குப் பதில் கூறாது "தாய்க்கரடி ஆரவாரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தது.

ஒட்டகச் சிவிங்கி மீண்டும் உரத்து "பெருந்தலைவர் வந்து விட்டார்" என்றது. பெரிய சுளகுக்காது ஆலவட்டம் வீச, துதிக் கையை மேலே உயர்த்தி வீறுநடையோடு வந்தார். தானைத்தலைவர் நம் யானையார்; மிருகங்களிடையே எங்கும் பெரும் அமைதி குட்டிகளைப் பெரிய மிருகங்கள் தூக்கி வைத்து வேடிக்கை காட்டின.

மேடையில் பெருந்தலைவர் வீற்றிருக்கும் பக்கத்தில் கொக்குமாமி, காக்கையார், நரிமாமா மாலைகளோடு அமர்ந்தனர். சேட்டைகள் செய்த குரங்குக்குட்டிகள் அடங்கி இருந்தன. பறவைகள் அமைதியாக இருந்தன பெருந்தலைவர் எழும்பினார். "சபையோரே இன்று இந்தக் காடு புதுமை காண்கிறது. பறவைகள், மிருகங்கள் என்ற வித்தியாசமில்லாது கூடியிருக்கிறோம். ஏன் தெரியுமா? என்ற கேள்வியோடு சற்று நிறுத்தினார். பறவைகளினதும், மிருகங்களினதும் முகங்களில் கேள்விக் குறி படர ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. யானை தொடர்ந்தது. "நம் எல்லோரையும் இந்த மனித இனம் ஏதோ ஒரு வகையில் வதைக்கிறது. நம்மைக் கிண்டல் பண்ணிக் கதைகள் சொல்லி உதாரணம் காட்டுகிறார்கள். காகத்தை நரி மாற்றியதாகக் கதை கட்டினார்கள். மீன் முள்ளைத் தொண்டையில் இருந்து எடுத்த கொக்கை நரி தின்றதாகவும், பூனையை ஏமாற்றி அப்பத்தை குரங்கு தின்றதாகவும் தூக்கணாங் குருவிக் கூட்டை குரங்கு பிய்த்து எறிந்ததாகவும் கதைகள் சொல்கிறார்கள். இவை யாவும் பொய். மனிதன் தன் இனத்தை நல்வழிப்படுத்த இவற்றைப் பயன்படுத்துகிறான்! யானை முடிக்குமுன் கரடிக்குட்டி துள்ளிக் குதித்து விசில் அடித்து கை தட்டியது. பறவைகள் மிருகங்கள் எல்லாம் சேர்ந்து கைதட்டி ஆரவாரம் செய்தன.

யானை தொடர்ந்தது "சபையோரே நமக்கு மனிதனைப் போல் ஆறறிவு இல்லை நாம் ஒற்றுமையாக பொறுமையாக வாழ்வோம் வள்ளுவர் என்ற நல்ல பெரிய மனிதர் சொன்னாராம்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நல்நயம் செய்து விடல்"

என்று. இந்த மனித சாதியை மன்னிப்போம் இங்கே பாருங்கள் மனிதனது கதைகளால் மனமுடைந்த கொக்குமாமி, நரி, காகம் குரங்கு யாவும் ஒன்றாய் இருக்கின்றன. நாம் அவர்களைப் பெருமைப் படுத்தவே இன்று கூடியுள்ளோம் "என யானை முடித்தது. பழங்கள் விருந்துகள் பறிமாறப்பட்டன. இறுதியில் தலைவர் "தன் இனத்தையே அழிக்கும் மனிதனைப் போல் இல்லாமல் நாம் அமைதியாக இருப்போம். ஒற்றுமையும் பொறுமையுமே நமது ஆயுதம்" தனது துதிக்கையை உயர்த்தி யானை பிளிறியது. காடே அதிர்ந்து மகிழ்ந்தது.

**நல்லதோர் வீணை செய்தே - அதை**
**நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?**
**சொல்லடி சிவசக்தி - எனைச்**
**சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்**
**வல்லமை தாராயோ - இந்த**
**மாநிலம் பயனுற வாழ்வதற்கே**
**சொல்லடி சிவசக்தி - நிலச்**
**சுமையென வாழ்ந்திடல் புரிகுவையோ?**

- பாரதி -

பங்குபற்றல் முகாமைத்துவத்தில் துறைகள் அல்லது சிறிய அலகுகளின் தேவைகள் முக்கியத்துப்படுத்தப்படுகின்றது. எதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது நோக்கப்படுகின்றது. இவ்வாறான கீழிருந்து மேல் நோக்கிய முகாமையில் நிறுவனங்களினதும் திருப்தி வெளிப்படும். திட்டத்தை நடைமுறைப்படுத்தலில் உற்சாகமும், பங்களிப்பும் கூடுதலாக இருக்கும். செயற்றிட்டங்கள் வெற்றி காணும்.

பங்குபற்றல் முகாமைத்துவச் செயற்பாட்டில் நிறுவனத்தின் அங்கத்தவர்கள் / ஊழியர்கள் முகாமைத்துவத்தில் இணைந்து கொள்கின்றனர். பாடசாலைகளின் வளர்ச்சியிலும் இம்முகாமைத்துவ முறையைக் கையாள்வதன் மூலமாக பல அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. தமது கருத்துக்கள் கேள்படுகின்றது/கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்ற திருப்தி நிறுவனத்தின் அங்கத்தவர்களுக்கு/ ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது.
2. பாடசாலையின் வளர்ச்சிக்கு எல்லோரும் உழைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும்.
3. அதிருப்தி, மன உளைச்சல் என்பன அவர்களுக்கு ஏற்படாது.
4. முகாமைத்துவத்தில் ஜனநாயகப் பண்பு நிலவும்
5. உறவுகள் - தொடர்புகள் சீராக அமையும்.
6. சகல தரப்பினர் மத்தியிலிருந்து (பெற்றோர், பழைய மாணவர்,ஆசிரியர்) ஒத்துழைப்பு கிடைக்கும்.
7. நல்ல வேலைச் சூழ்நிலை நிலவும்.
8. பாடசாலையின் விளைவுகள்/ அடைவுகள் அதிகரிக்கும்.
9. பாடசாலையின் சமூக அந்தஸ்து அதிகரிக்கும்.

பங்குபற்றல் முகாமைத்துவத்தைப் பாடசாலைகளில் செயற்படுத்துவதற்கு முகாமைத்துவக்குழு, பகுதிகளுக்கான உப குழுக்கள் என்பவற்றின் பணிகளை அர்த்த பூர்வமானதாக்க வேண்டும். வேலைப் பங்கீட்டை சரியான முறையில் அமைக்க வேண்டும். பொறுப்புக்களைக் குழுத் தலைவர்களுக்கும், பகுதிகளுக்கும் அளிக்கும் போது அதிகாரத்தையும் வழங்க வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நல்ல ஆலோசனைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறன வழிகளில் பங்குபற்றல் முகாமைத்துவத்தை பாடசாலைகளில் செயற்படுத்தும் போது அப்பாடசாலை பயன் தரும் கல்வி நிறுவனமாக மிளிரும்.

## ஊக்கமுடைமை

ஊக்கம் என்பது உற்சாகம், முயற்சி எனப் பொருள்படும். தாம் கைக்கொண்ட காரியத்தில் இறுதி முடிவை எய்தும் வரை உறுதியான மனதுடன் மனந்தளராது உழைப்பதே ஊக்கமுடைமையாகும்.

# அமைதி வரமாட்டாதோ......

க. மோகனராசன்

மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

எங்கள் மண்ணில் பூக்கும்
பூக்கள் எல்லாம் இப்போ
சிவப்பு நிறமாகவே
பூக்கின்றன!

கானமிசைக்கும் குயில்கள்
கூட,
முகாரியிலேதான்
பாடுகின்றன!

எம் மனிதர்கள் பூபாளத்தை
மறந்து வெகு நாட்களாகி விட்டன
வானத்தை அண்ணாந்து - நிதம்
நிலாப்பாட்டு பாடும்
பிஞ்சுகள் கூட இன்று
அஞ்சுகின்றன!

இயந்திரப் பறவைகளும்
உலோக சாத்தான்களும்
மரண கீதமிசைக்கும்
மயான பூமியிது
மனிதர்கள் அடிக்கடி
இரத்ததானம் செய்வதால்
மண்ணின் மேனியை
மழைத்துளிகள் முத்தமிடுகையில்
மண் மணப்பதில்லை
மாறாக மணப்பது......செங்குருதி.

எம் பிரதேசத்தில் வெண்புறா
பறக்கும் கூடுகட்டும்
எனும் கனவுகள்
நிறைவேறும் நாள் எந்நாளோ?

வெண் புறாவிற்கு வரவு
கூறிக் கொண்டே அதனை
விரட்டியடிக்கும் விந்தையான மனிதர்கள்
வாழும் நாடல்லவா நம்நாடு
ஏன்? இந்த மாறாட்டம்
இதனால் என்றும்
ஓயாத போராட்டம்
எமது எதிர்பார்ப்புக்கள்
அனைத்தும் - இனி
இலவு காக்கும்
கிளி போல்தானே?

ஏரோட்டி சோறுழைக்கும்
வளநாட்டில் - இன்று
ஏர் நடக்கும் கழனியில் கொடும்
போர் நடக்குதே
தண்ணீர் ஓடும் ஓடையில்
செந்நீரோடுதே!

விஞ்சும் பயங்கரப் போரினால் - தினம்
அஞ்சும் நெஞ்சங்களுக்கு
வாடிய பயிருக்கோர்
செழுமழைப் புனலாய்
அமைதிப் பெண்ணே வந்து
சாந்தியும் சௌபாக்கியமும் தந்து
எம்மை அரவணைக்கும் நாள்
எந்நாளோ?................

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

-திருக்குறள்-

# மனித மூளைக்குப் போட்டி

செல்வன். கு. பிரதீபன்.
ஆண்டு- 12 B வர்த்தகம்,

தி/ஸ்ரீ கோணேஸ்வலா இந்துக்கல்லூரி.
திருக்கோணமலை.

மனிதன் வேகமாக ஓடுகின்றான். பாரம் தூக்குகின்றான். கண்களால் தூரத்தில் உள்ள பொருட்களைப் பார்க்கிறான். மனிதன் இயந்திரங்களைக் கண்டு பிடித்தான். வாகனங்கள் வேகமாக ஓடுகின்றன மனிதனால் அவற்றுடன் போட்டிபோட்டு ஓடமுடியவில்லை. பாரம் தூக்கி இயந்திரம் மனிதன் தூக்குவதிலும் பல மடங்கு பாரத்தைத் தூக்குகின்றது. "ரெலஸ்கோப்" மனிதனின் கண்களுக்குத் தெரியாததைக் காண உதவுகிறது.

மனிதன் கண்டு பிடித்த இந்த இயந்திரங்கள் மனிதனின் உறுப்புக்களை, உணர்வுகளைத் தோற்கடித்து முன்னணியில் நிற்கின்றன. எனினும் மனிதனின் பிரத்தியேகச் சொத்தாக சிந்திக்கும் ஆற்றலே இருந்து வருகிறது. இதற்கும் இப்போது ஆபத்து வந்து விட்டது. மனிதன் கண்டுபிடித்த கம்பியூட்டரே மனிதனுடன் சிந்திப்பதில் போட்டிக்கு வந்து விட்டது. மனிதன் போன்று சிந்திக்கும் ஆற்றலை கம்பியூட்டரும் பெற்று விட்டது. மனிதனிலும் பார்க்கக் கூடிய வேகத்தில் சிந்திக்கும் ஆற்றல் கம்பியூட்டருக்குக் கிடைத்துள்ளது. இந்த ஆற்றலை மனிதனே கம்பியூடருக்கு வழங்கியுள்ளான்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அமெரிக்கா, பிலாடெல்பியா, கொன்வென்ஷன் சென்றரில் மனிதனுக்கும் கம்பியூட்டர் ஒன்றுக்கும் இடையில் நடந்த ஒரு போட்டியில் இது நிருபணமாகியுள்ளது.

அதுதான்...........

உலகில் சதுரங்க (செஸ்) விளையாட்டுச் சக்கரவர்த்தி காரி கஸ்பரோவ் 1985 ஆம் ஆண்டு முதல் உலகசம்பியனாக இருந்து வருகிறார். கடந்த ஆண்டு அக்டோபரில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்தனை தோற்கடித்து மீண்டும் சாம்பியனானார். இவர் ரஷ்ய வீரர். சதுரங்க விளையாட்டின் வரலாற்றிலேயே காஸ்பரோவ் மிகவும் ஆற்றல் மிக்க சதுரங்க வீரர் ஒருவரை பெப்ரவரி 10 ஆம் திகதி சந்தித்தார். அந்த வீரர் வேறு எவருமில்லை. மனிதன் தயாரித்த கம்பியூட்டரே.

அந்தக் கம்பியூட்டரின் பெயர் டீப் புளூ ( **Deep Blue**). ஆறு ஆண்டுகளாக ஐந்து விஞ்ஞானிகள் கூட்டாகச் சேர்ந்து தயாரித்த சூப்பர் கம்பியூட்டரே இந்த டீப்புளூ. கணக்கிடுதல், மதிப்பிடுதல் ஆகியவற்றை இந்த கம்பியூட்டர் பிரபஞ்ச வேகத்தில் செய்யும் வல்லமையைப் பெற்றுள்ளது. சதுரங்க விளையாட்டில் ஒரு நிமிடத்தில் இருபது கோடி நகர்வுகளை இந்தக் கம்பியூட்டர் சிந்தித்த பின்னரே ஒரு காயை நகர்த்துகிறது. மனித மூளையினால் அது முடிகின்ற காரியமல்ல. ஆனால் மனிதனால் தயாரிக்கப்பட்ட கம்பியூட்டரினால் அது முடிகிறகாரியமாயிற்று.

சாதாரண மனிதனால் சதுரங்க மேசையில் ஒரு நகர்வு பற்றிச் சிந்திக்கலாம். சதுரங்க சம்பியன் காஸ்பரோவினால் இரண்டு அல்லது மூன்று நகர்வுகள் பற்றி சிந்திக்க முடியும். ஆனால் இருபது கோடி நகர்வுகள் பற்றி யாரால் சிந்திக்க முடியும்? இவ்வளவு வல்லமை பெற்ற "டீப் புளூ" சூப்பர்கம்பியூட்டருடன் போட்டிக்கு அமர்ந்தார். முதல் ஆட்டம் ஆரம்பமானது. இனி காஸ்பரோவ் கூறியதை வாசியுங்கள்.

"10-02-96 மாலை 4.45 மணியளவில் டீப்புளூ கம்பியூட்டருடனான முதலாவது சதுரங்கப் போட்டி ஆரம்பமானது. அப்போது செயற்கையான அறிவுக் கூர்மையின் முதலாவது பார்வையை நான் அனுபவிக்க நேர்ந்தது. "டீப்புளூ" சதுரங்கப் பலகையில் ஒரு சதுரத்தினுள் காய் ஒன்றை நகர்த்தியது. நான் அதனை இலகுவில் கைப்பற்றியிருக்க முடியும். டீப்புளூவின் அந்த நகர்வு அற்புதமானது.

மனிதன் சிந்தித்துச் செய்த நகர்வு மாதிரி அது இருந்தது. நான் விறைத்துப் போனேன் முதலாவது ஆட்டத்தில் டீப்புளூ வெற்றியீட்டியது. நான் தோற்றுப் போனேன். என் முன்னால் புதுவிதமான அறிவுக் கூர்மை பொருந்திய ஒரு சக்தியைத் தான் "டீப்புளூ" வின் வடிவில் கண்டேன்.

"டீப் புளூவிடம்" முதல் ஆட்டத்தில் தோற்றுப்போன காஸ்பரோவ் இப்படி கூறி இருக்கிறார். எனினும் இறுதியில் காஸ்பரோவ் "டீப்புளூவை" மூன்று ஆட்டங்களில் தோற்கடித்தார். இரண்டு ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. ஒரு ஆட்டத்தில் டீப்புளூ வெற்றியீட்டியது.

மனிதன் தயாரித்த இயந்திரம் எல்லாம் இன்று அவனை வெற்றி கொண்டு வருகின்றன. இயந்திரங்களின் ஆற்றலுக்கு முன்னால் சிந்தித்துச் செயல்படும் ஆற்றலையும் வெற்றி கொள்ள அவனால் தயாரிக்கப்பட்ட கம்பியூட்டர் தயாராகி வருகிறது.

2010 ஆம் ஆண்டில் மனிதனின் சிந்திக்கும் ஆற்றலை கம்பியூட்டர் வெற்றி கொண்டு விடும், என காஸ்பரோவ் கூறி இருக்கின்றார். சிந்திக்கத் தெரிந்த மனிதனை அவன் படைத்த றோபோக்கள் வெற்றி கொண்டு விடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

❖❖❖

# தேன் - என்று பாடுவேன்

செல்வன். ச. இளங்கோவன்
ஆண்டு - 12 கலை

தி/ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம்
ஈச்சிலம்பற்று.

கம்பன் கட்டிய சொல்லோவியத்தால்
காலத்தா லழியாது நிலைபெற்றான்
நம்மவர் நால்வரும் ஆழ்வார்களும்
நாட்டில் நிலைத்தது செந்தமிழால்

சிலம்பு என்றொரு காப்பியத்தால்
சிந்தையில் இளங்கோவும் குடியமர்ந்தார்
கலம்பகம் பாடிய புலவர்களும்
கன்னித் தமிழினால் வாழ்கின்றார்.

சங்கப் புலவர்கள் மன்னர்களும்
சாற்றிடும் மறைகளும் சான்றோரும்
மங்காப் புகழுடன் மனதிருக்க
மா தமிழ் அன்றோ காரணமாம்

பாரதி என்றொரு மாக்கவியும்
பல்லோர் ஏற்றிடும் கவிஞர்களும்
சாரதி ஆக்கிய எந்தமிழே
தரணியில் தேன் என்றுபாடிடுவேன்

# விக்ரர்

செல்வி. ஸ்ரீரஜனிதேவி - நடராஜா
ஆண்டு - 12 விஞ்ஞானம்,
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.
திருக்கோணமலை.

பாடம் நடத்திக் கொண்டிருந்த சந்திரா ரீச்சரின் கவனம் திசைதிருப்பப்பட்டது. வகுப்பறை வாசலில் ரீச்சரின் கண்கள் நிலை குத்தி விரிந்தன. விக்ரர் அடிமேலடி வைத்து புத்தகங்களைச் சுமந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

விக்ரரின் கண்களில் பயம் விளையாடியது. கண்ணீரோடு விம்மலும் குடி கொண்ட விக்ரரை எரித்து விடும் பார்வையால் வகுப்பறைக்குள் அனுமதித்தாள் சந்திரா ரீச்சர்.

பாடம் முடிந்து இடைவேளை வந்தது.கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்த சந்திரா ரீச்சரின் விழிகள் அந்த அழகான, பிழைகளற்ற எழுத்துக்களில் நிலைகுத்தி நின்றன. பெயரைப் புரட்டிப் பார்த்தாள் பெயர் " விக்ரர் " சற்று அதிர்ந்து போனாள்.

சந்திரா ரீச்சர் அந்தப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்து இரு மாதங்கள் தான் ஆகின்றன. இந்த இரு மாதங்களிலும் என்றுமே விக்ரர் பாடசாலைக்கு நேரத்திற்கு வந்ததில்லை. முதலாம் பாடம் தொடங்கிய பின்னரே தான் வருவான். ஏன் பிந்தி வருகிறன்? என்னவாக இருக்கும்? சிந்தித்தாள். விக்ரரைப் பார்க்க வேதனையும்... ஆத்திரமும் வந்தது.

அன்று ஞாயிறு மாலை ஆறுதலாக அந்தக் கடற்கரை மணலில் அமர்ந்து, கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள் சந்திரா ரீச்சர். காற்று இங்கிதம் தந்தது.கடற்கரையை மக்கள் கூட்டம் ஆக்கிரமித்திருந்தது. சில பிள்ளைகள் ஈர மணலில் வீடுகள் அமைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

சந்திராவின் மனம் மட்டும் ஊரிலுள்ள வயோதிபப் பெற்றோரையும் தம்பி தங்கையரையும் எண்ணி ஏங்கியது.

அந்தச் சனநெரிசலிலும் காற்றோடு கலந்து தன் செவிப்பறையில் பரீச்சயமான ஒலி வந்து பட்டுச் சென்றது. சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்.. தூக்கி வாரிப் போட்டது அங்கே விக்ரர்

கையில் பொலித்தீன் பொதியில் கச்சான், கடலைச் சுருட்கள்,

"ஐயா கச்சான்... கடலை..அம்மாகடலை...."
ஓடியோடி விற்றுக் கொண்டிருந்தான்

பாடசாலையில் எவ்வளவு சந்தோசமாய்க் கல்வி கற்க வேண்டியவர்கள், இப்படி இளம் வயதில் துயரோடு.... மனம் கனத்தது. பல இளம் சிட்டுக்கள் விக்ரரைப் போல் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தனர்.

இருள் கவ்விக் கொண்டிருந்தது. விக்ரர் கையில் இன்னும் இரண்டு சுருள் கச்சான் மட்டும் தான் எஞ்சியிருந்தன. அவற்றையும் விற்றுவிட்டால்..... அவன் உள்ளம் தவியாய்த் தவித்தது.

அந்த மெல்லிய இருளை விரட்டும் ரியூப் மின் விளக்கொளியில் அவர்கள் முகம் மங்கலாகத் தெரிந்தன.

" தம்பி..... கடலை.....இங்கே வா "
குரல் வந்த பக்கம் விக்ரரின் கால்கள் குதிரைகளாயின.

"இந்தாங்க அக்கா" இரண்டு சுருள்களையும் நீட்டினான். நீட்டிய அந்தப் பிஞ்சுக் கைகளைப் பற்றி இழுத்து பக்கத்தில் இருத்தினாள்.

வீக்ரர் பேயறைந்தவன் போலானான்
"ரீச்சர்....... நீங்.....களா...."
"ஓம் ரீச்சர் தான்"

விக்ரர் பேசாது பக்கத்தில் இருந்தான். அவன் கண்கள் குளமாயின " விக்ரர் இந்தாரும் காசு.. பெற்றுக்கொண்டான்.

சந்திரா ரீச்சர் கச்சானை உடைத்து விக்ரரின் கைகளில் திணித்தாள்.

" வேணாம் ரீச்சர்....."

" சும்மா சாப்பிடு.. அது சரி அம்மா அப்பா எல்லாம் எங்கே? "

" அப்பா இல்லை அம்மாவும், நானும் தங்கச்சியும் தான் ரீச்சர் "

" அப்பா எங்கே..."?

விக்ரரின் பதில் தயங்கியது. கண்கள் பொலபொலத்தன " அப்பா.... செத்துப் போய்ற்றார் ரீச்சர்... அப்பா இருந்தா இப்படிக் கஷ்ரப்படுவனா ரீச்சர்"?

விம்மினான் கண்களைக் கசக்கிய வாறு. சந்திராவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. விக்ரர் மேல் அனுதாபம் கலந்த அன்பு துளிர் விட்டது.

" அப்பா எப்படிச் செத்தவர்?

" எனக்குத் தெரியாது ரீச்சர். அம்மா சொன்னவ"

" என்ன சொன்னவ "?

" குழப்பத்துக்குப் பயந்து ஓடும் போது ஷெல் வந்து விழுந்து கனபேர் செத்ததாம். அதில தான் அப்பாவும் செத்தவராம் .....ரீச்சர். மெலிதாக விக்ரரின் தலையைக் கோதி விட்டாள் அனுதாபத்துடன்.

" ரீச்சர் அம்மா தேடுவா நான் போக வேணும் " மெதுவாக எழும்பினான் விக்ரர்

" காலையில பள்ளிக்குப் பிந்தி வருகிறாயே ஏன் "?

" ஓம் ரீச்சர்... அம்மா அவித்துத் தரும் இடியப்பம், பிட்டை, கடைகளுக்குக் கொடுத்துப் போட்டு வாறதுக்குள்ள பள்ளி தொடங்கிவிடுது. என்ன செய்ய ரீச்சர்..அம்மா பாவம் தானே நான் தானே உதவி செய்யணும் நான் வாறேன் ரீச்சர்."

விடுபட்ட சிட்டுப் போல்" வீர் என்று பறந்தான் விக்ரர்

இந்த நாட்டின் தலைவிதியை எண்ணி சந்திரா ரீச்சரின் மனது துடித்தது. கண்கள் குளமாயின. இந்த நாட்டில் நடக்கும் குழப்பங்களுக்கு முடிவே வராதா?

கேள்விக்குறியாகவே பெருமூச்சுப் பிறந்தது. கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. எழுந்து இருளில் கரைந்து போனாள்.

✳

# பசி எனும் பாவி

குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை வீடுரம்
நாண் அணிகளையும்; மாண்எழில் சிதைக்கும்
பூண் அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி.

-மணிமேகலை-

# வருவதெப்போதோ.....?

கே. இளமாறன்

மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு

அகில உலகே போரில் மூழ்கி
அடிமைகளாக மக்கள் மாறி
அல்லல் உற்று அலைந்து திரியும்
அவலட்சண மான காலம் இது

நாடு முழுக்க போரின் அகோரம்
நாட்டு மக்கள் மனதிலே சோகம்

மகனை இழந்து மகளை இழந்து
மண்ணை இழந்து மனையை இழந்து
மாடாய் அலையும் மக்கள் வாழ்வில்
மங்கள நேரம் வருவதெப்போ?

இலங்கை மைந்தர் இரண்டாய்ப் பிரிந்து
இருளைப் போன்ற யுத்தம் புரிந்தால்
இளைத்துப் போன மக்கள் வாழ்வில்
இனிமை நேரம் வருவதெப்போ?

வடக்குப் பகுதி வாடிப்போக
வனாந்தரம் எங்கும் ஓடி அலைந்து
வன்னியில் வாழும் மக்கள் வாழ்வில்
வசந்த காலம் மலர்வதெப்போ?

போரின் மடியில் உலகம் உறங்கி
போராட்டங்கள் எங்கும் நிறைந்து
போக்கிரித் தனங்கள் பொடியாய் போகும்
பொன்னான நாள்தான் வருவதெப்போ?

# சுடுகாட்டுத் தோரணங்கள்

எம். எல். சியாத்

மட்/வாழைச்சேனை அந்நூர் மகா
வித்தியாலயம்

ஆறறிவு மனிதன்
ஐயறிவு மிருகத்திலும்
கீழான சேதியை
யாருக்குச் சொல்வது
யார் அழுவது

தோழர்களே
இதுவரை
நடந்த நடாத்திய
யுத்தத்தினால்
ஏதும் அநுகூலம் இருந்தால்
கல்வெட்டில் பதியுங்கள்

நேர்மைக்கு வழிவகுத்த
நேசர்கள் சந்தித்த
வழிகளை சிந்தித்து செயற்பட
நம்மில் யாரும் இல்லையா?

சோகமே இன்
சுகமாக வேண்டுமா
இதோ கோலங்கள்
சமாதானப் புறாவை
அழையுங்கள்

இல்லையேல்
கழுகுக் குஞ்சுகளைத் தீன்
போட்டு வளருங்கள்
யுத்தத்தில் மடியும்
பிணங்களையாவது
தூக்கிச் செல்ல
நலமாயிருக்கும்

"ஜாதிமதபேதமில்லை"
என்றானே பாரதி
அழைத்து வாருங்கள்
அவனை சமாதியிலிருந்து
புதிய உலகின்
புதுமையைக் காட்டுவோம்

தோண்டு தோண்டு
மண்ணைத் தோண்டு
மனிதனைப் புதைக்க
அல்ல
போர்வெறிபிடித்த
போினவாதிகளை
ஒழிக்க
புகலிடம் பாதுகாக்கப்பட

# ஓசோன் படலமும் பிரச்சினைகளும்

**திருமதி. எஸ். திலகரெத்தினம்**
ஆசிரியை

தி/புனித மரியாள் கல்லூரி,
திருகோணமலை.

பூமியிலிருந்து 10 கி. மீ. வரை வளிமண்டலம் காற்றுச் செறிவோடு காணப்படுகிறது. இப்பகுதியை ரொப்போஸ்பியர் என அழைப்பர். அதன்மேல் 50 கி. மீ. வரையுள்ள பகுதி ஸ்ராட்டோஸ்பியர் என அழைக்கப்படும். இதன் மேல் மீசோஸ்பியர் கீழ் அயனோஸ்பியர் மேல் அயனோஸ்பியர் போன்ற படைகள் மேல்நோக்கி உள்ளன.

வளிமண்டலத்தின் மேற்படலமாக ஓசோன் படை காணப்படுகிறது. இப்படையே ஓசோன் மண்டலம் எனப்படும். இம்மண்டலம் ஸ்ரட்டோஸ்பியர் பகுதியில் 15 கி. மீ. தொடக்கம் 32 கி. மீ. வரை காணப்படும். ஓசோன் என்பது மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்வதால் தோன்றும் வாயுவாகும். ஒட்சிசனின் ஓரணுவாயுவும், ஈரணுவாயுவும் சேர்ந்து மூவணுவாகிய ஓசோன் வாயுவை விளைவாக்கும்.

$$O + O_2 \longrightarrow O_3$$

பூமியை பொறுத்த வரையில் ஓசோன் மண்டலமும், பூமியை பாதுகாக்கும் ஒரு படை போன்ற கவசத்தையும் கொண்டது. இது சூரியஒளியிலுள்ள மனிதனுக்கு தீங்கு பயக்கும் கதிர்வீசல்களின் ஊடுபுகுதலைத் தடை செய்கின்றது. அதாவது வெப்ப மிகுந்த புற ஊதாக்கதிர்கள் (Ultra Violet rays இவ்வோசன் படலத்தில் பட்டு தெறிப்படைவதன் மூலம் முறிவடைவதனால் வெப்பம் குறைவடைந்து பூமியை வந்தடைகின்றது. ஓசோன்படை இல்லாவிட்டால் ஏனைய கிரகங்களைப் போல் புவியிலும் கற்பாறைகளும், மண்தூசுக்களும் தான் காணப்படும் என கூறப்படுகிறது. ஓசோன் படை குறைவுக்கான காரணம் குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், விசிறு கருவிகளால் வெளியிடப்படும் புளோரோகாபன்கள் எனப்படும் வாயுக்கள் ஆகும்.

இன்று ஓசோன் படை குறைதல் மனித வாழ்வுக்கும், சுகாதாரத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பாரிய பிரச்சினையாக உள்ளது. புறஊதாக் கதிர்களின் கதிர்ப்புக் காரணமாக தோன்றலின் பெரிய பெரிய பப்படங்கள் போன்று கொப்பளங்கள் ஏற்படும். தோல் புற்று நோய் உண்டாகும். கண் பார்வை குறையும். ஓசோன் படலத்தின் ஒரு வீதம் குறைவு ஏற்படுமானால் 24,000 தொடக்கம் 57,000 வரை கற்றாக் எனப்படும் கண்பார்வைக் குறைவு நோய் அமெரிக்காவில் ஏற்படலாமென சூழல் பாதுகாப்பு நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றது.

புவியின் மேற்பரப்பில் இருந்து 10 முதல் 30 கி. மீ. வரை தடித்த படையிலான ஓசோன் உடன் குளோரோ புளோரோ காபன்கள் வளிமண்டலத்துள் விடப்படும் போது (cfc) அவை உடைந்து வெளியிடும் வாயு ஓசோனுடன் தாக்கமுற்று இணையும் போது ஓசோன் அளிக்கப்படும். இதனை பின்வரும் சமன்பாட்டு வடிவில் காட்டமுடியும்.

$$Cl + O_3 \longrightarrow Clo + O_2$$

$$Clo + O \longrightarrow Cl + O_2$$

$$O_3 + O \longrightarrow O_2 + O_2$$

$$No + O_3 \longrightarrow No_2 + O_2$$

$$No_2 + O \longrightarrow No + O_2$$

ஈற்றில் ஓசோன் ஓட்சிசனாக மாற்றப் படும். இதனால் ஊதா கலந்த கதிர்கள் பூமியை அடைந்து பல வழிகளில் மனிதனைப் பாதிக்கும் அபாயம் ஏற்படுகிறது. ஓசோன் படைகளில் ஓட்டை விழுந்துள்ளமை அறிவி யல் உலகத்தை பரபரப்படைய செய்துள் ளது. ஆண்டுதோறும் கடும் கோடை காலத் தில் அதிகளவு அழிவு ஏற்படுவதாலும் உச்ச பனிக் காலங்களில் தென் துருவத்தில் ஓசோன் படை கிழிந்து ஓட்டை விழுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது, 1982 இல் பிரித் தானிய தென்துருவ அளவை ஸ்தாபனத் தால் தென்துருவத்தில் உள்ள ஓசோன் துவாரம் அவதானிக்கப்பட்டது. இவ்வாயுவில் ஓசோன் துவாரம் அமெரிக்க கண்டத்தின் அளவுக்கு பெரிதானது என்பது தெரியவந் துள்ளது. சிலசமயங்களில் இத்துவாரம் சிறுப்பதும், சில சமயங்களில் சில இடங் களில் அது தேய்ந்து மெல்லிசாக வருவதை யும் "நாசாவின் நிம்பல் 7" என்ற விண் வெளிக்கலம் கொண்டு வந்த நிறமாலைப் படங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

தற்போது ஓசோன் படையை ஊட றுத்துச் செல்லும் இயல்புடைய பல இரசா யனப் பதார்த்தங்கள் விஞ்ஞான உலகில் காணப்படுவதால் படிப்படியாக இப்படலம் செயலிழந்து போகும் வாய்ப்புக்கள் ஏற்படு கின்றன. பூமியிலுள்ள சகல உயிரினங்களின தும் வளர்ச்சி குன்றுகின்றன. தாவரங்கள் கருகி நோய்த் தாக்கத்தை எதிர்க்கும் சக்தியை இழக்கும். காலநிலையில் வேறு பாடுகள் ஏற்படும். மழைவீழ்ச்சி குறையும். நிலம், நீர் என்பனவற்றின் வெப்பநிலை கூடும். நீர்நிலைகள் வற்றிப்போகும். கடல் கொந் தளிப்பு ஏற்படும். வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புக் கள் உண்டாகும்.

வெப்ப அதிகரிப்பினால் துருவப் பகுதிகளின் பனிப்படலம் உருகும். கடல் மட்டம் உயரும். இலங்கை, மாலை தீவுகள் போன்ற நாடுகள் தமது கரையோரப் பிர தேசங்கள் பலவற்றை இழக்க நேரிடும். மாலை தீவுகள் முற்றாகவே நீரினுள் அமிழ்ந்து விடும் அபாயம் காணப்படுகிறது. பூகோளம் வெப்பம் ஆவதை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காவிடின் அடுத்த நுற்றாண்டுக்குள்ளாகவே இத்தகைய விளைவுகளை சந்திக்க நேரிடும்.

ஓசோன் படையை பாதிக்கும் முக்கிய இரசாயனப் பதார்த்தம் குளோரோபுளோரோ காபன் (CFC) என்று 1972 இல் உலக சுற்றாடல் பாதுகாப்புச் சங்கம் தமது அறிக் கையில் வெளியிட்டுள்ளது. இந்த (CFC) குளிரூட்டி சூழ்ந்த குளிரூட்டி (எயார் கண்டிசன்) போன்றவற்றினால் பாதிக்கப்படு கிறது. பல ஆண்டுகளுக்கு முன் குளோ ரோ புளோரோ காபன் என்பவை காற்றில் வந்ததன் விளைவையே நாம் இனி அறுவடை செய்வோம் என நாசாவின் வளிமண்டல இரசாயனத்திட்ட தலைவர் கலாநிதி "றொபேர்ட் வாட்சன்" கூறினார். குளோரோ புளோரோகாபன் மழை நீரினால் கரைக்கப் படுவதுமில்லை. அவை அழிவதுமில்லை மண்ணால் உறிஞ்சப்படுவதுமில்லை. அவை மெதுவாக ரொப்போஸ்பியர் படலத்தை தாண்டி ஸ்ரரோஸ்பியர் பகுதியை அடைகின் றன. இப்பகுதியை அடைய ஏறக்குறைய 5 தொடங்கி 10 வருடங்கள் வரை எடுக்கும் இவை எரிய மாட்டாதவை. நச்சுத்தன்மை அற்றவை. ஆனால் ஓசோன் படலத்தை அழிக்கும் கூரிய காரணியாக இக்குளோரோ புளோரோ காபன் விளங்குகிறது.

எனவே இன்று புவிவாழ் உயிரி னங்களுக்கு ஓசோன் தரும் பாதுகாப்பு எதிர்நோக்கும் பிரச்சினையான ஓசோன் ஓட்டையை தடுப்பதற்கு சில தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (CFC) குளோரோ புளோரோ காபன் இயக் கத்தினதான குளிர்சாதனப் பெட்டிக்குபதிலாக 160 டெசியல் ஒளிச்சக்தியில் இயங்கக் கூடிய குளிர்சாதனப் பெட்டி கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. ஐதரோ புளோரோ காபன் ஓசோன் ஒட்டையாக்கலில் குறைவாக பங்கு எடுப்ப தால் ஐதரோ புளோரோ காபனில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டியை பயன்படுத்தலாம். ஓசோன் படலத்தை பாதிக்கும் பொருட்களின் பயன்பாட்டை 2000 ஆண்டிற்குள் நிறுத்திவிட வேண்டும் எனவும், வளரும் நாடுகளும்

இதனைப் பின்பற்ற வேண்டும் எனவும் 1992 இல் லண்டனில் கூடிய மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

ஓசோன் படைப் பாதிப்பு பாரிய பிரச்சினைகளையும், இறப்புக்களை யும் தோற்றுவிப்பதனால் எமது மூன்றாவது தலைமுறையினரை இவற்றின் பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்க நாம் செய்யப் போவது காபனீரொட்சைட்டு, குளோரோ புளோரோ காபன் போன்ற வாயுக்களின் அளவை குறைப்பதே ஆகும். இவற்றைக் குறைப்பதற்கு நாம் சில வழிமுறைகளைப் பின்பற்ற முடியும்.

மரங்களை நடுதல் தனிப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக கூடியளவு மக்கள் பிரயாணஞ் செய்யக்கூடிய வாகனங்களை பயன்படுத்தல். கடதாசியை மீள உற்பத்திக்கு பாவிப்பதில் உதவுதல். குறைந்தளவு. மின் சக்தி பிரயோகம் கடதாசி நப்கின்களின் பாவனையைக் குறைத்தல், உடைகளை ஸ்திரி செய்தலை குறைத்தல், தன்னியக்க கட்டுப்பாட்டு கருவியில்லாத தொலைக்காட்சிப் பெட்டிகளை பாவித்தல். புளோரோசன்ற் மின்குமிழ் பாவனை மற்றும் குளிரூட்டிகளின் பாவனைகளைக் குறைத்தல், குறைந்த அளவு குளோரோ புளோரோ காபனை வெளியிடக் கூடிய குளிர்சாதனப் பெட்டிகளைப் பாவித்தல். தலையலங்காரத்துக்கான விசிறு கருவிகளை பயன்படுத்தாது விடல் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஓசோன் படை அழிவைத் தடுக்கலாம்.

எனவே புவிவாழ் மக்கள் அனைவரினதும் சூழலின் மேலான நட்புறவு பார்வையை ஏற்படுத்துவதன் மூலமும் சூழல் பற்றிய புரிந்துணர்வுகளை மேற் கொள்வதன் மூலமும் ஓசோன் படை பாதிப்படைவதைத் தடுத்து பு வி வா ழ் உயிரினங்களுக்கு பாதுகாப்பு வழங்க மானிடர்கள் முனைய வேண்டும்.

# எங்கள் ஊர்

*செல்வி. த. மோகனரதி*
ஆண்டு 5

தி/ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயம்
கிண்ணியா.

எங்கள் ஊர் இனிய ஊர்
ஈச்சந்தீவு என்னும் ஊர்
சங்கும் முத்தும் விளைந்த நல்ல
சாகரத்தின் அருகு ஊர்

ஆறுகளும் ஓடைகளும்
அழகு சேர்க்கும் நல்ல ஊர்

தென்னை பனை பெருமரங்கள்
சேர்ந்த நல்ல இயற்கை ஊர்

தமிழ் முஸ்லீம் இரு இனங்கள்
தங்கி வாழும் எங்கள் ஊர்
படித்தவர்கள் பலரை இங்கு
படைத்து விட்டது எங்கள் ஊர்

உள்ள வளம் பயன் படுத்தி
உழைக்கத் தெரிந்த எங்கள் ஊர்
ஏழை பணக் காரன் என்ற
ஏற்றத் தாழ்வு நீக்கும் ஊர்

# சூழலே விழித்தெழு

**செல்வி. ப. கலையரசி**
ஆண்டு - 12 கலைப்பிரிவு
வ/பாவற்குளம் கணேஸ்வரா மகா
வித்தியாலயம்

தென்றலது கவரி வீச
வான் மகளாள் மலர் தூவ
காடுகள் குடை பிடிக்க
கம்பளங்கள் புற்களாக,
காட்சி தந்த நில மகளாள்
வேதனையின் விளிம்பில்
வெம்பித் தவிக்கின்றாள்.

சுகந்த மணம் வீசி
சுந்தரமாய் திகழ்த நிலை
நாற்றத்தின் பின்னணியில்
நசுங்க விட்ட மானிடர்கள்
நாதியற்று திரிகின்றனர்
நாளையதை எண்ணாமல்,

அழுக்குகள் வீதியில்
அகற்ற ஆள் இலலை
பொதுவான வீதி என்று
புறம் போக்கி செல்கின்றார்

கைத் தொழிற் சாலைகள்
காடழித்தல் நகராக்கம்
போக்கு வரத்து அதிகரிப்பு
இத்தனையும் சேர்ந்து
இன்ப நாதம் வீசியதை
இந் நிலைக்குத் தள்ளியது.

சிந்தியாத மானிடனும்
சிறப்புடன் வாழ்கின்றான்
நாளைய சந்ததி
நனவில் இல்லை போலும்
நாசமுறும் சமுதாயத்தில்
நந்நிலைதான் ஏற்படாதா?
அழுக்காகும் சூழலதை
அகற்றுங்கள் மானிடரே!

தொழிற் சாலைக் கழிவுகள்
நீரிற் கலக்கிறது
நிலத்திற் சேர்கிறது
வளியில் உலாவுகிறது
இதனால் அன்றோ!
சூழல் மாசாக்கம்

வீட்டுக் கழிவுகள் வீதியில்
விளையாட்டைத் தொடங்கிடவே
அழுக்காகிய அச்சூழல்
அச்சம் கொடுக்கிறது.
காடுகளை அழித்த மாந்தர்
கடுகதியில் இச் சூழலை
மாசாக்கி விடுகின்றனர்
மாண்புறும் இச் சூழல்
மங்கிச் சரிகின்றது.

இயந்திரங்கள் அதிகரிக்க
இந்நிலை கூடிற்றல்லோ
வீதிகளில் மாசுகள்
வளிமண்டலத்தில் காபன்
இத்தனையும் அதிகரிக்க
வருணபகவான் கோபத்தால்
வரட்சி நிலை வையகத்தில்
சீற்றம் கொணட் கதிரவனும்
சிறி எழுந்து கொதிக்கின்றான்.

சூழலே உன்னை
சுற்றி வரும் அழுக்குகளை
துரத்தி அடிக்காமல்
துஷ்டர்களை எண்ணி
மனம் கலங்கித் தவிக்கின்றாய்
மாறத்தான் போகிறது
மாசாகும் இச் சூழல்

அழகுடன் காட்சி தந்த
அருமையான சூழலது
மாந்தர்களின் மயக்கத்தால்
மாசாகிப் போகிறது.

இதைச் செய்த மானிடரும்
இந்நிலையால் துடிக்கின்றனர்
தன்னை அறியாமல்
தவிக்கின்றான் வததையினால்
வேதனையின் விளிம்பில்
வெஞ்சினத்தின் தீயில்
வெறுப்புற்று மடிகின்றான்.

இயற்கையதை அழிப்பதனால்
இந்நிலை ஏற்பட்டது
சிந்தி சமுதாயமே
சீர் கெட்ட உன் செயலால்
சீரழியும் சூழலதை
புறம் போக்கி நிற்காதே
புறப்படு மானிடனே!
சீரழிந்த இச்சூழல்
சிறப்புடன் மிளிர்வதற்கு
சிறப்புடனே தொழிலாற்று.

சூழலே உன்னைச் சுற்றி
பயமுறுத்தும் இவ் அழுக்கை
பார்த்திருக்கும் உனக்கு
கண்ணீர்தான் வருகிறது
கலங்குகிறாய் சோகத்தால்
புரிகிறது உன் சோகம்
ஆற்றாமையினாலே நீ
விட்ட கண்ணீர்கள்
வீணாக வில்லை விழித்தெழு.

# உலகை உலுக்கும் துடுப்பாட்டம்

**செல்வன். செ. மதிவதனன்**
ஆண்டு 12 வர்த்தகம்

தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருக்கோணமலை.

இன்று சிறுவர்முதல் முதியோர்வரை துடுப்பாட்டம் பற்றியே சுவாரசியமாகப் பேசிக் கொள்கிறார்கள். சர்வதேச ரீதியில் புகழ் பெற்றுள்ள இத்துடுப்பாட்டம் - அதுதான் "கிரிக்கட்" இங்கிலாந்திலேயே தோன்றியது என்பர்.

19ம் ஆண்டுக்கு முன் கிரிக்கட் விளை யாட்டுத் தோன்றினாலும் உலகம் முழுவதும் கடந்த தசாப்தங்களிலேயே பிரபலமானது எனலாம். துடுப்பாட்டத்தைப் பல நிறுவனங் கள் இலாபத்தைக் கருதி விளம்பரங்களை மேற்கொள்வதற்காகப் போட்டி போட்டு நடாத் துகின்றன.

துடுப்பாட்டப் போட்டிகள் இங்கிலாந் துக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் இடையி லேயே பல முறை நடந்துள்ளன. 1774 ஆம் ஆண்டில் ஒரு ஓவருக்கு நான்கு பந்துகளாக விருந்து 1889இல் ஐந்தாக உயர்ந்து1890ஆம் ஆண்டிலிருந்து ஆறு பந்துகளாகவும் உயர்ந் தது.

துடுப்பாட்டத்தில் சர்வதேச நாடுகளில் ஆசிய நாடுகளே மிகவும் சிறப்பாக விளை யாடுகின்றன. உலக வெற்றிக் கிண்ணப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை நாடுகளே வெற்றியைத் தட்டிக்கொண்டுள்ளன. சர்வதேச ரீதியில் இலங்கை, இந்தியா, பாகிஸ் தான், மேற்கிந்திய தீவுகள் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, சிம்பாபே, கெனியா, ஒல்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள் துடுப்பாட்டத்தில் பங்குகொள்கின்றன.

இதுவரை ஆறு உலகக் கிண்ண "கிரிக்கட்"போட்டிகள் நடைபெற்றுள்ளன.முதல் இரண்டுமுறை மேற்கிந்திய அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது. இந்திய அணி மூன்றாவது உலக வெற்றிக் கிண்ணத் தைப் பெற்றது. நான்காவது வெற்றிக் கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணியும் ஐந் தாவதைப் பாகிஸ்தான் அணியும் தட்டிக் கொண்டன. ஆறாவது உலக வெற்றிக் கிண் ணத்தை இலங்கை அணிபெற்றுக் கொண் டது.

கிரிக்கட் ஆட்டத்தில் பங்குகொள்ளும் வீரர்கள் சர்வதேச ரீதியாகப் பிரபல்யம் அடைகின்றார்கள். ஒவ்வொரு நாட்டு அணி யில் விளையாடும் பலரும் இவ்வாறு புகழ் பெற்று அவர்களது பெயர்கள் எல்லோராலும் புகழப்படுகின்றன.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் கலந்துகொண்டு அனைத்து மக் களினதும் கவனத்தைக் கவர்ந்த அணி கென் னிய அணியாகும். முதல் தடவையாக உல கக் கிண்ணப் போட்டியில் கலந்து கொண் டாலும், அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரி வாகிய மேற்கிந்திய அணியை 93 ஓட்டங் களில் ஆட்டமிழக்கச் செய்து 73 ஓட்டங்களி னால் வெற்றிபெற்றது. சிறந்ததொரு எதிர் காலம் கெனிய அணிக்கு உண்டு என ஆய் வாளர்கள் கூறுகின்றனர்.

கிரிக்கட் ஆட்டம் ஒரு சூதாட்டம் போன்றது என்பார்கள். அதிக பணச்செலவில் நடத்தப்படுகிறது. விளையாடுபவர்களுக்குப் பணமும், புகழும், கார் வசதிகளும் பரிசாகக் கிடைக்கின்றன. இம்முறை நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் பெப்சி நிறுவனமும், கொக்காகோலா நிறுவனமும் போட்டியிட்டு, அதிக பணச் செலவில் கொக்காகோலா நிறு வனமே விளம்பரத்திற்கான அந்தஸ்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. "கிரிக்கட்" ஆட்டப் போட்டிகள் நடைபெறும் காலங்களில் தொலைத் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கினையேற்று விளம்பரப்படுத்துகின்றன. உலகத்தை இன்று "கிரிக்கட்" உலுப்பிக் கொண்டிருக்கிறது.

# ஒன்றுபடுவோம்

**எஸ். சீராளசிங்கம்**

மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி
மட்டக்களப்பு.

இயற்கையின் இருதயம்
இன்று செல்லரித்துப் போனது
சாதிமத சங்கடத்தில்
சயனித்த சடலங்கள்
சமாதானம் மலர்ந்தால்
நிச்சயம் சுவாசிக்கும்...........
மனிதம் மறைந்த
மயானப் புதைகுழிகளில்
மரண ஓலம் கேட்கும்வரை
வானத்து மேகங்களாய்
வடிவம்மாறும் மனிதர்களே!
கருவிலே குழந்தை கற்பழிக்கப்பட்டு
காணாமல் போகின்றது
வேண்டாம் இந்த விழுமியங்கள்

தேச பிதாவுக் கோர்
தெருப்பாடகனின் வாசகம்
உங்கள் இதயத்தை
தடவிப் பாருங்கள்
ஆத்மாவின் அழுகையொலியும்,
ஊமையின் முனகலும்
கண்ணீரின் சலசலப்பும்,
யுத்தத்தின் எதிரொலிப்பும்
பேரிடியாய் முழங்கும்
மொழி பெயர்த்துப் பாருங்கள்
முற்றுப் பெறாத முகவுரைகளாய்
முகமூடிகள் பதுங்கி
சமாதானத்தை உண்டு கொண்டிருக்கும்.....
வேண்டாம் இந்த வியூகம்
ஓரினமாகி தேசமெலாம்
தேரினில் போகலாம்
கருத்தரித்து உருப்பெருக்க முன்பே
தெருவோரப் பாதைகளில்....
காணாமல் போகின் றோம்
இமைகளின் சப்தத்தில்
விழிதிறந்தவர்கள் - இன்று
இடியோசைச் சப்தங்களால்
விதியிழந்து வாழ்கின்றோம்.....
மண்ணுக்குள் ஒரு தடவைதான்
மரணம் ஆனால்
மனிதர்களுக்குள் பலதடவை
அதுவும் குற்றுயிராய்
மரணித்து விட்டோம்

அலைகள் தடவும் கரைகளில்
தலைகள் தாலாட்டப் படுகின்றன
நாளைய மேகங்கள்
சிவப்பாய் மாறி
இரத்தமழை பொழியு முன்பே
பொறுமைகளின் பொக்கிசத்தை
பொசுக்குங்கள்
அழிவுகள் நம்மோடு போகட்டும்
சக்தியிழந்து சறுக்கும்
சமாதானம் வலுப் பெறட்டும்
வயது வராமலே
முதுமையாகும் எங்கள் வாலிபம்.....
ஈழத்தின் கரங்களில்
இளமை பெறட்டும்
உப்புக் கரிக்கும்
இந்தக் கடல் நீர்
ஏழைகளின் கண்ணீர்
கலக்காமல் நன்னீராகட்டும்.......
திசைமாறிய தென்றல்
இதயத்தை வருடிச் செல்லட்டும்
வாருங்கள் ஒன்று படுவோம்.

# புவி நடுக்கத்தால் இலங்கைக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படுமா?

**திரு. வை. நந்தகுமார்**
முதுநிலை விரிவுரையாளர்
முதுகலைமாணி (இலங்கை)
முது விஞ்ஞான மாணி (ஜப்பான்)
பேராதனைப் பல்கலைக் கழகம்

அண்மைய காலங்களில் புவிநடுக்கங்கள் பற்றிய பீதி இலங்கையையும் பெருமளவு பீடித்துள்ளது. குறிப்பாக 1993ம் ஆண்டு டிசம்பர் 7ஆந் திகதி காலை 2.20 மணிக்கு ஏற்பட்ட புவிநடுக்கம் இலங்கையின் மேற்கு, மத்திய மாகாணங்களில் நன்கு உணரப்பட்டதுடன், 1995ம் ஆண்டு டிசம்பர் 13ந் திகதி மதவாச்சிப் பகுதியில் மற்றுமொரு சிறிய புவிநடுக்கமும் உணரப்பட்டிருப்பதையும் அறியமுடிகிறது.

## புவி நடுக்கம் என்றால் என்ன?

புவியின் கற்கோளத்தின் உட்பகுதியில் இடம்பெறும் அமுக்கம் காரணமாக ஏற்படும் அக விசைகளின் தொழிற்பாட்டினால் புவியோட்டின் பாறைகள் முறிவடைந்து விலகும் போது அல்லது மடிப்புக்கு உட்படும் போது தோற்றுவிக்கப்படும் அதிர்வுகள்,அலைகள் வடிவில் புவியினை ஊடறுத்துச் செல்கின்றன. இத்தகைய அதிர்வுகள் அல்லது நடுக்கமே புவிநடுக்கம் எனப்படுகிறது. புவி நடுக்கத்தின் மையப் பகுதியை "குவியம்" என்று அழைப்பர். இப்புவி நடுக்க மையப் பகுதியில் இருந்து விலகிச்-செல்லச் செல்ல விசைகளின் தாக்கமும் குறைந்து செல்வதால் புவி நடுக்கத்தினாலான விளைவுகளும் மையப் பகுதியில் இருந்து விலகிச் செல்லச் செல்ல குறைந்து காணப்படுகிறது.

புவியின் கற்கோளத்தின் 100 கி. மீ. வரையிலான பகுதி, இறுக்கமான கடினத் தன்மை உடையது. இதனைத் தொடர்ந்துள்ள 2900 கி. மீற்றர் வரையிலான பகுதி சிக்கலானதும், மேற்காவுகை சுற்றோட்டங்களைக் கொண்டதாகவும் உள்ளது. இப்பகுதியில் இடம்பெற்று, காணப்படும் வெப்பம், அமுக்கம் என்பன கடினமான பாறைகளைச் சிறிதளவு நெகிழ்ச்சியடையச் செய்கின்றன. புவியின் உட்பாகத்தில் காணப்படும் இத்தகைய விசைகளின் தொழிற்பாட்டினால் புவியோட்டினது பகுதிகள் மேல்நோக்கி தள்ளப்படுவதனால் அல்லது அமுக்கப்படுவதனால் பல புதிய நிலவுருவங்கள் புவியின் மேற்பரப்பில் ஏற்படக் காரணியாகின்றன. மத்திய சமுத்திர அடித்தளப் பாறைகள், இமயமலை, அந்தீஸ் மலை போன்ற பாரிய மலைத் திணிவுகள் எரிமலைத் தீவுகள் என்பன இவ்வாறே தோற்றுவிக்கப்படுகின்றன. மூட்டுக்கள் அற்ற இளம் பாறைகள் புவியின் உட்பாகத்தில் இருந்து தொழிற்படும் அமுக்கத்திற்குச் சில காலம் தாக்குப்பிடித்தாலும் பல வருடங்களின் பின் அவையும் பாதிப்புக்கு உட்படுகின்றன. இத்தகைய புவியின் அமுக்க தொழிற்பாடுகளின் செயற்பாடுகள் புவியோட்டை பாதிப்படையச் செய்து புவியின் மேற்பரப்பிலும் அதிர்வுகளையும், நடுக்கங்களையும் தோற்றுவிக்கின்றன.

## புவி நடுக்கமும், எரிமலைகளும்

உலகில் எரிமலை வலயங்களுக்கும், புவி நடுக்க மையங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. புவியின் உட்பகுதியில் மிகவும் ஆழமான பகுதிகளில் நிலவும் அமுக்கச் செறிவினால் பாறைக் குழம்புகள் வெளித்தள்ளப்படுகின்றன. இவையே எரிமலை வெடிப்புக்களாக உருப்பெறுகின்றன. எரிமலை வெடிப்பின் போது வெளியேறுவது புவியின் ஆழ்படைக் குழம்பே ஆகும். மக்மா எனும் பாறைக் குழம்பின் வெளியேற்றத்தின் போது திரண்டு எரிமலையைக் குமுறச் செய்கின்றது. இதனால் எரிமலை வெடிப்புக்களை அவற்றின் தோற்றத்தின் அடிப்படையில் பலவகைப்படுத்தலாம்.

## ஸ்ரொம்போலி வகை (Stromboli)

இவ்வெரிமலைகள் எரிமலை வெடிப்பின் போது அதிக அளவான சாம்பல்களையும் கற்துணிக்கைகளையும் வெளித்தள்ளுகின்றன. இவற்றிலான பாதிப்புக்கள் அதிகமானதென்று கூறலாம்.

## வொல்கனோ (Volcano)

இத்தகைய எரிமலைகள் பாறைக் குழம்பினை, எரிமலைத் துகள்களை வெடிப்பின் ஊடாக மிகக் கூடுதலான உயரத்திற்கு வீசுகின்றன. இவ் எரிமலையில் வெளியேறும் பாறைக்குழம்பின் அளவு அதிகமாக இருப்பதால் அவற்றினால் ஏற்படும் சேதங்களும் அதிகமாகும்.

## பீலின் வகை (Pelean)

இவ்வெரிமலை வெடிப்பின் போது வாயுக்கூட்டங்கள், மாசுப் பொருட்கள் புயல் போன்று வளிமண்டலத்துள் வீசப்படுகின்றன. இதனால் ஏற்படும் சேதம் அதிகமாகும்.

## ஹவெயன் (Hawaina)

எரிமலைக்குழம்புகள் மிக அதிகளவில் வழிந்தோடுவதனால் மலைப் பகுதியில் சரிவுகளில் வழிந்து செல்லும் பகுதி அழிந்து எரிக்கப்படுகிறது. எல்லா வகையான எரிமலைக் குமுறல்களின் போதும் லாவா எனப்படும் எரிமலைக் குழம்பை இத்தகைய எரிமலைகள் வெளித்தள்ளுகின்றன. இப்பாறைக் குழம்புகள் எரிமலைச் சரிவுகளில் திண்மமாகி இறுகி பாரிய எரிமலை மௌனாலோ உருவாகும். புவிநடுக்கங்கள் ஒப்பீட்டளவில் புவியோட்டின் பூரளவு ஆழமான பகுதியிலிருந்து ஏற்படுவதனால் அவை பாறைகளில் அதிர்வுகளைத் தோற்றுவித்து புவிநடுக்கங்களை உருவாக்குகின்றன. புவியோட்டில் ஏற்படும் இத்தகைய அதிர்வுகள் வேறு காரணிகளாலும் தோற்றுவிக்கப்படுகின்றன.

## தியத்தலாவை எரிதணல்

1992ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏற்பட்ட "புகை மற்றும் எரிதணல்" வெளியேற்றம் எரிமலையின் தொழிற்பாடா? என்ற சந்தேகம் பலர் மத்தியில் எழுப்பப்பட்டது. இதற்கான காரணங்களை ஆராய்ந்ததன் விளைவாக பைன் மரக்காட்டின் கழிவுகளின் அடையல் செயற்பாட்டினால் மலைப்பள்ளத் தாக்கு பிரதேசத்தில் பீட் நிலக்கரி படிவுகள் உருவாகி இருக்கின்றன. இப்படிவுகளின் அடிப்பாகத்தில் ஏதேனும் காரணிகளின் செயற்பாட்டினால் ஆரம்ப நிகழ்வாக இருக்குமோ என எண்ணக் கிடக்கிறது.

கலாநிதி எஸ். ஜெயசேன, பேராசிரியர் சி. பி. திசாநாயக்க என்போர்களது ஆய்வின்படி தியத்தலாவப் பகுதியில் "சேர்ப்பன்டைட்" எனப்படுகின்ற ஒரு வகை கரும்பச்சை நிறப்பாறை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பாறைகளின் மேற்பரப்பு 55 பாகை செல்சியஸ் வெப்பமுடையதாகும். இவை காணப்படும் பிரதேசம் அம்பாந்தோட்டையிலிருந்து மத்திய மலைநாட்டினூடாக திருகோணமலை வரை செல்கிறது. இப்பகுதியில் அதாவது திருகோணமலைக்கு அண்மையில் உள்ள கன்னியா என்னும் இடத்தில் வெப்ப நீரூற்றும் அவதானிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பதியத் தலாவையில் 11 வெப்பக் கிணறுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்து வெப்பசக்தி செயற்பாட்டினால் நிலத்துக்கு அடியில் வெப்ப நீரூற்றுக்கள் இடம் பெற வாய்ப்புக்கள் உண்டேயன்றி எரிமலைத் தொழிற்பாடுகள் ஏற்பட இடமில்லை.

## புவிநடுக்க அளவீடுகள்

புவிநடுக்கத்தின் செறிவு, புவிநடுக்கம் தோற்றுவிக்கப்பட்ட இடத்திலிருந்து வெளியிடப்பட்ட சக்தியின் செறிவைப் பொறுத்து அளவிடப்படும், புவிநடுக்க அலைகளைப் பதிவு செய்யும் மாணியின் மூலம் புவிநடுக்கம் அளவிடப்படும். புவிநடுக்கத்தின் செறிவினைப் பொறுத்து அதன் அலகு அறியப் படுவதைப் போன்று புவிநடுக்கத்திலான

சேதங்களையும் அதன் அலகின் அளவினைப் பொறுத்து அனுமானித்துக் கொள்ள முடிகிறது. இவ்வளவீட்டு முறை 1935 ம் ஆண்டு சான்ஸ். எப் றிச்சட் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

## புவிநடுக்கங்களின் செறிவுகளும் அவற்றின் பாதிப்புக்களும் பற்றிய பொதுப்பட்ட அட்டவணை

| பாதிப்புக்கள் | செறிவு |
|---|---|
| முழுவதும் சேதத்திற்குள்ளாகும் | 8 . 0 இற்கு மேல் |
| பாரிய சேதம் | 7 . 4 |
| கட்டிட சேதம் சிறியதிலிருந்து பெரிய அளவினதாக அமைவுறும் | 5 . 5 - 7 . 3 |
| சிலரால்/பலரால் அல்லது எல்லோரினாலும் உணரப்படத்தக்கது | 3 . 5 - 5 . 4 |
| உணரமுடியாதவிடத்து கருவிகளால் பதியப்படும் | 1 . 0 - 3 . 4 |

இலங்கையில் ஏற்படும் புவிநடுக்கங்கள் பாறைகளுக்கிடையேயுள்ள குறைகளைத் தழுவிய முறையில் ஏற்படும் ஒருவகை நடுக்கங்களாகும். பாறைப் படைகள் சமநிலையை பெறுவதற்காக அசைவுறும் போது இவை ஏற்படுவனவாகும். இவற்றை நுண்புவிநடுக்கச் செயற்பாடுகள் என அழைப்பதே பொருத்தமானதாகும்.

நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளில் இத்தகைய நுண்புவிநடுக்க தொழிற்பாடுகள் இடம்பெறுகின்றன. நீரின் அமுக்கம் பாறைகளின் வெடிப்புக் குறைகளினூடாக கீழ்நோக்கி தள்ளப்படுகின்றது. இதனால் பாறைகள் ஒருவித சமநிலைத் தன்மையை அடைய முற்படும் போது ஒருவித விசை வெளியிடப்படுகிறது. இதுவே நுண் புவிநடுக்கச் செயற்பாடாக அமைகிறது. இலங்கையிலும் நீர்தேக்கங்கள் அமைந்துள்ள பகுதிகளில் இத்தகைய நுண்புவிநடுக்க தொழிற்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன. மத்திய மலைநாட்டுப் பாறைகள் பல குறைகளையும், மூட்டுக்களையும் கொண்டிருப்பதுடன் இங்கு பல நீர்தேக்கங்களை அமைப்பதும் தவிர்க்க முடியாததாகும். எனவே மத்திய உயர்நிலத்தில் இத்தகைய நீர்த்தேக்கங்களை அமைப்பதால் நுண்புவிநடுக்க அலைகளின் தொழிற்பாடுகள் ஏற்பட காரணமாகின்றது. நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுகளின் பாதுகாப்பை கருதி தானும் அணைக்கட்டுகள் இடம்பெறும் பகுதிகளில் ஆழமான துளையீடுகள் மூலம் பாறைகளின் அமுக்க வேறுபாடுகள் மற்றும் புவிநடுக்க அலைகளின் தொழிற்பாடுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும்.

பாறைகளின் குறைகள் அதிகமாகவுள்ள பகுதிகளிலும் புவிநடுக்கங்கள் அதிகமாக காணப்படுகின்றன. உதாரணமாக கலிபோர்ணியாவில் சென்அன்றூஸ் குறை ஏற்பட்ட சில காலத்தில் பாரிய புவிநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. உருமாற்ற குறைகள் காணப்படும் பகுதிகளிலும் புவிநடுக்கங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதிகளில் இத்தகைய குறைகளை அவதானிக்க முடிகின்றது. இதுபற்றிய ஆய்வு பேராசிரியர் டியர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. பேராசிரியர் டி. டபிள்யூ. விதானகே விக்ரோரிய அணைக்கட்டு பகுதியில் 15 கி. மீற்றர் நீளமான குறைக்கோடு வத்தேகமவிலிருந்து திம்பிலாந்தோட்டம்வரை வியாபித்துள்ளதாக விளக்கியுள்ளார்.

1993ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட புவிநடுக்கம் ஆழமான பகுதியிலிருந்து ஏற்படாது 60 மீற்றருக்கும் 90 மீற்றருக்கும் இடைப்பட்ட ஆழத்திலிருந்தே தோன்றியதாக நோக்கமுடிகிறது. எதிர்காலத்திலும் இவ்வாறான ஆழமற்ற பகுதிகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் சிறிய புவிநடுக்கங்கள் இலங்கையிலும் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உண்டு எனலாம்.

# காட்டுச் சேவல்

**செல்வன். இ. விக்னேஸ்வரன்**
ஆண்டு 9

தி/இலங்கைத் துறைமுகத்துவாரம்
தமிழ் வித்தியாலயம்

அந்த காட்டுச் சேவலைக் காணும் போதெல்லாம் நரியாருக்கு நாவில் நீர் ஊறும். சேவலை ஏமாற்றி அதனைச் சுவைக்கத் திட்டம்போட்டது. அச்சேவல் காட்டுக்கே ராஜாபோல் ஏறுநடை போட்டு எழிலாய் நடந்து திரியும். எதிரிகளைச் சாடி, தன் கால்களில் உள்ள போர் முள்ளினால் தாக்கி விரட்டியடித்து விடும்.

எந்த மிருகங்களென்றாலும் காட்டுச் சேவல் என்றால் உள்ளூரப் பயம்தான். அதன் நடை, அழகுக் கொண்டை அசைய எடுப்போடு தலையை வெடுக்கென திருப்புவதும், ஏனைய பறவைகளும் மிருகங்களும் பிரமித்து ரசித்து நிற்கும்.

அன்று பதுங்கிப் பதுங்கிச் சென்ற நரியார் பாய்ந்து ஒரே அமுக்கலில் அமுக்கி விடக் குறிபார்த்தார். சற்றுத் தவறிவிட்டது. சேவலின் போர் முள் படாத இடமில்லை. நல்ல அடி உடல் நிலை நலமாகப் பல நாட்கள் ஆயின.

போர்முள் பட்ட இடமெல்லாம் தழும்பு. வலியினால் அவதிப்பட்ட போதும் ஒவ்வொரு தழும்பையும் நாவினால் தடவி ஒத்தடம் கொடுக்கும். அப்போதெல்லாம் சேவலை வீழ்த்தவே திட்டங்கள் உருவாக்கும். உருவாயிற்று.

மெல்ல அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்து சேவலை அடைந்தது. சேவலின் அழகையும், வீரத்தையும் புகழ்ந்தது. சேவலே தனது தலைவன் என சரணாகதியாகியது. சாதுவாக வேடம் போட்டது. நாட்கள் நகர்ந்தன. பறவைகளும் மிருகங்களும் நரியை நம்பின. நரி நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடித்தது.

பல இளஞ்சேவல்களின் நம்பிக்கையை நரி பெற்று வந்தது. இப்போது நரியின் சொல் இளஞ்சேவல்களுக்கு வேதவாக்காகியது. காட்டுச் சேவலின் போக்கினை அவை கண்டிக்கத் தொடங்கின. காட்டுச் சேவல், இளஞ்சேவல்களை அழைத்துப் புத்திமதிகள் கூறின. நமக்குள் வேற்றுமைகள் வேண்டாம்; ஒற்றுமையே நமது பலம் எனக் கூறியது. இளஞ்சேவல்கள் ஒற்றைக்காலில் நின்றன. இடையிடையே சேவல்கள் மோதிக் கொண்டன.

காலை இளவெயில் மெல்லக் காடெல்லாம் பரவியது. அந்தக் காட்டுச் சேவலின் குரல் கேட்கவில்லை. எங்கு போயிற்று? என்னவாயிற்று? காட்டுக்கே புதிராக இருந்தது. இளஞ்சேவல்களை ஒன்று படவிட்டால் தன் திட்டம் தவிடுபொடியாகி விடும் என நரி அவற்றைப் பல குழுக்களாக்கி விட்டது. இடையிடையே பல இளஞ்சேவல்கள் மாயமாய் மறைந்தன. அந்தாக் காடு இப்போத சுடுகாடுபோல் சூனியமாகியது. பறவைகள் பயந்து வாழ்ந்தன. மகிழ்ச்சி பறந்து போயிற்று. நரி மட்டும் சந்தோசமாகக் கொழுத்து உலாவியது.

நரி நடுவராக இருக்க இரு இளஞ்சேவல்கள் சண்டையிடும். சாகும்வரை போரிடும். பின் நரியின் உணவாகும். தாய்க் கோழிகள் கொக்கரித்தன. தங்கள் காட்டுச் சேவல் எங்கே எனத் தேடின.

நல்ல வெயில். இரத்தம் பீறிட்டுப் பாய இரு இளஞ்சேவல்கள் ஒன்றையொன்று பாய்ந்து குத்திக் குதறின. கோழிகள்; குஞ்சுகள் கொக்கரித்து வேதனையோடு அலறின. மோதிய சேவல் ஒன்று நிலத்தில் வீழ்ந்து குற்றுயிராய் அலறியது.

மகிழ்ச்சியோடு நாவில் உமிழ்நீர் ஊற நரியார் அச்சேவலைக் குதறப் பாய்ந் தார். கோழிகள் கூக்குரலிட்டன.

பாய்ந்த நரி ஓலமிட்டு வீழ்ந்தது. அங்கே காட்டுச் சேவல். முரட்டுக்கால்களின் போர்முட்கள் நரியைப் பிறாண்டியெடுத்தன. நரி எழுந்திருக்கவே இல்லை. நிமிர்ந்து நின் றது சேவல்.

போரிட்ட சேவல்கள் நாணி நின்றன. கோழிகள் கும்மாளமிட காட்டுச்சேவல் ஒரு முறை அக்காடே அதிரும்படி கூவியது. வீறு நடையோடு மிடுக்காகத் தலையை அசைத் துப் பார்த்தது. காடு இன்பக் காடாகியது.

# வீசு காற்றே.....

ஜே. அகிலம் குருஸ்

தி/புனித அந்தோனியார் மகா வித்தியாலயம்
மூதூர்

*நல்லவர் வாழ்ந்த வீடு*
*நல்வினை விளைந்த பூமி*
*கல்லையும் சிலைகளாக்கி*
*காவியம் கண்ட நாடு*
*தொல்லையாம் கொடுமைக் காற்றில்*
*தொலைந்திடும் நிலையை மாற்றி*
*வல்லமை பெறுவதற்கே*
*வீசிடு தென்றற் காற்றே*

*வல்லவன் பொருள் குவிக்க*
*வறியவர் வாடி ஏங்க*
*செல்வர்கள் ஆட்சி செய்யும்*
*மரபுகள் மாண்டு போக*
*கல்வியில் உயர்ந்த மாந்தர்*
*காட்டிய பொதுமை யாட்சி*
*மெல்லவே மலர வேண்டி*
*வீசிடு தென்றற் காற்றே*

*பொங்கிடும் குருதி பாற்றில்*
*குவிந்திடும் பூக்கள் வேண்டாம்*
*குங்குமம் கலைந்து மாந்தர்*
*கண்ணீரில் மிதக்க வேண்டாம்*
*வன்கொலை பழிகள் பாவம்*
*வையக மீதில் வேண்டாம்*
*பொன்னெழில் பூத்த நாளும்*
*புதுமணம் வீசு காற்றே*

*போர்களும் ஓய்ந்து வெண்*
*புறாக்களும் பறக்க வேண்டும்*
*வேர்விட்டு சமாதானம்*
*விழுதுகள் ஆட வேண்டும்*
*பார் எலாம் சமத்துவமே*
*பயிரென விளைய வேண்டும்*
*ஊரெலாம் சுதந்திரத்தை*
*ஊதியே வீசு காற்றே.*

# மனித நண்பர் டால்பின்

**செல்வன். தி. துஷாந்தன்**
ஆண்டு 12 வர்த்தகம் 'B' '98'

தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருக்கோணமலை.

டால்பின் என்னும் கடல் பன்றி மீன் இனத்தை சேர்ந்தது அல்ல. அது திமிங்கல இனத்தை சேர்த்தது. குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டி. டால்பினின் கண்கள் வினோதமானவை. அதனால் நீருக்கு மேல் எவ்வளவு தெளிவாகப் பார்க்க முடியுமோ அவ்வளவு தெளிவாக நீருக்குள்ளும் பார்க்க முடியும். தொலைவில் உள்ளதையும் மிகவும் அருகில் பார்ப்பது போல் அதனால் பார்க்க முடியும். அதற்குக் கறுப்பு நிறமும் வெள்ளை நிறமும் பிடிப்பதில்லை.

டால்பின் குட்டி போடும்போது, குட்டியின் தலை முதலில் வெளிவந்தால் நீருக்குள் சுவாசிக்க முடியாது என்பதனால் குட்டியின் வால்தான் முதலில் வெளிவரும். குட்டி தாயின் வயிற்றில் இருந்து வெளியே வந்தவுடன் மற்றைய டால்பின்கள் அதை மேலே சுமந்து வந்து வெளிக்காற்றைச் சுவாசிக்கச் செய்கின்றன. குட்டி ஓர் ஆண்டுவரை தாயிடம் பால் குடித்து வளரும். டால்பினின் பாலில் புரதமும், கொழுப்பும் அதிக அளவில் இருக்கின்றன.

மனிதனுக்கு அடுத்ததாக புத்திசாலித் தனமான பிராணி டால்பின்தான் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதற்கு நல்ல ஞாபகசக்தி உண்டு. டால்பின் மனிதனைப் போல் வெப்ப இரத்த ஓட்டம் கொண்டது. அதன் இரத்த ஓட்டம் வினோதமானது. மற்றைய விலங்குகளின் உடலில் ஒருவழிப்பாதையான இரத்த ஓட்டக் குழாய்களே காணப்படுகின்றன. ஆனால் டால்பினுக்கு இரு திசைகளிலும் இரத்த ஓட்டம் பாயும். இதனால் எந்தவித வெளிப்புற அமுக்கத்தையும் டால்பின் சமாளிக்கக் கூடியது.

டால்பின் தனது உணர்ச்சிகளைக் காட்ட பலவித சத்தங்களை எழுப்புகிறது. ஆனாலும் முப்பத்தெட்டு விதமான சத்தங்களை மட்டுமே மனிதனால் உணரக்கூடியதாக உள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். டால்பினின் சத்தமானது கிளி கத்துவதைப் போல் காணப்படும். டால்பினின் தொண்டையில் குரல் நாண்கள் கிடையாது. ஆனால் ஒவ்வொரு டால்பினும் தமக்குள் பேசுகின்றன என விஞ்ஞான ஆய்வு கூறுகின்றது.

இப்பிராணி மனிதனின் பேச்சை அதிகமாகப் புரிந்து கொள்கின்றது. அதை மனிதனைப் போல் பேசவைக்க முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அமெரிக்க விஞ்ஞானிகள் டால்பினுக்கு ஆங்கில வார்த்தைகளைக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். டால்பின் கடலில் விபத்து நடந்த ஒருவரைக் கண்டால் விரைந்து சென்று அவரைத் தன் முதுகில் ஏற்றிச் சென்று கரையில் விடும். டால்பின் மணிக்கு முப்பத்தைந்து கிலோ மீற்றர் செல்லக்கூடியது.

டால்பினுக்கு சினம் அதிகரிக்கும் போது தாமாகவே ஆயிரக்கணக்கில் கரையில் வந்து இறக்கின்றன. இச்சம்பவம் பிரேசில் நாட்டில் இடம்பெற்றது. இதற்குக் காரணம் இயற்கையின் சமநிலையின்மை ஆகும்.

ω

"மறித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

-280, திருக்குறள்-

# தித்திக்கும் தீந்தமிழ்

**ந. பார்த்தீபன்**

நெல்லியடி.
கரவெட்டி.

"தமிழுக்கு அமுதென்று பெயர் -அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கிடைத்தற்கரியதான பொருள் அமுதம். அது எங்கள் தமிழிற்கு ஒப்பானது எங்கள் உயிரினும் மேலானது தமிழ். இது செந்தமிழ், பைந்தமிழ், நற்றமிழ், தீந்தமிழ் என்றெல்லாம் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இந்தத் தமிழ் எங்கள் தாய்மொழி என்பதில் நாங்கள் அளவிடமுடியா பெருமை கொள்ளலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் இந்நாட்டுத் தமிழர்கள் தாம் தமிழர் என்று சொல்கிறார்களா? இல்லை. தமிழ் மொழியைத் தான் சரியாகப் பேசுகின்றார்க

உலகம் போற்றும் உத்தம நூலாம் திருக்குறள். அந்த வான்மறையைத் தந்தான் பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் அரும் பெரும் பொக்கிசங்கள். அவற்றை எமக்களித்தவர் மூதாட்டி ஔவைப் பிராட்டியார். கேட்டாலும் இன்பங் கிடைக்கும் கேண்மின் எனச் சிறப்பிக்கப்படும் நளவெண்பாவை தந்தார் புகழுக்குரிய வெண்பாப்புகழேந்தி. பெருங் காப்பியங்களில் ஒன்றாய் கற்பையும். காதலையும் கவினுற எடுத்துரைத்தது சிலப்பதிகாரம். அந்த நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்தவர் இளங்கோவடிகள். பாட்டுக்கொரு புலவனாய் பாமரரும் படித்துணரப் பாடல்கள் தந்த வீரக்கவிஞன் பாரதி. தமிழன்னை புகழ் பரப்பித் துயர் துடைத்த பாவேந்தன் பாரதிதாசன் போன்ற அழியா வரம் பெற்றவர்கள் எங்கள் தித்திக்கும் தீந்தமிழின் சிறப்பிற்கு அணிசேர்க்கின்றார்கள். அலங்கரிக்கின்றார்கள்.

ஆனால் நாங்கள்.....? வார்த்தைக்கு வார்த்தை அந்நிய மொழிக் கலப்பு. அழகும் பொருத்தமுமான தமிழ்ச் சொற்கள் இருந்தும் அதை மறந்து அல்லது மறந்தது போல் நடித்துத் தமிழைக் கொலை செய்கின்றோம். தாய் தன் பாலுடன் கலந்து ஊட்டும் தமிழ் மொழி அழிந்து, செயற்கைப் பாலுடன் அந்நிய மொழி கலந்து ஊட்டி நாகரீகம் பேணப்படுகிறது. தேசிய பாஷையில் படிப்பதை விட்டு சர்வதேச பாஷையில் கல்வி வழங்கப்படுகிறது. ஆதார ஸ்ரீ அசைவாய் மானிடத்து முதற் குரலாய், அம்மா எனும் சொல்லை தன்னுள் கொண்டது தமிழ் மொழியே. அதுவும் மாறி மம்மி, மதர் என்றாகி விட்ட நிலையில் நாங்கள். தமிழின் எதிர்காலம்........?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றான் பாரதி. பல்மொழித் தேர்ச்சி பெற்றவன் ஆணித்தரமாய்க் கூறிவைத்தான். அந்தத் தீர்க்க தரிசியின கூற்று வெளிப்படை உண்மையா? இல்லை வெற்று வார்த்தையா? திருவாசகமெனும் தேனைத்தந்த மாணிக்க வாசகரின் திருவாசகத்திற்கு உருகாதோர் வேறொரு வாசகத்திற்கும் உருகார் என்பதெல்லாம் பொய்யா? உணர்வுக்கு தமிழ் என உலகமே ஒத்துக்கொண்ட பின்னும் தாய் மொழியைத் தமிழாய்க் கொண்டவர்கள் ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள்.

ஐரோப்பிய தத்துவ போத சுவாமிகளும், இத்தாலிய பாதஸ்ர்வெஸ்கி எனும் வீர மாமுனிவரும் ஐரோப்பிய தமிழறிஞர் சுவாட்ஸ் என்பவரும், ஜேர்மனிய தமிழறிஞர் சீகன் பால்குவும், ஆங்கிலேய தமிழ் அறிஞர் எல்லிஸ் என்பவரும் வணக்கத்துக்குரிய போப் பையரும், ஐரோப்பிய தமிழறிஞர் திருநெல்வேலி ஆயர் கால்டுவெல்டும் ஆகிய பிற நாட்டு அறிஞர்கள் கற்று, உலகெலாம் பரப்பிய தமிழ்மொழி இன்று சொந்த நாடுகளில் சோரம் போகிறது திக்கெட்டும் பரவிய முத்தமிழ் இன்று முகடு பார்க்கிறது. சங்கம்

வளர்த்த தமிழ், தமிழ்ப் புலவர் காத்த தமிழ், கங்கை கொண்ட எங்கள் தமிழ் வெல்லும் ஒரு காலம் நல்ல பதில் சொல்லும்" என்று துணிவுடன் பாடினார் கவியரசர் கண்ணதாசன் ஆனால் இன்றைய நாட்டு நிலை தமிழுக்கு சாவு மணி அடிக்கின்றது.

அப்பர் சுவாமிகளை நாவுக்கரசர் என்று புகழ்ந்தார்கள். அவரது தேவாரத் தமிழுக்கு இறைவனே மெய்மறந்தார் என்கிறது பக்தி இலக்கியம். அதனால் தான் கதவு திறக்கக் காலதாமதமானதாம். அந்த இனிமை இறைவனையும் இன்புறச் செய்த இனிமை; இன்று ஏன் கசந்து போனது என்பது ஆச்சரியமாயிருக்கிறது. "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்றார் பாரதி.

"அன்பிலா நெஞ்சில் தமிழிற் பாடி நீ அல்லல் தீர்க்கமாட்டாயோ?" என்கிறார் பாரதிதாசன். தித்திக்கும் தீந்தமிழில் பாடினால் அன்பில்லாத கல்நெஞ்சங்களிலும் அன்பு சுரக்கும் கல்லைக் கனியாக்கும் உந்தன் சொல் அல்லவா" என்கிறார் கண்ணதாசன். ஈரமில்லாக் கல்லையும் கனியாக்கும் பைந்தமிழ் இன்று காணாமற் போய், செல்லாக் காசாகி, தமிழில் படித்து என்ன பயன் என தமிழர்களே கேட்டும் ஈனநிலை. இலக்கியங்களில் இரு கண்களாய் தோன்றும் இராமாயணம் - மகாபாரதம் எனும் இதிகாசங்களும், ஐம்பெருங்காப்பியங்களும் தீந்தமிழின் அமுதக் கலசங்களாய் என்றும் வாழும் என்ற பெருமையும் நம்பிக்கையும் பிறக்க, "தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று அன்று பாடினார்கள். அவர்கள் தாய்மொழிப் பற்றுள்ளவர்கள். "பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு" எனப் பாடிய வீரர்கள். இன்று தமிழன் என்று சொல்ல பயந்தும் அதைத் தெரிந்திட்டால் தலை குனிந்து செல்லவும் தயாராகி கோழைகளாக வாழுகிறார்கள். வாழ்வதென்ன? அணு அணுவாய் சாகிறார்கள். ஏனிந்த அவலமென எண்ணுவதில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிறந்து நிற்கும் எங்கள் செந்தமிழ் சங்க காலம், சங்கம் மருவிய காலம் பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இருப தாம் நூற்றாண்டு காலம் என தொடர்கிறது. ஐரோப்பியர் காலம் வரை வளர்ச்சி அடைந்து தேமதுரத் தமிழ் ஓசையாய் உலகமெங்கும் பரவி நின்றது. ஆனால் இருபதாம் நூற்றாண்டு காலத்தில் இடரிலும் - துயரிலும் நலிந்து குற்றுயிராய் மறைந்து கொண்டு போகிறது. திரைகடலோடித் திரவியம் தேடுவோர், அகதிகள் என்ற தமிழரின் மறுபெயர் அந்தஸ்தைப் பெற்றவர்கள் அங்கெல்லாம் தமிழை வளர்க்கின்றார்களா? தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம், மொழிச்சிறப்பு விழுமியங்களைக் காக்கிறார்களா? என்பதை எண்ணும் போதெல்லாம் தமிழன்னை இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள்.

"தீஞ்சொற் கவிதையஞ் சோலை தனில், தெய்வீக நறுமணம் விசும்" என்று பாடிய பாரதி தித்திக்கும் சொற்களால் மலர்ந்திருக்கும் தமிழ்க் கவிதைச் சோலை கற்றோரும் - மற்றோரும் களித்தின்புற இனிமையெனும் மலர்களைச் சொரியுமென கற்பனை செய்த பாரதி இன்றிருந்தால் வருந்தியிருப்பான். அக்கினிக் குஞ்சாய் மாறி இந்த அகிலம் அழித்திருப்பான். செந்தமிழ் வசன நடையைத் தொடக்கி வைத்து தமிழுக்கு மறுமலர்ச்சி தந்தவரென பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையால் புகழப்பட்ட பரோபகாரசீலர் ஆறுமுகநாவலர் இருந்திருந்தால்; அந்நிய மொழிக்கலப்பை அடியோடு ஒழித்திருப்பார். இன்று "தெள்ளுதமிழின் சிறப்புக் கண்டார். இங்கமரா சிறப்புக் கண்டார். என்பதெல்லாம் பொய்யாகி மொழி பேச முடியாதவனும், மொழித் தொடர்பற்றவனும் சைகையால் பேசிப் புரிந்து கொள்ளும் வெறும் தொடர்பாடலே மொழியின் பயன்பாடு எனும் குறுகிய வட்டச் சிந்தனையே உண்மையாகி விட்டது.

தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி எனச் சொல்லிக் கொண்டு, வெறும் அடுக்கு மொழி - அலங்கார மொழிதான் தமிழின் வளர்ச்சி என்று கருதிக் கொண்டு, தமிழ்

பக்திக்குரிய மொழியே என தம் அறிவுக் கேற்ப கருத்துரைத்துக் கொண்டு வேதாந்த நூல்கள் மாத்திரமே தமிழில் உருவாக்கப் படுகிறது எனப் புரிந்து கொண்டு சிலர் அந்நிய மொழியை அரவணைத்ததோடு அதியுயர் புகழ்ச்சிகளும் கொடுக்கிறார்கள். கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு என்பதை புரிய மறுத்து தமிழ்மொழியில் பல விடயங்களையும் குறிப்பாக விஞ்ஞான தொழில் நுட்ப விடயங்களைப் படிக்க முடியாதெனவே அந்நிய மொழியில் ஆர்வம் காட்டுவதாகச் சொல்கிறார்கள்.

தமிழ் மிகப்பரந்த மொழி. அந்நிய மொழிச் சொற்களை ஆதரித்து, ஏற்று இயைபாக்கம் அடைந்து தன்னை வளர்த்துக் கொண்டது இந்தத் தமிழ் மொழி. காலத்திற்குக் காலம் அந்நிய ஆட்சியாளர்கள் மாறிய போதும் அவர்களின் சொற்களைப் பெற்று, தன் அழிவைத் தடுத்ததோடு தன் பரப்பை அதிகரித்தது. வடமொழி எழுத்துக்களையும் பெற்று மொழியை இலகுவாக்கிய தமிழ்மொழி அழிவைத் தேடிக்கொள்ளவில்லை. எனவே தமிழ் மொழி ஆற்றலை- அறிவை - மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள முடியாதோர், விரும்பாதோர் விஞ்ஞானக் கல்வியை கற்கமுடியாதென கபடமாய் பேசுகின்றனர். நாட்டுப் பாடல்கள், வைத்திய தகவல்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்பவற்றை பண்டைய தமிழ்மொழியில் படைக்கவில்லையா? அதைப் படித்து மக்கள் பயன்பெறவில்லையா? உயிர் வாழவில்லையா?.

பௌத்தரும் - சமணரும் படித்துச் சுவைத்த பைந்தமிழ், சைவரும் - வைஸ்ணவரும் பருகிக் களித்த செந்தமிழ், கிறீஸ்தவரும் - இஸ்லாமியரும் அரவணைத்த முத்தமிழ், ஐரோப்பியரும் - அந்நியரும் தேடிப் படித்த செந்தமிழ், தித்திக்கும் தீந்தமிழ், தெவிட்டாத இன்பந்தரும் நற்றமிழ் என்பதை உணர்ந்தால் தமிழ் வளரும். தமிழ் மொழியில் அழியாத இலக்கியங்கள் மட்டுமல்ல அறிவான விஞ்ஞானங்களும் எழுத முடியும். படிக்க முடியும். வேதாந்த தத்துவங்கள், ஆத்மீக சிந்தனைகள் மட்டுமல்ல தொழில் நுட்ப முன்னேற்றங்களும் இயற்ற முடியும். வளர்க்க முடியும். இதற்குத் தமிழர்கள் அனைவர்க்கும் தாய் மொழிப்பற்றும், தமிழ் மொழிப் பரிச்சயமும் அவசியம்.

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்**
**பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்**
**இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு**
**நாமமது தமிழரெனக் கொண்டிங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்**

— பாரதி —

# குடியேறி வாழ்ந்திடனும்

**செல்வன். தெள. சாஜகான்** திரு/நிலாவெளி மகா வித்தியாலயம்.

*தொல்லை அகன்றிடுமோ - கொடிய*
*துன்பம் நீங்கிடுமோ*
*மெல்ல விடிந்திடுமோ - அமைதி*
*வந்து குல விடுமோ*

*அலைந்து திரியும் நிலை - என்று*
*அகன்று சென்றிடுமோ*
*குலைந்த வாழ்க்கை இங்கு - ஒன்றாய்*
*கூடிவந் திடுமோ*

*கல்லெறிபட்டதுமே - உடன்*
*கலைந்திடும் தேனிபோல்*
*வல்வினை பட்டதாலே - எங்கள்*
*வாழ்வு குலைந்ததுவோ*

*போர்கள் ஒழிந்திடுமோ - அமைதி*
*புறாக்கள் பறந்திடுமோ*
*போராடும் வீதிகளில் - நல்ல*
*பூக்கள் மலராதோ*

*பூஞ்சோலை வேண்டுமிங்கு - அதில்*
*பூங்குயில் பாடவேண்டும்*
*மாஞ்சோலை கனிபறித்து - நாங்கள்*
*மகிழ்ந்துண்டு வாழ வேண்டும்*

*நாளொன்று வந்திடனும் - எல்லோரும்*
*நலமென்று பாடிடனும்*
*கோளொன்று படைத்திடனும் - அதில்*
*குடியேறி வாழ்ந்திடனும்.*

# சிறுவர் உரிமைக்குப் பெற்றோரின் பங்கு

**செல்வன். தி. துஷ்யந்தன்**
ஆண்டு 13 வர்த்தகம்,
தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி.

இன்றைய சிறுவர்கள் நாளை உலகைப் படைக்கும் சிற்பிகள். நாளைய உலகம் சமாதானமான நாணயமிக்க நன்மை பயக்கும் உலகமாக மிளிர்வதற்குச் சிறுவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர்கள் என்பவர்கள் யார்? என்பதை 1979ம் ஆண்டு வரையப்பட்ட சிறுவர் உரிமை பற்றிய சாசனம் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை சிறுவர்களென வரைவிலக்கணப் படுத்துகிறது. இவ்வயதெல்லை நாட்டுக்கு நாடு அரசியல் வரைபுக்கு ஏற்ப வேறுபடும்.

உலகில் வாழும் சிறுவர்களின் வாழ்வு வளம் பெற, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப் படல் வேண்டும். சிறுவர் சாசனத்தின் படி பிள்ளைகளின் உரிமைகளை

1. தேவைகளை நிறைவேற்றல்
2. பாதுகாப்பு
3. பங்கு பற்றல்

என மூவகையாக வகைப்படுத்தியுள்ளனர். இவற்றைப் பாதுகாக்க சிறுவர்களுக்குப் பலமோ, சந்தர்ப்பமோ இல்லை. எனவே உரிமையைப் பாதுகாப்பதும், பேணுவதும் பெற்றோரின் கடமையாகிறது. பெற்றோர்கள் தமது உரிமைகளை வெவ்வேறு வழிகளில் பெற்றுக்கொள்கிறார்கள். சிறுவர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு எந்த வித வழிகளும் அற்று அதிகாரமற்றவர்களாக உள்ளனர். அதிகாரம் படைத்தவர்கள் பெற்றோர்களே. சிறுவர்களது உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோரையே சார்ந்ததாகும்.

தாய்க்கும் பிள்ளைக்கும் இடையேயான தொடர்பு கருவிலிருந்து தொடர்கிறது. "மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தைகளே. அவர்கள் நல்லவர் ஆவது தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பர். ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன் பதியப்படுவதையும், ஒரு பெயருக்கும், தேசவினத்தைச் சார்வதற்கும் அதன் பெற்றோர் யார் என்று அறிவதற்கும் அதற்குள்ள உறுப்புரிமையை சிறுவர் உரிமைச் சாசனத்தின் ஏழாம் உறுப்புரை வலியுறுத்துகிறது. இத்தவறு குழந்தைகளை அடிமைத்தனம், விபச்சாரம், இனத்து வேசம் என்பவற்றுக்கு இட்டுச் செல்கிறது.

யுனிசெப் கணிப்பீட்டின் படி மூன்று கோடிச் சிறுவர்கள் வீதியோரங்களிலும், ஐந்து கோடிச் சிறுவர்கள் பாதுகாப்பற்ற சுகாதார நிலைமைகளிலும் வேலை செய்கிறார்கள்.

கல்வியை இடையில் நிறுத்தி லொத்தர் சீட்டு விற்பனை செய்யும் பையன் றெயில் பெட்டிகளில் பாடிச் சென்று பிச்சை எடுக்கும் பிள்ளை, சுற்றுலா மையங்களில் கவர்ச்சிப் பொருட்களுக்காகக் கையேந்தும் சிறுவன், கல்வியைப் புறக்கணித்துத் தந்தையின் சொற் கேட்டு கற்களை வெட்டும் பிள்ளை என, இவர்களையிட்டுச் சிந்தித்தால் இவர்களின் நிலைக்கு வறுமையுடன் பெற்றோரின் அலட்சிய மனப்பாங்குமே காரணமாகும். பிள்ளைகளை பெறுமதிமிக்க சொத்தாகக்கருதும் பெற்றோர். இத்தகைய கொடூர துஷ்பிரயோகங்களுக்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்.

பிள்ளைப்பருவம் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், சமூகரீதியாகவும், வளர்ச்சியடையும் ஒரு காலகட்டமாகும். இதற்கு விசேட போஷிப்பு முறைகளும், அபிவிருத்தி போன்ற சூழலும் அமைதல் அவசியமாகும். பிள்ளை தன்னைச் சூழவுள்ள உலகினைப் புரிந்துகொள்வதற்கும் எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கும் தீவிர முறையில் கல்வி பயிலும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது. எனவே அவதானித்தல் கேள்வி கேட்டல், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை மாதிரிகளைப் பயிலுதல், அறிவையும் திறன்களையும் பெறல் போன்றவற்றிற்கான வாய்ப்புக்களைப் பிள்ளைப்பருவத்தில் பெற்றுக் கொள்ள முன்னிற்பவர்கள் பெற்றோர்களே.

"ஈனறு புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

எனப் புறநானூறு தந்தையினதும் தாயினதும், குடும்பக் கடனகளை விளக்கு கிறது. தமது பிள்ளைகளை சான்றோன் ஆக்க வேண்டுமாயின் அதனைக் கட்டாயமாகப் பாடசாலைக்கு அனுப்புதல் அவசியம். கல்வி மூலம் நல்ல மனிதனை உருவாக்கலாம். அதன் மூலம் சிறந்த சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்பலாம் என ரூசோ கூறியுள்ளார். எனவே பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் அரிச்சுவடி ஆசிரியர் அன்னையே. தந்தை தொழிற்கல்வி ஆசிரியர் எனக் கூறப்படுகின்றது. பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு எத்தகையது என்பது இதிலிருந்து புலனாகிறது.

அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் மண்டல நாடுகளில் பெற்றோரின் கவனமின்மை, சிறுவர்களின் கல்வி பெறும் உரிமையை மழுங்கடிப்பதற்கு வழி சமைக்கிறது. ஒவ்வொரு பிள்ளைக்கும் உயிர் வாழ்வதற்கான உரிமை பிறவியிலிருந்தே கிடைக்கிறது. இந்தியாவில் சேலம் போன்ற மானிலங்களில், பிறந்த பெண் குழந்தைகள் தாயினால் கொலை செய்யப்படுவதாக கெய்ரோவில் நடந்த உலக சனத்தொகை பற்றிய மகா நாட்டில் வெளியிட்டப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. குழந்தையைச் சுமையாகக் கருதும் நிலை அகல வேண்டும்.

குழந்தைகளின் அன்புத் தேவையை நிறைவேற்றுபவள் அன்னை. அவர்களுக்காக பொருள் ஈட்ட வேண்டும், வாழ வழி வகுக்க வேண்டும் என்பதற்காகத் தாய் வெளிநாடு செல்வதால், பூத்துக்குலுங்க வேண்டிய குடும்பம், குழப்பம் நிறைந்த குடும்பமாக மாறுகிறது. பெற்றோர் பிள்ளையைப் பிரிந்திருப்பது அவர்களின் உரிமைகள் துஷ் பிரயோகம் செய்யப்படுவதற்கு இடமளிக்கிறது. பெற்றோரின் எதிர்பார்க்கைகள் பிள்ளையின் திறன்களோடும், அவர்களது எதிர்பார்க்கையோடும் இணைந்து செல்லும் போதுதான் அவர்களது வாழ்க்கை வளம் பெறும். பெற்றோர் சுயநலமுள்ளவர்களாக மாறக் கூடாது. தமது செல்வக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி தமது மனப்பாங்கில் மாற்றங்களை ஏற்படுத்தத் தம்மை தியாகம் செய்ய வேண்டும். ஓய்வு, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் விளையாடுவதற்கான சந்தர்ப்பங்களை வீட்டுச் சூழலிலே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காலத்துக்கு காலம் தடுப்பூசிகளை போடுவித்தல், போசாக்கான உணவுகளை வழங்குதல் மூலம் சிறுவர் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கலாம். சிறுவயதிலிருந்து குழந்தைகளுக்கும் பெற்றோர்கள் சுகாதார பழக்க வழக்கங்களை பழக்க வேண்டும்.

குழந்தைகளைச் சட்டவிரோதமான மருந்து, போதை வஸ்துகளை உபயோகித்தல் போன்ற நடவடிக்கையிலிருந்து பாதுகாப்பது அரசின் கடமையானாலும், பெற்றோர் இவ்விடயத்தில் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. குழந்தைகளின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிப்பதன் மூலமும் அவர்களின் மனம் கோணாதவாறு தாம் நடந்து காட்டுவதன் மூலமும், ஆலோசனை கூறுவதன் மூலமும் அரசுக்கு உதவ முடியும்.

பெற்றோரின் அன்பு, காப்பு, கணிப்பு போன்றவற்றைப் பெற வேண்டும் என்பதற்காக ஏங்கும் குழந்தைகள் விடயத்தில் பெற்றோர் பெருமளவுக்கு அவர்களை பிரிந்திருப்பது வரவேற்கக்கூடியதல்ல. தேவைகள் நிறைவு பெறாத பட்சத்தில் ஆயுதப் போராட்டத்தில் சிக்கும் குழந்தைகளும் உளர். குழந்தைகளைப் பெற்றோர்கள் சமமாகவும், உடற் தண்டனை வழங்காமலும், நன்கு கவனிப்பதன் மூலமும் சிறுவர்களின் உரிமையைப் பாதுகாக்கலாம்.

பெற்றோர் தமது வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளக்கூடிய முறையில் வழிவகைகளைத் தமது குழந்தைச் செல்வங்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் தீபங்களாக மாறுவார்கள், குழந்தைக்கும், வீட்டுக்கும், நாட்டுக்கும் நற்பயன் கிடைக்கும்.

**"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."**
**-391, திருக்குறள்**

# கனவாகிப் போய் விடுமோ!!!!!!

செல்வன். த. விமல்

மட்/பெரிய கல்லாறு மத்திய கல்லூரி
மட்டக்களப்பு

சில்லென்ற இளங் காற்று
சூழ்ந்துள்ள வாவியினை
மெல்லத் தழுவிக் குளிரூட்டி
மேலெழுந்து ஊர் தடவ
நல்ல நிலவு ஊர்ந்து
நீல வான் நிறைவுகொள்ள
கிள்ளி மனம் மகிழ
கிளர்ந் தாடும் பேரின்பம்

தென்னை விரி சோலை
சேர்ந் திருக்கும் தாவரங்கள்
புன்னை பலா மாமரங்கள்
பூத்துக் கனி சொரிய
செந்நெல் வயல் விளைந்து
சீர்பெற்று வாழ் வுயர
இன்பக் களி கொண்டு
இருந்த நட்கள் போயினவே

மாதம் மும்மாரி மழை
மறந்து பல ஆண்டாச்சு
காதலுற்ற வாழ்வில் இன்று
கடுந்துயரே சூழ்ந்தாச்சு
மோதல் நிலை மூண்டதனால்
வேட்டு வெடி வந்தாச்சு
ஆதலினால் நாட்டு மக்கள்
ஆடுகிறார் கண்ணீரில்

வரம்பு யர்ந்து நீருயர
வானம் மழை பெய்யாதோ
உரம் பெற்று எம்மக்கள்
ஏற்ற மதைக் காணாரோ
கரங் கோர்த்து மக்களெலாம்
களித் துலவும் நாள் வருமா?
கருத்தொன்றி வாழும் நாள்
கனவாகிப் போய் விடுமோ?

# இளங்கோவின் கண்ணகி

**செல்வி. பிரியதர்சினி இரத்தினசிங்கம்**
ஆண்டு 13 வர்த்தகம்

*தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி*
திருக்கோணமலை.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியை, அவள் குணநலன்களைச் சிறப்பாகக் காட்டுகின்றார். கோவலனும் கண்ணகியும் இல்லறம் என்னும் நல்லறத்தில் இணைகின்றனர்.கண்ணகியை மாசறு பொன்னே...வலம்புரி முத்தே...காசறு விரையே கரும்பே தேனே என வர்ணித்து கோவலன் வாயினால் அவளது அழகு அடக்கம் நற்பண்புகளைப் புகழ்ந்து கூறுகின்றார் இளங்கோவடிகள்.

மாதவியின் நடன அரங்கேற்றத்தில் மனதைப்பறி கொடுத்த கோவலன் மாதவியின் பால் சென்று மயங்கிக்கிடக்கின்றான். தனது கணவனின் இச்செயல் கண்ணகியைப் பாதிக்கின்றது. நடைப்பிணமாய் நடமாடுகிறாள். திங்கள் வாள்நுதல் திலகம் இழப்ப தலை வாரிப்பூச்சூடித் தன்னை அலங்கரிக்க மறந்தவாளாய், சோகமே உருவமாக இளங்கோ படம் பிடித்துக் காட்டுகிறார்.

காலம் நகர்கிறது. இந்திரவிழாவிலே கடலாடு நிகழ்வில் மாதவியோடு பிணக்குற்று அவளைத்துறந்து கண்ணகியை அடைகிறான் கோவலன். குதூகலம் கொள்கிறாள் கண்ணகி. கணவன் தான் தன் வாழ்வின் வளம் எனும் கருவில் திருவுடையாள் கோவலனை அணைக்கின்றான்.

இழந்த செல்வங்களை மீட்டு வாழ்க்கையை வளப்படுத்த மதுரை நோக்கிப் பயணமாகின்றனர். கவுந்தி அடிகளின் துணையோடு மதுரை அடைந்து இடைச்சேரியில் தங்குகின்றனர்.

மதுரையில் பாண்டியன் மனைவியின் காற் சிலம்பு காணாமல் போய் விடுகிறது. மதுரை மாநகர் வீதியில் கோவலன் கண்ணகியின் காற்சிலம்பைப் பெற்று விற்றுப் பொருளீட்ட விலை கூவுகின்றான். பொற்கொல்லர் கோவலனைப் பயன்படுத்துகின்றனர். சதி விதியாகிறது. கோவலன் கள்வனாக்கப்பட்டு கொலைக் களப்படுத்தப்படுகிறான்.

செய்தி அறிந்த கண்ணகி துடித்தாள், துவண்டாள். என் கணவன் கள்வனா? ஏங்கித் தவித்தாள். ஆவேசம் கொண்டாள். அக்காட்சியை நெஞ்சுருகக் காட்டுகிறார் இளங்கோ.

"காய்கதிர்ச் செல்வனே என் கணவன் கள்வனா" என செங்கதிரோனைப் பார்த்தாள் "கள்வன் அல்லன்" என அசரீரீ கேட்டது. துடித்தாள். சீற்றம் கொண்டாள். தலைவிரி கோலமாக ஒற்றைச் சிலம்பைக் கைகளில் ஏந்தி அரண்மனை வாயிலை அடைந்தாள். காவலரை "வாயிலோயே வாயிலோயே" என விழித்துத் தன் வருகையைப் பாண்டியனுக்கு உணர்த்தினாள். கோவலன் கள்வனல்லன் என்பதை வழக்காடி நிரூபித்தாள். நீதி பிழைத்த மன்னன் தவறை உணர்ந்து உயிர் நீத்தான்.

கண்ணீராடிய கதிரிள வனமுலை திண்ணதிற் திருகி தீயழல் ஊட்டி மதுரையை எரித்தாள். தீயன அனைத்தும் தீய்ந்தன. கண்ணகி சேரநாட்டில் வேங்கைமர நிழலில் தெய்வமானாள். கற்பின் செல்வியாய்த் திகழ்ந்து பத்தினித் தெய்வமான கண்ணகியின் சோக வாழ்க்கையினை இளங்கோவடிகள் அருமையாகச் சித்தரித்துள்ளார்.

# மனங்கவர்ந்த கிராமம்

**எம். எஸ். பௌசுல் ஹினாயா**
**ஆண்டு - 10 B**

வ/வவுனியா முஸ்லிம் தேசிய பாடசாலை
வவுனியா.

வடக்கே வானுயர்ந்த தென்னைமரம் கிழக்கே கித்துள் தோட்டம், மேற்கே மேட்டு நிலம் தெற்கே மாந்தோட்டம். இவ்வாறு அமைந்திருந்தது அந்தக்கிராமம்.

அந்தக் கிராமத்தின் பெயர் ஆனந்தபுரி பெயருக் கேற்ப அங்கு எந்நேரமும் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டே இருக்கிறது. இதற்கான காரணங்கள் மிகப்பல. இவற்றுள் என்னைக் கவர்ந்தது. அவ்வூரினுடைய இயற்கை அழகாகும்.

ஊரின் எல்லையை அடைந்ததுமே பசுமை போர்த்த வயல்களிலே காற்றில் அசைந்தாடும் நெற்கதிர்கள் "வா, வா" என்று கை நீட்டி அழைப்பது போல் காட்சி தந்தன வயல்களுக்குள் நின்று களை பிடுங்கும் தொழிலாளர்கள் அணியணியாக நின்று வேலை செய்வதைப்பார்க்க ஒரு புதுத்தெம்பு எழுகின்றது. அவ்வூர் வீதிகளோ பாம்புகள் போல் வளைந்து வளைந்து சென்றன. வீதி அருகில் மரங்கள் பல வரிசையாக நின்று குடைபிடிக்கின்றன. நீர் வாய்க்கால்களில் "சல சல" என்ற ஒலியை எழுப்பிக் கொண்டு ஓடிக் கொண்டு இருக்கின்றன. கத்தரி, வெண்டி, தக்காளி, கரட், பீற்றுட் பச்சை மிளகாய்ச் செடிகள் எல்லா வகை காய்கறிகளும் அம்பாரமாகப் பூவும், பிஞ்சும், காயும், பழங்களுமாய் இலைகளை மூடிக் கொண்டு பல வர்ணக் காட்சி தந்தன.

மக்கள் முகங்களிலே கவலை என்பது கடுகளவு கூட இல்லை, கிராமத்துக்கப்பால் நிகழ்ந்து கொண்டிருக்கும் பரபரப்புக்கள்,குழப்பங்கள் எவையுமே அவர்களை பாதித்ததாக தெரியவில்லை. இயற்கை அன்னை ஈன்ற இன்பக் குழந்தைகளே இவர்கள் என்ற எண்ணமே அவர்களைப் பார்க்கும் போது எனக்கு உண்டாகின்றது. வயல்கள், தோட்டங்களைக் கடந்து சென்றால் ஒரு பக்கத்தில் பசிய புல்வெளி மறு பக்கத்தில் கரும்புத் தோட்டங்கள் இளந்தென்றல் வீச சிரித்துச் சிலிர்க்கின்றன. பெரிய பெரிய கரும்புகள் அழகாக வரிசையாக ஒரே அளவில் ஆடியசைந்தன.

சற்று அப்பால் அழகிய குளம், அதன் குளக்கட்டோ மிகவும் உயரமாகவும் அகலமாகவும் நீண்டதாகவும் காணப்பட்டது. அதைப் பார்த்தவுடன் நான் ஒரு கணம் அதிர்ந்து விட்டேன். அவ்வளவு பெரிய குளமும் நீர்ப்பரப்பும். அதன் நீர்ப் பரப்பிலே அல்லி மலர்களும் இலைகளுமாகக் காணப்பட்டன. தாமரைப் பூவைப் பார்த்ததும் எனக்கு அந்தப் பூவைப்பறிக்க வேண்டும் போல் தோன்றியது. இரை தேடவந்த கொக்குகள் அந்நீர்ப்பரப்பை மேலும் மெருகூட்டின. நீர்க்காகம், வாத்து, அன்னம் நீந்தித் திரிந்தன. மலர்க் கொடிகள் படராத நீர்ப்பரப்பில் சிறுவர், சிறுமியர்கள், இளைஞர்கள் குளித்தும், நீந்தியும், சுழியோடியும், கும்மாளமடிப்பதும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

குளத்தின் மேற்குத் திசையில் வானை முட்டும் கோபுரக் கலசத்தோடு கூடிய ஆலயம், கம்பீரமாக நிற்கின்றது. நான் அந்தக் கோயிலை அடைந்த பொழுது பூசை முடிந்து பிரசாதம் வழங்கப்படுகின்றது. முதியோர்களே அங்கு அதிகமாக காட்சி தருகின்றனர் திருநீறு, சந்தனம், பொட்டு நெற்றிகளையும் மார்புகளையும் அலங்கரிக்க அவர்கள் முகங்களிலே மலர்ச்சியோடு நிற்கின்றனர். பெண்களோ பூவும் பொட்டும் தாலியுமாக ஜொலிக்கின்றனர். இவ்வாறே சிறுவர் சிறுமிகளும் புத்தாடை அணிந்து மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். இப்போது அவர்களது முகங்கள் சந்திரனைப் போன்று பிரகாசிக்க கோயிலை விட்டு வெளியே வருகின்றனர். அவர்கள் முகங்களிலே கவலைச் சுவடுகள் மருந்திற்குக்கூட இல்லை. நரை, திரை என்ற மூப்பின் அடையாளங்களும் இல் லை.

அவர்களைப் பார்த்தபொழுது. பிசிராந்தையர் என்ற புலவர் பாடிய பாடல்தான் என்நினைவில் திரை விரித்தது.

"மக்களே, ஆண்டு பலவாகிய போதும் என் தலைமயிர் நரையின்றிக் காட்சி தருகின்றதே என்று நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்கள். "இது எப்படி" என்றும் கேட்கிறீர்கள். காரணம் சொல்கின்றேன். கேளுங்கள் என்னுடைய மனைவியும், மக்களும், மாட்சியும், நல்லறிவும் பொருந்தியவர்கள். என்னுடைய ஏவலரும் குறிப்பறிந்து நான் நினைப்பவற்றை நிறைவாகச் செய்து முடிக்கின்றார்கள். எங்கள் நாட்டை ஆளும் அரசனோ தீயவை புரியாமல் செங்கோல் செலுத்தி வருகின்றான். என்னூரவர் யாவரும் ஆராய்ந்து கற்று,அடக்கத்தோடு, சிறந்த கொள்கைப் பிடிப்புள்ள சான்றோர்களாய் விளங்குகின்றனர். ஆதலால் எனக்கு முதுமை ஏற்படுவதற்கு வழியே இல்லை." என்பது அவரின் பாடற் பொருளாகும்.

நான் இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையில் முதியவர் ஒருவர் "தம்பி, ஆரைத் தேடுகிறீர்? நீர் இந்த ஊர்ப்பிள்ளை இல்லை போல் இருக்கிறது. சொல்லும். உமக்கு ஏதாவது உதவி வேணுமெண்டால் கேளும்" என்று அன்போடு வினாவினார்.அவருடைய முகத்தில் தாய்மையும் எளிமையும் பளிச்சிட்டன.

"ஐயா பெரியவரே! நான் ஒரு பல்கலைக் கழக மாணவன். கிராமங்களின் ஆராய்ச்சி செய்து வருகின்றேன். உங்கள் கிராமம் நான் பார்த்த கிராமங்கள் பலவற்றிலுமிருந்து வித்தியாசப்பட்டதாய் இருக்கின்றது. இந்த வித்தியாசம் என்மனதுக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது. இதற்கு - இந்த தனித்தன்மைக்குக் காரணம் என்ன? என்று அவரைக் கேட்டேன். முதியவர் சிரித்துக் கொண்டே சொன்னார். "தம்பி" இந்தக் கிராமத்தில் நூறு குடும்பங்கள் வாழ்கின்றன. எல்லோரும் படித்தவர்கள் ஆனால் உத்தியோகத்தை நாடிச் செல்லாது எங்கள் கம புலங்களைக் கவனித்துப்பாடுபடுகிறோம். சாதி வேறுபாடோ பொருளாதார உயர்வு தாழ்வோ எங்களிடையே காணப்படுவதில்லை. எல்லோரும் ஒற்றுமையாக ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்து வருகிறோம். ஒருவருடைய நல்லது கெட்டதுகளில் எல்லோரும் பங்கு கொள்வோம். கோடு, கச்சேரி சென்று வழக்காடி வம்பு செய்வது நாங்கள் அறியாதது. இவை தாம் எங்கள் கிராமத்தின் தன்மை என்றார்.

பிசிராந்தையின் கருத்தோடு முதியவரின் கருத்தும் ஒத்துச் செல்வது கண்டு வியப்படைந்தேன். இந்தக் கிராமம் போலவே எல்லாக் கிராமங்களும் மாறினால் பூமி சுவர்க்கமாகிவிடும். என்ற ஏக்கம் என் உள்ளத்தில் எழுந்தது. அதை வெளியிற் காட்டாது முதியவருக்கு நன்றி கூறிவிட்டு அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறினேன்.

✪☆✪

**யாண்டு பலவாக நரையில ஆகுதல்**
**யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்**
**யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை**
**ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.**

-புறநானூறு.

# பெண்களின் நிலமையும் இன்றைய சமூகமும்

ம. மங்கேஸ்வரன்

மட்/செங்கலடி மகா வித்தியாலயம்
மட்டக்களப்பு.

சமுதாயம் எனும் சர்வ கலாசாலையில் துணை வேந்தர்களாகக் துலங்குபவர்கள் பெண்களே. இன்றைய நவீன உலகிலே பெண்களின் பங்கும் பணிகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. பெண்கள் படிப்பறிவின்றி, கல்வியறிவின்றி முடங்கிக்கிடந்தது அந்தக் காலம். ஆனால் இன்றோ "பெண்கள் நாட்டின் கண்கள்" என்றாகி விட்டதை யாவரும் அறிவோம். அறிகின்றோம். பெண் என்றால் ஒரு கேலியாக எடை போட்டவர்கள், இன்று பெண்கள் என்றாலே மதிப்பளித்து, மாலை சூடுகிறார்கள். எனவே இன்றைய சமூக அமைப்பிலே பெண்களின் நிலமை பற்ற சற்று ஆராய்வோம்.

அறியாமைச் சிறையில் அகப்பட்டுக் கிடந்த அன்றைய பெண் சமுதாயத்தை அறிவொளி பரப்பி அந்தகம் நீக்கி சிறை மீட்டுச் சீர்படுத்த எழுந்தவன் தான் பாரதி. அவன் பெண் சமுதாயத்தை அடிமை என்ற மாய வலையிலிருந்து மீட்டான். அடுப்பங்கரை தான் பெண்களுக்குச் சொந்தம் என்று இருந்த அறியாமையை நீக்கி பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்ற போர்க்கணை தொடுத்தவனே பாரதி. ஆண்களுக்குப் பெண்கள் அடிமையில்லை. ஆண்களுக்கு மட்டும்தானா கல்வி? பெண்களுக்கும் கல்வி தேவை? எனக் கூறிய பாரதி பெண்ணடிமை பற்றி பாடியிருப்பதும் நீங்கள் அறிந்ததே. அன்று பாரதி காட்டியவழி இன்று வீறுநடை போட்டுக் கொண்டு பெண்களும் சமுதாயத்தின் கண்கள்தான் என்ற நிலைமை மாறிவிட்டது. ஏன் பெண்களுக்குத்தான் எத்தனை எத்தனை பெருமைகள். இப்படி பெருமைகள் இருக்கும் போது அவள் ஏன் சமூகத்தில் தலை நிமிர்ந்து சமூகத்தை முன்னேற்றக் கூடாது.

"மாதா, பிதா, குரு, தெய்வம் அவர் மலரடி தினம் தினம் தொழுவோம்" என்ற இந்தக் கூற்றில்கூட முதலில் வைத்து பேணப்படுவது மாதாதான். அதன் பிறகுதான் மற்றவைகள். குழந்தை பிறந்தவுடன் "அம்மா" என்றுதான் அழுகின்றதே தவிர அப்பா என்றோ அல்லது அண்ணா என்றோ அழுவதில்லையே? அப்போ "அம்மா" என்பது பெண்தானே? "பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள்" ஏன் பெண்களுக்கு இவ்வளவு மதிப்பு? பெண் என்பவள் பதுமையான மிருதுவான பூப்போன்றவள். எமக்கு ஒரு அழகான பூவைக் கண்டதும் எங்ஙனம் அவா எழுகின்றதோ? அப்படிப்பட்ட அழகான மென்மையானவள் பெண். "பெண்கள் வீட்டின் கண்கள்" என்பார்கள். ஆனால் இன்று "பெண்கள் நாட்டின் கண்கள்" என்றாகி விட்டது. ஏன்? ஆண்கள் மட்டும்தானா தொழில் செய்வது, கல்வி கற்பது? இன்று எந்தவொரு நிகழ்வை எடுத்துக் கொண்டாலும் முன்னணியில் இருப்பது பெண்களே!.

அன்றைய சமுதாயம் சாக்கடையாக மாறியதற்குக் காரணம் பெண்களிடம் காணப்பட்ட அறியாமையும், கல்வியின்மையுமேயாகும். பெண்களின் கூரிய மதியும் கூட்டுறவுமே ஒடிந்து போன சமூகத்தினை ஊக்கப்படுத்தக் கூடிய உற்சாக மாத்திரைகள். இதனாலே தான் "சமுதாயச் சிற்பிகள்" என்ற அடைமொழி இவர்களைச் சேர்ந்தடைந்திருக்கின்றது இன்று சமூகவியல் ரீதியாக நோக்குவோமாயின் இன்று முதல் தேவையாக முனைந்திருப்பது வேலை வாய்ப்புக்களாகும். பெண்கள் நல்லவர்கள் தூய்மையானவர்கள் அவர்களை கெட்டவளாக சமூகம் மாற்றி விடுவது மட்டுமல்லாது வேறு

வேறு அடை மொழிகளை அவளுக்குக் கொடுத்து விரக்தியுறச் செய்கின்றது சமுதாயம்.

ஒரு பெண் வீட்டை மட்டுமன்றி நாட்டையும் கட்டிக் காத்து வளர்க்கக் கூடியவள். ஏன் தனது கணவனான நேருவுக்கு உற்ற துணைவியாக விளங்கியவள் அவரின் மனைவியான கமலா தானே? ஏன் இவள் மட்டுமல்ல இன்னும் எத்தனை எத்தனையோ பெண்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். அடுப்பங்கரையில் அமர்ந்திருந்த பெண்கள் இன்று எத்தனை எத்தனையோ அலுவலங்களில் அதிபராக, உயர் அதிகாரியாக, ஏன் நாட்டையாளும் ஜனாதிபதியாகக் கூட வந்துள்ளார்களே? இது எமக்கு எதைக் காட்டுகிறது? இன்றைய பெண்களின் பங்கையென்றால் அது மிகையாகாது? பெண்களின் சேவைகளைக் கவனிப்பதற்கென்று "மகளிர் அமைச்சு" என்ற ஒரு அமைச்சு உதவி புரிந்தும் நலன்களைக் கவனித்தும் வருவதை நாம் காணலாம்.

இன்றைய பெண்கள் தொழில் புரிபவர்களாக மட்டுமன்றி, வாகனங்களை இயக்குகின்ற இயக்குனராகவும், கணனியை இயக்குகின்றவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஏன் விஞ்ஞானத்திலும் பெண்களின் பங்கு பெருகிக் கொண்டுதானே இருக்கிறது. மேரிக்கியூரி அம்மை, நைட்டிங்கேள் என்போர் போன்றவர்களும் சிறந்து விளங்கியவர்கள் தானே?. "ஒரு பொண்ணு நினைத்தா அதை செய்து முடிப்பா" என்பதற்கிணங்க ஒரு பெண்ணால் எதை நினைத்தாலும் நிச்சயம் சாதிக்க முடியும். இன்று பெண்கள் நாகரீகம் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு தங்களது உடை. நடை, பாவனைகளை மாற்றினாலும் பெண் என்ற ஸ்தானத்திலிருந்து சற்றும் கூட விலகாதவளாகக் காணப்படுகிறாள். இந்தப் பெண்களின் பங்கும், பணிகளையும் கொண்டே நாடளாவிய அரசும், நாடறிந்த சபைகளும் "மகளிர் தினம்" என ஓர் தினத்தை சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தி பெண் சமூகத்தை வளர்த்து வருவதை யாவரும் அறிவோமல்லவா?.

பெண்களின் குடித்தொகை அதிகரித்து வருவதுடன் அவர்களின் பங்கும் சமுதாயத்தை உயர்த்திய வண்ணமே இருக்கின்றன. பெண்களை போதைப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும், வர்ணித்து வாழ்ந்த அனைவரும் இன்று பெண்களை கண்களாகவும், உயிராகவும் நினைக்கின்றார்களே? இது எமக்கு எதை உணர்த்துகிறது. இன்றைய சமூகத்திலே பெண்களின் நிலையையென்றால் அது மிகையாகதல்லவா?.

இன்று பெண்களின் நிலை ஓவ்வோர் நிகழ்விலும் தனியான இடத்தைப் பிடித்து "பெண்கள் நாட்டின் உயிர்" என்ற நிலையை அடைந்துள்ளது. நாளுக்கு நாள் பெண்கள் ஒவ்வோர் துறைகளிலும் முன்னேறிய வண்ணமே இருக்கிறார்கள். எனவே மேற்போந்தவற்றிலிருந்து சமூகத்தில் பெண்களின் நிலை எத்தகையது என்பதை நாம் உணராமலே உணரலாம் என்பது உண்மை. ஆகவே அருகிக் கொண்டு வரும் பெண் சமூகத்துக்கு நல்வழி காட்டியாக நாமும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோமாக.

வாழ்க மகளிர்
வளர்கவே அவர்கள் தம் வன்புகழ்

## பத்துப்பாட்டு

*முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை*
*பெருகு வள மதுரைக் காஞ்சி - மருவினிய*
*கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சிப் பாட்டின்*
*பாலை கடாத்தொடும் பத்து.*

# இன்றைய உலகில் விஞ்ஞானம்

**த. பிரதீபா**

மட்/செங்கலடி மகா வித்தியாலயம்
மட்டக்களப்பு.

மனிதன் சிந்திக்கும் பிராணியாவான். அதனாலேயே அவன் தன் சிந்தனையின் பயனாக விஞ்ஞானத்தை உண்டாக்கியுள்ளான். இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே இவ் விஞ்ஞானம் உருவாகியது. தற்போது முன்னிருந்ததைப் பார்க்க மேலும் இக்காலத்தில் முன்னேற்றமடைந்து விட்டது. விஞ்ஞானத்துறையினால் தற்போது ஆற்றி வரும் சேவைகளோ கணக்கிலடங்காது.

எத்துறையை எடுத்தாலும் விஞ்ஞானமில்லாத துறைகளே இல்லை. இன்றைய உலகில் விஞ்ஞானமின்றி வாழ்வில்லையெனும் படியாக வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்டது. விஞ்ஞானம் எமக்கு அளித்த பரிசுகளிலொன்று மின்சாரம். மின்சாரத்தின் சேவைகளோ கணக்கிலடங்காது. பாரிய தொழிற்சாலைகளிலிருந்து சமையலறை வரையும் அதன் சேவை பரந்துள்ளது. நல்லதொரு இல்லத்தரசியாக, கூலிமிகக் கேளாத சேவகனாக இம்மின்சாரம் விளங்குகின்றது.

தற்காலத்தில் இவ்விஞ்ஞானத்தின் விளைவாக உண்டாக்கப்பெற்ற போர் விமானங்கள் அணு குண்டுகளினால் மக்களுக்கு பெரும் அபாயகரமான விளைவினை உண்டாக்குவதனால் மக்கள் எல்லோரும் இவ் விஞ்ஞானத்தை வெறுக்கின்றனர். அம்பெய்தவன் இருக்க அம்பை நோகலாமா? ஆம் விஞ்ஞானத்தின் மூலம் போர் விமானங்களை ஆக்கி பிரயோகிப்பவன் மனிதன். விஞ்ஞானமன்று. எனவே விஞ்ஞானத்தைக் குறை கூறுவது நியாயமல்ல. மற்றும் விஞ்ஞானம் தற்காலத்தில் சமயத்திற்கு முரணானவையென நம்மில் சிலர் கருதுகின்றனர் இது தவறானது. விஞ்ஞானமின்றி சமயமில்லை இரண்டும் ஒன்றுடனொன்று தொடர்பு பட்டுள்ளதென நம் அணுவுலகத் தந்தை ஐன்ஸ்டீன், கூறியுள்ளார்.

விஞ்ஞானத்தின் பயனாக பல போக்குவரத்து சாதனங்கள் உருவாகியுள்ளது. இதனால் நாம் விரைவு, சொகுசு, என்பதனைப் பெற்று விரைவாக நம் பிரயாணத்தை மேற்கொள்ளலாம். முற்காலத்தில் பல மாதங்கள் கழித்து ஓர் நாட்டிற்குச் சென்ற மனிதன் தற்போது சில மணித்தியாலங்களிலேயே ஓர் நாட்டிலிருந்து இன்னோர் நாட்டிற்குச் செல்லுகின்றான். மற்றும் பல தொலைத் தொடர்பு சாதனங்களினால் மனிதன் பயனடைந்துள்ளான். ஓர் நாட்டிலிருந்து கொண்டு மறு நாட்டிலுள்ளவர்களோடு நாம் உரையாடுவதற்கென தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சியின் பயனாக பல நாடுகளில் நடக்கும் நிதழ்ச்சிகளைக் கண்டு இரசிக்கக் கூடியதாகவுள்ளது.

மனிதன் இன்று இவ் விஞ்ஞானத் துறையினால் விண்வெளி பிற கோள்கள் என்பவற்றிற்குக் கூட சென்று பல சாதனைகளை படைத்துள்ளான். விஞ்ஞானத்துறையின் முக்கிய பரிசாக கிடைக்கப்பெற்ற கணனிகளின் மூலம் மனிதனை நல்லவனா? கெட்டவனா? என்று அறிய முடிகிறது. அத்தோடு அவனுடைய குணவியல்புகள், நோய்கள் என்பவற்றினையும் தெளிவாக அறிய உதவுவதாகவுள்ளது.

உழவுத்தொழிலுக்கு மனிதன் பயன்படுத்திய எருதுக்குப் பதிலாக உழவு இயந்திரங்கள், துலாக் கிணறுகளுக்குப் பதிலாக பல குழாய்க் கிணறுகள், இன்னும் மனிதனின் வேலையினைக் குறைப்பதற்குப் பல இயந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா போன்ற நாட்டிலுள்ள ஓர் மனிதன் தானே தனித்து நின்று பல ஏக்கர் நிலத்தினில் பயிர் செய்கின்றான். இதற்கெல்லாம் காரணம் இவ்விஞ்ஞானமே.

விஞ்ஞானத்தினால் உருவாக்கப் பட்ட இயந்திரங்களினால் பல மணித்தியால வேலைகளை மனிதன் சில மணித்தியாலங் களில் செய்து முடிக்கின்றான். இன்றைய காலத்தில் விஞ்ஞானம் மருத்துவத்துறைக்கு அறித்துவரும் பங்களிப்புக்கள் சொல்லிலடங் காது. வாந்திபேதி, காய்ச்சல் எனும் நோய் களுக்கே இறந்த மனிதன் தற்போது இதய மாற்றுச் சிகிச்சை செய்து கூட மனிதன் உயிர் வாழ்கின்றான். மற்றும் சந்ததி இன்றி மலடு என்று மக்கள் தூற்றும் பெண்களுக்கு வரப்பிரசாதமாக பரிசோதனைக்குழாய் குழந் தைகள் உருவாக்கப்படுகின்றது.அக்குழந்தை ஆணா? பெண்ணா? குழந்தை வைத்தியராக வருமா? அல்லது பொறியியளாலராக வருமா? என்றல்லாம் அறிந்து பெறக் கூடியதாக உள் ளது பல கொடிய நோய்களுக்கும் மருந்து களைக் கண்டு பிடித்து அதன் மூலம் மக் களை உயிர்வாழச் செய்வது இவ்விஞ்ஞா னமே. மரத்தையே பிடுங்கி நடத்தெரிந்த மனிதன் இன்று உடலுறுப்புக்களைக் கூட மாற்றுமளவுக்கு முன்னேறியுள்ளான்.

விஞ்ஞானத்தின் மூலம் இன்றைய உலகில் பல நன்மைகளை மனிதன் பெறு கின்றான். மனிதன் வாழ்வை இனிமையாகவும், கஷ்டமின்றி நடத்தவும் விஞ்ஞானம் உதவு கின்றது. மனிதனின் மூடநம்பிக்கைகளை அழித்து அறிவுடையவனாக வாழ வழிவகுக் கின்றது. இவ்வாறு பல நன்மையளித்தாலும் இன்னும் மனிதர்களுக்கு விஞ்ஞானம் கடமை யாற்ற வேண்டும். அதாவது கொடிய நோய் களான புற்றுநோய், எயிட்ஸ் போன்றவற் றிற்கு மருந்து கண்டுபிடிக்க வேண்டும். மனி தனின் வறுமையை அகற்றுவதற்கும் வழி செய்ய வேண்டும். எனவே நாம் இவ்விஞ்ஞா னத்திற்கு என்றென்றும் கடமையுடையவர் களாக இருத்தல் வேண்டும்.

***

ஊருக்கு உழைத்திடல் யோகம் – நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் – உளம்
பொங்குதல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்

உற்றவர் நாட்டார் ஊரார் – இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம் – இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை.

-பாரதி-

# இன ஒற்றுமையும் சமத்துவமும்

வி. விஜிதரன்

மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.

தற்காலத்திலே மனிதனின் ஆற்றல் பல்வேறு கோணங்களிலும் பல்கிப்பெருகி யுள்ள போதிலும் ஒற்றுமை எனும் பொற் குணம் இன்மையால் மனுக்குலமே மண்ணா கிக் கொண்டு செல்கிறது. அழகு நிறைந்த இந்த உலகத்திலே ஒவ்வொரு மனிதனும் தானே பெரியவன் எனும் எண்ணத்தால் ஏமாந்து கொண்டு இருக்கிறான். இதனால் இனஒற்றுமையும் சமத்துவமும் சாகடிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன. உலகின் நிலமை இவ்வாறு சீரழிந்து செல்லும் இக்காலத்திலே மீண்டும் ஒரு சமாதானமான உலகை கட்டி யெழுப்ப எம்மனைவருள்ளும் இனஒற்றுமை யும் சமத்துவமும் பேணப்படுதல் அவசியமான ஒன்றாகும்.

"காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு" என்பது பழமொழி எனவே ஒவ்வொரு வருக்கும் அவர்களது செயற்பாடுகளே சிறந் தனவாகத்தோன்றும். ஆயினும்கூட சிலர் தமது செயற்பாடுகளே சிறந்தவை எனக்கரு தும் அதேவேளை மற்றவர்களது செயற்பாடு களை இழிந்தவை எனக்கருதுகின்றனர். இந்த எண்ணம் ஏற்படும் பொழுதே பிரச்சனைகள் ஆரம்பமாகின்றன. இவ்வாறான எண்ணங் களை விடுத்து அவர்களும் நம்மைப்போன் றவர்கள்தான்; அவர்களும் நாமும் சமமான வர்களே என எண்ணத்தலைப்படின் ஒற்றுமை நிலைபெறுவது சாத்தியமான ஒன்றாகும்.

இன்றைய நிலையிலே மனிதனை மனிதன் அடக்கியாளும் நிலமை ஏற்பட்டுள்ள தெனலாம். பலம்மிக்க ஒரு இனம் பலமற்ற ஒரு இனத்தை அடக்கியாள நினைக்கையில் பல்வேறு போராட்டங்கள் தோன்றுகின்றன. வன்செயல்கள் ஆரம்பமாகின்றன. இவ்வாறான அடக்கியாளும் போக்கினை விடுத்து ஒவ் வொரு மனிதனும் தன்னைத்தானே அடக்கி யாளப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். இதைத்தான் அறிவிற்சிறந்து விளங்கிய சான் றோர்-

"உன்னைத்திருத்து
உலகம் திருந்தும்"

எனக்கூறிவைத்துள்ளனர். ஒவ்வொரு வரும் இவ்வாறு வாழும் பட்சத்திலே ஒருவரி டமிருந்து மற்றொருவருக்கு பிரச்சனைகள் ஏற்படாது. இதனால் ஒற்றுமையும் சமத்துவ மும் பேணப்படும்.

இன ஒற்றுமையை குலைப்பதிலே பணமும் பெரும்பங்கு வகிக்கிறது. அதிக பொருளாதாரவலுவுள்ள ஓர் இனம் பொருளா தாரமற்ற ஒரு இனத்தை துச்சமாக மதித்து, அவர்கள் தங்களிலேயே தங்கியி ருப்பவர்களெனக்கருதி அவர்களை இம்சிக்க முயல்கிறது. இவ்வாறான இழிநிலையை மாற் றியமைக்க ஒவ்வொரு இனமும் தமது பொரு ளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். சுயமா கச் சொந்தக் காலிலே நிற்கும் வலுவைப் பெறுதல் வேண்டும். அதேவேளை இதனை மையமாகக் கொண்டும் பிரச்சனைகள் எழாத வாறு பேணவேண்டும். காகங்கள் தங்களுக் கிடையே உணவைப்பகிர்ந்து உண்ணுதல் போல பொருளாதாரத்தினை பங்கிடுதல் வேண்டும். இவ்வாறல்லாது பிரச்சனைகளை ஏற்படுத்தும் இனங்களைப் பார்த்து ஒரு கவி ஞன் பின்வருமாறு எள்ளிநகையாடுகிறான்,

"காக்காக் கூட்டத்தப் பாருங்க
இதுக்குக் கற்றுக் கொடுத்தது யாருங்க?
ஒண்ணாயிருக்கக் கற்றுக்கணும் - இந்த
உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்"

நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான சிறார்கள் ஒவ்வொருவரும் சாதிமத பேத மின்றி வாழக்கற்றக் கொள்ளுதல் வேண்டும். இறைவன் மனிதனை படைத்தபோது யாரை யும் இவன் இந்த ஜாதி இவன் அந்த ஜாதி என்று சொல்லிவைக்கவில்லை. இந்த இன வேற்றுமையானது சில சுயநலப்பிசாசுகளால் உலகுக்கு அளிக்கப்பட்ட சாபமேயன்றி

வேறில்லை. பசுக்கள் பலநிறமாக இருந்தா லும் அவை தரும் பாலின் நிறம் ஒன்றுதான். எனவே இனங்கள் பலவாக இருந்தாலும் உண்மை ஒன்றுதான். அதுவே "மனித இனம்" எனும் மறுக்க முடியாத உண்மையாகும். பாரதம் தந்த பண்பட்ட கவிஞன் பாரதி "சாதிகள் இல்லையடி பாப்பா" என்றான். கீழ்காணும் பாடலும் இதைவலியுறுத்துகிறது.

உலகிலுள்ளது ஒரு சாதி - மூடர்
சொல்வார் இதில் பலகோடி
ஒற்றுமையாயிங்கு வாழ்ந்தே
பெற்றிடுவோம் இன்பம் நாளும்"

இந்த உலகிலே ஒற்றுமையை நேசித்து சாதி, மத பேதங்களை வெறுத்து சத்தியத்தையும் சமத்துவத்தையும் பேணிய எத்தனையோ மகான்கள் வாழ்ந்திருக்கிறார் கள். மகாத்மாகாந்தி, இயேசுநாதர், நபிகள் நாயகம் போன்றோர் இவர்களில் சிலர். இவர் கள் போட்டபாதையில் நாமும் சென்று இன ஒற்றுமையைப் பேணி சமத்துவத்தை நிலை நாட்டுதல் வேண்டும். எனவே, இன்றிலிருந்து உறுதி கொள்வோம். இனங்களை ஈரமாக்கு வோம். இதயங்களை இணைத்து வைத்து ஒற்றுமையையும் சமத்துவத்தையும் நிலை நாட்டி உயர்ச்சியடைவோம்.

சான்றோர் புதுமணத் தம்பதியரை வாழ்த்தும்போது பதினாறும் பெற்றுப் பொருவாழ்வு வாழ்க என வாழ்த்துவர்.

புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், அழகு, இளமை, நல்லூழ், அறிவு, பெருமை, துணிவு, வாழ்நாள் நோயின்மை, நுகர்ச்சி – ஆகிய இவையே அந்தப் பதினாறு பேறு கள் ஆகும்.

புகழ் கல்வி ஆற்றல் வென்றி புகலும் நன் மக்கள் பொன்நெல்
அழகொடு இளமை நல்லூழ் அறிவுநற் பெருமை காலப்
பகருறு துணிவு வாழ்நாள் பண்பில்நோய் இன்மையொடு
புகரு நுகர்ச்சி கூடப் பொருந்திய பேறீ ரெட்டாம்.

# தகவல் தொடர்பான நவீன போக்கு

அ. ஜெயக்குமார்

மட்/ஆரைப்பற்றை மகா வித்தியாலயம்

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட தொன்றே நவீன தொடர்பாடல் முறை எனலாம். தகவல் தொடர்பு என்பது ஓரிடத்தில் உள்ள செய்தியை இன்னொரு இடத்திற்கு பரிமாற்றம் செய்வதே ஆகும்.

ஆதிமனிதன் மொழி அறிவில்லாத காலகட்டத்தில் தான் செல்லும் இடங்களை ஓவியமாக தீட்டிவிட்டு சென்றான். வேட்டையாடச் செல்வதனால் தன் குகையிலே மிருகத்தையும் வில்லையும் வரைந்து விட்டு சென்றான். அவனைத் தேடி வருபவர் அவன் வேட்டைக்கு சென்றுவிட்டான் என ஊகித்துக் கொள்வார்கள். இவ்வாறு மொழியறிவில்லாத அக்காலத்தில் ஓவியமாக தமது கருத்துக்களைத் தெரிவித்த மக்கள் பின் மொழி அறிவு ஏற்பட்டதும் ஏடுகளிலே தமது செய்தியைத் தெரிவித்தனர்.

இவ்வாறு வளர்ச்சி அடைந்த பின்னர் புறாக்களின் மூலமாக தகவல் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமிடையே பரிமாறப் பட்டது. பின் குதிரையிலே சென்று தகவல்களை அறிவித்து வந்தனர்.

மன்னன் சமூக மக்களிடையே கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முரசொலி மூலமும், பறை சாற்றுவதன் மூலமும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டான்.

இவ்வாறாக மனிதனின் ஆதிகாலம் தொட்டு அறிமுகமாகி வந்த தகவல் தொடர்பு மனிதனின் சிந்திக்கும் ஆற்றலால் பல விஞ்ஞான விந்தைகள் ஏற்பட்டு நவீன தகவல் தொடர்பு ஏற்பட்டது. இதன் பின்னரே வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, தொலைபேசி ரெலக்ஸ், பெக்ஸ் போன்ற நவீன தகவல் தொடர்பு சாதனைகள் அறிமுகப் படுத்தப்பட்டன

இதன் முதற்கட்ட வளர்ச்சி அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதும் பத்திரிகை வெளிவந்தது. இதன் பயனாக உடனுக்குடன் தகவலை பரிமாறக் கூடிய வசதி ஏற்பட்டது. துண்டுப்பிரசுரங்கள் போன்றவை மூலமும் தகவல்கள் பரப்பப்பட்டன. நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை மக்களுக்கு தெரிவிக்கப் பட்டன. இருந்த போதிலும் சான்றோர் மட்டுமே இதனைப் பயன்படுத்தினர்.

அதன் பின்னர் மார்க்கோனி என்பவர் தந்தி இல்லாக் கம்பிமூலம் செய்தி அனுப்பும் முறையைக் கண்டு பிடித்தார். கற்காத பாமர மக்களுக்கும் நாட்டு நடப்புக்களையும் புற நிகழ்ச்சிகளையும் இலகுவாக அறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது . இதனால் மக்களிடையே பொது அறிவு வளரத் தொடங்கியது. தமது நாட்டில் என்ன நடக்கிறது, வெளிநாடுகளில் என்ன நடக்கிறது? என சிந்திக்கும் சக்தி இந்த வானொலி மூலமே ஏற்பட்டது, எனலாம்

பிற்காலத்தில் தொலைக் காட்சி கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாடல் முறையின் சிறந்த வளர்ச்சி எனலாம். இதன் மூலம் செவிப்புலனுக்கு மட்டுமன்றி கட்புலனுக்கும் விருந்தளிக்கக் கூடிய வகையில் தொலைக்காட்சி வளரலாயிற்று. இதன் மூலம் தமது அன்றாட பிரச்சனைகள், வேறு பல விடயங்களைத் தொலைக்காட்சி மூலமாக அறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இதன் மூலம் தமது பண்டைய கலாச்சாரம் பிரதிபலிப்பதையும் உலக நாடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் தமது நாடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் நேரடியாக தமது கண்ணால் பார்க்கக்கூடிய வசதி ஏற்பட்டது. எனவே இதுவும் தகவல் தொடர்பான நவீன போக்கெனக் கூறலாம்.

தொலைபேசியை எடுத்துக் கொண் டால் இன்று ஒரு மனிதனுடன் பின்னிப் பிணைந்த வகையில் இந்த தொலைபேசிச் சேவை விளங்குகிறது. அன்றைய காலத்தில் புறாக்கள் மூலமாகத்தொடர்பு கொண்டவர்கள் இன்றைய சூழ்நிலையிலே நேரடியாக தகவல் களை பறிமாறிக் கொள்கின்றனர். ஒரு ஊரில் இருந்து கொண்டு மறு ஊருக்குச் சென்று சொல்ல வேண்டியதை அங்கிருந்து கொண்டே அறிவிக்கக் கூடிய வசதியை இந்தத் தொலைபேசி ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய உலகம் சுருங்கி வருவ தற்கும் இத்தொலைபேசியே காரணம். தமது நாடுகளிலும்சரி வெளிநாடுகளிலும் சரி உடனுக்குடன் தகவல்களைப் பறிமாறிக் கொள்ளவும் நேரடியாக ஒருவருடன் நீண்ட நேரம் உரையாடவும் இத்தொலைபேசி வசதி செய்துள்ளது. ஒரு நாட்டின் ஜனாதிபதி மறு நாட்டு ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்ளவும் தமது கருத்துக்களை இரகசியாமாகப் பறிமாற வும் இத்தகவல் தொடர்பு முறை உதவுகின் றது.

மற்றும் இவ்வாறு காலப்போக்கில் காணப்பட்ட தொடர்பாடல் முறை தற்போது அதனைவிட வெகு நவீன வசதியுடன் விளங் குகின்றது. ஒருவருடன் தொடர்பு கொள்ளும் வேளையில் அந்நபர் அங்கு இல்லாத போதும் நாம் பேசுவதை பதிவு செய்து வைக்கும். கருவிகளுடன் தற்கால தகவல் தொடர்பு விளங்குகிறது. மற்றும் ஒருவர் பேசும் போது பேசுபவரின் முகத்தையும் நேரடியாக பார்க் கக்கூடிய வசதி தற்போது உள்ள தொலை பேசியில் உள்ளது. இதனால் பேசுபவை இனங்காணக் கூடியதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நவீன தகவல் தொடர்பு முறை தற்காலத்தில் மேலும் வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. உதாரணமாக ரெலக்ஸ், பெக்ஸ் போன்ற நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன. இதன்மூலம் பேசுவதை விட தொடர்பு கொள்வோரிடம் எமது கருத்துக் களைப் போட்டோ பிரதி போன்று பதிவு செய்து அவரிடம் நேரடியாக குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கக்கூடிய வசதி ஏற்பட் டுள்ளமை நவீன தகவல் தொடர்புமுறையின் விருத்தியே எனலாம்.

இச்சாதனங்கள் மூலம் விண் வெளியில் இருந்து கொண்டே பூமிக்குத் தகவல்களை அனுப்பக்கூடிய தொடர்பு வசதி ஏற்பட்டுள்ளது. மற்றும் செய்மதிகளிலும் இச் சாதனம் பொருத்தப்பட்டுள்ளமையால் வானிலை அவதானங்களை மேற்கொள்ளக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் தகவல் தொடர்பான நவீன போக்கினால் உலக மக்களுடன் நேரடியாக பேசக்கூடியதாகவும் நேரே பார்க்க கூடியதாகவும் உள்ளது. எனவே இன்றைய உலகம் மிகவும் சுருங்கி கொண்டே வருகின்றது எனலாம்.

ஆதிகாலந்' தொட்டு தனது கருத்துக் களைப் பறிமாற்றம் செய்து வந்த மனிதன் பின்னர் சிந்திக்கும் ஆற்றல் வளர்ச்சியடைய அதன் மூலம் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு துரிதமாகத் தகவல்களைப் பறிமாறிக் கொள்ளும் சாதனங்களைக் கண்டு பிடித்தான் இதன்மூலம் முரசுகள் மூலமும் புறாக்கள் மூலமும் குதிரையாட்கள் மூலமும் பரப்பப்பட்ட தகவல்கள் காலப்போக்கில் பத்திரிகை மூல மாகவும் வானொலி, தொலைக்காட்சி போன்ற பொதுசன தொடர்பு சாதனங்களின் மூலமும் தகவல்கள் பரப்பப்பட்டு நவீன காலத்தில் தொலைபேசி, ரெலக்ஸ், பெக்ஸ் போன்ற தொடர்பு சாதனங்களும் வளர்ச்சியடைந் துள்ளன. எனவே இதுவே இன்றைய தகவல் தொடர்பான நவீன போக்கு எனக் குறிப்பிடலாம்.

இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

**-951, திருக்குறள்**

# சுவாமி விபுலானந்தரின் கல்விக் கொள்கை

எஸ். எதிர்மன்னசிங்கம்
உதவிப்பணிப்பாளர்
கலாசார அலுவல்கள்

விபுலானந்த அடிகளாருடைய கல்விக் கொள்கையானது கலையும், அறிவியலும் ஒருங்கு சேர்ந்ததாகக் கீழைத்தேய கலாசாரத்திற்கு உகந்த வகையில் அமைந்துள்ளது. உள, உடற்பயிற்சியடிப்படையில் அமைந்துள்ள பரந்ததொரு தேசியக் கொள்கையினை அடிகளார் பின்பற்றினார். இதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது புதிய அறிவியல் நூல்களைப் படைத்தல் பன்மொழிக் கல்வியைப் பரப்புதல், தேசியக் கல்வியை நிலைநிறுத்தல், மறு மலர்ச்சிக் கருத்துக்கைளப் பரப்புதல் என்பவையாகும்.

கலையும், அறிவியலும் இணைந்து நடைமுறையில் பயன்தரக்கூடிய வகையில் கல்வியமைப்பினை அடிகளார் பெரிதும் விரும்பினார். அத்தோடு கலை,, அறிவியல், மெய்ஞானம் ஆகிய மூன்றும் ஒருங்கிணையும், கல்வியே முழுமையான கல்வியாகும் என்னும் கருத்து அடிகளாரிடம் மேலோங்கியிருந்தது. மனித வாழ்வுக்குத் தேவையான கல்விப்பரப்புப்பற்றியும் அதனைப் பயிலுவதற்கான காலவரையறை பற்றியும் அடிகளார் எடுத்துக் கூறியுள்ளதோடு, எல்லாக் கலை ஞானங்களும் மனித வாழ்வு மேம்பாடு அடைய முக்கியமானது. எனவே அவை எல்லாவற்றையும் கற்கவேண்டுமென விரும்பினார். மகாத்மா காந்தி அடிகள் கைக்கொண்ட "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்னும் அடிப்படையிலான ஆதாரக்கல்வி முறையை முதன்முதலாக இலங்கையில் பரீட்சித்துப்பார்த்த பெருமை விபுலானந்த அடிகளாரையே சாரும். ரவீந்திரநாத்தாகூரின் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சர்வ தேசக் கல்வி முறையிலும் அடிகளாருக்கு அபார நம்பிக்கையிருந்தது. இவற்றுடன் சேர்த்து விஞ்ஞானத்திற்கும சிறப்பிடம் கொடுத்தார். நியூட்டன், எயின்ரையின் போன்ற விஞ்ஞானிகளையும், மகாத்மாகாந்தி, லிங்கன் போன்ற அரசியல் ஞானிகளையும், கம்பன், காளிதாசன் போன்ற கவிஞர்களையும், விவேகானந்தர், இளங்கோ போன்ற வீரத்துறவிகளையும், செகசிற்பியார், பெர்னாட்சோ போன்ற நாடகாசிரியர்களையும், சொக்கநாதர் திருவள்ளுவர் போன்ற பேரறிஞர்களையும், சங்கரர், மெய்கண்டார் போன்ற சமயாச்சாரிகளையும் இன்னும் பல்வேறு துறைகளிலும் மேதைகளை உண்டாக்குவதே அடிகளாரின் கல்வித் திட்டத்தின் சீரிய நோக்கமாக இருந்தது.

1932ம் ஆண்டு சித்திரைத் திங்களில் அடிகளார் தமது கல்விப் பணியைத் திருக்கோணமலையில் ஆரம்பித்து வைத்தார். மட்டக்களப்பிலுள்ள சைவப் பாடசாலைகளும் பின்னர் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. பலகாலம் அரசியல் உரிமையில்லாமல் அடிமை வாழ்வு வாழ்ந்த சமுதாயத்திடையே தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று, என்பவற்றை உண்டாக்கக் கூடிய ஆதாரக் கல்வி முறையைப் புகுத்தினார். இதற்காக அமர கவி பாரதியாரின் தேசிய கீதங்களையும் வீரத்துறவி விவேகானந்தரின் ஆலயப்பிரசங்கங்களையும் பயன்படுத்தினார். அப்பெரியாரின் பக்திப்பாடல்களும், சமயப்பிரசங்கங்களும் மாணவரிடையே சமய அறிவையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தின. அடிகளாரது கல்வித்திட்டத்தில் உடல் வளர்ச்சிக்குத் தலையாய இடம் அளிக்கப்பட்டது. மேல்நாட்டு உடற்பயிற்சி, கீழ்நாட்டு உடற்பயிற்சி என்ற வித்தியாசமேதுமின்றி இருவகையிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தேகப்பியாச முறைகளை மாணவரின் உடல் வளர்ச்சிக்கு நன்கு பயன்படுத்தினார். தேகபலமே மனவுறுதிப்பாட்டை உண்டாக்க வல்லது என்பது அடிகளாரின் திடமான நம்பிக்கையாகும். இதே போன்று உளப்பயிற்சிக்கு இசையும், ஓவியமும் சிறந்ததெனக் கருதினார். இதே விடயத்தை மேனாட்டு பிளேற்றோ, ரூசோ போன்ற அறிஞர்களும்வலியுறுத்தி உள்ளனர்.

டால்ஸ்டாயும் தமது மாணவருக்கு சங்கீதப் பயிற்சியும், ஓவியப்பயிற்சியும் கொடுத்துக் கற்பித்தலை மேற்கொண்டார். விபுலானந்த அடிகளார் தாய்மொழிக் கல்வியையே கூடுதலாக வலியுறுத்தினார். இருந்தாலும் மும் மொழிப்பயிற்சி மிக முக்கியமானது என்பதை யுணர்ந்து தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்னும் மூன்று மொழிகளையும் மாணவர்கள் கற்கத்தூண்டினார். இதனை மட்டக்களப்புக் கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியால யத்தில் செயற்படுத்திக் காட்டினார். 1932ம் ஆண்டு சிவானந்த வித்தியாலயத்தில் தமிழ் மாணவர்கள் சிங்களம் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். அத்தோடு சிங்களவரும், தமிழரும் சமஸ்கிருதம், பாளி ஆகிய இரு மொழிகளையும் கற்ற வேண்டுமென அடிகளார் ஆசைப்பட்டார்.

ஈழநாட்டின் உயர்ச்சிக்கு தொழிற் றுறைக்கல்வி மிக முக்கியமானது என 1941 லேயே வலியுறுத்தியவர் நம் அடிகளாராகும். மேலும், மேலைத்தேயக் கல்விமுறை இலங் கைக்கு ஒவ்வாததென்று எடுத்துக் காட்டியவரும் அடிகளாரே. அறிவியற் கல்வியை வேதாந்தக் கொள்கை அடிப்படையில் புகட்டுதல் சாலச் சிறந்தது என்று கல்விப்போதனை வரலாற்றிலேயே ஒரு புதுமைப்புரட்சியை ஏற்படுத்தியவர் விபுலானந்த அடிகளாராகும்.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் நாட்டங்கொண்டிருந்த அடிகளார் பாடசாலைகளில் குழந்தைகளுக்கு வகுப்பிற்கேற்ப பாடல்களை தேர்ந்து கொடுத்தார். முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு “செந்தமிழ் நாடென்னும் போதினிலே” 2ம், 3ம், 4ம் வகுப்பு மாணவர்களுக்கு ”காக்கைச் சிறகினிலே நந்தலாலா” 5ம் வகுப்பிற்கு “பகைவனுக் கருள்வாய் - நன்நெஞ்சே” 6ம் வகுப்பு மாண வர்களுக்கு “வீரசுதந்திரம் வேண்டி நின்றார்,” என்ற வகையில் மாணவர் மனதில் இலகுவில் பதியத்தக்கதாக கற்பிக்க வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தினார். “பிரபுத் தபாரத” சஞ்சிகையிலும், “வேதாந்தகேசரியிலும்” ஆசிரியராகக் கடமை பார்த்தபோது தமது கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத் தக்கூடிய கட்டுரைகள் பலவற்றை எழுதினார். 1938ல் ஈழகேசரியில் எழுதிய இலங்கைப் புதிய கல்வித்திட்டத்திற்கு ஆதரவு என்னும் கட்டுரை, 1933ல் குமரன் பத்திரிகையில் எழுதிய “பயனற்ற கல்வி என்னும் கட்டுரை 1934ம் ஆண்டு எழுதிய பயனுள்ள கல்வி என்னும் கட்டுரை, 1940ல் பிரபுத்தபாரத் தில் எழுதிய The application of the Vedantic ideal to educational problems. என்னும் கட்டுரை என்பன சிறப் பாகக் குறிப்பிடத்தக்கவை.

விபுலானந்த அடிகளார் அண்ணா மலைப்* பல்கலைக்கழக முதற் தமிழ்ப் பேரா சிரியராகவும், பேராதனைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகவும், பணிபுரிந்த காலத்தில் தமது கல்விக் கருத்துக்களை பல்கலைக்கழக மட்டத்திலேயே இலகுவா கப் புகுத்தக்கூடியதாகவிருந்தது. கற்றல் முறைகள் பற்றி தாம் கொண்டிருந்த தம் அனுபவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறினார். தனது தந்தையாரின் வழிகாட்டலில் ஒரு நூலைப்படித்து அதினை நன்றாக விளங்கிக் கொண்ட பின்னரே அடுத்த நூலைப் படிப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற கொள்கையை அடிகளார் பின்பற்றினார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அடிகளாரது கற்பித்தல் முறை பற்றிக் குறிப்பிடும்போது, “அடிகளார் போதனை செய்யத் தொடங்கினால் நேரம் போவதே தெரியாவண்ணம் கற்பித்துக் கொண்டு இருப்பார்” என்ற குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு இலக்கியம் கற்பிக்கும் போது கற்பனா சக்தியை ஏற்படுத்த வேண்டுமென அடிகளார் கூறுகிறார். வரலாற்றைக் கற்பிக்கும் போது உலகப்பெரும் சமயங்கள் எல்லாவற்றையும் கொண்டவொரு வரலாற்றுச் சமயப் போதனையே சிறந்தமுறையென விரும்பினார். சகல சமயங்களையும் அதன் பெரியார்களது பணிகளையும் நீக்குவதோ, பிரிப்பதோ பூரண மான வரலாறாகாது என்னும் கருத்துக் கொண்டவர் விபுலானந்த அடிகளார். அறிவியற் கல்வியைக் கூட வேதாந்தக் கொள்கை அடிப்படையிலே புகட்டவேண்டுமென்பது அடிகளாரின் கருத்தாகும்.

இவ்வாறான சிறந்த கல்விக் கொள்கையினைத் தம் வாழ்க்கையிலே செயற்படுத்திக் காட்ட வேண்டுமென்னும் பெரு விருப்பு நம்அடிகளார் மனதில் பதிந்திருந்தமையாற்றான் நல்ல பல சேவைகளை அவரால் செய்ய முடிந்தது. நாவலர் வழியில் ஈழத்தில் மாத்திரமன்றி இந்தியாவிலும் சைவமும், தமிழும், இசையும் தழைத்தோங்க அரும்பணி புரிந்தார். அடிகளார் விட்டுச்சென்ற பணிகளையும் அவர் கொண்டிருந்த கல்விச் சீர்திருத்தங்களையும் மேலும் வளர்ச்சியடைய செய்வதற்கான ஆக்கபூர்வமான பணிகளை அறிஞர் பெருமக்கள் மேற் கொள்வது இன்றியமையாததாகும்.

## உசாத்துணைகள்

**1. நடராஜானந்தா சுவாமி**
விபுலானந்த அடிகளார்
"தேசியக்கல்வி முறை - அடிகளார் படிவமலர் (1969)

**2. விபுலானந்தர் சுவாமி**
மதங்க சூளாமணி (1926)

**3. நடராசா. ந**
விபுலானந்த அடிகளாரது கல்விக் கருத்துக்கள் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மட்டக்களப்பு 1976, மார்ச் 19, 20, 21.

**4. விபுலானந்தர் சுவாமி**
"பயனுள்ள கல்வி" வித்தியா சமாச்சாரப் பத்திரிகை - (தொகுதி)

□□

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

– புறநானூறு –

# "சமாதானமே உயர்வானது"

**எல். பிரகாஷ்**
ஆண்டு - 5

தி/முன்னம்போடிவெட்டை அ. த. க.
வித்தியாலயம், தோப்பூர்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்"

என்ற பாரதியின் பாடலுக்குக்கேற்ப நாட்டில் அன்பும், அமைதியும், நட்பும், புரிந்துணர்வும் நிலவுமாயின் சாந்தியும் சமாதானமும் நிலை பெறும். "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்ற கருத்து நாட்டின் தலைவர்களிடையே, அரசியாலாளர்களிடையே காணப்படுமானால் அங்கு சமாதானம் என்பது முயற்கொம்பாகவே அமைந்து விடும்.

இன்று நமது நாட்டில் மட்டுமல்ல. உலகின் எந்தப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் எங்கும் புரட்சி! எதிலும் புரட்சி என்ற நிலைமை தோன்றி வளர்ந்து விட்டது. மனிதன் விலங்குகளிலிருந்தே தோற்றம் பெற்று பரிணாமப்பட்டு இந் நிலைக்கு வந்தவன் என்ற உண்மைத் தன்மைக்கேற்ப இன்னும் மனிதனிடம் விலங்குணர்வு மாற்றமுற வில்லை போற்றான், தெரிகிறது. இன்று மக்களிடம் மனிதம் மதிக்கப்படுவதில்லை. மனித விழுமியங்கள் பேணப்படுவதில்லை. சட்டம், சமயம் சம்பிரதாயங்கள் போற்றப்படுவதில்லை.

**"தனியொரு மனிதனுக்கு உணவில்லை-
யெனில் இச் சகத்தினை அழித்திடுவோம்!**

எனப் பாரதி முழக்கமிட்டது மனித தத்துவத்தை, தனிமனித உரிமையை நிலை நாட்டுவதற்கும், சமத்துவத்தை வளர்ப்பதற்கும், சமாதானத்தை நிலைகொள்ளச் செய்வதற்குமே ஆகும்.

உலகிலே இன்று ஐக்கிய நாடுகள் சபையாக இருந்தாலென்ன? சார்க் நாடுகளாக இருந்தாலென்ன? நாட்டின் தலைவர்கள் கூடுகின்ற மகாநாடுகளில் சமாதானம் பற்றிய பேச்சு ஒரு சம்பிரதாய பூர்வமான பேச்சாகி விட்டது. சமாதானம் என்றால் என்ன? சமாதானம் ஏன் வேண்டும்? சமாதானம் எங்கே? என்ற கேள்விகளை இன்று ஒவ்வொருவரும் தமக்குள் கேட்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மனித சமுதாயம் தள்ளப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது வெட்கப்பட வேண்டிய வேதனைப்படக்கூடிய நிலைக்கு உலகமே தள்ளப்பட்டுள்ளது.

தற்போது உலகிலுள்ள நாடுகளுக்கிடையில் இனங்களுக்கிடையில் இனம், மதம், நிறம், மொழி, வர்க்கம், என்ற போர்வையில் போட்டியும் பொறாமையும் ஏற்பட்டுப் போர என்னும் கொடிய அரக்கன் அழிவுகளையே ஏற்படுத்துகிறான். இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான யுகம் ஆக்கத்துக்குச் செய்ய வேண்டிய பங்களிப்பை அணுஆயுத உற்பத்திக்குச் செலவு செய்து மனிதனை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்கிறது.

திருவள்ளுவப் பெருந்தகை கூட தமது திருக்குறட் பாக்களிலே மனித மனங்களிலே உயர்வான எண்ணங்கள் உருவாக வேண்டும். நல்லனவற்றை எண்ண வேண்டும் நல்லனவற்றையே செய்ய வேண்டும். தீயனவற்றை கழிக்க வேண்டும் என்பதை வழியுறுத்த வேண்டி,

**"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் -
மற்றொன்று தள்ளினும் தள்ளாமை
நீர்த்து"**

என சிறப்பாகக் கூறியுள்ளார். இன்று எமது சமூகம் உயர்வெனக் கருதுவது பொருளாதார உயர்வு, சமூக அந்தஸ்து உயர்வு, பதவி உயர்வு, புகழ் உயர்வு போன்றவற்றையே ஆகும். இவையனைத்தும் நிலை

பேறில்லா உயர்வுகள். மனித மனங்களில் அன்பினால்- அகிம்சையினால் கட்டியெழுப் பப்படுகின்ற சாந்தியும் சமாதானமுமே உரமும் உறுதியும் வாய்ந்த உயர்வானதா கும்.

மனிதனிடத்தில் "நான்" என்ற அகங் காரமும் "தான்" என்ற மமகாரமும் உள்ளவரை இம் மனித குலத்தினால் சமூகத்திற்கோ, இனத்திற்கோ, நாட்டிற்கோ நன்மை ஏற்படப் போவதில்லை. இது வெறுமனே அச்சத்தை யும், அழிவையுமே ஏற்படுத்தும். இன்றைய உலகின் நவீன விஞ்ஞானம் கொடிய யுத்தத்திற்கும், உயிர் உடைமை நாசத்திற் குமே மூல காரணமாக விளங்குகிறது.

சமாதானமே உயர்வானது என்ற மனதிடசங் கற்பம் நாட்டின் அனைத்து தரப்பினரிடமும், மக்களிடமும் ஏற்படுத்த- ஏற்பட வேண்டும். "உயிர்களிடத்து அன்பு வேண்டும்." அப்படி யானால் தான் இம்மண்ணிலே நல்ல வண்ணம் வாழமுடியும். மனித விழுமியங் களைப்பேண முடியும் சாந்தியும் சமாதான மும் மேன்மையுறும் போது நாடும் மனித குலமும் மாண்புறும். மன்பதை நிலைவுறும்.

***நாட்டை நினைப்பாரோ – எந்த***
***நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை***
***வீட்டை நினைப்பாரோ – அவர்***
***விம்மி விம்மி அழுங்குரல்***
***கேட்டிருப்பாய் காற்றே – துன்பக்***
***கேணியிலே எங்கள் பெண்கள் அழுதசெயல்***
***மீட்டு முரையாயோ – அவர்***
***விம்மி அழவும் திறங்கெட்டுப் போயினர்.***

***– பாரதி –***

# "சிறியன சிந்தியாதான்"

**செல்வி க. நிறைமதி**
ஆசிரியை

கோயில் புதுக்குளம்/இந்துக்கல்லூரி,
வவுனியா

இராமாயணம் என்னும் மாபெரும் சமுத்திரத்திலே சங்கமிக்கும் கிளையருவி வாலி வதைப் படலமாகும். இதன் ஒப்பற்ற நாயகன் வாலி. அதற்குரிய தகுதிகளை வாலி உரித்தாக்கியும் இருக்கிறான். தலைமைத்து வப் பண்பும் நிகரற்ற வீரமும் படைத்தவன் வாலி வலிமையிற் சிறந்தவன். வரம்பில் வலிமையுடையவன். இவனது வலிமைக்குச் சான்றாக பலவற்றைக் குறிப்பிடலாம்.

பெயர்வுற வலிக்கவும் மிடுக்கு இல் பெற்றியர் அயர்வுற்றதைக் கண்டு தானே அந்த பாற்கடலை தயிர் எனக் கடைந்து இந்திரன் முதலிய அமரர் ஏனையோர்க்கு அமுதம் தந்தவன். இதனால் வலிமையில் அவர்களிலும் உயர்ந்தவன். ஆற்றலில் அமரரும் அவுணர் யாவரும் தோற்றனர் என்றால் ஏனையவர் சொல்லற் பாலரோ? கூற்றும் இவன் பெயர் சொல்லக் குலையும்.

சிட்டுவார் பொரக்கிட்டின் அவர் தம் நலங்கொள் வலிமையிற் பாதியைத் தன தாக்கிக் கொள்ளும் வரம் பெற்றவன். வாலி இவற்றோடு நால்வகை பூதங்களின் வலிமையையும் தனக்குரித்தாக்கியவன். காற்றுக்கும் ஆணையிடக் கூடியவன். நாலு வேதமாம் நவையில் சாலியின் வேலியன்னவன்.

"கால் செலாது அவன் முன்னர்க் கந்தவேள்
வேல் செலாது அவன் மார்பில் இவன்
வால் செலாத வாயல்லது இராவணன்
கோல் செலாது குடை செலாது.

கைலாயங் கிரியையே பெயர்த்த தசக்கிரீவனையே வாலால் கட்டி வைத்த வலிமையினன். இராவணன் வாலியை நினைக்கும் போதெல்லாம் பறையடிக்கின்ற நெஞ்சினனானான் என்றால் வாலியின் வலிமையை சொல்ல வேறு வார்த்தைகள் வேண்டாம். இவைமட்டுமல்ல "பஞ்சின் மெல்ல அடியாள் பங்கன் பதயுகம் அலாது யாரையும் அஞ்ச வித்து அறியாச் செவ்கை ஆணையினை உடையவன் அதாவது சிவபக்தன்.

இவ்வகையிலெல்லாம் எண்ணிலா ஆற்றல் உடையவன் மார்பை இராமாயணம் உண்வார் சுவைக் கதலியின் கனியினைக் கழியச் சேரும் ஊசியின் சென்றது. வாலி வீழ்ந்தான் இந்த வாலி வலிமையில் மட்டுமே சிறந்த வல்லவன் பண்பிலும் சிறந்தவன். பெரியவன். உயர்ந்தவன் அப்படி அவன் இல்லாது போயிருந்தால் கம்பராமாயணத் திலே வாலிக்கென ஒரு இடம் ஒதுக்கியிருத் தலில் அர்த்தமும் இல்லாது போயிருக்கும்.

இலங்கை வேந்தன் சிறந்த சிவ பக்தன் வரம்பல பெற்றவன்நலம் பல நிறைந் தவன் என்ற கர்வத்தில் வானவரைக் கூட வருத்தி தன் கட்டளைக்கு உட்படுத்தியவன் தக் வலிமைக்கு பயணத்திற்கு தடையாக இருந்த கைலாயங் கிரியை பெயர்த்தெறிய முற்பட்டவன். மண்ணுக்கும், விண்ணுக்கும் சவாலாக அமைந்தவன். இப்படியான பராக் கிரம சாலியான இராவணனை வாலிலே கட்டி வந்து பத்துத்தலை பூச்சியென தன் மகனுக்கு விளையாடக் கொடுத்தவன் வாலி அப்படியாயின் வாலி மகா பராக்கிரம சாலி யாகிறான். இங்கே தான் வாலியின் பெருமை யினை நாம் உணரும் நிலை வருகிறது. அதாவது வாலியிலும் வலிமை குறைந்த இராவணன் மூவுலகையும் ஆட்டிப்படைத் தான் என்றால் வாலி எப்படி நடந்திருக்க முடியும்? ஆனால் வாலி அப்படி நடந்தானா? அனுமனே சொல்கிறான்.

"நாலு வேதமாம் நவையில் சாலியின்
வேலியன்னவன்..................."

தவறாக சர்வாதிகாரியாக நடந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை இருந்தும் வாலி நெறி தவறவில்லையாயின் அவன் போற்றப்பட வேண்டிய ஒருவனாகிறான்.

இராகவன் வாளினால் வீழ்ந்த வாலி பித்தாய விலங்கின் ஒதுக்கினின்றும் நீங்கிய தன்மையுடையவனாகக் காணப்படுகிறான் பகுத்தறிவின் வாய்ப்பட்ட வினாக்களைத் தொகுக்கிறான்.

மறைந்து நின்று அம்பு துரத்திய இராகவன் நீலக்கார் முகில் கமலம் பூத்து, மண் உந்து வரிவில்லேந்தி வருவதே போலும் வந்து முன்நிற்க வாலி அவனைப் பார்த்து நியாய சிந்தையோடு பல வினாக் கணைகளைத் தொடுக்கிறான். அந்த கணைகளின் கூரிய தன்மையை நேரிய தன்மை உணரப்படவேண்டியது.

வேத நன்னூல் சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும் பழமையான நல்ல அறப்பயனை இழந்தது இதுதான். மிகப் பெரிய தர்மமோ என எண்ணியவன் இராமனைப் பார்த்துச் சொல்கிறான்.

"வாக்கிலே நாணயம் மரபு வழித் தூய்மையும் பேணிய தசரதன் மகனே மற்றவரைக் காப்பதனால் தீமை நன்மையாகுமா? மூவுலகிற்கும் நாயகன் தருமம் தவறலாகுமா? உங்கள் குலத்திற்கே உடைமையான அரச தருமத்தை நீ துறந்தற்கு நீ ஜானகியாளை பிரிந்ததுதான் காரணமா? அரக்கர் செய்த தீவினைக்கு குரங்கினத்தரசையா பலி கொள்வது? பழியை நீ சூடினால் புகழைச் சூடுவது யார்? இரக்கத்தை எங்கே தொலைத்தாய்? என்னிலே என்ன பிழை கண்டாய்?

"தொன்மையின் நல் நூற்கு இறைவ! நீ என்னைச் செய்தது. ஈது எனில், இலங்கை வேந்தன் முறையா செய்தான்" என முனிதியோ? நூல் இயற்கையும் நும் குலத்து வந்தையர் போல் இயற்கையும் நீலமும் போற்றலை வாலியைப் படுத்தாய் அலை; மன் அற வேலியைப் பிரித்தாய்"

என்று இவ்வாறெல்லாம் இராமனிடம் கூறுகிறான். இராமனும் வாலி முறையில்லாதவை பல செய்தான் எனக்கூற தன் செயல் தன் குலத்திற்கு ஒத்த இயல்பே என வாலி மறுத்துரைக்கிறான். இங்கேயும் வாலியின் உயர்ந்த நோக்கு உயர்வான சிந்தனை வெளித் தோன்றுகிறது.

"நுங்கன் அருங்குலக் கற்பின் அப்பொய் இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சி போல் செய்திலன் எமைத்தேமலர் மேலவன் எய்தின் எய்தியது ஆக இயற்றினான்" என்று

"மணமும் இல்லை மறைநெறி வந்தன
குணமும் இல்லை குல முதற்கு ஒத்தன
உணர்வு சென்றெழில் செல்வதும் ஒதுக்கு
அலால்
நிணமும் செய்யும் இணங்கிய நேமியாய்"

என்று தனது செய்கைக்கு நியாயம் கற்பிக்கிறான். தீய சிந்தையுள்ள ஒருவன் திடீரென்று உடனடியான நல்ல சிந்தனையின் வாய்ப்பட முடியாது. வாலி எப்போதும் நல்ல சிந்தனைகளை மனதில் தேக்கியவன் எனவே தான் அவனது நியாய கோரிக்கை நியாயமானதாகவே இருக்கின்றது.

தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயிர்ந்துள
மாக்களும் விலங்கே மனுவின் நெறி
புக்க வேல் அப்பிலங்கும் புத்தேளிர

என்று இராமனே வாலியைப்பற்றி கூறும் போது வேறு சான்றுகள் எதற்கு? இது ஒன்றே வாலியின் பகுத்தறிவை பறைசாற்ற வில்லையா?

இராமன் மறைந்து நின்று கொன்ற தன் காரணம் இதுவென இளையவன் கூறியதன் பின்னே, "தாய் என உயிர்க்கு நல்கி தருமமும் தகவும், சால்பும், நீ என நின்ற நம்பி! நேர்மை நோக்கும் நெறியினின் தாய் என நின்ற எம்பால் நவை அற உணரலாமோ? தீயென பொறுத்தி" என்றான் சிறியன சிந்தியாதான்.

சிறியன சிந்தியாதன் இறுதி கட்டத்திலே தான் சிறியன சிந்தியாதானாக இருந்தான் என்பதல்ல. அவன் வாழ்வே அப்படியானது தான்.

"போருக்கு போக வேண்டாம் உன்னுயிர் கோடலுக்கு இராமன் என்பவன் வந்தான்" என்று தாரை சொல்ல அந்த தாரையே பாவி என்றான். இராமனையா அப்படி கூறினாய் ? ஏற்ற போர் உலகெலாம் தன் தம்பிக்கு ஆற்ற அரும் உவகையோடு அளித்த அந்த இராகவனா? தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர் இம்பரின் இலது என்ற அந்த இராமனா எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரில் அம்பு இடை தொடுப்பான் ? " என்றான் வாலி. எத்தனை உயரிய நம்பிக்கை . அது வெறும் நம்பிக்கை மட்டுமேயேல்ல . ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி நோக்கும் ஆற்றல் கொண்ட உயரிய சிந்தனை அது. எந்த நிலையிலும் சொந்த நிலை மாறாதவன் போருக்கு புறப்பட்ட அந்த சூழ்நிலையிலும் மனைவியை மயிலியற் குயிலே" என அன்புடன் அழைத்தான். இவன் சிறியவற்றை சிந்தித்தும் பார்க்காதவன் என்பது தானே இதன் பொருள்?

போரிலே வீழ்ந்த பின்பு இலக்குவன் இராமன் மறைந்து நின்று அம்பெய்தமைக்கான காரணத்தை கூறிய பின்பு வாலி என்ற சுடர் மேலும் பிரகாசிப்பதைக் காணலாம்.

ஒரு ஞானியைப் போல அவன் வார்த்தைகள் வெளிவருகின்றன. அங்கே உயர்வான சிந்தனைகள் மட்டுமே வாலியிடம் குடிகொண்டிருக்கின்றன.

"மூவர் நீ, முதல்வன் நீ, முற்றும் நீ பாவமும் தருமமும் பகையும் எல்லாமுமே நீ என்று இராமனை சரணடைகிறான். "நின் சரலால பிறிது வேறு உளது அரோ தருமயே" என்று உணர்கிறான்.

தன்னை "பித்தாய் விலங்கு" என கூறியவன், இப்போது வீடுபேறு பற்றிப் பேசுகிறான்

"பண்டோடு இன்று அளவுமே
தண்டமே அடியேனற்கு உறுபதம்
தருதே?

என்கிறான் தன் தம்பியைப் புகழ்கிறான்

"வெற்றரசு எய்தி, எம்பி எனக்கு வீட்டரசு விட்டான்" என்று மனம் மகிழ்கிறான்.

தன் வாழ் நாள் கொள்ளக் கொடுங் கூற்றுவனை கொணர்ந்த தம்பி மீது அன்பு கொள்கிறான். அவனுக்காக இராமனிடம் வரம் கேட்கிறான். இந்த சிந்தை எவருக்கு வரும்? தன் தம்பியை இராமனை விடத் தானே நன்கு அறிந்தவன். அவன் போக வாழ்வில் எல்லாவற்றையுமே மறந்து புதைந்து போவான் என்பதை அறிந்தவன் வாலி, எனவே தான் சொல்கிறான்.

"பூ இயல் நறவம் மாந்தி புற்றி வேறு - உற்ற போது
தீவினை இயற்று மேனும் எம்பிமேல் - சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை - ஏவல்"

என்கிறான்.

இன்னுமொன்று அவனுக்கு தெரியும். இராமனின் தம்பியர் அண்ணனை உயிர் எனக் கருதியவர்கள் தன் தம்பியோ தனக்கு கூற்றுவனானான். இதனால் இராமனின் தம்பியர் சுக்ரீவனை இகழக் கூடும். முக்காலமும் உணர்ந்த ஞானியாக அதற்கும் பரிகாரம் தேடுகிறான்.

"........எம்பியை உம்பிமார்கள்
தம்முனைக் கொல்வித்தான் என்று
இகழ்வரேல் தடுத்தி தக்கோய்?
.......பின் இவன் வினையின் செய்கை
அதனையும் பிழைக்கல ஆமோ"

என்று இராமனிடம் இரந்து நிற்கிறான். இவன் அன்றோ அண்ணன்! தான் பெற்ற வீட்டரசுக்கு வழிகாட்டிய சுக்கிரீவனை அந்த பாதை நடக்குமாறு மதி புகட்டுகிறான்.

"மறைகளும், முனிவர்யாகும், மலர்
மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணி பொருள் திணிவில்
அறை கழல் இராமனாகி அறநெறி
நிறுத்த வந்தது
இறையொரு ஒரு சங்கை இன்றி
எண்ணுதி எண்ணம் மிக்கோய்

என்று இராமனைத் தான் உணர்ந்த பாற்றை உள்ளபடி உரைத்து மேலும் சொல்வான்.

மத இயல் குரகுச் செய்கை மயர்
வொரு மாத்தி வள்ளல்
உதவியை உன்னி ஆவி உற்றிடத்து
உதவு கிற்றி
பதவியை எவர்க்கும் நல்கும் பண்-
ணவன் பணித்த யாவும்
சிதைவு இல செய்து, நொய்தின்
தீர்வு அரும் பிறவி தீர்தி"

இதனிலும் மிக முக்கியமான ஒன்றை எடுத்துச் சொல்கிறான்.

அரச பதவி பாரம் காரணமாக இராமனை துறந்திடாமல் அவன் பாதங்களை நீங்காத வாழ்வாய்.

எரி எனற்கு உரியார் என்றே எண்ணுதி எண்ணம் யாவும் புரிதி சிற்றடிமை குற்றம் பொறுப்பார் என்று எண்ண வேண்டா. எத்தகைய உயர்ந்த சிந்தனை தன்னை கொல்வித்தவன் மீது இத்தகைய தோர் கருணையை வாலிதான் காட்டியிருக்க முடியும்.

"இராமா உனக்கு பணி செய்ய உதவி செய்ய பெற்றிலேன். ஆனாலும் நீ எதைச் செய்தாலும் செய்தற் குரியவன் அனுமன். அவன் கையிலே கோதண்டம் போன்றவன். சிறந்த துணைவன் என்று அனுமனைப் புகழ்கிறான்.

வாலியின் மைந்தன் அங்கதன் ஆனால் வாலி, சுக்ரீவனிடம் அவனை சுக்ரீவன் மைந்தனாகவே காட்டுகிறான். இந்தப் பெருந் தன்மை வாலியை அன்றி வேறு யாருக்கு இருக்க முடியும்.

"இடருடை உள்ளத்தோரை எண்ணிலும் உணர்ந்திலாதான் அங்கதன்" என்கிறார் கம்பர். இது வாலியின் மணிமகுடத்தில் மற்றுமொரு வைரம்.

எப்படி எனில் இடருடை உள்ளத் தோரை எண்ணினும் உணராதவன் என்றால் அவன் துன்பத்தையே அறியாதவன் என்பது தானே பொருள்! அங்கதன் சித்தார்த்தனைப் போன்று அரண்மனைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தவனில்லை சுதந்திரமாக உலாவித் திரிந்தவன். அவன் நாட்டின் நிலைமைகளை உணர்ந்தவனாகவே இருந்திருப்பான் அப்படியான அங்கதன் துன்பத்தையே காணாதவன் என்றால் கிஷ்கிந்தா புரியிலே அதற்கான சாத்தியங்கள் இல்லை என்பது தானே பொருள்! ஆகவே வாலி தன் ஆட்சியை செங்கோல் முறைமையுற செலுத்தியவன் எனவே தான் அவன் நாட்டிலே எவர்க்கும் துன்பம் நேரவில்லை. ஆகவே வாலி ஒரு பெருந்தகை என்பது முடிவாகிறது.

வீழ்ந்து கிடந்த தந்தையைப் பார்த்து "இவ் எழுதிரை வளாகத்து யார்க்கும் சிந்தையால் செய்கையால் மூர்த்தீவினை செய்திலாதாய்" என்று கூறுவதிலிருந்து வாலி எவரையும் துன்புறுத்தினான் என்பதை அங்கதன் அறிந்திருக்கவில்லை. அதன் பிரதிபலிப்புத்தான் வார்த்தைகளிலே வெளி வந்திருக்கிறது.

வாலியை அங்கதன் வள்ளலாகக் காட்டுகிறான்.
"அமரர் யாவரும் எஞ்சலர் இருந்தார் உன்னால் இன் அமுது ஈந்த நீயோ, துஞ்சி வள்ளியோர்கள் நின்னின் யார்?" என்கிறான்.
குலவரை நேயிக் குன்றம்.

என்று வானுயர்ந்த கோட்டின் தலைகளும் நின் பொன் - தானின் தழும்பு, இனி தவிர்ந்த அன்றே "என்று தந்தையின் பெருமையினை சொல்லிச் சொல்லி மாய்கிறான்.

அழுகின்ற தன் மகனைப் பார்த்து "நாயகன் இராமன் செய்த நல்வினை இது" என்றான் வாலி. யான் தவமுடைமையால் இவ் இறுதி வந்தது என்று தனக்குற்ற கதிக்கு இரும்பு செய்தினான்.

இவன் தன்னின் மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் மால்தரும் பிறவி நோய்க்கு மருந்து மன்னுயிர்க்கு உறுதி செய்வான் மலர் அடி சுமந்து வாழ்த்தி" என்று இத்தகைய உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டவன். உயரிய அறிவுரைகளை வழங்கியவன். உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும் உயர்ந்தவன்.

யார் தன் மார்பிலே அம்பு துரத்தினாரோ அவரிடமே தன் புதல்வனை ஒப்படைக்கிறான்.

“பொய் அடை உள்ளத்தார்க்குப் புலம் படாப் புலவ! மற்று உன் கையடை ஆகும். என்ன தன் மைந்தனை இராமனிடம் ஒப்படைக்கிறான் வாலி.

உலகிலே எவரும். நூற்றுக்கு நூறு நல்லவர்களாக இருப்பதில்லை. வாலி அதற்கு விதிவிலக்கில்லை. உருமையை உரிமையாக்கினது. இவ்வகை தான். அதனைக் கூட ஆழமாக எடுத்து நோக்கின் வாலியின் அக்குற்றத்திற்கான காரணம் சிறிதளவே புலப்படும். ஏனெனில் சுக்ரீவன் ஓடும் போது மனைவியை விட்டுவிட்டு ஓடினான். எனவே உருமை வாலிக்கு அடைக்கலப் பொருளானான். இது ஒன்றைத் தவிர வாலியில் வேறு குற்றங்களைக் காண முடியாது. அவன் உள்ளம் தூய சிந்தனையால் நிரம்பியிருந்தது. பகுத்தறிவால் நிரம்பியிருந்தது. சிறந்த நல்ல தத்துவங்களைத் தேக்கியிருந்தவன்.

அவன் பிறந்த குலத்திற்கும் வாழ்ந்த நெறிக்கும் இடையில் எத்தனை வித்தியாசங்கள் எனவே வாலியை கம்பன் சிறியன சிந்தியாதான் கூறுவதில் பிழையுண்டா என்ன?

எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே — பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே — இனி
நல்லோர் பெரியோர் என்னும்
காலம் வந்ததே — கெட்ட
நயவஞ்சக காரருக்கு
நாசம் வந்ததே

— பாரதி —

# நாவல் இலக்கியமும் சமூகப்பண்பாட்டு விழுமியங்களும்

**சி. வன்னியகுலம்** M. A

குறிப்பிட்ட ஒரு மக்கட் குழுவின ரால் பின்பற்றப்படும் சமயம், மொழி கலை இலக்கியம்,பண்பாடு பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள், சட்ட திட்டங்கள் ஆகியன சமூகப் பண்பாட்டு விழு மியங்கள் எனப்படும். இவ் விழுமியங்களே மனித இனத்தைப் பல்வேறு சமூகங்களாகக் கூறுபோடுகின்றன. ஒவ்வொரு சமூகத்தி னதும் தனித்துவங்கள் இவற்றின் வாயி லாகவே வரையறுக்கப்படுகின்றன. இவ்விழு மியங்களே குறிப்பிட்ட ஒரு சமூகத்தினி டையேஐக்கியத்தையும் இணக்கப்பாட்டையும் கூட்டு வாழ்க்கையையும் ஏற்படுத்துகின்றன.

சமூக வேறுபாடுகளுக்குக் காரணமாக இவ்விழுமியங்கள் சமூக வாழ்க்கையமைப் பிலே மிகத் தாக்கமான விளைவுகளை ஏற் படுத்துகின்றன. இவற்றினாலேயே மனிதனது வாழ்க்கையும் நெறிப்படுத்தப்படுகின்றது. உண்மையில் தனி மனிதன் ஒருவனால் சமூக விழுமியங்களில் ஏற்படும் தாக்கத்தினை விட சமூகவிழுமியங்களினால் தனிமனிதனிலும், சமூகத்திலும் ஏற்படுத்தப்படும் தாக்கங்களே மிகத் தீவிரமானவையாகும். குறித்த ஒரு சமூகத்தில் வாழும் மனிதனொருவன் தான் வாழும் சமூக உறுப்பினர்களால் கடைப் பிடிக்கப்படும் விழுமியங்களையே தானும் கடைப்பிடிக்கிறான். இவற்றில் ஒன்றோ அல் லது பலவோ புறக்கணிக்கப்படும் போது அச் சமூகத்தினால் அவன் தண்டிக்கப்படு கின்றான் அல்லது விலக்கப்பட்டு விடுகின் றான்.

பண்பாட்டு விழுமியங்களே மனிதன் ஒரு சமூகப் பிராணியாக நிர்ணயிக்கின்றன. மனிதனது சமூக அந்தஸ்து, அதிகாரம், அவனது சமூகப்பெறுமானம் ஆகியவையும் இவ்விழுமியங்களினாலேயே நிர்ணயிக்கப்படு கின்றன. இவற்றின் விதிகளையும் விதங் களையும் சமூக முதன்மைப்பாட்டினையும் சரியாகத் தெரிந்து கொள்ளும் வரை, புரிந்து கொள்ளும்வரை மனித வாழ்வின் முக்கிய சிக்கலான அம்சங்களை எங்களால் புரிந்து கொண்டுவிட முடியாது.

நவீன கலை இலக்கிய வடிவங்க ளிலே சமூகக் கட்டமைப்பினையும் அதன் முரண்பாடுகளையும் பண்பாட்டு விழுமியங்க ளையும் சித்தரிப்பதிலே நாவல் இலக்கியம் முதன்மை வகிக்கின்றது. சமூகக் கட்டமைப் பின் அடித்தளத்திலிருந்து சமூக மேற்கட்டு மானங்களின் சிகரம் வரை தன் பார்வை வீச்சினை சுவறி நிற்பவை நாவல்களே. வாழ்க்கையின் ஒரு பகுதியையோ அன்றி முழுமையான ஒரு வாழ்க்கை முறையையோ பிரத்தியட்சமாக கலையம்சத்துடன் நாவல் கள் சித்தரிக்கின்றன. சிறுகதை இலக்கியத் துக்கு உணர்வுநிலை ஒன்று மூலாதாரமாகி விட நாவல் இலக்கியத்திற்கு சமூக வாழ் க்கை முறையே. அடித்தளமாக அமைந்து விடுகிறது.

எனவே நாவல் இலக்கிய எழுத்தா ளன் ஒருவனது பணி,சிறந்த கதை, ஒன்றை எழுதி முடிப்பதுடன் நின்று விடுவதில்லை. அது நாவலாகி விடுவதுமில்லை. எழுத் தாளன் தான் எழுதும் நாவல் சித்தரிக்கும் சமூகத்தினையும், அதன் கட்டமைப்பினையும், சமூக இயங்கியல் வரலாற்று உண்மைகளை யும் பூரணமாக அறிந்திருத்தல் வேண்டும். சமூகவியல் தத்துவங்களை அவன் புரிந்து கொள்ள வேண்டும். சமூகத்தை முழுமையாக அறிந்து கொள்ளும் அதன் இயங்கியல் தத்து வங்களைப் புரிந்து கொள்வதுமே நாவல் ஆசிரியன் ஒருவனுக்குள்ள மிகப்பொறுப்பான பணியாகும். இந்த நடைமுறைத் தத்துவங் களை அவன் கூர்ப்புடன் இனங்காணுவா னெனில், அவனால் சிறந்த நாவல் ஒன்றுக் கான உள்ளடக்கத்தை வடித்தெடுத்து விட முடியும். இந்தநடைமுறைத் தத்துவங்களோடு ஆசிரியரின் வாசிப்புத் திறனும் பட்டறிவு அனுபவங்களும், கற்பனையும் இணையும் போது உன்னதமான நாவல் உருவாகி விடும்.

இலங்கையிலிருந்து வெளிவந்த பெரும்பாலான நாவல்களிலே ஆழமான சமூக நோக்கினை அவதானிக்க முடியவில்லை. கதையில் தன்னுயிரை வைத்திருப்பவையே பெரும்பான்மை. எனவே இவற்றில் பல இரண்டாந்தர நாவல்களாகவே கணிக்கப் படுகின்றன. இவ்வகையான இரண்டாந்தர நாவல் ஆக்கத்திற்குக் காரணம் சமூக அடித் தளம் பற்றிய ஆழமான அவதானிப்புத் திறன் எழுத்தாளன் மத்தியில் இன்மையே யாகும். வெறும் சித்தரிப்புத் திறனில் மட்டும் ஒரு நாவல் தங்கியிருப்பதும் அதன் இரண்டாந்தர தாழ்வுக்குக் காரணமாகிவிடும். உறுதியான சமூக நோக்கின் கூர்ப்பும் அவை தரும் சித்தரிப்புத்திறனும் இணையும் போதே சர்வதேச தரம் வாய்ந்த நாவல்கள் உருவாகும். தமிழ் நாட்டிலே தலை சிறந்த ஜனரஞ்சக எழுத் தாளர்களான அகிலன், நா. பார்த்தசாரதி, சாண்டில்யன் போன்றோரின் நாவல்கள் இரண்டாம் தரம் வாய்ந்தவையாக கணிக் கப்படுவதற்கு அவர்கள் சமூக நோக்கை விட சித்தரிப்புத்திறனுக்கு அழுத்தம் கொடுத் ததே முக்கிய காரணமாகும்.

இலங்கையின் நாவல் ஆசிரியர்கள் பலர் மேற்குறித்த நாவலாசிரியர்களை விட ஒரு வகையில் வேறுபட்டு நிற்கின்றனர். இவர் களிற் பெரும்பான்மையினர் தமது படைப்பு களிலே சமூக நோக்கிற்கு அழுத்தங்கொடுக்க முயற்சிக்கின்றனர். குறிப்பாக முற்போக்கு எழுத்தாளர்களிடம் இவ்வியல்பு மேலோங்கி நிற்கின்றது. இளங்கீரன், கே. டானியல், செ. கணேசலிங்கன், செ. யோகநாதன், யோ. பெனடிக்ற்பாலன், எஸ். அகஸ்தியர், நந்தி, தெணியான் போன்ற நாவலாசிரியர் களிடம் இப்பண்பு விதந்து கூறக்கூடிய அள வில் காணப்படுகிறது. ஆயினும் இவர்களது படைப்புக்களின் தரத்திலும் கனத்திலும் குறிப்பிடக்குரிய வேறுபாடுகளை இனங்காண முடியும்.

நாவலாசிரியர் ஒவ்வொருவனும் வெவ்வேறான களத்தில் இன்று சமூகத்தினை நோக்குவதும், தான் பார்த்த கோணத்திலே சமூக இயக்கத்தினைச் சித்தரிக்க முயல் வதுமே இவ்வேறு பாடுகளுக்கு காரணம் எனலாம். பட்டறிவுத் திறனின்றி வெறும் தத்துவங்களைப் பொறுத்தோ அல்லது அது வுமின்றியோ நாவலாக்கி விடுகின்ற இயல் பினை டானியல் தவிர்ந்த ஏனைய எழுத் தாளரிடம் காண முடிகிறது. இதனால் இவர் களின் பெரும்பாலான நாவல்கள் தயாரிப்புக் கள் ஆகிவிடுகின்றன. டானியல் தான் வரித் துக்கொண்ட தத்துவங்களோடு வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்துத் தருவதால் அவரிடமிருந்து தரமான நாவல்களை எதிர் பார்க்க முடிகிறது. டானியல் வாழ்க்கை நடப்பியல்புகளை தத்துவக் கண்கொண்டு நோக்குகிறார். தான் நேரடியாக சம்பந்தப் பட்ட விடயங்களை இயங்கியல் பொருள் முதல்வாத நோக்கில் அணுகுகிறார். அவ் வியக்கங்களை அந்த நிகழ்வுகளோடு தொடர் புடைய மக்களின் மொழியிலே வடித்து விடு கிறார். எனவே தான் அவருடைய நாவல்க ளிலே இயல்பு நிலையையும் யதார்த்தத்தையும், சுவையையும் காணமுடிகிறது. தமிழ்நாட்டி லும் ஜி. நாகராஜன், கி. ராஜநாராயணன், டி. செல்வாராஜா, பூமணி, கு. சின்னப்பாரதி போன்றோரிடம் இந்த இயல்புகளை பிரத்தி யட்சமாகக் காணமுடியும்.

நாவலுக்கொரு சமூகப்பணி உண்டு எனக் கொள்ளாது, அது நடைமுறை வாழ்க் கையை இயல்புநெறியிலே கலைப்பாங்குடன் சித்தரித்தாற் போதுமானது எனக் கருதும் எழுத்தாளர்களும் இருக்கின்றனர். இலங்கை யிலே வ. அ. இராசரத்தினம், அ. பாலமனோ கரன், ந. பாலேஸ்வரி, அருள்சுப்பிரமணியம், செம்பியன் செல்வன், கோகிலா மகேந்திரன், புலோலியூர் சதாசிவம் போன்றவர்கள் இத் தகைய எழுத்தாளர்களில் சிலர் ஆவர்.

இன்னொரு பிரிவினர் நாவல் இலக் கியத்திற்குச் சமூகப்பணியொன்று உண்டு என்பதை ஏற்றுக்கொண்டாலும் அதற்குக் கூடிய அழுத்தங் கொடுக்காது இயல்புநெறிச் சார்புடையவர்களாய், கலைப்பாங்குடன் எழுதி வருகின்றனர். செங்கையாழியன், எஸ். பொன்னுத்துரை ஆகியோர் இவ்வாறான எழுத்தாளர்களாவர்.

ஒரு சமூகத்தின் விழுமியங்களான சமயம்., மொழி, தொழில் முறைகள், சாதிப் பாகுபாடுகள், மரபுகள் பழக்கவழக்கங்கள், அரசியல் பொருளாதார நடவடிக்கைகள், பாலியல் ஒழுக்கங்கள், வர்க்க முரண்பாடுகள் ஆகியன சமூகத்தினின்றும் ஒதுக்கி வைக்கப் பட முடியாதவை. இந்த முரண்பாடுகளை இனங்கண்டு இயல்பு நிலையோடு அவற்றை நாவலில் சித்தரிக்கும் போதே அவை வாசகனை யதார்த்தமான உலகிற்கு இட்டுச்செல் கின்றன. இவற்றில் ஒன்றோ பலவோ மலின படுத்தப்படும் போது அல்லது மிகைப்படுத்தப் படும் போது நாவல் யதார்த்த நிலையினின் றும் சரிந்து விடுகிறது. இச்சரிவினைவல்லமை யுள்ள எந்த எழுத்தாளனும் சீர் செய்துவிட முடியாது.

டானியலின் முதல் நாவலான பஞ்சமர் இவ்வாறான குறைபாடுகள் கொண் டிருப்பதனை அவரே ஏற்றுக்கொண்டுள்ளார். பஞ்சமருக்குப் பின்னர் எழுதப்பட்ட நாவல்க ளில்இக்குறைபாடுகள் பெருமளவில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. பஞ்சமரில் மக்களின் சமய உணர்வுகளுக்கு இடமளிக்காத டானி யல் “கானல்” என்ற நாவலிலே மக்களின் சமய நம்பிக்கைகளையும், சமூக விடுதலை யையும் வென்றெடுக்க முயல்வது அல்லது சமய நம்பிக்கைகளினால் சமூகக்குறைபாடு களை ஒழித்து விடமுடியும் எனக் கருதுவது வெறுங்கானல் நீரே என்பதை யதார்த்த பூர் வமாக இந்த நாவலிலே சித்தரித்திருக்கின் றார். அதுவே இந்த நாவலின் வெற்றிக்குக் காரணமாகவும் அமைந்தது.கணேசலிங்கனின் சடங்கு ஏனைய நாவல்களினின்றும் சிறப்புற்று விளங்குவது அவர் அந்த நாவலிலே சமூகப் பண்பாட்டு அம்சங்களுக்கு முக்கிய இடம் அளித்திருப்பதனாலேயே ஆகும்.

எனவே நாவலாசியன் ஒருவன் தான் வாழும் அல்லது தான் படைக்கும் சமூகம் அதன் பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய தெளிந்த அறிவுள்ளவனாக விளங்கு வது தவிர்க்க முடியாதது. அவன் சமூக விழுமியங்களை அவற்றின் இயல்புக்கேற்ற வகையிலே சித்தரிக்க வேண்டியவனாகிறான் அவ்வாறான நாவலாசிரியன் ஒருவானாலேயே சமூகப்பிரச்சனைகளைச் சீரிய முறையிலே இனங்காணவும், அவற்றை எழுத்தில் வடிப் பதன் மூலம் சிறந்த ஒரு நாவலை உருவாக்கவும் முடியும்.

தேறும் தலையின் முனிவோய் நீ
சினத்திற்கு அருள்செய் கனிவோய் நீ
கூறும் கலையுற் றுணர்வோய் நீ
கூறும் தொனியுற்று உரைப்போய் நீ
மாறும் பொருள் யாவினும் நின்றே
மாறா நிலைகொள் மரவோய் நீ
ஈறும் தவிர்ந்துன் புகழ்கடலாற்று
எனக்கே கரைகாட்ட ருளாயோ?

- **தேம்பாவணி** -

# கவிதை காட்டும் மக்கட் பண்பு

செ. லோகராஜா ADE
(B. A. Dip. In. Ed.)

பாலத்தடிச் சேனை
தோப்பூர்.

கவிதை எங்கே? எப்போது? ஏன் பிறந்தது? என்ற வினாக்களுக்கு விடை கூறுவது எளிதன்று. கவிதை எப்போது பிறந்தது என்றால் மனிதன் விலங்கில் இருந்து வேறாகி அவனுக்கு நினைவு என்பது தோன்றிய பொழுது கவிதை உணர்ச்சியும் தோன்றியிருக்க வேண்டும். மனிதன் பொருளினைக் கண்டு, அதன் அழகினில் ஈடுபட்டு தானும் அனுபவித்து பிறருக்குஎடுத்துக் கூற முற்பட்டிருக்க வேண்டும். இருந்த போதும் மொழி தோன்றி வளம் பெற்ற பின்பே கவிதை பிறந்திருக்க வேண்டும் என்பதே பொருத்தமானதாகும்.

தனிமனிதன் சமுதாயமாக வாழத் தொடங்கிய பின்னரே கவிதை தோன்றியிருக்கும். தமிழ் மொழியை பொறுத்தவரை இம்முடிவே ஏற்புடையதாகும். போராசிரியர். எப்.பி.கும்மரே என்பவரின் "நாட்டுப் பாடலும் சமுதாயப் பாடலும்" என்ற நூலில் சமுதாயமே முதலில் கவிதை செய்தது என்கின்றார். சமுதாயமே கவிதை செய்தது என்றால் பலர் கூடி கவிதை புனைந்தனர் என்பதே பொருளாகும். பலர் சேர்ந்த இடத்தில் உள்ளிருக்கும் மகிழ்ச்சி தூண்டத் தமது மகிழ்ச்சியை வெளிகாட்டச் செய்த முயற்சியே கவிதையாகப் பரிணமித் திருக்க வேண்டும். இத்தகைய மகிழ்ச்சி பாடலாகவும், ஆடலாகவும் வெளிப்பட்டிருக்கலாம். மன உணர்ச்சியை வெளிக்காட்ட இவை இரண்டும் தக்க கருவிகளே.

கவிதை பற்றியும், அதை யாக்கும் கவிஞன் பற்றியும் கூற வந்த கோல்ரிட்ஜ் என்ற கவிஞரும் திறனாய்வாளரும் கூறும் கருத்தாவது "உலகில் வாழும் நாம் பழக்க வழக்கங்கள் காரணமாகவும், தன்னலம் காரணமாகவும் பல பொருள்களைக் கண்டும் கூட அனுபவிக்க இயலாமல் இருக்கிறோம். ஆனால் இதே பொருட்களைக் காணுகின்ற கவிஞன் அவற்றில் உறையும் அழகைக் கூறு முகமாக அதை அனுபவிக்குமாறு செய்கின்றான். நாம் என்றும் காணுகின்ற பொருள்களிலே இவ்வழகு தங்கியிருக்கிறது. ஆனால் கண்ணிருந்தும் காணாமல், செவியிருந்தும் கேளாமல் இருக்கும் நம்மைக் காணுமாறு, கேட்குமாறு செய்வது கவிஞன் தொழிலாகும்" என்கிறார்.

தாயுமானவர் கூட "யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும், உறங்குவதுமாக முடியும் வாழ்க்கையையே சாதாரண மனிதன் மேற் கொண்டுள்ளான்" என்றார். இந்நிலையினின்று கவிஞனின் கவிதையை நாம் நோக்கின் உண்மையை உணர இயலாது. மனிதனின் உணவால் மட்டும் உயிர் வாழவில்லை. மனத்தாலும், அம் மனம் காணும் உயரிய கற்பனைகளாலும் கூட வாழ்க்கை நடைபெறுகிறது. முன்னையதை விட்டு விட்டுக் கவிஞன் பின்னையதை மட்டும் தனக்குக் குறிக் கோளாக்கிக் கொள்கிறான்.

உணவைப் பற்றிச் சிறப்பாகப் பேச வேண்டுமானால் சிறந்த பொருள்களைக் கொண்டு நன்கு ருசியாக சமைத்த விருந்தை பற்றியே பேசுகிறோம். அதே போன்று மனித மனத்தையும், அதிலே தோன்றும் கற்பனையையும் பற்றிக் கவிதை பேச வேண்டுமானால் சாதாரண கற்பனையைப் பற்றிப் பேசுவதில் பயன் இல்லை. குறிக்கோள் நிலையில் உள்ளவற்றைப் பற்றியே கவிதை பேசுகிறது. வாழக்கை பற்றியும் மக்கள் பற்றியும் பேசினாலும் இதிலே கண்டும், காணாப் புதுமைகளையே கவிதை பேசுகிறது

மக்களைப் பற்றி எழும் கவிதைகள் அனைத்திலும் மக்கட் பண்பே பேசப்படு வதைஅறியலாம். மேலாக நோக்குமிடத்து இப்பண்பு நாம் உலகில் காணாதது என்ற முடிவுக்குக் கூட வந்து விடுவோம். ஆனால் அது மனத்தின் ஆழத்தில் நம்மிடையே ஒளிந்து கொண்டிருக்கும் பண்பாகவும் இருக் கக்கூடும். மக்கட் கூட்டத்திற்கு இப்பண்பு இன்றியமையாதது எனக் கவிஞன் ஒன்றை நினைக்கின்றான். நோயுற்று வருந்தும் மனித சமுதாயம் அப்பண்பை மேற் கொண்டால் அத்தீங்கினின்றும் விடுபடல் கூடும் எனக் கவிஞன் நினைப்பானேயாகில் அதைக் கவி தையில் ஏற்றிப் பாடாதிருக்கக் கூடுமோ? அதனைக் காணுகின்ற நமக்கு அவன் கூறு வது பொய்யோ என்ற சந்தேகம் கூடத் தோன்றலாம். ஆனால் உண்மை பல சமயம் கற்பனையைக் கடந்ததாக உள்ளது என் பதை மறக்கலாகாது. எனவே கவிஞன் கூறு வது வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாகவே உள்ளது. அதாவது உயரிய வாழ்வு வாழ வேண்டும் என்று நினைப்பவன் வாழ்க்கைக்கே!.

கவிஞன் வாழ்க்கை எவ்வாறு இருந் தால் நலம் எனக் கருதுகிறானோ அவ்விதமே கவிதையை ஆக்குகிறான். இதுவும் அவனது கனவுகளில் ஒன்றாக இருக்கலாம். ஆனா லும் அக்கனவின் அடிப்படை உலகமக்களின் வாழ்விலிருந்தே - மக்கள் பண்பிலிருந்தே தோன்றுகிறது. மனித மனம் பல்வேறு பண் புகளின் கூட்டுறவால் ஆயது. அவற்றுள் சில அவனுக்கு தீமையையும், பல நன்மையை யும் செய்கின்றன. மனிதனின் அடிப்படை உணர்ச்சிகளில் மிக மேலானவை காதலும், வீரமும் ஆகும். இதிலிருந்தே ஏனைய உணர்ச்சிகள் தோன்றுகின்றன.

அகநானூறு என்னும் சங்க இலக் கிய நூலிலே “செம்புலப் பெயல் நீரார்” என்ற கவிஞர் காதல் உணர்ச்சியின் தூய தன்மையை எடுத்துக் காட்ட குறிஞ்சி நிலத் தின் புணர்தல் ஒழுக்கத்திற்கு அழைத்துச் செல்வதைக் காண்போம். குறிஞ்சி நிலத் திலே இரு இளம் உள்ளங்கள். ஆணும் - பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றனர். சந்தித்த மாத்திரத்திலே காதல் வயப்படுகின் றனர். இவர்களின் தாய்மார்கள் யார் யாரோ? தந்தையரும் எவ்வழியும் உறவுமுறைக்காரர் அல்லர். இவர்கள் இருவரும் இதற்கு முன்பு சந்தித்துப் பழகிய உறவு கொண்டவர்களு மல்லர். ஆனாலும் சந்தித்த போதிலே இரு நெஞ்சங்களும் அன்பினாலே கலந்து விட் டது. அது எவ்வாறு கலந்ததென்பதை கவி ஞர் உவமையணி வாயிலாக நன்கு எடுத்துச் சொல்லும் திறன் இரசிக்கத்தக்கது. செம் மண்ணில் பெய்த மழை நீர் அம் மண்ணோடு சேர்ந்து பிரிக்க முடியாத தன்மையாகி விடு வதைப் போன்று இவர்கள் இருவரும் காதல் வசமாகி விட்டனர் என்பதை கவிதையிலே காட்டும் போது கவிஞர்

“யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்,
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”

இத்தகைய்தொரு தெய்வாம்சம் பொருந்திய காதல் நிகழ்வினை பாலகாண் டம் மிதிலைக் காட்சிப் படலத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பர் காட்டும்போது

“பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை யொருவர் தம்முள்ளம் ஈர்த்தாலால்
வரிசிலை அண்ணலும் வான்கண் நங்கையும்
இருவரும் மாறிபுக்கு இதயம் எய்தினர்”

என ஒருவரின் உள்ளத்திலே ஒருவர் மாறிக் குடிபுகுந்து விட்டனர். இனிப் பிரி வென்ற சொல்லுக்கு இடமில்லை. பருகிய நோக்கானது கண்வழிப் புகுந்து, காதல்வழிச் சென்று இதயத்திலே மாறிக் குடிபுகுந்து ஆத ரவு பட்டுவிட்டனர் என்கிறார். கண்ணதாச னும் தன் சினிமாக் கவிதையிலே “ஒருவரின் இதயத்திலே ஒருவர் குடிபுகுந்தால் இருவ ரும் ஓருயிராய் இன்பமாய் வாழ்ந்திடலாம்” எனப்பாடியுள்ளார்.

காதல் சிறந்ததுதான். ஆயினும் அது தவறான நெறியில் சென்றால் பலருக்கும், சிறப்பாகத் தன்னை மேற்கொண்டவனுக்கும்

தீங்கையே விளைவிக்கும். பாரதி கூட குயிற் பாட்டிலே காதலைப் பற்றிக் குறிப்பிடும் போது "காதல், காதல், காதல் காதல் போயின் சாதல், சாதல், சாதல் என அழகாகக் குறிப் பிட்டுள்ளார். காதல் சிறப்பானது. காமம் களையத்தக்கது. பிறன்மனை நயக்கின்ற காமத்தின் இழிசெயல் தவறானது என்பது யாவரும் அறிந்ததுதான்.எனினும் மிகச் சிலரே இராமனைப் போன்று ஏகபத்தினி விரதனாக இருந்து இக்குற்றத்தினின்றும் நீங்குகின்றனர்.

ஆதி காலத்திலிருந்து இன்றுவரை உலகிடைப்பலர் இத்தகைய தவறைத் தொடர்ந்து செய்து கொண்டே வருகின்றனர். இதைக் காணுகிறான் கவிஞன். பலரிடத்தும் காணப்படுவதால் இப்பண்பைக் கண்டும் கவி ஞன் விட்டுவிடுவதில்லை. சமயம் வாய்க்கும் போதெல்லாம் இதன்தீமையைக் கூறிக் கொண்டே செல்கின்றான். வள்ளுவருங்கூட பிறன்மனை விழையாமை எனத் தனியொரு அதிகாரம் செய்து அதில் பத்துக் குறட்பாக் களில் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள் ளார். இச் செயலினைச் சாதாரண மக்களும் கூட கூறுகின்றனர். ஆனாலும் கவிஞன் கூறும் முறையில் தான் எவ்வளவு வேற்றுமை. இரா வணன் கொண்ட தவறான காமம் அதற்கு முன்னரும், பின்னரும் பலரும் கொண்டுள்ள தீயகுணமே ஆகும். அதனால் இராவணனுக்கு நேர்ந்த முடிவைக் கவிஞன் கூறுகின்றான். முடிவு தவறு செய்தவன் பெறுவதாகிய "சாவு" தான். சாதாரண முறையில் கூறுவதா யின் "அடாது செய்தவன் படாது படுவான்" எனக் கூறிவிட்டோம். இதனைக் கவிஞன் கவி தையிலே கூறும்போது இத்தனிப்பட்டவன் போல் காணப்படும் இத்தீமையைப் பொது நியதியாக்கி அதற்கு முடிபு கூறுமுகமாகவும் அதனைப்படிப்பவர் மனதில் சென்று தைக்கும் படியாகவும் கூறுகின்றான். இறந்த இராவண னின் உடம்பின் மேல் மண்டோதரி விழுந்து புலம்புவதாக அமைகிறது கவிதை;

"அரை கடையிட்டு அமைவுற்ற முக்கோடி
ஆயவுமுன் அறிஞர்க்கேயும்
உரைகடையிட்டு அளப்பரிய பேராற்றல்
தோளாற்றற்கு உலப்போ இல்லை
திரைகடையிட்டு அளப்பரிய வரமென்னும்
பாற்கடலைச் சீதை என்னும்
பிரைகடையிட்டு அழிப்பதனை அறிந்தேனோ
தவப்பயனின் பெருமை பார்ப்பேன்."

கற்பனையும், உருவக அணியும் கலந்து கூற வந்த பொருளை மனதிற் பதி யுமாறு உணர்ச்சியைத் தட்டியெழுப்பி நடந்த செயலின் தன்மையினையும், அதனால் அழிந்து பொருளின் பெருமையையும் கவிதை விளக்குகிறது. நடைபெற்றது சிறு செயல். விருப்பமில்லாத பிறன் மனைவியைக் கொணர்ந்து சிறை வைத்தது மிகப்பெரிய காரியம் எனக் கூறுவதற்கில்லை. அதனைக் கவிஞர் "பிரை" என்ற சொல்லால் பெற வைத்து விட்டார். அழிவுற்ற பொருள்கள் எவ் வளவு "பாற்கடல்" என்ற சொல்லால் அதனை யும் குறித்துவிட்டார். மனிதப் பண்புகளில் சில தன்மையால் பெரியவை. வன்மைமிக் குடையவை. இவை இரண்டின் பரிணாமத் தையும் இரு சொற்களால் கவிஞர் குறித்து விட்டார். மக்கட் பண்பில் ஒன்றால் விளை யும் தீமை கண்டோம்.

கவிஞர் இன்னொரு கவிதையிலே போர்க்களத்திலே புழுதியிலே புரண்டு கிடக் கின்ற நாயகனின் உடம்பைக் கண்ணுறுகின் றாள் மண்டோதரி. தன் தலைவனின் முன்பி ருந்த நிலையையும், தற்போது கிடக்கும் நிலையினையும் எண்ணிப் பார்த்து புலம்பு கின்றாள். மூவுலகிலும் புகழோடு விளங்கிய இவ்வுடலா இன்று மாற்றான் மனைவியை மனச்சிறையிலே மறைத்து வைத்திருந்த காமத்தின் செயலே இந் நிலைக்குக் காரணம் எனத் தனக்குள் எண்ணிப் பார்க்கின்றாள். இதைக் கவிஞன் கவிதையிலே

"வெள்ளெருக்கஞ் சடை முடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்,
எள்ளிருக்க இடமின்றி உயிரிருக்கு
இடநாடி இழைத்தவாறே,
கள்ளிருக்கு மலர்க் கூந்தற் சானகியை
மனச் சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக் கருதி
உடல்புகுந்து தழுவியதோ ஒருவன் வாளி"

பிறன்மனை விழைவதால் ஏற்படும் வினைக்கு இக்கவிதையும் ஒரு சான்றாக அமைவதைக் காணமுடிகிறது.

இனி மற்றொரு பொதுவான மக்கட் பண்பு பற்றிய கவிதையை எடுத்தாராய்வோம். மனிதர்கள் என்றால் பிற உயிர்களிடத்து இரக்கம் இருந்துதான் தீரும். பாரதியும் தன் கவிதையிலே பாப்பாப் பாட்டிலே புத்திபுகட்டும் வகையிலே

"உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேண்டும் - இது
வாழும் முறைமையடி பாப்பா."

எனப்பாடுகின்றார். கொலை செய்யும் மனிதனுக்குக் கூட தன் மனைவி, மக்களிடத்து அன்புண்டு பாசமுண்டு. கொடுமையே தலை நின்றுள்ள புலியும் தன்குட்டிகள் பால் அன்பு செலுத்துகிறது. இது தாயின் கருணை யுள்ளம் அல்லவா? ஆனால் இவ்வளவில் இப்பண்பு நின்று விடுமானால் இதில் வியப்பில்லை. எல்லா உயிர்கள் மேலும் அன்பு செலுத்தும் இயல்பாகிய "அருள்" எல்லா மக்களிடத்தும் இயல்பாக அமையும் ஒரு பண்பன்று. மக்கட் பண்பில் சிறந்ததாகிய இப்பண்பு பலரிடம் காணப்படாமல் இருந்தும் மிகுதியும் வேண்டப்படும் ஒன்று என்பதைப் பலரும் அறிவதற்கு இயலாமல் போய் விடுகிறது. இக்கருத்தை கவிஞனொருவன் கவிதையிலே பெய்து விடுகிறான். அக்கவிதை புதுமெருகு பெற்று புகழோடு விளங்குகிறது.

அடர்ந்த காட்டினிலே ஓர் ஏழை வேடனின் குடும்பம் வசிக்கிறது. அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. வேட்டைத் தொழிலைச் செய்பவனாதலின் உயிர்களிடத்து அன்பு என்பது அவனிடம் இருக்குமா எனக் கூட சந்தேகப்படலாம். அவன் மனைவியும் அம்முறையிலே பழகியவள் தான். என்றாலும் என்ன? உயிர்களுக்கு இயற்கையாக உள்ள உயரிய பண்புகள் அவர்களிடமும் சில இல்லாமலா போய்விடும். ஆனாலும் வாயில்லாப் பிராணிகளிடம் வேட்டைக்காரனுக்கும்,அவன் மனைவிக்கும் அன்பிருந்தது என்றால் அது வியப்பேயன்றோ? காலையிலிருந்து இரவு வரை விலங்குகளைப் பிடிப்பதிலே காலத்தைப் போக்கும் ஒருவனுக்கும் அவற்றைக் கொன்று சமைப்பதையே தொழிலாகக் கொண்ட ஒருத்திக்கும் விலங்குகளிடத்தில் மிகுந்த அன்பு இருந்தது என்றால் இதை யார் நம்பமுடியும். ஆனால் மனித இனத்தில் இவ்வாறு பல மாறுபட்ட பண்புகள் ஒருவர் மாட்டே இலங்கக் காண்கின்றோம். மனிதப் படைப்பில் இதுவும் ஒரு விந்தைதான்! இந்த விந்தையைக் கவிதையாக்கிக் காட்டுகிறான் ஒரு கவிஞன்.

காட்டில் வாழும் வேடன் ஒருநாள் வேட்டையாடிவிட்டுக் களைப்பு மிகுதியால் வீட்டிற்குத் திரும்பி வருகிறான். வீட்டு வாயிலில் உள்ள மரநிழல் உறக்கத்தைக் தடவி அழைக்கிறது. அப்படியே கையைத் தலையணையாகப் பயன் படுத்திக் கொண்டு முற்றத்தில் உறங்கி விடுகிறான். அவன் பக்கத்தில் ஒரு பெண்மான் கட்டப்பெற்றிருக்கிறது. அது தன்னிச்சை போல் ஓடித்திரியும் உரிமையற்றது. எனினும் அப்பிணை மானைத் தேடி ஒரு கலைமான் வர, இரண்டுமாகக் கூடி விளையாடுகின்றன. வேடன் உறங்கும் இடத்திற்கு அப்பால் அன்றிரவு உணவிற்காக அவள் தினையை உலர்த்தி இருக்கிறாள். வேடன் உறங்குவதைக் கண்ட ஒரு காட்டுக் கோழி அத்தினையைத் தின்னத் தொடங்குகிறது. இதை அவள் கண்டு விட்டாள். கோழியை விரட்டா விட்டால் இரவு உணவு இல்லையாய் விடும். ஆனால் ஓசை உண்டாக்கி கோழியை வெருட்டினால் இரண்டு துன்பங்கள் நேரிடும். அயர்ந்து தூங்கும் வேடன் விழித்துக் கொள்வான். ஒரு வேளை அவனை உறங்குமாறு செய்து விடலாம். ஆனால் பிணைமானோடு கூடி விளையாடும் கலைமான் ஓடிப்போய்விடும். ஓடினால் மீண்டும் வராது. காதல் உணர்ச்சியை விட வன்மை பொருந்தியது தற்காப்புணர்ச்சியன்றோ! இதனை நன்கு தெரிந்து கொண்டாள் அவள். பிணைமான் இன்பத்தை பார்த்தால் இரவு பட்டினி கிடக்க நேரிடும். தமக்கு ஒன்றும் துன்பம் நேராமலிருப்பின் பிறர் இன்பத்தில் யாரும் அழுக்கா்று கொள்ளார். ஆனால் பிறர் இன்பமே தமது துன்பத்திற்குக் காரணம்

என்று கண்டால், கண்டபின்னரும் பிறர் இன்பத்தில் அழுக்காறு கொள்ளாமல் இருப்பதே செயற்கரிய செயலாகும். "போர்க்களத்திலே நிராயுதபாணியாக வெறுங் கையுடனின்ற இராவணனைப் பார்த்து, "இன்று போய் போருக்கு நாளை வா" என்ற இராமனின் செயற்கரிய செயலுக்கு ஒப்பானதே ஆகும். இங்கு இன்னும் ஒருபடி மேலே சென்று அவ் வின்பத்திற்குத் தாம் காரணமாயிருப்பது என்றால் அது மிகமிகச் சிலருக்கே உரித்தான தாகும். அச்சிலருள் ஒருத்தியாக அவள் காணப்படுகிறாள். தான் பூசைபடுத்தி கோழியை வெருட்டினால் கலைமான் ஓடி விடும். அதனால் பிணைமானின் இன்பத்திற்கு இடையூறு நேரும் என அஞ்சிக் கோழியை வெருட்டாமல் இருந்து விட்டாள். அதுவும் இரவு பட்டினிகிடக்க நேரும் என்று நன்கு அறிந்திருந்தும் பேசாமல் இருந்து விட்டாள் என்றால் இம் மக்கட் பண்பை என்னென்று கூறுவது? இச்செயல் புறநானூற்றுப் பாடல் ஒன்றிலே காணப்படுகிறது.

"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டைப் பம்பிப்
பந்தர் வேண்டாப் பலா தூங்கு நீழல்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழிஇப் பிறிது ஓர்
தீர் தொழில் தனிக்கலை திளைத்து விளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையாள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சியாவதும்
இவ்வழங் காமையின் கல்லென ஒலித்து
மானதட் பெய்த உணங்கு தினை வல்சி
கானக் கோழியோடு இதல்கலந்து உண்டென
.................................................................................

இப்பண்பு வாழ்க்கையில் காணப்படும் ஒன்றா என்ற ஆராய்ச்சியில் இறங்கிப் பயனில்லை. வாழ்க்கையில் எங்கும் காணப் படாத ஒன்றைக் கவிதை விரிப்பதில்லை. மக்கட் பண்பு பலவாக இருத்தலின் அவற்றுள் சிலவற்றை நாம் காணநேர்வதில்லை. ஆனால் கவிஞனின் கூரிய நோக்கிற்கு அவை தப்ப இயலாது. அவற்றைக் கண்ட அவன் தன் கற்பனையின் உதவி கொண்டு விரித்துக் காண்கின்றான்.

இத்தகைய பண்பு உலகம் முழுவதும் காணப்பட்டால் உலகம் எவ்வளவு உயர்ந்த இடமாக ஆகும். எனக் கனவு காண்கின்றான். இது "உண்டாலம்ம இவ்வுலகம், இந்திரன் அமிழ்தம் இயைவதாயினும் என் பதற் கொப்பதாகும். அக்கனவில் முகிழ்த்த பயனே கவிதையாகும். இத்தகைய ஒரு கவிதை வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்ற வினாப்பயனற்றது. அவரவர் மனதில் ஆழத்தில் பதிந்து கிடக்கும் ஓர் உணர்ச்சியை அது தட்டி எழும்புகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் எழுப்பப்பட்ட அப்பண்பை மேலும் மேலும் வளர்ப்பதோ, அன்றி அழியுமாறு விட்டுவிடுவதோ தின்ப் பட்ட மனிதர் தையிலுள்ள வன்மையைப் பொறுத்ததாகும்.

இங்கு ஒன்றுமட்டும் அறிதற்குரியது. கவிதையின் தலையாய நோக்கங்கள் இரண்டு ஒன்று படிக்கும் பொழுது இன்பமூட்டல், இன்னொன்று அம்மட்டோடு நின்று விடாமல் மக்களிடம் காணப்படும் நற்பண்புகளை வளர்ப்பதாகும். கவிதை காட்டும் மக்கட் பண்பு வெறும் இரசனைக்காக மட்டுமல்ல. இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எனும் வாழும் நெறியைக் காட்டுவதற்கும், கடைப் பிடிப்பதற்குமாக என்று உணர்வோமானால் கவிதையும் வாழும் இலக்கியமாக மிளிரும் என்பது வெள்ளிடை மலையாகும்.

"தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்.

⊡

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை."

400, திருக்குறள்-

# தமிழ் மொழித்தினம் 1995

## மாகாண நிலையில் நடைபெற்ற போட்டி முடிவுகள்

## 1ம் இடம்பெற்ற பாடசாலை மாணவர்கள் விபரம்

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 01 | வாசிப்பு | 1 | செல்வி. செ. துர்சிகா | வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வித்தி. |
| 02 | வாசிப்பு | 2 | செல்வி. கு. தட்சாயினி | மட்/புனித சிசிலியா பெ. ம. வித்தி. |
| 03 | எழுத்து ஆக்கம் | 1 | செல்வி. க. திவ்யா | வ/இறம்மைபக்குளம் மகளிர் ம. வித்தி |
| 04 | கட்டுரை | 2 | செல்வி. ம. கார்த்திகா | வ/கணேஸ்வரா ம. வித்தி. |
| 05 | கட்டுரை | 3 | செல்வன். ஏ. எம். ஏ. நிசாத் | கமு/ஷாஹிரா தேசிய பாடசாலை. |
| 06 | கட்டுரை | 4 | செல்வன். ஏ. எம். பாரிஸ் | கமு/அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை. |
| 07 | கவிதை | 3 | செல்வன். கு. சுரேஷ் | தி/ஆலங்கேணி விநாயகர் ம. வித்தி. |
| 08 | கவிதை | 4 | செல்வன் ஏ. ஆதிகா | கமு/ம.'.மூத் மகளிர் கல்லூரி. |
| 09 | சிறுகதை | 3 | செல்வன். எம். ஜே. அன்வர் | மட்/ஓட்டமாவடி மத்திய கல்லூரி. |
| 10 | சிறுகதை | 4 | செல்வன் ஏ. ஜி. ஸிரின் | கமு/அக்கரைப்பற்று ஆயிஷா பாலிகா ம. வி. |
| 11 | பேச்சு | 1 | செல்வி அ. அகிலாதேவி | தி/கட்டைப்பறிச்சான் விபுலானந்த ம. வித்தி. |
| 12 | பேச்சு | 2 | செல்வன். மு. மயூரன் | தி/இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இ. கல்லூரி. |
| 13 | பேச்சு | 3 | செல்வன் சோ. சுதாகரன் | தி/இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இ. கல்லூரி. |
| 14 | பேச்சு | 4 | செல்வன். ஜே. கார்த்திகேயன் | வ/தமிழ் ம. வித்தி. |
| 15 | பாஓதல் | 1 | செல்வன். தி. சுமணஸ்ரீ | தி/சம்பூர் ம. வித்தி. |
| 16 | பாஓதல் | 2 | செல்வன். த. சஞ்சயன் | மட்/புனித மிக்கேல் கல்லூரி. |
| 17 | பாஓதல் | 3 | செல்வன். பா. பிரணவன் | தி/இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இ. கல்லூரி. |
| 18 | பாஓதல் | 4 | செல்வி. த. அன்பரசி | தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி. |
| 19 | இசைவாய்ப்பாட்டு (அபிநயம் தனி) | 1 | செல்வி. நா. சுஜிதா | மட்/வின்சன்ட் மகளிர் உ. பாடசாலை. |
| 20 | இசைவாய்ப்பாட்டு (அபிநயம் குழு) | 1 | குழு | தி/கட்டைப்பறிச்சான் விபுலானந்தா ம. வித்தி. |
| 21 | இசை - தனி | 2 | செல்வன். த. சஞ்சயன் | மட்/புனித மைக்கல் கல்லூரி. |

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 22 | இசை - தனி | 3 | செல்வி. அ. கலையரசி | மட்/கல்லடி உப். விவேகானந்தா பெ. க. |
| 23 | இசை - தனி | 4 | செல்வி. ஏ. பிரியலோஜினி | தி/ஸ்ரீசண்முகா இ. ம. கல்லூரி. |
| 24 | இசை - குழு | 2 | குழு | மட்/புனித மிக்கேல் கல்லூரி. |
| 25 | இசை - குழு | 3 | குழு | மட்/வின்சன்ட் பெண்கள் உ. பாடசாலை. |
| 26 | இசை - குழு | 4 | குழு | தி/ஸ்ரீ சண்முகா இ. ம. கல்லூரி. |
| 27 | நடனம் - தனி | 1 | செல்வி. சி. ஜனந்தினி | தி/ஸ்ரீ சண்முகா இ. ம. கல்லூரி. |
| 28 | நடனம் - தனி | 2 | செல்வி. ச. தே[illegible]ஜா | மட்/வின்சன்ட் பெ. உ. பாடசாலை. |
| 29 | நடனம் - தனி | 3 | செல்வி. ஜே. வைஷ்ணவி | தி/புனித மரியாள் கல்லூரி. |
| 30 | நடனம் - தனி | 4 | செல்வி. யோ. பிரசன்யா | மட்/சிசிலியா பெ. ம. வித்தி. |
| 31 | நடனம் - குழு | 1 | குழு | தி/ஸ்ரீ சண்முகா இ. ம. கல்லூரி. |
| 32 | நடனம் - குழு | 2 | குழு | தி/ஸ்ரீ சண்முகா இ. ம. கல்லூரி. |
| 33 | நடனம் - குழு | 3 | குழு | தி/புனித மரியாள் கல்லூரி. |
| 34 | நடனம் - குழு | 4 | குழு | மட்/புனித சிசிலியா பெ. ம. வித்தி. |
| 35 | நாட்டிய நாடகம் | திறந்த போட்டி | குழு | வ/இறம்பைக்குளம் ம. வித்தி. |
| 36 | புராண இலக்கிய நாடகம் | திறந்த போட்டி | குழு | வ/இறம்பைக்குளம் ம. வித்தி. |
| 37 | சமூக நாடகம் | ” | குழு | தி/ஆலங்கேணி விநாயகர் ம. வித்தி. |
| 38 | விவாதம் | ” | குழு | தி/புனித மரியாள் கல்லூரி. |
| 39 | வில்லுப்பாட்டு | ” | குழு | தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி. |
| 40 | முஸ்லிம் நிகழ்ச்சி | ” | செல்வன். அ. மு. பைரூஸ் | மட்/அலிகார் ம. கல்லூரி. |
| 41 | தமிழ்ப்பேச்சு (சிங்கள மாணவர்) | விசேட பிரிவு | செல்வி. ஈ. டீ. சுகந்தி | தி/அபயபுர சிங்கள ம. வித்தி. |
| 42 | தமிழ் உறுப்பெழுத்து (சிங்கள மாணவர்) | ” | செல்வி. ஏ. எம். பி. வித்யா | தி/நாலந்தா சிங்கள வித்தி. |
| 43 | நாட்டுக்கூத்து | | குழு | மட்/சிவானந்தா வித்தி. |

# 1995ம் ஆண்டு அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டியில் வெற்றியீட்டி

## மாகாண கல்வித் திணைக்களத்தின் பாராட்டுதல்களையும் பரிசுகளையும் பெற்றவர்களின் விபரம்

### முதலாம் இடம்

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 01 | எழுத்து ஆக்கம் | 1 | செல்வி. க. திவ்யா | வ/இறம்பைக்குளம் மகளிர். ம. வித்தி. |
| 02 | கட்டுரை | 2 | செல்வி. ம. கார்த்திகா | வ/கணேஸ்வரா ம. வித்தியாலயம். |
| 03 | பேச்சு | 2 | செல்வன். மு. மயூரன் | தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. |
| 04 | பேச்சு | 4 | செல்வன். ஜெ. கார்த்திகேயன் | வ/தமிழ் மகா வித்தியாலயம். |
| 05 | பாஓதல் | 3 | செல்வன். பா. பிரணவன் | தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. |
| 06 | பாஓதல் | 4 | செல்வி. த. அன்பரசி | தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி. |
| 07 | இசை - தனி (வாய்ப்பாட்டு) | 1 | செல்வி. நா. சுஜிதா | மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை. |
| 08 | இசை - குழு (வாய்ப்பாட்டு) | 1 | 01. செல்வி. அ. அகிலாதேவி | தி/கட்டைப்பறிச்சான் விபுலானந்தா ம. வித்தி. |
| | | | 02. செல்வி. கா. வினோதா. | ” |
| | | | 03. செல்வி. சி. ரூபிகா | ” |
| | | | 04. செல்வி. ந. அனுஜா | ” |
| | | | 05. செல்வி. சி. சுகிர்தா | ” |
| | | | 06. செல்வி. கி. கிருசாந்தி | ” |
| | | | 07. செல்வி. வி. வினோதா | ” |
| | | | 08. செல்வி. நா. மோகனரூபி | ” |
| | | | 09. செல்வி. ம. ஜசோதா | ” |
| | | | 10. செல்வி. ப. தேவிகா | ” |
| | | | 11. செல்வி. ந. நவலோஜினி | ” |
| | | | 12. செல்வி. தி. வைதேகி | ” |
| 09 | இசை - தனி | 2 | செல்வன். த. சஞ்சயன் | மட்/புனித மைக்கல் கல்லூரி. |
| 10. | இசை - தனி | 4 | செல்வி. எ. பிரியலோஜினி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி. |

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 11 | இசை - குழு | 2 | 01. செல்வன். த. சஞ்சயன் | மட்/புனித மைக்கல் கல்லூரி. |
| | | | 02. செல்வன். இ. பிலிப்ஸ் மிதிலன் | ” |
| | | | 03. செல்வன். எஸ். ஸ்கந்தன் | ” |
| | | | 04. செல்வன். வை. நிருத்பவன் | ” |
| | | | 05. செல்வன். கிரிஸ்ரியன் சுஜீத் | ” |
| | | | 06. செல்வன். வி. என். கிசோக் | ” |
| | | | 07. செல்வன். கே. பிரியக | ” |
| | | | 08. செல்வன். ஆர், செந்தூரன் | ” |
| | | | 09. செல்வன். எஸ். ஹரிப்பிரசாந் | ” |
| | | | 10. செல்வன். அ. கினோஷன் | ” |
| | | | 11. செல்வன். கே. ருஷாந் பற்றிக் | ” |
| | | | 12. செல்வன். எம். என். மரியோ | ” |
| 12 | இசை - குழு | 4 | 01. செல்வி. தி. கேமலதா | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| | | | 02. செல்வி. பு. சிவசக்தி | ” |
| | | | 03. செல்வி. ஞா. துஷ்யந்தி | ” |
| | | | 04. செல்வி. போ. தேவரஜனி | ” |
| | | | 05. செல்வி. க. நிருஷிதா | ” |
| | | | 06. செல்வி. இ. இரட்ணவசந்தி | ” |
| | | | 07. செல்வி. சு. விஜிதா | ” |
| | | | 08. செல்வி. சு. சுகன்யா | ” |
| | | | 09. செல்வி. சி. துஷ்யந்தி | ” |
| | | | 10. செல்வி. ஜெ. கஜபவனி | ” |
| | | | 11. செல்வி. எ. பிரியலோஜினி | ” |
| | | | 12. செல்வி. செ. சிந்துஜா | ” |
| 13 | நடனம் - தனி | 4 | செல்வி. போ. பிரசன்யா | மட்/சிசிலியா பெண்கள் ம. வித்தி. |
| 14 | புராண இலக்கிய நாடகம் | திறந்த போட்டி | 01. செல்வி. ச. பூங்குழலி | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி. |
| | | | 02. செல்வி. கு. கலையரசி | ” |

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| | | | 03. செல்வி. பி. சாந்தினி | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி. |
| | | | 04. செல்வி. அ. யோ. ஜொய்சி | ” |
| | | | 05. செல்வி. செ. பிருந்தா | ” |
| | | | 06. செல்வி. தி. சுபாஜினி | ” |
| | | | 07. செல்வி. மு. சகுந்தலா | ” |
| | | | 08. செல்வி. செ. சியாமாளா | ” |
| | | | 09. செல்வி. [illegible] தனுஜா | ” |
| | | | 10. செல்வி. த. சயந்தினி | ” |
| | | | 11. செல்வி. தி. சர்மிளா | ” |
| 15 | சமூக நாடகம் | திறந்த போட்டி | 01. செல்வன். செ. சுரேஸ்குமார் | தி/ஆலங்கேணி விநாயகர் மகா வித்தி. |
| | | | 02. செல்வன். த. சிவகுமார் | ” |
| | | | 03. செல்வன். செ. ரமேஸ்குமார் | ” |
| | | | 04. செல்வன். செ. விக்னராசா | ” |
| | | | 05. செல்வன். த. மோகனராசா | ” |
| | | | 06. செல்வன். சு. சுரேஸ் | ” |
| | | | 07. செல்வி. சு. மஞ்சுளா | ” |
| | | | 08. செல்வி. பே. குமுதினி | ” |
| | | | 09. செல்வி. அ. சுகிர்தா | ” |
| | | | 10. செல்வி. க. கல்பனா | ” |
| | | | 11. செல்வி. க. ராதிகா | ” |
| | | | 12. செல்வி. ந. செவ்வதனி | ” |

# இரண்டாம் இடம்

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 01 | வாசிப்பு | 2 | செல்வி. கு. தட்சாயினி | மட்/புனித சிசிலியா பெண்கள் ம. வித்தி. |
| 02 | பாஓதல் | 1 | செல்வி. தி. சுமணசிறி | தி/சம்பூர் மகா வித்தி. |
| 03 | பாஓதல் | 2 | செல்வன். த. சஞ்சயன் | மட்/புனித மிக்கேல் கல்லூரி. |
| 04 | இசை - தனி | 3 | செல்வி. அ. கலையரசி | மட்/கல்லடி உப்போடை விவேகானந்தா பெ. க. |
| 05 | இசை - குழு | 3 | 01. செல்வி. க. வேணி | மட்/வின்சன்ட் பெண்கள் உயர்தர பாடசாலை. |
| | | | 02. செல்வி. கி. பிரம்யா | ” |
| | | | 03. செல்வி. வி. ஹம்சானந்தி | ” |
| | | | 04. செல்வி. லோ. ஆர்த்தி | ” |
| | | | 05. செல்வி. ச. பிரணீத்தாயினி | ” |
| | | | 06. செல்வி. மு. மிருணாளினி | ” |
| | | | 07. செல்வி. ச. சுதர்ஷினி | ” |
| | | | 08. செல்வி. சே. நிர்மலேஸ்வரி | ” |
| | | | 09. செல்வி. பா. தயாளினி | ” |
| | | | 10. செல்வி. ப. நிரஞ்சலகுமாரி | ” |
| | | | 11. செல்வி. வ. தர்ஷிகா | ” |
| | | | 12. செல்வி. கு. கல்பனா | ” |
| 06 | நடனம் - தனி | 1 | செல்வி. சி. ஜனந்தினி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி. |
| 07 | நடனம் - தனி | 3 | செல்வி. ஜே. வைஷ்ணவி. | தி/புனித மரியாள் கல்லூரி |
| 08 | நடனம் - குழு | 2 | 01. செல்வி. ந. கிருஷ்ணவேணி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி. |
| | | | 02. செல்வி. ச. பிரபாலினி | ” |
| | | | 03. செல்வி. த. அருணா | ” |
| | | | 04. செல்வி. தி. கௌரிசாந்தி | ” |
| | | | 05. செல்வி. தி. பிரவீணா | ” |
| | | | 06. செல்வி. ச. ஸ்ரீதரி | ” |
| | | | 07. செல்வி. அ. செந்தாமரை | ” |
| | | | 08. செல்வி. வி. அனுஸ்யா | ” |

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 09 | நடனம் - குழு | 3 | 01. செல்வி. லூ. அமில்ரா | தி/புனித மரியாள் கல்லூரி. |
| | | | 02. செல்வி. பு. அபிராமி | ” |
| | | | 03. செல்வி. ஜெ. வைஷ்ணவி | ” |
| | | | 04. செல்வி. ச. சர்மிலா | ” |
| | | | 05. செல்வி. கி. பவானி | ” |
| | | | 06. செல்வி. அ. கிறிஷ்டலின் | ” |
| | | | 07. செல்வி. டே. தீபா | ” |
| | | | 08. செல்வி. வி. நோயலின் ராதிகா | ” |
| 10 | நடனம் - குழு | 4 | 01. செல்வி. யோ. பிரசன்யா | மட்/புனித சிசிலியா பெண்கள் ம. வித்தி. |
| | | | 02. செல்வி. ம. யாழினி | ” |
| | | | 03. செல்வி. பா. துஷ்யந்தி | ” |
| | | | 04. செல்வி. சி. தாரிணி | ” |
| | | | 05. செல்வி. ச. விநோதினி | ” |
| | | | 06. செல்வி. தி லோஜிதா | ” |
| | | | 07. செல்வி. த. அருட்செல்வி | ” |
| | | | 08. செல்வி. த. கிருபா | ” |
| 11 | விவாதம் - உரை | திறந்த போட்டி | 01. செல்வி. ப. சிவதர்ஷியா | தி/புனித மரியாள் கல்லூரி. |
| | | | 02. செல்வி. சி. சுகன்யா | |
| | | | 03. செல்வி. ஜெ. ஜெயராஜினி | |
| 12 | வில்லுப்பாட்டு | திறந்த போட்டி | 01. செல்வன். க. தீபகாந்தன் | தி/உ. வர்மலை விவேகானந்தாக் கல்லூரி. |
| | | | 02. செல்வன். சி. சிவகுமார் | ” |
| | | | 03. செல்வன். ச. நவந்தன் | ” |
| | | | 04. செல்வன். தி. அனுஷாந்தன் | ” |
| | | | 05. செல்வன். செ. கோகிலராஜன் | ” |
| | | | 06. செல்வன். சி. சதீஸ்வரன் | ” |
| | | | 07. செல்வி. தே. உஷா சுபந்தினி | ” |
| | | | 08. செல்வி. த. அன்பரசி | ” |

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| | | | 09. செல்வி. இ. சுதர்ஷினி | தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி. |
| | | | 10. செல்வி. சு. பிரதர்ஷினி | ” |
| | | | 11. செல்வன். ல. லக்ஷ்மணதாஷன் | ” |
| | | | 12. செல்வி. து. நித்தியா | ” |
| 13 | கட்டுரை | 4 | செல்வன். ஏ. எம். பாரிஸ் | கமு/நிந்தவூர் அல்-அஷ்ரக் தே. பா. |
| 14 | கட்டுரை | 3 | செல்வன். ஏ. எம். ஏப்றிஷாத் | கமு/ஸாஹிரா தேசிய கல்லூரி. |

## மூன்றாம் இடம்

| தொ. இல. | நிகழ்ச்சி | பிரிவு | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 01 | நடனம் - தனி | 2 | செல்வி. எஸ். தேனுஜா | மட்/வின்சன்ட் பெண்கள் உயர் பாடசாலை. |
| 02 | நடனம் - குழு | 1 | 01. செல்வி. ஞா. சுஜித்தா | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி. |
| | | | 02. செல்வி. சி. ஜனந்தினி | ” |
| | | | 03. செல்வி. சி. சயந்தரூபிகா | ” |
| | | | 04. செல்வி. ந. மிதுலாயினி | ” |
| | | | 05. செல்வி. டி. ஏ. பி. வேர்ஜினி வத்சலா | ” |
| | | | 06. செல்வி. தெ. ஸ்ரீமதி | ” |
| | | | 07. செல்வி. மா. அபிராமி | ” |
| | | | 08. செல்வி. சு. சுகிர்தா | ” |
| 03 | நாட்டிய நாடகம் | திறந்த போட்டி | 01. செல்வி. தி. பாமினி | வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வித்தி. |
| | | | 02. செல்வி. க. புஸ்பகாந்தினி | ” |
| | | | 03. செல்வி. ப. வானதி | ” |
| | | | 04. செல்வி. சி. திலகம் | ” |
| | | | 05. செல்வி. ம. விஜயந்தி | ” |
| | | | 06. செல்வி. செ. சுகந்தி | ” |
| | | | 07. செல்வி. ந. வானதி | ” |
| | | | 08. செல்வி. ம. அகல்யா | ” |
| | | | 09. செல்வி. சி. வேணுகா | ” |
| | | | 10. செல்வி. ரி. சாந்தினி | ” |

# தமிழ்மொழி வாழ்த்து

**தான தனத்தன தான தனத்தன தான தனத்தான.**

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அளந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

**மகாகவி பாரதியார்**